ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ப்ரபந்நஜனகூடஸ்தரான

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி

(இரண்டாம் ஸம்புடம்.)

(இரண்டு — மூன்று பத்துக்கள்.)

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியரால்


எல்லார் தமக்கும் இன்பம் பயக்குமாறு எளிய நடையில் தெளிய எழுதப்பட்ட திவ்யார்த்த தீபிகையுடன்.

சென்னை :

''ஹாடன் அண்டு கம்பெனியில்'' அச்சிடப்பட்டது.

1935

யுவ வருஷம் வைகாசித் திருவிசாகம்.



மணவாள மாமுனிகள்

ஸ்ரீ:.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

இயற்றிய

திவ்யார்த்த தீபிகை யுரையோடு கூடிய

திருவாய்மொழி.

இரண்டாம்பத்து — முதல் திருவாய்மொழி,

வாயுந்திரையுகளும்.

அவதாரிகை.

நம்மாழ்வார் எம்பெருமானை அநுபவிப்பது மிகவும் விலக்ஷணமாயிருக்கும். கீழ் முதற்பத்தில் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு குணத்தைப் பேசி அநுபவித்தார்; அவனுடைய பரத்துவத்தைப் பேசினார் முதற் பதிகத்தில்; அவன் பஜிக்கத்தகுந்தவனென்றார் இரண்டாம் பதிகத்தில்; அவன் அடியவர்கட்கு எளியவன் என்றார் மூன்றும் பதிகத்தில்; அவன் அடியவர்களது பிழைகளைப் பொறுக்குந்தன்மையனென்றார் நான்காம் பதிகத்தில்; பராத்பரனான தான் நம்போல்வாருடைய அற்பத்தனத்தைச் சிறிதுங் கணிசியாது தன்னைத் தாழவிட்டுக்கொண்டு நம்மோடு புரையறக் கலந்து பழகும் சீலகுணமுடையனென்றார் ஐந்தாம் பதிகத்தில்; நாம் இட்டதுகொண்டு த்ருப்தியடைபவனென்றார் ஆறும் பதிகத்தில்; ஆச்ரயணத்தில் ஸாரஸ்யமுடையனென்றார் ஏழாம் பதிகத்தில்; மனமொழிமெய்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருத்தலாகிற ஆர்ஜவகுணமுடையனென்றார் எட்டாம் பதிகத்தில்; அடியார்களுக்குத் தன்னை அநுபவிப்பிக்குமிடத்தில் ஏககாலத்திலேயே பூர்ணாநுபவங்கொடுத்துவிடுகையன்றியே பொறுக்கப் பொறுக்கச் சிறிது சிறிதாகக் கொடுக்குந்தன்மையனென்றார் ஒன்பதாம் பதிகத்தில். நிர்ஹேதுகமாகப் பரமோபகாரஞ்செய்தருள்பவனென்றார் பத்தாம் பதிகத்தில்.

ஆகவிப்படி பகவத்குணாநுபவத்தில் ஆழங்காற்பட்ட ஆழ்வார் இத் திருவாய்மொழியில் தம்முடைய பகவத்விஷயாவகாஹநம் லோகவிலக்ஷணமென்பதைக் காட்டுகிறார். ஸம்ஸாரிகள் உலகத்திலுள்ளாரெல்லாரையும் தங்களைப்போலவே உண்டியே உடையே உகந்தோடுபவர்களாக நினைத்தல்போல ஆழ்வாரும் உலகிலுள்ள ஸகல பதார்த்தங்களும் தம்மைப்போலவே எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் நோவுபடுகின்றனவாகக் கொண்டு, — நாரை அன்றில் கடல் காற்று சந்திரன் முதலிய பதார்த்தங்களை நோக்கி அவற்றுக்குண்டான சில தன்மைகளை இயற்கையாகக் கருதாது பகவத் விச்லேஷ வ்யஸநத்தினாலுண்டானவையாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தாம் அநுசோகிக்கிறார்.

இவ்வாழ்வார் பெரிய திருவந்தாதியின் முடிவில் "கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான், பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல் சூழ்வினையினாழ்துயரை, என்னினைந்து போக்குவரிப்போது" என்றொரு அற்புதமான பாசுரமருளிச்செய்து, உலகத்தில் எல்லாரும் பகவத்குணாநுபவம் பண்ணியே போதுபோக்கவேணுமென்றார். பகவத்குணங்களை அநுஸந்தித்தால் பாவங்களெல்லாம் தொலையுமென்று ஸாமாந்யமாகப் பலரும் சொல்லுவதுண்டு; அங்ஙனம் பாவங்களைத் தொலைத்துக்கொள்வதற்காக பகவத்குணாநுபவம் செய்யாவிடில் செய்யவேண்டா; பகவத்குணாநுஸந்தான முகத்தினால் பாவங்களைத் தொலைத்துக்கொள்ளாதொழியில் ஒழிக; ஒவ்வொருவனும் போதைப்போக்கி யாகவேண்டுமே; வேறு எந்தக் காரியஞ்செய்தால் போதுபோகும்! பகவத்குணாநுபவத்தாலன்றி வேறொன்றாலும் போதுபோக்க முடியாதாகையாலே காலக்ஷேபார்த்தமாகவாவது ஒவ்வொருவனும் பகவத்குணாநுபவம் பண்ணியே யாகவேணுமென்றார்: இப்படி ஏன் சொல்லவேண்டும்? உலகத்தில் ஒவ்வொருவனும் பகவத்குணாநுபவம் பண்ணியோ போதுபோக்குகிறான்? இல்லை; சூதாடிப் போதுபோக்குவார் சிலரும், சதுரங்கம் பொருது போதுபோக்குவார் சிலரும், உண்டியே உடையே உகந்தோடிப் போதுபோக்குவார் சிலருமாய் இங்ஙனம் பலவகைகளாலே போதுபோக்குவாரைக் காணாநின்றோமே; குணாநுபவத்தாலே போதுபோக்குவாராக ஒருவரையுங் கண்டிலோமே; ஆழ்வாரொருவரே யன்றோ அப்படி யுள்ளவர்; இப்படியிருக்க "என்னினைந்து போக்குவர் இப்போது" என்று இவர் எங்ஙனஞ் சொல்லலாமென்னில், உலகத்தில் தம்முடைய ஸ்வபாவத்தையே பிறர்க்கும் ஸ்வபாவமாக நினைத்துக்கொள்ளுதலுண்டாதலால் ஆழ்வாரும் தம்முடைய போதுபோக்கையே பிறர்க்கும் போதுபோக்காகக் கருதுகின்றனரென்ன வேணும். பரமைகாந்திகளாய்ப் பரம வைதிகர்களான அந்தணர்கள் இரவிலே சயனிக்கும்போது தம் மனைவியரை விளித்து 'அடீ! சொம்பிலே ஜலம் வைக்கவேண்டா; கவிழ்த்து வைத்திடு' என்று சொல்லுவர்களாம்; இப்படிச் சொல்லுவதன் கருத்து யாது? இரவிலே கள்ளன் வந்தால் சொம்பைக் கொள்ளைகொள்ள நினைத்து அதனருகே வந்து அதை யெடுக்கப் பார்க்கும்போது கைபலம்பாமல்

சொம்பைத் தொடலாகாதென்று தீர்த்தம் தேடுவனாம்; தீர்த்தம் கிடைத்தால் கையை அலம்பிக்கொண்டு சொம்பை எடுத்துப்போய்விடுவனாம்; தீர்த்தம் கிடையாவிடில், அசுத்தமான கையாலே சொம்பை யெப்படி யெடுப்பதென்று ஆசாரங்கொண்டாடி வெறுமனே போய்விடுவனாம்; இதற்காகவே 'சொம்பில் ஜலமின்றிக் கவிழ்த்துவை' என்று புராதன வைதிகர்கள் திட்டம் செய்வர்களாம்: தங்களுடைய ஆசாரமே கள்ளர்க்கும் உள்ளதாக அவர்கள் நினைப்பதுபோல் ஆழ்வாரும் பகவத்குணாநுபவத்தாலன்றி மற்றெதனாலும் தமக்குப் போது போக்க அரிதாயிருக்கு மியல்வையே எல்லார்க்கும் உளதாக நினைத்து "என்னினைந்து போக்குவர் இப்போது" என்றார்; அவ்வண்ணமே இங்கும் நாரை முதலியவற்றையும் தம்மியல்பினவாக வெண்ணி ஒவ்வொன்றையும் நோக்கி 'நீயும் என்னைப்போலே பகவத்விஷயத்தில் ஆசைவைத்து விருப்பத்தின்படி கிடைக்கப்பெறாமையினாலே நோவுபட்டாயோ?' என்று பேசுகிறபடியாய்ச் செல்லுகின்றது இத் திருவாய்மொழி.

அடியவர்களை இங்ஙனம் பிச்சேறப் பண்ணுமவன் எம்பெருமானென்று இதனால் அவனுடைய $ உந்மாதாவஹத்வமென்கிற குணம் சொல்லப்பட்டதாகும்.

ஸ்ரீபாகவத தசமஸ்கந்தத்தில் தொண்ணூறுமத்யாயத்தில் பதினைந்தாவது ச்லோகம் முதலாகக் காணப்படுகின்ற சில ச்லோகங்களின் ரீதியும் இப்பதிகத்தின் ரீதியும் பெரும்பாலும் ஒற்றுமைப்பட்டிருத்தலைக் காணலாம். இத் திருவாய்மொழியின் சாயையாகவே அந்த ச்லோகங்கள் பிறகு சில மஹான்களாற் சேர்க்கப்பட்டனவென்று கூறுவாருமுளர்; உலகேத்துமாழியானே உண்மை யுணர்வான்.

.... *

வாயுந்திரையுகளும் கானல்மடநாராய் *
ஆயுமமருலகும் துஞ்சிலும்நீதுஞ்சாயால் *
நோயும்பயலைமையும் மீதூரவெம்மேபோல் *
நீயுந்திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே *

(க)

வாயும்	மென்மேலும் கிட்டுகின்ற	ஆல்	ஆதலால்
திரை	அலைகள்	நோயும்	மனவருத்தமும்
உகளும்	தாவுமிடமான	பயலைமையும்	(அதன்காரியமான) பசலைநிறமும்
கானல்	கடற்கரையிலுள்ள சோலையிலுள்ள	மீதூர	மேலிட்டுவர
மடம்	இளமை தங்கிய	எம்மே போல்	எங்களைப்போல
நாராய்	நாரையே!,	நீயும்	நீயும்
ஆயும்	(எமது) தாயும்	திருமாலால்	திருமகள் கொழுநனான எம்பெருமானாலே
அமர் உலகும்	தேவலோகமும்	நெஞ்சம் கோள் பட்டாயே	நெஞ்சு பறித்துக்கொள்ளப்பட்டாயோ ?
துஞ்சிலும்	உறங்கினாலும்		
நீ துஞ்சாய்	நீ உறங்குகிறாயில்லை ;		

$ உந்மாதாவஹத்வம் — சித்தவிப்ரமத்தை விளைக்குந்தன்மை.

* * *—[வாயுந்திரையுகளும்.] பிரிந்தவர்கள் இரங்குவது நெய்தல் நிலத்திலாதலால் ஆழ்வார் இப்போது கடற்கரைச் சோலையிலிருப்பதாகக் கொள்க. ஆங்கு உணவுக்காக ஊக்கங்கொண்டிருக்கின்ற ஒரு நாரை கண்ணுக்குப்புலப்பட, அதனுடம்பில் இயற்கையாகவுள்ள வெண்மையைக்கண்டு அதுவும் தம்மைப்போலவே பிரிவாற்றாமையினால் விவர்ணப்பட்டிருக்கின்றதாகக்கொண்டு, நாராய்! ஐயோ! நீயும் நாமகப்பட்ட விஷயத்திலே அகப்பட்டு இப்படியானாயோ? என்பதாகச் செல்லுகிறது இப்பாசுரம்.

வாயுந் திரை உகளும் = இதை நாரைக்கு விசேஷணமாகக்கொள்வாருமுளர், கானலுக்கு விசேஷணமாகக்கொள்வாருமுளர். மேன்மேலும் எறிகின்ற அலையிலே அழுக்கி நடக்கின்ற நாரையே! என்னவுமாம்; திரைகள் உகளப் பெற்ற கானலிலே [கழியிலே] வர்த்திக்கின்ற நாரையே! என்னவுமாம்.

என்னைப்பெற்ற தாயும், உறங்காமையே வடிவான தேவலோகமும் உறங்கினாலும் நீ உறங்குவதில்லையே!; இதற்குக் காரணமறிகின்றிலேன்; இப்படி நீ இருப்பதைக்காணுமிடத்து இதற்கொரு சிறந்த காரணமிருத்தல் வேண்டும்; உள்ளேயுருகிநைந்து அதன்காரியமாகப் பயலை நிறமும் மேலே ஸ்பஷ்டமாகத் தெரியும்படியிருந்து நான் நோவு படுவது பகவத்விஷயத்தி லீடுபட்டதனாலே; இப்படிப்பட்ட நோவை நீயும் உற்றிருப்பதாகக் காண்கின்றபடியால் என்னைப் போலவே நீயும் திருமாலால் நெஞ்சு கொள்ளை கொள்ளப் பெற்றாய்போலும் என்றதாயிற்று.

ஆழ்வார் பெண்ணிலைமை யெய்திப்பேசுகிற பதிகம் இது என்பது இரண்டாமடியின் முதற்பதத்தினால் விளங்கும். என் தாய் உறங்கினாலும் நீ உறங்குவதில்லை யென்றதனால், பராங்குசநாயகியாகிய இத்தலைமகளின் தாய்க்கு உறக்கமேயில்லை யென்பது வெளியாம். மகளின் உறக்கமின்மை கண்டு வருந்தித் தாயும் உறங்காளென்க. தம்முடைய கண்களுக்குத் துஞ்சுதலில்லாமையை ஆழ்வார் இவ்வழியால் வெளியிட்டது ஒரு சமத்காரம்.

இங்கே நம்பிள்ளை யீடு காண்மின்;—"இவளைப்பெற்ற தாய்க்கு உறக்கமின்றிக்கே யொழிவானென்னென்னில்; முன்பெல்லாம் 'இவளுக்கு ஸத்ருசனாயிருப்பானொருவனைப் பெற்றுக்கொடுத்தோமாக வல்லோமே' என்று கண்ணுறங்காது; பின்பு நாயகனைப்பிரிந்து இவள் நோவுபடுகிறபடியைக்கண்டு அத்தாலே கண்ணுறங்காது."

நோயும் பயலைமையும் = நோய் கண்ணுக்குத் தெரியாதது; பயலைமை கண்ணுக்குத் தெரிவது. [பயலைமையைப்பற்றின விவரணம், கீழ் முதற்பத்தில் நான்காந் திருப்பதிகத்தில் நாலாவது பாசுரத்தின் தீபிகையில் விரித்துரைக்கப் பட்டுளது, காண்க.]

மீதூர = விஷமேறினாற்போலே உடம்பிலே வியாபிக்க என்றபடி. இப்படிப்பட்ட நாரை நிலைமையைக்கண்ட ஆழ்வார் "நீயுந் திருமாலால் நெஞ்சங் கோட்பட்டாயே" என்று பகவத்விஷய ப்ராவண்யமடியாகத்தான் உனக்கு

இந்த நிலைமை உண்டாயிருக்கவேணுமென்று கூறுதற்குக் காரணம் அவதாரிகையிற் காண்க.

ஆசார்யஹ்ருதயத்தில் "அச்சேத்யமென்னுமது ஈரும் வேம் ஈரியாயுலர்த்த வென்னப்பட" இத்யாதி சூர்ணிகையில் "காற்றுங் கழியுங்கட்டி யழக்கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே" என்றருளிச்செய்தது நோக்கத்தக்கது. இதனால் ஆழ்வாருடைய ப்ரேமம் ஒரு நூல் வரம்புக்கு அடங்காதது என்று ஸ்தாபிக்கப்பட்டது. ... ... (க)

கோட்பட்டசிந்தையையாய்க் கூர்வாயவன்றிலே *
சேட்பட்டயாமங்கள் சேராதிரங்குதியால் *
ஆட்பட்டவெம்மேபோல் நீயுமரவணையான் *
தாட்பட்டதண்டுழாய்த்தாமம் காமுற்றாயே * (உ)

கோள் பட்ட	அபஹரிக்கப்பட்ட	ஆள் பட்ட	அடிமைப்பட்ட
சிந்தையை		எம்மே போல்	எங்களைப்போலவே
ஆய்	நெஞ்சையுடையையாகி	நீயும்	(பிரிவாற்றாமை தோற்றவிருக்கிற) நீயும்
கூர் வாய	(அதனால்) தழதழத்த குரலையுடைய	அரவு அணையான்	சேஷசாயியான எம்பெருமானது
அன்றிலே	அன்றில் பறவையே!,	தாள்	திருவடிகளிலே
சேண் பட்ட	நெடிதான	பட்ட	ஸம்பந்தம்பெற்ற
யாமங்கள்	சாமங்கள்தோறும்	தண்	குளிர்ந்த
சேராது	படுக்கையிற் சேராமல்	துழாய் தாமம்	திருத்துழாய்மாலையை
இரங்குதி	வருந்துகின்றாய் ;	காமுற்றாயே	ஆசைப்பட்டாயோ ?
ஆல்	ஆதலால்		

* * * — [கோட்பட்ட] அன்றில் என்பது ஒரு பறவை; குரரீ என்று வடமொழியிற் கூறப்படும், க்ரௌஞ்சமென்னவும் படும். அது பெரும்பாலும் பனைமரத்தில் வாழும்; அது எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்றுவிட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்றுதரம் கத்திக்கூவி அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும். ஆணும் பெண்ணுமான அந்த அன்றிற்பறவை இணைபிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக்கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்திலே வாயலகு தன்னில் நெகிழ்ந்தவளவிலே துயிலுணர்ந்து அப்பிரிவைப் பொறாமல் மெலிந்து பெருந்தொனியாகக் கத்துகிற மிக இரங்கத்தக்க சிறுகுரல் ஆழ்வாரது திருச்செவியிலே விழுந்ததாக, அதுவும் பகவத்விஷயத்தி லீடுபட்டுப் பிரிவாற்றாமையினால் கத்துகின்றதெனக் கொண்டு, ஐயோ! நீயும் என்னைப்போலே * ஆழியாவென்னு மாழமோழையில் அகப்பட்டாயே! என்கிறது இப்பாசுரம்.

தழதழத்த குரலையுடைத்தான அன்றிற்பறவையே! நெஞ்சுபறியுண்டு நெடும் போதாக வருந்திக்கிடக்கின்றாயே!; அடிமைப்பட்ட என்னைப்போலே

பிரிவாற்றாமை தோற்றவிருக்கிற நீயும் அரவணைமேற் பள்ளிகொண்ட முகில் வண்ணனுடைய செவ்வித்துழாய் மாலையை ஆசைப்பட்டு இப்பாடுபடுகிறாயோ? என்றாளாயிற்று. பகவத் விஷயத்தி லீடுபட்டார்க் கல்லது இப்படிப்பட்ட வருத்தமுண்டாகாதென்று ஆழ்வார் நினைவு போலும்.

கோட்பட்ட — கொள்ளப்பட்ட என்றபடி. தன்வச மன்றியே யொழிந்த படி. சிந்தையை = முன்னிலை. சேட்பட்ட=சேண்—நீட்சி. தாமம்—தாமா என்னும் வடசொல்விகாரம். காமம் உற்றாய் + காமுற்றாய்; சிதைவு.

ஸ்ரீ பாகவதத்தில் (10—90—15) "குரரி! விலபஸி த்வம் வீத நித்ரா நஶேஷே ஸ்வபிதி ஜகதி ராத்ர்யாமீஶ்வரோ குப்தபோத: | வயமிவ ஸகி! கச்சித் காடநிர்பிந்நசேதா: நலிநநயந ஹாஸோதார லீலேக்ஷிதேந = குரரி! விலபஸி த்வம் வீதநித்ரா நசேஷே ஸ்வபதி ஜகதி ராத்ர்யாமீச்வரக்ரஸ்தபோதே, வயமிவ ஸகி! கச்சித் காடநிர்பின்ன சேதா: நலிநநயநஹாஸோ தார லீலேக்ஷணேந." என்றச்லோகம் பெரும்பாலும் இப்பாட்டின் கருத்திற்கு இணங்கும். ... ... (௨)

காமுற்றகையறவோடு எல்லே! இராப்பகல் *
நீமுற்றக்கண்துயிலாய் நெஞ்சுருகியேங்குதியால் *
தீமுற்றத்தென்னிலங்கை ஊட்டினான் தாள்நயந்த *
யாமுற்றதுற்றாயோ ? வாழிகனைகடலே * (௩)

எல்லே! கனை	கடலே!—;	தென் இலங்கை	தென்னிலங்காபுரி முழுவதும்
காமுற்ற கை அறவோடு	விரும்பின பொருள் கைகூடப்பெறாத இழவினால்	தீ ஊட்டினான்	நெருப்புக்கு உணவாக்கின பெருமானுடைய
நீ	நீ	தாள்	திருவடிகளை
இரா பகல் முற்ற	இரவும் பகலுமாகிய எப்போதும்	நயந்த	ஆசைப்பட்ட
கண் துயிலாய்	கண்ணுறங்காதாகி	யாம்	நாங்கள்
நெஞ்சு	உள்ளிடமும்	உற்றது	அடைந்த வருத்தத்தை
உருகி	நீராகி	உற்றாயோ	நீயும் அடைந்தாயோ ?
ஏங்குதி	ஏங்குகின்றாய்;	வாழி	(நீ மனத்துன்பம் தீர்ந்து) வாழ்வாயாக.
ஆல்	ஆதலால்		

* * * — [காமுற்றகையறவோடு.] கடல் பெருமுழக்கஞ் செய்வதும் அலையெறி வது வடிவதுமாயிருப்பதும் அதற்கு இயல்பாயிருக்க, அதனை யறியாதே அது வும் தம்மைப்போலே எம்பெருமான் திருவடிகளில் நசைவைத்து விரும்பின படியே லபிக்கப் பெறாமையினாலே தன் காம்பீரியமெல்லாமிழந்து கரையிலே வருவது கரையேறமாட்டாதே உள்ளே விழுவதாய் எழுத்துஞ் சொல்லும் பொருளும் தெரியாதபடி கத்துகின்றதாகக்கொண்டு, ஐயோ! நீயும் ராமபிரானது திருக்குணங்களில் அகப்பட்டு நான் படும்பாடு பட்டாயோ என்கிறதாய்ச் செல்லுகிறது இப்பாசுரம்.

கையறவு = கைப்படாமையினாலுண்டாகும் வருத்தத்திற்குக் 'கையறவு' என்று பெயர்; காமுற்ற கையறவோடு = ஆசைப்பட்ட பொருள் கிடைக்கப் பெறாமையினாலுண்டான வருத்தம். உண்மையில், கடல் யாதொன்றையும் காமுற்றது மில்லை, அது கைப்படாமற் போனது மில்லை, வருத்த முண்டானது மில்லை; இப்படியிருக்கவும் ஆழ்வார் தமக்குள்ளதெல்லாம் அதற்கு முண்டு போலேயென நினைத்து அருளிச்செய்தவாறு.

இராப்பகல் முற்ற நீ கண் துயிலாய் = உறங்குவதற்கென்று ஏற்பட்டது இரவு; விழித்துக்கொண்டிருப்பதற்கென்று ஏற்பட்டது பகல்; இரண்டிலுமே கடலே! உன்னிடத்துக் கண்டிலோம் என்கிறாள். கடல் அலை யெறிந்துகொண் டிருப்பது விழித்தல்; அலை ஓய்ந்துகிடப்பது உறங்குதல் எனக்கொள்க. நெஞ்சுருகி ஏங்குதி = உலகில் தொண்டை நன்றாயிருக்கப்பெற்றவர்கள் ஏதேனும் வாய்விட்டுச்சொன்னால் எழுத்துஞ் சொல்லும் ஸ்பஷ்டமாகத் தெரியும்படி யிருக்கும்; தொண்டை கட்டிப்போனவர்கள் எது சொன்னாலும் இன்னதென்று தெரியாமல் வெறும் ஒலி வடிவமாகவே யிருக்கும்; கடலின் ஓசை அத்தகைத்தாயிருத்தலால் இதற்கு நெஞ்சு உருகிப்போயிற்றென்றும் அப்படிப் போனதற்குக் காரணம் பகவத்விஷயாவகாஹனமே யென்றும் ஆழ்வார் நினைத்தபடி.

[நீமுற்ற இத்யாதி.] ஸீதை யென்பவளும் நம்மைப்போலே ஒரு பெண் பிள்ளையாயிருக்க அவளுக்காகமாத்திரம் * உண்ணாது உறங்காது ஒலிகடலை யூடறுத்துப் படாத பாடுகளும்பட்டு ஆனைத்தொழில் செய்தவர் நம்மைப்பற்றி ஒரு சிந்தனையுஞ் சிந்திக்கின்றிலரே! என்று நான் அந்த இராமபிரானிடத்து ஈடுபட்டிருக்குமாபோலே நீயும் ஈடுபட்டு வருந்தினையோ?

வாழி = இந்த நிலைமை நீங்கி நீ சுகமாக வாழப்பெறுவாயாக என்று மங்களாசாஸனஞ் செய்கிறபடி. ... ... (௩)

கடலும்மலையும் விசும்புந்துழாய்எம்போல் *
சுடர்கொளிராப்பகல் துஞ்சாயால்தண்வாடாய்! *
அடல்கொள்படையாழி!அம்மானைக்காண்பான்நீ *
உடலம்நோயுற்றாயோ? ஊழிதோறூழியே. (௪)

தண் வாடாய்	குளிர்ந்த காற்றே!	துஞ்சாய்	நீ கண்ணுறங்குகின்றிலை;
கடலும்	ஸமுத்திரத்தையும்	ஆல்	ஆதலால்
மலையும்	மலையையும்	அடல் கொள்	வலிமை கொண்ட
விசும்பும்	ஆகாசத்தையும்	படை ஆழி	திருவாழிப் படையுடைய
துழாய்	தடவிக்கொண்டு	அம்மானை	எம்பெருமானை
எம் போல்	எம்மைப்போல,	காண்பான்	காணுதற்பொருட்டு
சுடர் கொள் இரா பகல்	சந்திர ஸூரியர்களாகிற இரு சுடர்களையும் (தம்மிடத்து முறையே) கொண்ட இரவிலும் பகலிலும்	நீ	நீ
		ஊழி ஊழி தோறு	நெடுகாலமாக
		உடலம் நோய் உற்றாயோ	உடம்பு நோவு கொண்டாயோ?

* * * — [கடலும்மலையும்.] *காற்றானது எங்கும் பரவிய தத்துவம்; அது ஒரு கொடிப்பொழுதும் ஓரிடத்தில் நிலை நின்றிராது; “ ஸதாகதிஸ்ஸமீரணோ ஸதாகதிஃ ” என்ற நிகண்டின்படி ஸதாகதியென்று பெயர்பெற்றதாதலால் எப்போதும் உலாவிக்கொண்டேயிருக்கும்; உடம்பிலே புழுதியை ஏறிட்டுக்கொண்டு வடிவு தெரியாதபடியிருக்கும்; குளிர்ச்சி யுடைத்தாயுமிருக்கும்; ஆக இத்தன்மையும் அதற்கு இயல்வாயிருக்க, அதனை அறியகில்லாதே அதுவும் தம்மைப்போலவே பகவத்விஷயத்தில் ஆசைவைத்து விருப்பம் நிறைவேறப் பெறுமையினாலே இருந்தவிடத்தில் இருக்கமாட்டாதே மடலூருவாரைப்போலே உடம்பிலே புழுதியை ஏறிட்டுக்கொண்டு வடிவு தெரியாதபடியாய் ஸாங்கிராந்த ஜ்வரமுற்றுக் குளிர்ந்திருப்பதாகக்கொண்டு, வாடையே! நீயும் நான்பட்டதுபட்டாயன்றோ என்கிறான்.*

எம்போல் கடலும் மலையும் விசும்பும் துழாய் = *(துழாய் என்றது துழாவி என்றபடி.) பகவத்விஷயத்தில் அவகாஹித்தவர்கள் அப்பெருமானைக் காண வேண்டி நின்றவா நில்லாதே, எங்குப்போய்த் தேடினால் எம்பெருமான் கிடைப்பனென்று, திருப்பாற்கடலில் சென்று தேடலாமா? திருமலையிற் சென்று நாடலாமா? பரமபதத்திற்கே போய்ப் பார்க்கலாமா என்று இங்ஙனே பலவிடமும் துழாவுவர்கள்; “வெள்ளை வெள்ளத்தின்மே லொருபாம்பை மெத்தையாக விரித்ததன் மேலே, கள்ளநித்திரைகொள்கின்ற மார்க்கம் காணலாங்கொலென்றாசையினாலே” என்று திருப்பாற்கடலில் சென்று தேடப்பாரித்தார் பெரியாழ்வார்; “நானவனைக் காரார்திருமேனி காணுமளவும்போய், சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே.....ஊராயவெல்லாமொழியாமே நானவனை,.... பேருந்தெருவே ஊராரிகழிலு மொழியாதொழியேன் நான்” என்று எங்குந்திரிய ஒருப்பட்டார் திருமங்கையாழ்வார்; இங்ஙனே கடலும் மலையும் விசும்பும் துழாவித் திரிகின்றவர்கள் நாங்கள் சிலரே என்றிருந்தேன்; காற்றே! நீயும் எங்களைப்போலவே எங்குந் திரிகின்றாய்; இரவு பகல் கண்துறங்காதேயிராநின்றாய்; ஆதலால், கையுந் திருவாழியுமான ஸர்வேச்வரனை நீயும் காண ஆசைப்பட்டு அதனால் இப்பாடு படுகிறாய்போலும்.*

வாடாய் = *வாடை என்பதன் ஈறுதிரிந்த விளி.* துஞ்சாய் — *எதிர்மறை வினைமுற்று.* காண்பான் — *ஆன் விகுதிபெற்ற வினையெச்சம்; காண என்றபடி.(ச)*

ஊழிதோறூழி உலகுக்குநீர்கொண்டு *
தோழியரும்யாமும்போல் நீராய்நெகிழ்கின்ற *
வாழியவானமே! நீயும்மதுசூதன் *
பாழிமையில்பட்டு அவன்கண்பாசத்தால் நைவாயே? (ரு)

உலகுக்கு நீர் கொண்டு	*உலகுக்கெல்லாம் ஆகும்படி நீரை முகந்துகொண்டு*	*நீர் ஆய்*	*நீர்வடிவமாய்*
		நெகிழ்கின்ற	*விழுகின்ற*
ஊழி ஊழி தோறு	*காலமுள்ளளவும்*	*வானமே*	*மேகமே!*
		நீயும்	*நீயும்*

தோழியரும் யாமும் போல்	(எமது) தோழிமார்களும் நாங்களும்போல	அவன் கண் பாசத்தால்	அவனிடத்து விருப்பத்தினால்.
		கைவாயே	அழிகின்றனையோ?
மதுசூதன் பாழிமையில் பட்டு	எம்பெருமானது பெருமிடுக்கிலே அகப்பட்டு	வாழிய	(இந்தத் துன்பம் தீர்ந்து) வாழ்வாயாக.

* * * — [ஊழிதோறூழி.] நீராய் இற்று விழுகின்ற மேகத்தைக்கண்டு, நீயும் என்னைப்போலே எம்பெருமானுடைய குணசேஷ்டிதம் முதலியவற்றில் அகப்பட்டு நோவுபடுகிறாய்போலுமென்று சோகித்துச் சொல்லுகிற பாசுரம் இது. மேகம் நீர்சொரிவதைக் கண்ணீர்விட்டு அழுகிறபடியாகவெண்ணிச் சொல்லுகிறான்.

"உலகுக்கு நீர்கொண்டு" என்பதற்குச் சிலர் பொருள் பிரமிப்பர்கள் — 'உலகுக்கெல்லாம் உதவுகைக்காக நீரைக்கொண்டு' என்று பொருள் எண்ணுவர்கள்; அந்தப்பொருள் பிரகரணத்திற்குச் சேராது; உலகமெல்லாம் வெள்ளமிட வேண்டும்படியான நீரைச் சொரிந்துகொண்டு' என்றே பொருள்கொள்ளவேணும்; இங்ஙனமே பூருவாசாரியர்களெல்லாரும் வியாக்கியானித்தருளினர். உலகுக்கு உதவுதற்காக நீரை யெடுத்துக்கொண்டென்றால் இது மேகத்தின் இயற்கையாதலால் ஆழ்வார் அவ்வியற்கையைத் தாம் அறிந்துகொண்டாரென்று சொல்லிவிட்டால் "நீயும் மதுசூதன்பாழிமையிற்பட்டு அவன் கண் பாசத்தால் கைவாயே" என்கிற வார்த்தைக்கு ப்ரஸக்தியே இல்லையாய்விடுமென்க.

தோழியரும் யாமும் போல் = தோழியும் தானும் உலகம் வெள்ளங் கோக்கும்படியாகக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருக்குந்தன்மை இதனால் காட்டப்படும்.

வானமே! வாழிய = உலகுக்கு உதவிசெய்வதற்கென்று ஏற்பட்டிருக்கிற நீ இத்துயர் நீங்கி வாழ்ந்திடுக வென்று மங்களாசாஸநம் பண்ணுகிறான். வானமென்று இங்கு ஆகாசத்தைச் சொல்லுவதாகவும் ஒரு நிர்வாஹமுண்டு; மிக நுண்ணிதான ஆகாசம் நீரைமுகந்துகொண்டு சிதறியுருகி நீராய் விழுகின்றதென்று நினைத்துச் சொல்லுகிறாளென்றுங்கொள்க.

மதுசூதன் பாழிமையில்பட்டு = மது என்னு மசுரனைக் கொன்றவன் மதுசூதன். மதுவைச் சொன்னது அவனோடு கூடவேயிருந்த கைடபனையுஞ் சொன்னபடி. மதுகைடபர்களை முடித்த வரலாறு பலவிதமாகச் சொல்லப்படுவதுண்டு; அவற்றுள் ஒருவிதம் வருமாறு:— பிரமதேவனது தினப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினால் எங்கும் நீர்மயமாயிருந்தபொழுது அவ்வெள்ளத்தில் திருமால் அரவணையில் அமர்ந்திருக்கையில் அத்திருமாலினிடத்து ராஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றி "எம்மை நீ கொல்லுக என்று தம்வாயாற் சொல்லிய பின்னரே தம்மைப் பிறர் கொல்லலாகும்" என்று வரம் பெற்ற மதுகைடபரிருவரும் அப்பிரளயநீரைக் குழப்பிக்கொண்டு பேராரவாரத்துடன் சென்று பிரமதேவனைக்கண்டு அவனிடத்தினின்று வேதங்களையெல்

லாம் பறித்துக்கொண்டு அப்பிரளய வெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தேறாது திகைப்புக்கொண்ட அப்பிரமன் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத் துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அக்கடவுள் ஹயக்ரீவாவதாரஞ்செய்து அக்கடலிற்புக்கு இனியதோர் இசையைப்பாட, அவ்வினிய கீதத்தைக்கேட்ட அவ்வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலிவந்த வழியைப்பிடித்துச் செல்லுமளவில் திருமால் அவ்வேதங்களுள்ளவிடத்திற் சென்று அவற்றைக் கொணர்ந்து பிரமனுக்குத் தந்தருள, அப்போது ஒருவரையுங் காணுதவராய் வேதங்களும் எடுத்துக்கொண்டு போகப்பட்டதை யுணர்ந்த அவ்வசுரர்கள் மிகச் சினந்து அரவணையில் அறிதுயிலமரும் பரம்பொருளைக் கிட்டிப் போர்செய்யத் தொடங்கவே, திருமாலுக்கும் அவ்வசுரர்கட்கும் வெற்றி தோல்விகளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் 'உனது ஆற்றலுக்கு உவந்தோம், வேண்டும்வரம் பெற்றுக்கொள்' என்ன, அக்கடவுள் 'யான் உங்களைக் கொல்லவேணும், இதுவே யான் வேண்டும் வரம்' என்று சொல்ல; அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் 'உங்கட்கு வேண்டும் வரங் கொண்மின்' என்ன, 'ஒருவரும் இறவாதவிடத்தில் நாங்கள் இறக்க வேண்டும்' என்று அவர்கள் வேண்ட, திருமாலும் அங்ஙனமே வரமளித்துத் தனது திருத்துடையைக் கொண்டு அவர்களை இறுக்கிக் கொன்றிட்டனன் என்பதாம்.

கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் அழகருடைய திருத்துடைகளை வருணிக்குங்கால் "விஷ்ட஭்ஷ ஜயா௱கெடுஹகீடௌ = பிஷ்டதுஷ்ட மதுகைடபகீடௌ" என்றும், பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய திருத்துடைகளை வருணிக்குங்கால் "ஊஷிவ ஜயா௱கெடுஹஸ... வஸிஹ-஧ய ஶவ-ுஶ௱வெ-ுரா᳚ கி ஊ௱வ பி ஶீ ஊஹி ரஂஶகா௱ஜரொ வெ-ுரா᳚? = மதுவ மதுகைடபஸ்ய ...... பரிபூய கர்வகுர்வோ᳚ ஸ்ருபயிம் ஊஹி ரங்ககுஞ்ஜரோர்வோ᳚?" என்றும் அருளிச்செய்திருக்கையாலே மதுகைடபர்கள் திருமாலின் திருத்துடையில் இறுகி முடிந்தனரென்பது தெற்றெனவிளங்கும். பேயாழ்வார் மூன்றாந் திருவந்தாதியில் "காய்ந்திருளைமாற்றிக் கதிரிலருமாமணிகள், எய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப — வாய்ந்த மதுக்கைடபரும் வயிறுருகிமாண்டார்" என்று — அரவணையில் துயில்கொள்ளுமெம்பெருமானோடு போர்புரிவதாக மதுகைடபர்கள் கிட்டவந்த மாத்திரத்திலே திருவனந்தாழ்வானுடைய உஷ்ணமான மூச்சுக்காற்று வீசினவளவிலே அவ்வசுரர்கள் வயிறுருகி மாண்டொழிந்தனராக அருளிச்செய்வது இதிஹாஸ புராணங்கள் பலவகைப்பட்டிருத்தலால் அங்ஙனேயும் ஒரு புடையுண்டுபோலே. 1. "மேருகிரியவுணனுடல் மிடல்கெடுத்தா யென்பர் அது, உன் கூருகிரேயறிந்ததல்லால் கோவே! நீ அறியாயால்" என்று பிள்ளைப்பெருமாளையங்கார் பேசினது போலே, உண்மையில் திருத்துடைகளால் இறுக்கிக் கொல்லப்பட்ட அவ்

1. திருவரங்கக்கலம்பகம் 1.

வகாரர்களை ஆதிசேஷனுடைய வெவ்வுயிர்ப்பினால் வயிறு நொந்தனாகச் சொல்வதும் பொருந்தியதேயாம்; அதிசயோக்தியில் ஒருவகையென்க. ஆக இப்படிப்பட்ட மதனுடைய மாரணமாகிற பிடுக்கில் அகப்பட்டு என்னைப்போலே ஜீவிக்கவும்மாட்டாதே முடியவும்மாட்டாதே நோவுபடுகிறாயோ? என்றானாயிற்று.

இப் பாசுரத்திற்குப் பிரதிச்சந்தமாக “मेघ श्रीमन्! त्वमसि दयितो यादवेन्द्रस्य नूनं श्रीवत्साङ्कं वयमिव भवान् ध्यायति प्रेमबद्धः । अत्युत्कण्ठः शबलहृदयोऽस्मद्विधो बाष्पधाराः स्मृत्वा स्मृत्वा विसृजसि मुहुर्दुःखदस्तत्प्रसङ्गः — மேக ஸ்ரீமந்! த்வமஸி தயிதோ யாதவேந்த்ரஸ்ய நூநம் ஸ்ரீவத்ஸாங்கம் வயமிவ பவாந் த்யாயதி ப்ரேமபத்த: - அத்யுத்கண்ட: சபலஹ்ருதயோஸ்மத் விதோ பாஷ்பதாரா: ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா விஸ்ருஜஸி முஹு: து:க்கதஸ் தத் ப்ரஸங்க:” என்று ஸ்ரீபாகவதத்திலுள்ள [10-90-20] ச்லோகம் இங்கு நினைக்கத்தக்கது. .... (ரு)

நைவாயவெம்மேபோல் நாள்மதியே! நீயிந்நாள் *
மைவானிருளகற்றாய் மாழாந்துதேம்புதியால் *
ஐவாயரவணைமேல் ஆழிப்பெருமானார் *
மெய்வாசகம்கேட்டு உன்மெய்ந்நீர்மைதோற்றாயே? (சா)

நாள் மதியே	நிரம்பின சந்திரனே!	ஆல்	ஆதலால்
நைவு ஆய	நைந்துபோவதையே இயற்கையாகவுடைய	ஐ வாய்	ஐந்து முகங்களையுடைய
எம்மே போல்	எங்களைப்போல	அரவு அணை மேல்	சேஷ சயனத்தின் மீது உள்ள
நீ	(ஒளியுருவாகிய) நீயும்	ஆழி பெருமானார்	சக்கரபாணியான எம்பெருமானது
இ நாள்	இக்காலத்திலே	மெய் வாசகம் கேட்டு	உண்மையான வார்த்தையைக்கேட்டு
மை வான்	கரிய ஆகாயத்திலுள்ள	உன் மெய் நீர்மை	உனது வடிவின் குணமாகிய ஒளியை
இருள்	இருளை	தோற்றாயே	இழந்தாய் போலும்!
அகற்றாய்	நீக்குகின்றிலையாகி		
மாழாந்து	மயங்கி		
தேம்புதி	குறைபடுகின்றாய்;		

* * * — [நைவாயவெம்மேபோல்] கலாமாத்திரமாய்த் தேய்ந்து தோன்றின இளம்பிறைச்சந்திரனைக்கண்டு அந்தோ! உன்வடிவில் எழிலெல்லாம் இழந்தாயே!, நீயும் அப்பெருமானுடைய பொய்யுரையிலே நம்பிக்கைகொண்டு நான் பட்டபாடு படுகின்றாய்போலும்! என்கிறான். நாள் மதியே! என்பதற்கு, 'முன்பு பூர்ணனாயிருந்த சந்திரனே!' என்கிற பொருளும், 'இளம்பிறையே!' என்கிற பொருளும் பொருந்தும். முதற்பொருளில் நாள்சென்றமதி என்றபடி; இரண்டாம் பொருளில் நாட்பூ என்னுமாபோலே.

நைவாய எம்மேபோல் = 'நைவாய' என்பதை 'நை வாய' என்றும், 'நைவு ஆய' என்றும் பிரிக்கலாம்; நை என்பது முதனிலைத் தொழிற்பெயராய் நைதலை [அதாவது சைதில்யத்தை]ச் சொல்லும். வாய் என்றது இடமென்றபடி; எனவே சைதில்யத்திற்குப் பிறப்பிடமாகவுள்ள எங்களைப்போலே என்றதாயிற்று. அன்றியே 'நைவு ஆய' என்று பிரித்தால் சைதில்யமே ஒருவடிவெடுத்துவந்தாற்போலே யிருக்கின்ற எங்களைப்போலே என்றதாகும்.

இந்நாள் மைவானிருள் அகற்றாய் = சந்திரனே! நேற்றுவரையில் நீ உதித்தவுடனே இருள் சிதறியோடுதலைக் கண்டிருந்தோம்; இன்று அங்ஙனம் காண்கின்றிலோம்; நீ ஒளிமழுங்கிக் குறைபுற்றிராநின்றாய். இப்படி நீயும் எம்மைப்போலே மேனிமெலிந்தமைக்கு என்ன காரணம்? சேஷசாயியான சக்கரபாணிப் பெருமானுடைய பொய்யுரையில் நசைவைத்து இப்படியானாய்போலும் என்கிறாள்.

'ஐவாயரவணைமேல்' என்றவிடத்து, "பாவியேன் தோன்றிப் பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல், நாவுமிரண்டுளவாயிற்று நாணிலியேனுக்கே" என்ற நாச்சியார் திருமொழிப்பாசுரம் நினைக்கத்தக்கது. "ஒன்றேயுரைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான்" என்றும் "அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந = அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந" என்றும், "ராமோ த்விர்நாபிபாஷதே = ராமோ த்விர் நாபிபாஷதே" என்றுமுள்ள வசனங்களை நம்பி நான் கெட்டதுபோலே நீயும் கெட்டாயோ? என்கிறாள். அவர் இயற்கையாக ஸத்யமே சொல்லுகிறவராயினும் இரட்டை நாக்குப்படைத்த பாம்பரசனோடே ஸஹவாஸத்தினால் தாமும் பலநாக்குப் படைத்தாரென்று காட்ட "ஐவாயரவணைமேல் பெருமானார்" எனப்பட்டது.

ஆழிப்பெருமானார் = இங்கே நம்பிள்ளையீடு காண்மின்;—"அல்லாத பரிகரமோதான் நன்றாயிருக்கிறது! தாம் பகலை இரவாக்க நினைக்கில் அதுக்குப்பெருநிலைநிற்கும் பரிகரம்." என்று.

மஹாபாரதயுத்தத்திற் பதின்மூன்றாநாளிலே அர்ஜுநபுத்ரனான அபிமந்யுவைத் துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனான ஸைந்தவன் கொன்றுவிட, அங்ஙனம் தன் மகனைக்கொன்ற அந்த ஜயத்ரதனை மற்றைநாள் ஸூர்யாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடில் தீக்குதித்து உயிர்விடுவதாக அர்ஜுநன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினான்காநாட் பகல்முழுவதும் ஜயத்ரதனை வெளிப்படுத்தாமல் ஸேனையின்நடுவே நிலவறையில் மறைத்துவைத்திருக்க, அர்ஜுநனது சபதம் பொய்த்துவிடுமேயென்று சிந்தித்த கண்ணபிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சிலநாழிகை முன்னமே தன் சக்கரப்படையினால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருளடைந்ததனால் அர்ஜுநன் அக்நிப்ரவேசஞ்செய்யத்தொடங்க, அதனைக் களிப்போடு காணுதற்குத் துரியோதநனுடனே ஜயத்ரதன் வந்து எதிர்நிற்க, அச்சமயத்திற் கண்ணன் திருவாழியை வாங்கிடவே பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுநன் ஜயத்ரதனைத் தலை

ஜனித்தானென்றகதை இங்கு நினைக்கத்தக்கது. எம்பெருமானுக்கு ஆச்ரித பக்ஷபாதம் அளவற்றது என்பதை நிரூபித்தற்குக் கொள்ளப்படுகின்ற இந்த வரலாறு, ஆற்றாமை தலையெடுத்துச் சொல்லும்போதைக்கும் ஒருவாறு உதவுகின்றது.

மெய்வாசகங்கேட்டு = விபரீதலக்ஷணையினால் பொய்வாசகமென்றபடி. பொய்வாசகமென்றே சொல்லிவிடலாமாகிலும், 'எம்பெருமானுடைய பொய் மற்றாருடைய பொய்போன்றதன்று, இது விலக்ஷணம்' என்று காட்டுதற்காக மெய்வாசகமெனப்பட்டதென்பர். எம்பெருமான் இப்போது உபேக்ஷித்தமையாலே அவனுடைய மெய்யுரையும் பொய்யுரையாகக்கொள்ளலாயிற்று. இந்த ப்ரகரணத்தில் "ராமாவதாரத்தில் மெய்யும் க்ருஷ்ணாவதாரத்தில் பொய்யுமிறே ஆச்ரிதர்க்குத் தஞ்சம்" என்ற நம்பிள்ளையீட்டு ஸ்ரீஸூக்தியின் சுவை ரஸிக்கத்தக்கது .... (௬)

தோற்றோம்மடநெஞ்சம் எம்பெருமான்நாரணற்கு * எம்
ஆற்றாமைசொல்லி அழுவோமைநீநடுவே *
வேற்றோர்வகையில் கொடிதாய்எனையூழி *
மாற்றாண்மைநிற்றியோ? வாழிகனையிருளே! (எ)

கனம் இருளே	கனத்திருக்கின்ற இருளே!	வேற்றோர் வகையில்	பகைவர்கள் நலிகிற வகையைக்காட்டிலும்
எம் பெருமான்	எமக்குஸ்வாமியான	கொடிது ஆய்	கொடுமையாகி
நாரணற்கு	நாராயணனுக்கு	எனை ஊழி	காலமுள்ளவளவும்
மடம் நெஞ்சம் தோற்றோம்	விதேயமான நெஞ்சைப் பறிகொடுத்தோமாகி	மாற்றாண்மை	பகைத்தன்மையை ஆளுகையில்
எம் ஆற்றாமை சொல்லி அழுவோமை	எங்கள் ஆற்றாமையை வாய்விட்டுச் சொல்லி அழுகின்ற எங்களை	நிற்றியோ	நிற்கிறாயோ?
நீ	நீ	வாழி	இந்நிலைமை நீங்கி வாழ்வாயாக.
நடுவே	நடுவில்நுழைந்து		

* * * — [தோற்றோம் மடநெஞ்சம்.] ஒருவரையொருவர் காணவொண்ணாதபடி மூடின இருளைக்குறித்து 'இருளே! எம்பெருமானைப்பிரிந்து நோவுபட்டிருக்கிறவென்னை நீயும் இப்படி ஹிம்ஸிப்பாயோ? என்று பொடிந்து பேசுகின்றாள். முதற்பாட்டிற் சொன்ன நாரையென்ன, இரண்டாம்பாட்டிற் சொன்ன அன்றிற்பறவையென்ன, மூன்றாம்பாட்டிற் சொன்ன கடலென்ன, நான்காம்பாட்டிற் சொன்ன வாடையென்ன, ஐந்தாம்பாட்டிற் சொன்ன வானமென்ன, ஆறாம்பாட்டிற் சொன்ன இளம்பிறைச் சந்திரனென்ன ஆகிய இவையெல்லாம் தம்மோடு துல்ய யோகக்ஷேமங்களையிருக்கின்றனவென்று கருதிய ஆழ்வார் அவற்றையெல்லாங் கூட்டிக்கொண்டு, இங்ஙனம் சேதனப்பொருள்களோடு அசேதனப் பொருள்களோடு வாசியற நாங்களெல்லாரும் பகவத்விஷயத்தில் ஈடுபட்டு நெஞ்சிழந்து எங்கள் ஆற்றாமையைச்சொல்லிக் கதறியழுதுகொண்டிருக்க, இருளே! நீயும் எங்களைப்போலே (எங்கள் திரளிலே சேர்ந்து) கதறியழவேண்டியிருக்க, அது செய்யாததுமல்லாமல் பகைவரைக்காட்டிலுங் கொடி

தாக நின்று எங்களை நீ ஹிம்ஸிக்கின்றாயே! இப்படியும் ஒரு கொடுமையுண்டோ? நீ இக்கொடுமைநீங்கி வாழ்க என்கிறாள்.

ஆக இங்ஙனே கூறப்பட்ட அர்த்தம் கீழ்ப்பாட்டுக்களோடும் மேற்பாட்டுக்களோடும் பொருந்தாமல் ஒரு சப்தஸ்வாரஸ்யத்தைப்பற்றியதா யிருக்கின்றது. இது எம்பெருமானாருடைய நிர்வாஹமாகும். கீழ் மேற்பாட்டுக்களோடு பொருந்தவும் பொருள்கொள்ளலாம்;— இருளுக்கு மழுங்கியிருத்தல் ஸ்வபாவமாயிருக்கச்செய்தேயும் அது ஸ்வபாவமென்றிராமல் எம்பெருமானைப் பிரிந்தாற்றாமையினாலே ஒளியும் மழுங்கி வாய்திறந்து கதறவும்மாட்டாதே யிருக்கின்றதாகக் கொண்டு, ஏற்கனவே நோவுபட்டிருக்கிற வெங்களை உன்னுடைய துக்கத்தையும் காட்டி இன்னமும் நோவுபடுத்துகிறாயே!, சத்துருக்கள் நலியும் நலிவும் லகுவென்னும்படி கொடியையாய்க்கொண்டு எத்தனைகாலம் நலியக்கடவை! ஐயோ! உனக்குத் துயரம் நீங்குக என்கிறாள் என்னவுமாம்

கனவிருளே என்றும், கனையிருளை யென்றும் பாடபேதம், வடு என்னும் வடசொல் விகாரம், கனை என்று வினைப்பகுதியுமாம். ... . (எ)

இருளின் திணிவண்ணம் மாநீர்க்கழியே! போய் *
மருளுற்றிராப்பகல் துஞ்சிலும்நீதுஞ்சாயால் *
உருளும்சகடம் உதைத்தபெருமானார் *
அருளின்பெருநசையால் ஆழாந்துநோந்தாயே? (அ)

இருளின்	இருட்டினுடைய	ஆல்	ஆதலால்
திணி	செறிந்த	உருளும் சகடம் உதைத்த	உருளுகின்ற சகடத்தைத் திருவடிகளா லுதைத் தொழித்த
வண்ணம்	நிறத்தையுடைய	பெருமானார்	எம்பெருமானுடைய
மா	பெரிய	அருளின்	க்ருபாகுணத்திலுண்டான
நீர் கழியே	நீருள்ள கழியே!	பெரு நசையால்	பேராசையினால்
போய்	மிகவும்	ஆழாந்து	ஆழ்ந்து
மருள் உற்று	மருட்சியடைந்து,	நொந்தாயே	நோவுபட்டாயோ?
இரா பகல்	இரவும் பகலும்		
துஞ்சிலும்	முடிந்தாலும்		
நீ துஞ்சாய்	நீ ஓய்கின்றாயில்லை;		

* * * — [இருளின் திணிவண்ணம்.] இருளின் செறிவாலே நீருக்கும் தரைக்கும் வாசியறியாதே ஒரு கழியிலே சென்றிழிந்தாள்; கழிதான் இரைத்துக் கொண்டு ஓடாநிற்குமாகையாலே அது தன்னைப்போலவே பகவத்விஷயத்தில் ஈடுபாட்டாலே உறக்கமற்றுக் கதறுகின்றதாகக் கொண்டு, ஐயோ! சகடாஸுர பங்கம் பண்ணின பெருமானுடைய செயலிலே நீயும் அகப்பட்டாயோ வென்கிறாள்.

நந்தகோப க்ருஹத்தில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப்போனாள்; கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரனொருவன் அச் சகடத்தில் வந்து ஆவேசித்து ஸ்ரீ க்ருஷ்ண சிசுவின்மேலே விழுந்து கொல்ல முயன்றதை அறிந்த அப்பகவான்,

பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கியுதைத்ததனால் அச் சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரனுட்பட அழிந்ததென்றவாறு அறிக. .... (அ)

நொந்தாராக்காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த *
நந்தாவிளக்கமே ! நீயுமளியத்தாய் *
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாயெம்பெருமான் *
அந்தாமத்தண்டுழாய் ஆசையால் வேவாயே ? (௯)

நந்தா விளக்கமே	அழிவில்லாத விளக்கே!	செம் கனி வாய்	சிவந்த கோவைக்கனிபோன்ற வாயையுமுடைய
அளியத்தாய்	இரக்கத்தகுதியுடைய	எம் பெருமான்	எம்பெருமானது
நீயும்	நீயும்,	அம் தண் துழாய் தாமம்	அழகிய குளிர்ந்த திருத்துழாய்மாலையின் மீதுள்ள
நொந்து ஆரா காதல் நோய்	நோவுபட்டு மாளாத ஆசை நோயானது	ஆசையால்	விருப்பத்தினால்
மெல் ஆவி	மெல்லிய பிராணனையும்	வேவாயே	வேகின்றாயோ?
உள் உலர்த்த	உள்ளே உலர்த்த,		
செம் தாமரை தட கண்	சிவந்த தாமரைமலர்போன்ற பெரிய கண்களையும்		

* * * — [நொந்தாராக்காதல்.] ஆற்றாமையாலே தன் மாளிகையிலே புகுந்து அங்கு எரிகிற விளக்கைக்கண்டு அதன் வெப்பத்தைப் பார்த்து 'உடம்பில் கை வைக்க வொண்ணாதபடி விரஹஜ்வரம் பற்றி யெரியாநின்றது' என்று கொண்டு நீயும் என்னைப்போலே பகவத் விரஹத்தாலே வெதும்புகிறாயோ வென்கிறாள்.

நொந்து ஆராக் காதல் நோய் = உலகத்திலுள்ள வியாதிகளுக்கெல்லாம் நோவுபடுத்துகைக்கு ஒருநாள்வரையிலே முடிவு உண்டு; ப்ரேம வ்யாதி அப்படிப்பட்டதன்று; நோவுபடுத்தினது போருமென்று ஒருநாளும் தணியுமதன்று என்றவாறு. இப்படிப்பட்ட காதல் நோயானது, தொட்டார்மேலே தோஷமாம்படி ம்ருதுவாயிருக்கிற ஆத்மவஸ்துவைக் குறுத்துவற்றாக வுலர்த்தும்படியாக என்பது முதலடியின் கருத்து. இது "ஆசையால் வேவாயே" என்றதனோடு அந்வயிக்கும். முதலடியிற் சொல்லுகிற அம்சம் விளக்குக்கும் ஆழ்வார்க்கும் பொது. நொந்தாராக்காதல்நோய் தமக்கு இருப்பது போலவே விளக்குக்கு மிருப்பதாகவும், தாம் மெல்லாவியுள்ளுலர்த்தப் பெற்றிருப்பதுபோல விளக்கும் இருப்பதாகவும் ஆழ்வாருடைய நினைவு.

நந்தாவிளக்கமே! என்றவிடத்து "ஜ்வாலாபேதாநுமாநமிருந்து பார்க்கிறதன்றே" என்பது நம்பிள்ளையீடு. இதன் கருத்து யாதெனில்; ஸ்ரீபாஷ்யத்தில், அநுமாநத்தினால் ப்ரத்யக்ஷம் பாதிக்கப்படுவதும் சிலவிடங்களிலுண்டு என்று நிரூபிக்கப்புகுந்த ஸ்ரீபாஷ்யகாரர் ஜ்வாலாபேதாநுமாநம் காட்டியிருக்கின்றார். அதாவது — எரிகிற விளக்கின் ஜ்வாலையை நாம் பார்க்கும்போது ஒரே ஜ்வாலையென்பதாகவே பார்க்கிறோம்; ஆகவே ப்ரத்யக்ஷத்தினால் ஜ்வாலைக்யம் க்ரஹிக்கப்படுகிறது; உண்மையில் ஜ்வாலைக்யம் கிடையாது; ஜ்வாலாபேதமேயுள்ளது;

அந்த ஜ்வாலாபேதம் அநுமாநவேத்யம்; [illegible]." என்பது அநுமாநசரீரம். ஆக இவ்வநுமாநத்தினால் ஜ்வாலாபேதம் க்ரஹிக்கப்பட்டால் ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிய புதிய விளக்கு உண்டாகிறது என்றதாகத் தேறிநிற்கும்; இங்ஙனே தேறிவிட்டால் நந்தாவிளக்கமே! என்று சொல்வதற்கில்லை; அழியாத ஒரே ஜ்வாலையாக இருந்தாலன்றோ நந்தாவிளக்கென்னலாம். ஆழ்வாரோ நந்தாவிளக்கமே யென்றார்; ப்ரத்யக்ஷ ஸித்தமான வர்த்தனையையேகொண்டு அருளிச்செய்கிறாரென்று உபபத்தி.

அளியத்தாய் — ஐயோவென்று இரங்கவேண்டும்படி யிராநின்றாயென்றபடி, நாட்டுக்குக் கண்காட்டியான வுனக்குப் பாரார்த்தமான வுடம்பிலே இப்படி நோவுவருவதே! என்று நொந்து சொல்லுகிறபடி.

[செந்தாமரை யித்யாதி,] செந்தாமரைபோன்ற தடங்கண்களாலே குளிரக் கடாக்ஷித்து, கொவ்வைக்கனிபோன்ற திருவதரம் அடிப்ப இன்சொல் சொல்லுமவனான எம்பெருமானுடைய அழகிய திருத்துழாய்மாலை பெறவேணுமென்னுமாசையாலே நீயும் என்னைப்போலே வேவாநின்றாயோ? .... (௯)

வேவாராவேட்கைநோய் மெல்லாவியுள்ளுலர்த்த •
ஓவாதிராப்பகல் உன்பாலேவீழ்த்தொழிந்தாய் •
மாவாய்பிளந்து மருதிடைபோய்மண்ணளந்த •
மூவாமுதல்வா! இனியெம்மைச்சோரேலே. (௧௦)

மா வாய் பிளந்து	குதிரைவடிவாகவந்த கேசியென்னுமசுரனுடைய வாயைப்பிளந்தவனும்	வேட்கை நோய்	ஆசை நோயானது
		மெல் ஆவி	மெல்லிய ஆத்மாவை
மருது இடை போய்	இரட்டை மருதமரங்களின் நடுவே தவழ்ந்து சென்று அவற்றை முறித்துத்தள்ளினவனும்	உள் உலர்த்த	குருத்துவற்றாக வற்றுவிக்க
		இராப் பகல்	இரவும் பகலும்
		ஓவாது	இடைவிடாமல்
		உன்பாலே	உன்னிடத்திலேயே
மண் அளந்த	(த்ரிவிக்ரமனாய்ப்) பூமியை அளந்துகொண்டவனுமான	வீழ்த்து	ஈடுபடுத்தி
		ஒழிந்தாய்	உபேக்ஷித்துவிட்டாய்; (போனது போகட்டும்;)
மூவா முதல்வா	அழியாமுதல்வனே!,	இனி	இனிமேல்
வேவு ஆரா	எவ்வளவு வேகச்செய்தும் த்ருப்தியடையாத	எம்மை	எம்மை
		சோரேல்	கைவிடவேண்டா.

• • • — [வேவாரா வேட்கைநோய்.] இப்படி அளவுகடந்த ஆர்த்தியோடே துடிக்கிற ஆழ்வாரைக் குளிரநோக்கி ஒருவாறு சுகப்படுத்தவந்து நெருங்கிய எம்பெருமானைக்குறித்து, பிரானே! சிலநாள் நலிந்துவிடுவதன்றியே மேன்மேலும் மிகவும் நலிகின்ற விரஹவ்யஸநமானது ஏற்கனவே மெலிந்துபோன ஆத்மாவை மிகவும் நோவுபடுத்த இரவும்பகலும் இடைவிடாதே உன்னுடைய குண

சேஷ்டிதங்களையே நினைந்து நைந்து உள்கரைந்து உருகும்படியாகச்செய்திட்டாய்; இவ்வளவுசெய்த நீ இனி ஒருகாலமும் என்னைக் கைவிடாதே கொள்ள வேணும் என்று ப்ரார்த்திப்பதாய்ச் செல்லுகிறது இப்பாசுரம்.

ஒருநாள் கம்ஸனாலேவப்பட்ட கேசியென்பானோர் அசுரன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சிநடுங்கும்படி கனைத்துத் தாக்கிக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப்பெருக்கி நீட்டி அதன்வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினனென்ற வரலாறு மாவாய்பிளந்து என்றவிடத்து அறியத்தக்கது.

குழந்தைப்பருவமுள்ள கண்ணன் துன்பப்படுகின்ற பல விளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த யசோதை க்ருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமர [யமளார்ஜுந]த்தின்நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய்நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்துவிழுந்தவளவில் முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேரபுத்ரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர். [இக்குபேரபுத்திரர்கள் முன் ஒருகாலத்தில் பல அப்ஸரஸ்திரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்துகொண்டிருக்கையில் நாரதமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடையுடுத்துநிற்க, இந்த மைந்தர்மாத்திரம் மதுபானமயக்கத்தால் வஸ்த்ரமில்லாமலேயிருக்க, நாரதர்கண்டு கோபங்கொண்டு 'மரங்கள்போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபிக்க, உடனே அவர்கள் வேண்டிக்கொண்டதற்கு இரங்கி நெடுங்காலஞ்சென்றபின்பு திருமால் உங்களையடையுஞ்சமயத்தில் இவ்வடிவமொழிந்து முன்னைவடிவம்பெற்று மீள்வீர்' என்று சாபவிடை கூறிப் போயினர். இங்ஙனம் சாபத்தினால் மரங்களான இவற்றில் கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அசுரர்களும் ஆவேசித்துக்கிடந்தனர்.] என்ற வரலாறு மருதிடைபோய் என்றவிடத்திற்கு அறியத்தக்கது. மண்ணளந்தவரலாறு [த்ரிவிக்ரமாவதாரசரிதம்] ப்ரஸித்தம். .... (௧௦)

சோராதவெப்பொருட்கும் ஆதியாஞ்சோதிக்கே *
ஆராதகாதல் குருகூர்ச்சடகோபன் *
ஓராயிரம்சொன்ன அவற்றுளிவைபத்தும் *
சோரார்விடார்கண்டீர் வைகுந்தம்திண்ணெனவே. (௧௧)

சோராத	ஒன்றுங்குறையாத	ஆராத காதல்	அடங்காத ஆசையையுடையரான
எப்பொருட்கும்	எல்லாப்பொருள்களுக்கும்	குருகூர் சடகோபன்	ஆழ்வார்
ஆதி ஆம்	காரணபூதனைப்பெற்ற	ஓர் ஆயிரம்	ஓராயிரமாக
சோதிக்கே	ஒளியுருவனான எம்பெருமானுக்கே		

சொன்ன அவற்றள்	அருளிச்செய்த பாசுரங்களுக்குள்ளே	வைகுந்தம்	பரமபதத்தை
இவை பத்தும்	இந்தப்பத்துப் பாசுரங்களையும்	திண்ணனவே	திடமாகவே
சோரார்	மறவாதவர்கள்	விடார்	விடாமல் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

(கண்டீர்—முன்னிலையசை.)

* * * — [சோராதவெப்பொருட்கும்] இப்படி எம்பெருமானைப் பிரிந்த துயரத்திலே முடியப்புகுகிற தம்மை உய்வித்தற்பொருட்டு வந்து ஸேவைஸாதித்தருளின எம்பெருமானைக்கண்டு தாம் உஜ்ஜீவித்து, தம்முடைய உஜ்ஜீவனத்தாலே எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வம் ஒளிபெற்ற படியைக்கண்டு சாலவுமுவந்து அவனுடைய ஸர்வேச்வரத்வத்தை நெஞ்சார அநுபவித்து, இப்படி ஸர்வேச்வரனுயிருந்த எம்பெருமான் பக்கலுள்ள ஆசையாலே சொன்ன இத்திருவாய்மொழியை நியதமாக அநுஸந்திக்குமவர்கள் ஒருநாளும் எம்பெருமானைப் பிரியார்கள், இது திண்ணம் என்று இப்பதிகம் கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

"சோராத வெப்பொருட்கு மாதியாஞ்சோதிக்கே" என்றது எம்பெருமானுக்கு இயற்கையாகவுள்ளபடியைச் சொன்னதன்று; இப்பதிகத்தை ஆழ்வார் அருளிச்செய்தபின்பு சேர்ந்த தன்மையைச் சொன்னபடி. நம்பிள்ளையீடு காண்மின்;—"இவ்வளவிலேவந்து இவரோடேகலந்து இவரை யுளராக்குகையாலே ஒன்றொழியாதபடி ஸகல பதார்த்தங்களும் ஈச்வரனுமாய் இவரோடே வந்து கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனுமாயிருந்தான்; இவர்க்குவந்து முகங்காட்டுவதற்குமுன்பு ஸர்வேச்வரத்வமும் அழிந்ததுபோலேகிடந்தது; இவரொருத்தரையும் சோரக்கொடுக்கவே ஸர்வேச்வரத்வம் அழியுமிறே. இவரிழவுதீர வந்து முகங்காட்டினபின்பு எல்லாப்பொருட்கும் நிர்வாஹகனானான்."

வெறுங்குருகூர்ச் சடகோபராயிருந்த ஆழ்வார் * ஆராத காதற்குருகூர்ச் சடகோபரானார் இத்திருவாய்மொழியிலென்க. காதலையிட்டே நிரூபிக்கத் தகுந்தவரானார். .... (கக)

அடிவரவு:—வாயுக் கோள் காமுற்ற கடலுழி கை தோற்றேனும், இருள் சேர்ந்து வேவாராச் சோராத திண்ணன். ....

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து முதல் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமங்கமாந்தமஹாதேசிகனருளிச்செய்த

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில்

இத்திருவாய்மொழிக்கான ச்லோகம்.

நித்ராச்சேதகத்வாதரதிஜநநதோஜஸ்ரஸம்க்ஷேபகத்வாத்
அந்வேஷ்டும் ப்ரேரகத்வாத் விலயவிதரணாத் கார்ச்யதைந்யாதி
[க்ருத்வாத் |
சித்தாக்ஷேபாத் விஸம்ஜ்ஞீகரணத உபஸம்சோஷணாவர்ஜநாப்யாம்
த்ருஷ்டாஸ்வாதஸ்ய சௌரே: க்ஷணவிரஹதசாதுஸ்ஸஹத்வம் ஜகாத ||

[நித்ராதிச்சேதகத்வாத்] முதற்பாட்டில் "மடநாராய்! ஆயுமமருலகும் துஞ்சிலும் நீதுஞ்சாயால்-எம்மேபோல்" இத்யாதியினால் உறக்கங்கெடுத்தமை சொல்லப்பட்டது. [அரதிஜநநத:] இரண்டாம்பாட்டில் "எம்மேபோல்...கூர்வாயவன்றிலே! சேட்பட்ட யாமங்கள் சேராது இரங்குதியால்" என்று ஒருகாலும் தரிப்புறாதபடி சைதில்யத்தை யுண்டாக்கினமை சொல்லப்பட்டது. [அஜஸ்ரஸம்க்ஷேபகத்வாத்] 3. "நீ முற்றக்கண் துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்" என்று ஸர்வகாலத்திலும் க்ஷேபத்தையுண்டாக்குந்தன்மை சொல்லப்பட்டது. [அந்வேஷ்டும் ப்ரேரகத்வாத்] 4. "கடலும் மலையும் விசும்புந்துழாய் எம்போல்" என்று கடல்மலை விசும்பு முதலான எல்லாவிடத்திலும் தன்னைத் தேடும்படி செய்யுந்தன்மை சொல்லிற்று. [விலய விதரணாத்] 5. "தோழியரும் யாமும்போல்நீராய் நெகிழ்கின்ற" என்று முடியும்படியான நிலைமையை விளக்குந்தன்மை சொல்லிற்று. [கார்ச்யதைந்யாதி க்ருத்த்வாத்] 6. "நாண்மதியே! நீ யின்னே...மாழாந்து தேம்புதியால்" என்று க்ருசித்துப்போதல் தைந்யமடைதல் முதலான தன்மைகளைப்பண்ணுகின்றமை சொல்லிற்று. [சித்தாக்ஷேபாத்] 7. "நோற்றோம்மடநெஞ்ச மெம்பெருமான் நாரணற்கு" என்று மனஸ்ஸைக் கொண்டு போது போக்கவொண்ணாதபடி அதை அபஹரிக்குந்தன்மை சொல்லிற்று. [விஸம்ஜ்ஞீகரணத:] 8. "மாநீர்க்கழியே! போய் மருளுற்றிராப்பகல் துஞ்சிலும் நீதுஞ்சாயால்" என்று ஒன்றுந்தெரியாதபடி மதிமயக்கத்தை உண்டாக்குந்தன்மை சொல்லிற்று.

[உபஸம்சோஷண ஆவர்ஜநாப்யாம்] 9. "காதல்நோய் மெல்லாவியுள்ளுலர்த்த" என்று நற்சீவனைக் குருத்துவற்றாக வுலர்த்துந்தன்மையும், 10. "மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த" என்று மறந்து பிழைக்கவொண்ணாதபடி விரோதி நிரஸநாதி வசீகரண சேஷ்டிதங்களையுடையனாயிருக்குந்தன்மையும் சொல்லிற்று. ஆக இத்தனை விஷயங்களையும் தெரிவிக்கின்ற இத்திருவாய்மொழியினால் ஆழ்வார் என்ன சொன்னாரென்னில்; [த்ருஷ்டாஸ்வாதஸ்ய சௌரே: க்ஷணவிரஹதசாதுஸ்ஸஹத்வம் ஜகாத] பரமபோக்யனான எம்பெருமானுடைய விரஹம் ஒரு நொடிப்பொழுதும் ஆற்றக்கூடியதன்று என்று அருளிச்செய்தாராயிற்று.

தூப்புல்பிள்ளை பொன்னடிகள் போற்றி.

ஸ்ரீ:.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

வாயுந் திருமால் மறையநிற்க, ஆற்றாமை
போய்விஞ்சி மிக்க புலம்புதலாய் — ஆய
அறியா தவற்றோ டணைந்தழுத மாறன்
செறிவாரை நோக்குந் திணிந்து.

வாயும்	(அடியார் அநுபவிக்கலாம்படி) கிட்டுகையையே ஸ்வபாவமாகவுடைய	ஆய அறியாதவற்றோடு	(அசேதனங்களாகையாலே தம்முடைய அகத்தை) ஆராய அறியாதவற்றை
திருமால்	ச்ரிய:பதியான எம்பெருமான்	அணைந்து	கட்டிக்கொண்டு
மறையநிற்க	(கண்ணுக்குப் புலப்படாமல் பிரிந்து) மறைந்திருக்க (அதனாலே)	அழுத	(அவற்றை ஸமதுக்கிகளாகக்கொண்டு) அழுத
ஆற்றாமை போய் விஞ்சி	சோகம் அதிகரித்து	மாறன்	ஆழ்வார்
மிக்க புலம்புதல் ஆய்	மிகவும் அழும்படியான நிலைமை நேர்ந்து	செறிவாரை	தம்மைவந்து பணியுமவர்களை
		திணிந்து நோக்கும்	திடமாகக் கடாக்ஷித்தருள்வர்.

* * * — மேன்மை நீர்மை வடிவழகு ஆகிய மூன்றும் குறைவின்றியே உண்டாய், அவதாரத்தில் பிற்பட்டவர்களு மிழக்கவேண்டாதபடி முகங்கொடுத்துக்கொண்டு, நிற்கிற ஸ்தலமான அர்ச்சாவதார நிலங்களுட் சிறந்ததான திருக்குறுங்குடியிலே ‡ அநுபவிக்க ஆசைப்பட்டுக் கிடையாமையாலே கண்ணுஞ் சுழலையிட்டு, நாரை அன்றில் கடல் வாடை வானம் மதி இருள் கழி விளக்கு முதலான உலகப்பொருள்களும் தம்மைப்போலே பகவத் விரஹத்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டுச் செல்லுகிறபடியைப் பேசினது * வாயுந்திரையுகளு மென்கிற திருவாய்மொழி. இங்ஙனம் விலக்ஷணமான நிலைமையையடைந்த நம்மாழ்வார் அடியார்களை பகவத் விச்லேஷம் நேராதபடி பரிபூர்ண கடாக்ஷஞ் செய்தருள்வரென்றதாயிற்று.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(கருத்து.) ஆழ்வார், கீழே எம்பெருமானுடைய திருக்குணங்களை அநுபவித்ததனால் அவனுடைய திருமேனியோடே அணையப்பெறவேணுமென்று பாரித்து அது கிடைக்கப்பெறாமையாலே வருத்தமுற்று, நாரை அன்றில் முதலிய ஸகல பதார்த்தங்களும் தம்மைப்போலவே பகவத்விச்லேஷ விரஹத்தாலே க்லேசப்படுகிறனவாகக்கொண்டு பேசினார் இத் திருவாய்மொழியிலென்க. .... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

‡ "நம்பியைத் தென்குறுங்குடிநின்ற" என்ற பாசுரம் காண்க.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து — இரண்டாம் திருவாய்மொழி,

திண்ணன்வீடு.

அவதாரிகை.

கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார்க்கு உண்டான நிலைமை லோகவிலக்ஷணமாக விருந்தது. பேச்சுக்கு நிலமல்லாத ஆற்றாமையிலே இருந்தார். ஆற்றாமை கரைபுரண்டதாகுங்காலத்திலே எம்பெருமான் வந்து முகங்காட்டி ஆச்வஸிப்பித்தல் முறைமையாதலால் அவன் அங்ஙனமே வந்து முகங்காட்டினன்; உடனே அந்த ஆற்றாமை போனவிடந் தெரியாமே போயிற்று. உடனே தேறுதலடைந்த ஆழ்வார், எம்பெருமானுடைய பாரத்வம் ஸௌலப்யம் என்கிற இரண்டு குணங்களிலே ஸௌலப்யமானது பேசப்பேச உருகப்பண்ணுமதாதலால், 'இப்போதுதான் சிறிது தேறுதலடைந்த நாம் அந்த ஸௌலப்ய குணத்தைப்பேசி நெஞ்சழியவொண்ணாது; * நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச்சொல்லே * என்கிறபடியன்றிக்கே தரித்துநின்று பேசலாம்படியான பாரத்வத்தைப்பற்றிப் பேசுவோம்' என்றெண்ணி அதனைப் பேசுகிறார் இத்திருவாய்மொழியில்.

* உயர்வறவுயர்நலம் என்கிற முதல் திருவாய்மொழியிலும் பாரத்வம் பேசப்பட்டிருந்தாலும் இங்குப் பேசுகிறபடியில் வைலக்ஷண்யமுண்டு. அங்கு ஸ்வாநுபவரூபமாகவே சென்றது; இங்கு உபதேசரூபமாகவுமுள்ளது. அங்கு அந்வயமுகத்தால் அருளிச்செய்யப்பட்டது; இங்கு அந்வய வ்யதிரேகங்களிரண்டினாலும் அருளிச் செய்யப்படுகிறது. [எம்பெருமானே பாரத்வமுடையவன் என்று சொல்லுதல் அந்வயமுகத்தாலே சொல்லுதல். எம்பெருமானைத் தவிர்த்து மற்றையோர்க்குப் பாரத்வம் அஸம்பாவிதமென்று நிரூபித்தல் வ்யதிரேகமுகத்தாலே சொல்லுதல்.] அங்குப் பெரும்பாலும் உபநிஷத்துக்களை அடியொற்றி அருளிச்செய்தார்; இங்கு இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே அருளிச்செய்கிறார்; அங்குப் பாரத்வத்திலே பாரத்வமருளிச்செய்தார்; இங்கு அவதாரத்தில் பாரத்வமருளிச்செய்கிறார் என்று இங்ஙனே பல வாசிகள் காண்க.

ஒரு குணத்தையே பலகாலும் அநுபவித்தாலும் தெகுட்டும் விஷயமன்றே. "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும், அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே" என்றன்றோ ஆழ்வார்தாமருளிச்செய்வது. எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்களோ திவ்ய அவயவங்களோ திவ்யாத்மஸ்வரூபமோ திவ்ய குணங்களோ ஒருகால் அநுபவிக்கப்பட்டாயிற்றேயென்று

புநருக்தி தோஷ சங்கையினால் மறுபடியும் பேசப்படாதொழியில் இவ்விஷயம் அவிலக்ஷணம் என்றதாகுமத்தனை: விலக்ஷண விஷயங்களை ப்ரகாரபேதமிருந்தோ இல்லாமலோ எத்தனை தடவை பேசினாலும் புநருக்தி தோஷமாகாதென்பது ஞாபகமிருக்கத்தக்கது.

இங்கே நம்பிள்ளை ஈடு காண்மின்;—

"ஒருகாற் சொன்னோம் என்று கைவாங்கியிருக்கவல்லரல்லர் இவர்; ஒருகாற் சொல்லிற்றென்று கைவாங்கலாம் விஷயமன்று அது. இனித்தான் பகவத்விஷயத்தில் புநருக்தி தோஷாயவாகாது. ஒரு குணத்தையே எக்காலமும் அநுபவிக்கவல்லரொருவர் இவர்; ஒரு குணந்தன்னையே 'இதுக்கு முன்பு அநுபவிப்பித்தது இக்குணம்' என்று தோற்றாதபடி க்ஷணந்தோறும் புதுமை பிறப்பித்து அநுபவிப்பிக்கவல்லானொருவன் அவன்." இத்யாதி.

பேசினதையே மற்றொருகால் மீண்டும் பேசுமிடங்களெங்கும் ஒவ்வொரு வாசியிருப்பதுபோலவே இத் திருவாய்மொழிக்கும் "உயர்வறவுயர்நலத்திற் காட்டில் நெடுவாசியுண்டென்பது அறிக்கொள்ளத்தக்கது. ... ... *

திண்ணன்வீடு முதல்முழுதுமாய் *
எண்ணின்மீதியன் எம்பெருமான் *
மண்ணும்விண்ணுமெல்லாம் உடனுண்ட * நம்
கண்ணன்கண்ணல்லது இல்லையோர்கண்ணே (க)

திண்	திண்மையையுடைய	உடன் உண்ட	ஒருங்கே அமுதுசெய்தவனை
நன்	நல்ல		
வீடு முதல்	மோக்ஷம் முதலாக	நம் கண்ணன்	நமது கண்ணபிரானே
முழுதும் ஆய்	எல்லாவற்றையும் அளிப்பவனாய்	கண்	(உலகுக்கு) இறைவன்;
எண்ணின் மீதியன்	நினைவுக்கு அப்பாற்பட்டவனாய்	அல்லது	அல்லாமல்
எம் பெருமான்	எமக்கு ஸ்வாமியாய்	ஓர் கண்	வேறொரு தலைவன்
மண்ணும் விண்ணும் எல்லாம்	பூமியும் ஆகாசமுமாகிய முழுவதையும்	இல்லை	இல்லை.

* * * — [திண்ணன்வீடு.] கண்ணபிரானே உலகுக்கெல்லாம் நிர்வாஹகனென்கிறார். மோக்ஷம் முதலிய ஸகல புருஷார்த்தங்களையும் அளித்தருள்பவனாய், எண்ணிறந்த திருக்குணங்களையுடையனாய், அக் குணங்களைக்காட்டி என்னை யீடுபடுத்திக்கொண்டவனாய், ப்ரளயாபத்து வந்தபோது பூமி முதலான ஸகல லோகங்களையும் ஒருசேரத் திருவயிற்றிலே வைத்து நோக்குபவனான நமது கண்ணபிரானே உலகுக்கெல்லாம் கண்ணாயிருப்பவன்.

திண்ணன் என்றவிடத்து மகாரனகாரப்போலியாய், திண்ணம் என்றபடியாகக் கொண்டால், இப்போது சொல்லுகிற விஷயம் அசைக்க முடியாதது என்ற

வாரும்- 'திண் நல் வீடு' என்று கொண்டு திடமாயும் விலக்ஷணமாயு மிருக்கிற மோக்ஷமென்றதாகவும் கொள்ளலாம். ஒரு காலுமழியாத பரமபதம் முதலிய ஸகல லோகங்களையும் தன் விபூதியாகவுடையவன் என்றும் பொருளாகலாம்.

எண்ணின் மீதியன் என்றால் எண்ணுக்கு மீறியுள்ளவன் என்றபடி. குணங்களாலோ விபூதிகளாலோ எண்ணை மீறினவனென்றபடியாய் வாங்மனஸாபரிச்சேத்ய ஸ்வரூபரூபகுண விபூதிகளுடைமை சொல்லிற்றாகுமென்க.

"மண்ணும்விண்ணுமெல்லாமுடன்காத்த" என்றதே உண்ட என்றது, அவற்றின் ரக்ஷணமானது தனக்கு உணவுபோலே பரம போக்யமென்பதைத் காட்டுதற்காம். பிரளயகாலத்தில் எம்பெருமான் * மண்ணொடும் விண்ணொடும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாமுண்ணத பெருவெள்ள முண்ணாமல் தான் விழுங்கி உய்யக்கொள்ளுகிறானென்பது நூற்கொள்கை. எல்லாரையும் திருவயிற்றிலேவைத்துக் காத்தருளினவன் நிர்வாஹகனாயிருக்கத் தகுதியுண்டே யன்றி, அவனது திருவயிற்றினுள்ளே கிடந்து ரக்ஷணம் பெற்று வெளிவந்த சிறுதெய்வங்களுக்கு நிர்வாஹகத்வம் அஸம்பாவிதம் என்று இப்பாசுரத்தினால் காட்டப்பட்டதாயிற்று.

கண் என்றது "சக்ஷோ: ஸூர்யோ அஜாயத" என்ற சுருதியின் சாயையாலே யென்க.

ஏ பாவம்! பரமே! ஏழுலகும் *
ஈபாவம்செய்து அருளாலளிப்பாரார்? *
மாபாவம்விட அரற்குப்பிச்சைபெய் *
கோபாலகோளரி ஏறன்றியே. (௨)

மா பாவம் விட	மிகப்பெரிதான (பிரமஹத்தி) பாபமான தவிட்டு நீங்கும்படி	ஏழ் உலகும்	ஏழுலகங்களையும்
அரற்கு	சிவபிரானுக்கு	ஈ பாவம் செய்து	பாவம் தொலைந்ததாகச் செய்து
பிச்சை பெய்	பிக்ஷையிட்ட	அருளால்	க்ருபையினாலே
கோபாலன்	கோபாலனென்கிற	அளிப்பார் ஆர்	காப்பவருண்டோ?
கோள் அரி ஏறு அன்றி	வலிமைதங்கிய ஆண்சிங்கமல்லது (வேறொருவர்)	ஏ பாவம்	ஐயோ!
		பரமே	எம்பெருமானது ஏற்றத்தைச்சொல்லிமுடித்தல் நம்மாலாகுமோ?

* * * — [ஏபாவம் பரமே.] "நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர்கண்ணே" என்றருளிச்செய்த ஆழ்வாரை நோக்கிச் சிலர் 'இப்படிச் சொல்லலாமோ? பிரமன் சிவன் முதலானோரும் ஈச்வரர்கள் என்று காட்டுகின்ற பிரமாணங்கள் இல்லையோ?' என்ன; அவர்களது சரித்திரங்களை ஆராய்ந்துபார்த்தால் அவர்கள் ஈச்வரர்களாகத் தகுதியில்லை; ஆபத்துவந்த காலத்திலே அவர்களைக் காத்தருளினவனாக ப்ரஸித்திபெற்ற எம்பெருமானே ஈச்வரன் என்று நிலைநாட்டுகிறாரிதில் * வேதாபஹார குருபாதக * இத்யாதி ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்திக்கு இப்பாசுரம் மூலம்.

தொடங்கும்போதே ஏபாவம்! என்றது ஆழ்வாருடைய மிக்க துக்கத்தைக்காட்டும். மாணிக்கத்திற்கும் கரியவனுக்கு முள்ள வாசியை ஒருவன் எடுத்துரைக்கவேண்டுமோ? அவரவர்களே அநாயாஸமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயத்தையும் நான் எடுத்துக் கூறவேண்டும்படியாவதே! என்று வருத்தங்காட்டுகிறபடி. ஹா! என்ற வடசொல் பரமெனத் திரிந்தது. எம்பெருமானை அநுபவிப்பதற்கென்று பிறந்த எனக்கு மூடர்களைத் தேற்றவேண்டுவதும் ஒரு சுமையாக வந்து நிற்கின்றதே! என்ற வருத்தத்தைப் பரமே! என்றதனால் காட்டுகிறபடி. "பகவதநுபவம் பண்ணுகையொழிய இது நமக்கு பாரமாவதே!" என்பது ஈடு.

அருளால் ஏழுலகும் ஈபாவஞ்செய்து அளிப்பார் ஆர்? = யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாச்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே - யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேய் அநாச்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே" [ஸ்ரீவைகுண்டஸ்தவம்] என்று ஆழ்வான் அருளிச்செய்தபடி அனேக கல்ப காலங்கள் அநுபவித்துத் தொலைக்கவேண்டிய பாவங்களை அரைநொடிப்பொழுதில் செய்கின்ற உலகங்களின் பாவங்களை அருளாலே அழியச்செய்பவர் எம்பெருமானைத் தவிர வேறு யாவர்? என்றபடி. பாவங்களை அழியச்செய்கையாவது பாவங்கள் பலன் கொடுக்கவொண்ணாதபடி ஸங்கல்பித்தலேயாகும். ஈபாவஞ்செய்து = பாவம் ஈயச்செய்து என்றவாறு. ஈதல் - அழிதல்.

உலகங்களின் பாவங்களை அழியச்செய்கிறுனென்பது கிடக்கட்டும்; உலகுக்குத் தலைவனுக அபிமானிக்கப்படுகிற சிவபிரானுடைய பாவமொன்றைத் தொலைத்த கதை சொல்லுகின்றேன் கேண்மினென்கிறுர் மூன்றுமடியில். ஒரு காலத்திலே பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனுயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கின்றதென்று கருதி அவனது சிரமொன்றைக்கிள்ளி யெடுத்துவிட அக் கபாலம் அப்படியே சிவன் கையில் ஒட்டிக்கொள்ளுதலும் அவன் 'இதற்கு என் செய்வது' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்கவேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ்சென்று பிச்சையேற்றுக்கொண்டே வருந்தித் திரிந்தும் அக் கபாலம் நீங்காதாக, பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இரந்தபோது அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது என்ற வரலாறு அறியத்தக்கது. .... (௨)

ஏறனைப்பூவனைப் பூமகள்தன்னை *
வேறின்றிவிண்தொழத் தன்னுள்வைத்து *
மேல்தன்னைமீதிட நிமிர்ந்துமண்கொண்ட *
மால்தனில்மிக்குமோர் தேவுமுளதே. (௩)

ஏறனை	ரிஷபவாஹனனான ருத்ரனையும்	மேல் தன்னை	மேலுலகத்தை
பூவனை	தாமரைப்பூவைப் பிறப்பிடமாகவுடையனான பிரமனையும்	மீதிட	மேலிடும்படி
பூ மகள் தன்னை	அலர்மேல் மங்கையான ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும்	நிமிர்ந்து	வளர்ந்து
வேறு இன்றி	வேற்றுமையில்லாமல்	மண்	பூமியை
தன் உள்	தனது திருமேனியில்	கொண்ட	அளந்து கொண்டவனுபயிராகின்ற
விண் தொழ	விண்ணுளார் தொழும்படி	மால் தனில் மிக்கும்	ஸர்வேச்வரனுக்கு மேற்படவும்
வைத்து	இடங்கொடுத்து வைத்தவனையும்,	ஓர் தேவும் உளதே	ஒரு தெய்வமுமுண்டோ ?

* * * — [ஏறனைப் பூவனை.] அயர்வறுமமரர்கள் தன்னுடைய சீலகுணத்தைக் கண்டு தொழுகைக்காக ஸர்வேச்வரியான பெரிய பிராட்டியாரோடொக்கப் பிரமன் முதலானோர்க்கும் தன்னை ஆச்ரயமாகக் கொடுத்துக்கொண்டிருக்கையாலும், ஸகல லோகங்களும் திருவடிகளினுள்ளே யடங்கும்படி அளந்தருளுகையாலும் இவனே ஸர்வேச்வரன், வேறில்லை யென்கிறார்.

இதில் முன்னடிகளிற் கூறப்படுகின்ற விஷயத்தைப்பற்றி முதற்பத்தில் "வலத்தனன் திரிபுரமெரித்தவன்" என்ற பாட்டினுரையில் (பக்கம் 131 ல்) விரிவாகக் கூறப்பட்டுளது; அங்குக் கண்டுகொள்க.

ஏறு - இடபம்; அதனையுடையவன் ஏறன். பூவை(ப்பிறப்பிடமாக) உடையவன் பூவன். விண் தொழ = விண்ணவர்கள் இந்த சீலகுணத்தி லீடுபட்டுத் தன்னைத் தொழ என்றபடி. 'விண்தொழவைத்து' என இயையும். ... (௩)

தேவுமெப்பொருளும்படைக்க *
பூவில் நான்முகனைப்படைத்த *
தேவன் எம்பெருமானுக்கல்லால் *
பூவும் பூசனையும்தகுமே ? (௪)

தேவும்	தேவர்களையும்	தேவன்	பரதெய்வமாகிய
எப் பொருளும்	மற்றெல்லாப் பொருள்களையும்	எம்பெருமானுக்கு அல்லால்	எமது ஸ்வாமிக்கேயன்றி (வேறுசிலர்க்கு)
படைக்க	ஸ்ருஷ்டிக்க		
பூவில்	(திருநாபிக்) கமலத்திலே	பூவும்	புஷ்பங்களும்
நான்முகனை	பிரமனை	பூசனையும்	திருவாராதனமும்
படைத்த	உண்டாக்கின	தகுமே	தகுமோ? (தகாது)

* * * — [தேவுமெப்பொருளும்.] பூ அணிதற்கு ஈடான ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களும், பூஜையிடுதற்கிடான முதன்மையும் எம்பெருமானுக்கன்றி வேறு சிலர்க்கு இல்லாமையாலே அவனே ஸர்வேச்வரனென்கிறார்.

"எது ஜகத்காரணபூதமோ அதுவே பரப்ரஹ்மம்" என்று வேதாந்தங்கள் அறுதியிடுகையாலே அப்படிப்பட்ட ஜகத்காரணத்வம் எம்பெருமானுக்கே உள்ளது என்பதை முன்னடிகளில் மூதலிக்கிறார். பூவும் பூசனையும் தகுமே — 'குழலழகர் என்று ப்ரஸித்திபெற்ற எம்பெருமானுக்குப் பூத் தகுமே யன்றிச் சடைமுடியானுக்கு தகாது; முழுமுதற் கடவுளுக்குப் பூசனை தகுமேயன்றிக் கார்யபூதனுக்குத் தகாது.

எம்பார் உள்ளங்கை கொணர்ந்த நாயனாராகிக் காளஹஸ்தியிலே சிவபூஜா நிஷ்டராய் நாடோறும் பூப்பறித்துவாரா நிற்கையில் அவரைத் திருத்திப் பணிகொள்ளக் கருதிய பெரியதிருமலைநம்பி அவர் பூப்பறிக்கச் செல்லுமிடத்தே சிஷ்யவர்க்கங்களைக் கூட்டிக்கொண்டு இப் பாசுரத்தின் விசேஷார்த்தங்களை அழகாக உபந்யஸித்தருள, எம்பார் பூப்பறித்துக்கொண்டே இதனைச் செவியேற்று (பூவும் பூசனையுந்தகுமே என்றதற்கு) 'தகாது தகாது' என்று தாம் விடைகூறிக் கொண்டே பூக்குடலையை விட்டெறிந்து திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே வந்து சேர்ந்தார் என்ற இதிஹாஸம் இக்கு உணரவுரியது. .... (௪)

தகும்சீர்த்தன் தனிமுதலினுள்ளே *
மிகுந்தேவும் எப்பொருளும்படைக்க *
தகுங் கோலத்தாமரைக்கண்ணனெம்மான் *
மிகுஞ்சோதி மேலறிவார்யவரே.

(௫)

தகும்	(ஸ்ருஷ்டி முதலியவற்றுக்குத்) தகுதியான	எப்பொருளும்	(மனிசர் முதலிய) மற்றெல்லாப் பொருள்களையும்
சீர்	(சிறந்த ஞானம் முதலிய) குணங்களையுடையனுன	படைக்க	படைப்பதற்கு
தன்	தன்னுடைய	தகும்	தகுதி பொருந்தியவனும்
தனி	ஒப்பற்ற	கோலம் தாமரை கண்ணன்	அழகிய புண்டரீகாக்ஷனுமாகிய
முதலினுள்ளே	உலககாரணமான ஸங்கல்பத்திற்குள்ளே	எம்மான்	எம்பெருமானைவிட
மிகும்	மிகுந்த	மிகும் சோதி	மிகுந்த ஒளிபொருந்திய
தேவும்	(பிரமன் முதலிய) தேவர்களையும்	மேல்	மேலானபொருளை
		அறிவார் யவர்	அறிபவர் யாவர் ?

* * * — [தகுஞ்சீர்.] எம்பெருமானுக்குப் பரத்வஸ்தாபகங்களானவற்றுக்குள்ளே புண்டரீகாக்ஷத்வமும் ஒன்றாதலால் அதனை இங்கு அருளிச்செய்கிறார். ஆளவந்தாரும் ஸ்தோத்ரரத்நத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை நிரூபிக்கும் பிரகரணத்திலே "கஃ ஸ்ரீஃ ஸ்ரியஃ பரமஸத்வஸமாச்ரயஃ கஃ கஃ புண்டரீகநயநஃ புருஷோத்தமஃ கஃ" என்றருளிச்செய்ததுங் காண்க.

தனக்குத் தகுதியான ஜ்ஞானசக்தி முதலிய திருக்குணங்களையுடையனுய்த் தன்னுடைய ஸங்கல்ப மாத்திரத்தினுலே எப்படிப்பட்ட தேவர்களையும் படைக்க இவனே தகுதியுடையானென்று கோட்சொல்லித் தருகின்ற தண்டாமரைக் கண்களையுடையனுய் அவ்வழகாலே என்னை அடிமைகொண்டருளின எம்பெருமானே பரதத்துவம்; இவன் தவிர வேறு சில ஈச்வரர்கள் உண்டென்பதற்கு ப்ரமாணமில்லை என்றாராயிற்று. ... . (௫)

யவரும்யாவையும் எல்லாப்பொருளும் *
கவர்வின்றித் தன்னுளொடுங்கநின்ற *
பவர்கொள் ஞானவெள்ளச்சுடர்மூர்த்தி *
அவரெம்மாழியம் பள்ளியாரே. (௬)

யவரும்	சேதனர்கள் யாவரும்	ஞானம் வெள்ளம்	ஞானமிகுதியை
யாவையும்	அசேதனங்கள் யாவையும்		
எல்லாப் பொருளும்	ஆகிய எல்லாப்பொருள்களும்	சுடர்	தனக்குக்காந்தியாகவுடைய
		மூர்த்தி	ஸ்வாமியுமான
கவர்வு இன்றி	நெருக்கமின்றியே	அவர்	அந்த ஸர்வேச்வரன்
தன்னுள்	தனது திருவயிற்றினுள்ளே	எம்	எமது அநுபவத்திற்குரிய
ஒடுங்க நின்ற	அடங்கும்படி நின்றவனும்	அம்	அழகிய
பவர் கொள்	பரப்பைக்கொண்ட	ஆழி பள்ளியார்	ப்ரளயார்ணவசயன ராவர்.

* * * — [யவரும் யாவையும்.] சேதநாசேதநாத்மகமான ஸகல பதார்த்தங்களையும் தன் திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்கையாலே அவனே ஈச்வரனென்கிறார். யவரும் என்று உயர்திணையாகச் சொல்லுகையாலே சேதநப்பொருள்களடங்கலும் அர்த்தம். யாவையும் என்று அஃறிணையாகச் சொல்லுகையாலே அசேதநப் பொருள்களடங்கலும் அர்த்தம். மீண்டும் 'எல்லாப்பொருளும்' என்றது பிரளயகாலத்தில் திருவயிற்றினுட்புகாது நின்ற பொருள் அணுவளவும் இல்லையென்பதைத் திடமாகவுரைத்தற்காம். கவர்வு இன்றி = பரஸ்பரம் ஹிம்ஸை ஏற்படாதபடி என்றவாறு. ஒருவரையொருவர் நெருக்காதபடி விசாலமாகத் திருவயிறு இடங்கொடுத்ததென்க.

"தன்னுள் ஒடுங்கநின்ற" என்பதற்கு இரண்டுவகையாகப் பொருள்கொள்வர்; திருவயிற்றினுள்ளே என்பது ஒரு பொருள். தன் ஸங்கல்பத்திலே என்பது மற்றொருபொருள். ஸகல சராசரங்களும் எம்பெருமானுடைய ஸங்கல்பத்திலே ஒடுங்கி நிற்கின்றன வென்றபடி.

பவர்கோள் ஞானவெள்ளச் சுடர்மூர்த்தி = இத்தனை விசாலமான உலகங்களையெல்லாம் ரக்ஷிப்பதற்குப் போதுமான பரப்பையுடைய ஜ்ஞாந ப்ரவாஹம் நிரம்பியவனுய், 'இப்படி ரக்ஷிக்கப்பெற்றது தன்பேறு' என்று தோற்றும்படியிருக்கிற சுடரோவடிவெடுத்த திவ்யமங்களவிக்ரஹத்தை யுடையனானவன்.

ஆழியம்பள்ளியார் = திருப்பாற்கடலிற் கிடந்த கிடையைச் சொல்லவுமாம்; ப்ரளயார்ணவத்திலே ஆபத்ஸகனுய்க் கண்வளர்ந்தபடியைச் சொல்லவுமாம். ... ... (௬)

பள்ளியாலிலை ஏழுலகும்கொள்ளும் *
வள்ளல் வல்வயிற்றுப்பெருமான் *
உள்ளுளாரறிவார் ? அவன்தன் *
கள்ளமாய மனக்கருத்தே.

பள்ளி	படுக்கை	அவன் தன்	அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய
ஆல் இலை	ஆலந்தளிராக	கள்ளம்	ஒருவராலுமறியக்கூடாததான
ஏழ் உலகும்	ஏழுலகங்களையும்		
கொள்ளும்	கொள்ளக்கடவதான		
வள்ளல்	பேரீடுமுடைய	மாயம்	ஆச்சரியமான
வல்	உறுதியான	மனம் கருத்து	திருவுள்ளக் கருத்தை
வயிறு	திருவயிற்றையுடையனான	உள்ளுள்	மனத்தினுள்
பெருமான்	பெரியோனாகிய	அறிவார் ஆர்	அறியவல்லவர் யாவர் ?

* * * — [பள்ளியாலிலை.] ஸகல லோகங்களுக்கும் ஆபத்திலே இடங்கொடுக்கையாகிற சிறந்த ஔதார்யத்தை யுடையனாய், ஸகல லோகத்தையும் வைத்துக்கொண்டு ஒரு சிறிய ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளும்படியான அகடிதகடநா ஸாமர்த்தியத்தையுடையனான ஸர்வேச்வரனுடைய திவ்ய சேஷ்டிதங்களை ஆரறியவல்லார்? என்னும் முகத்தாலே, இப்படிப்பட்ட அகடிதகடநா ஸமர்த்தனுக்கே ஸர்வேச்வரத்வம் தகும் என்கிறார். ... ... (எ)

கருத்தில்தேவும் எல்லாப்பொருளும் *
வருத்தித்த மாயப்பிரானையன்றி * ஆரே
திருத்தித் திண்ணிலைமூவுலகும் * தம்முள்
இருத்திக் காக்குமியல்வினரே. (அ)

கருத்தின்	தனது ஸங்கல்பத்தினாலே	மூ உலகும்	மூவுலகங்களையும்
தேவும்	தேவர்களையும்	திண் நிலை	உறுதியான நிலைமையையுடையனவாக
எல்லாப் பொருளும்	மற்றெல்லாப்பொருள்களையும்	திருத்தி	அமைத்து
வருத்தித்த	வ்ருத்திசெய்த [உண்டாக்கின]	தம் உள்	தம் நினைவுக்குள்ளே
		இருத்தி	வைத்து
மாயம்	ஆச்சரியமான சக்தி முதலியவற்றையுடைய	காக்கும்	காப்பாற்றுவதையே
		இயல்வினர்	இயற்கையாகவுடையவர்
பிரானை அன்றி	எம்பிரானைத்தவிர்த்து	ஆர்	எவர் ?

* * * — [கருத்தில் தேவும்,] ஸ்ருஷ்டி கார்யத்தையும் ஸம்ரக்ஷண கார்யத்தையும் ஸ்வாதீநமாகவுடையவனாகையாலே இவனுக்கே ஈச்வரத்வம் பொருந்துமென்கிறார். தனது ஸங்கல்பத்திலே தேவஜாதி முதலான ஸகல பதார்த்தங்களையும் உண்டாக்கின ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனையன்றி, மூன்று லோகங்களையும் நிலைபெறுமாறு திருத்தித் தன் ஸங்கல்பத்திலே வைத்துக்கொண்டு காக்கும் ஸ்வபாவமுடையவர் வேறு யாரேனுமுளரோ? இல்லையென்றபடி. இதனால்,

'ஸ்ருஷ்டிக்குப் பிரமன் கடவன், ரக்ஷணத்திற்கு மாத்திரமே எம்பெருமான் கடவன்' என்பது கிடையாது; எல்லாம் எம்பெருமானதீனமே' என்றதாம். (அ)

காக்குமியல்வினன் கண்ணபெருமான் *
சேர்க்கைசெய்து தன்னுந்தியுள்ளே *
வாய்த்ததிசைமுகன் இந்திரன்வானவர் *
ஆக்கினான் தெய்வவுலகுகளே. (கூ)

காக்கும் இயல் வினன்	ரக்ஷிப்பதையே தொழிலாகவுடைய	வாய்த்த	ஸ்ருஷ்டி கார்யத்திற்கு யோக்யனான
கண்ண பெருமான்	ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா	திசைமுகன்	நான்முகனையும்
		இந்திரன்	இந்திரனையும்
சேர்க்கை செய்து	(ஸம்ஹாரஸமயத்திலே எல்லாம் தன்னிடத்துச்) சேரும்படி செய்து	வானவர்	மற்றுமுள்ள தேவர்களையும்
		தெய்வ உலகுகள்	(அவர்கட்கு இருப்பிடமான) திவ்யலோகங்களையும்
தன் உந்தி உள்ளே	தனது திருநாபிக்குள்ளே,	ஆக்கினான்	உண்டாக்கினான்.

* * * — [காக்குமியல்வினன்.] ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் இவனிட்ட வழக்காகையாலும் இவனே யீச்வரனென்கிறார். "ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே | ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம்விநா புருஷோத்தமம்" என்கிறபடியே அநிஷ்டங்களைப்போக்கி இஷ்டங்களைத் தருகையாகிற ரக்ஷணத்தை ஸ்வபாவமாகவுடையனாய், அந்த ரக்ஷணத்தைச் செய்வதற்காகவே கண்ணபிரானாய் வந்து பிறந்தவன்

சேர்க்கை செய்து = கடைசியில் லயம் சொல்லும்போது "ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே | ஆபஸ்தேஜஸி லீயந்தே" என்று சொல்லிக்கொண்டுபோய் "தமஃ பரே தேவ ஏகீபவதி." என்று தன் பக்கலிலே சேருவதாக ஓதிக்கிடக்கையாலே அதைச் சொன்னபடி.

ஸம்ஹாரமானவாறே மீண்டும் ஸ்ருஷ்டியாதலால் அதைச் சொல்லுகிறது தன்னுந்தியுள்ளே என்று தொடங்கி. .... (கூ)

கள்வாயெம்மையும் ஏழுலகும் * நின்
னுள்ளேதோற்றிய இறைவயென்று *
வெள்ளேறன்நான்முகன் இந்திரன்வானவர் *
புள்ளூர்த்திகழல் பணிந்தேத்துவரே. (கo)

வெள் ஏறன்	வெளுத்த எருதை வாஹனமாகவுடைய சிவபிரானும்
நான்முகன்	பிரமனும்
இந்திரன்	இந்திரனும்
வானவர்	மற்றுமுள்ள தேவர்களும் (ஒன்றுகூடி)
கள்வா	"கள்வனே !
எம்மையும்	எங்களையும்
ஏழ் உலகும்	ஏழுலகங்களையும்
நின் உள்ளே	உனது ஸங்கல்பத்தினுள்ளே
தோற்றிய	தோன்றுவித்த
இறைவ	ஸ்வாமியே !"
என்று	என்றுசொல்லி
புள் ஊர்தி	கருடவாகனனாகிய ஸர்வேச்வரனுடைய
கழல்	திருவடிகளை
பணிந்து	வணங்கி
ஏத்துவர்	துதிப்பர்.

* * * — [கள்வா வெம்மையும்.] எவர்களை நீங்கள் தெய்வமாகக் கருதுகின்றீர்களோ அவர்களும் எம்பெருமானையே பணிந்து துதிக்கின்றார்களாதலால் அவர்களது இசைவினாலும் எம்பெருமானுக்கே பரத்வமுண்டென்று எளிதில் அறியலாமே யென்கிறார்.

"உன் ஈச்வரத்வத்தை மறைத்துக்கொண்டு எங்களுக்குத் தெரியாதபடி வந்து நிற்கிற கள்வனே !, எங்களையும் எங்களுக்கிடமான லோகங்களையும் ஸங்கல்பமாத்ரத்தாலே தோன்றுவித்த ஸ்வாமியே !" என்றிங்ஙனம் துதிக்கின்றார்களாம் கருடவாஹனனான பெருமானைச் சிவன் பிரமனிந்திரன் முதலானோர்.

கள்வா = பிறர் அறியாதபடி காரியஞ்செய்பவனைக் கள்வனென்பது: எம்பெருமானும் * இராமடமூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போருமவனாகையாலே கள்வனெனப்படுகிறான். பிள்ளைப்பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியில் பேசும் பாசுரமொன்று காண்மின்;— "பண்டேயுன்தொண்டாம் பழவுயிரை யென்னதென்று, கொண்டேனைக் கள்வனென்று கூறாதே — மண்டலத்தோர், புள்வாய்பிளந்த புயலே! உனைக்கச்சிக்கள்வாவென்றோதுவதுஎன்கண்டு?" என்றும். (அதாவது) ஒருவர்க்கு உரிய பொருளைத் தன்னதாகக்கொள்வது கள்ளமெனப்படும். ஆகவே, அநாதியாகவுனக்கே உரியதாய்க்கிடந்தவுயிரை நான் என்னுடையதென்று கொண்டிருக்கிறேனாதலால் என்னைக் கள்வனென்று சொல்லத்தகும். உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் நின்னுடையனவேயாதலால் வெண்ணெய் கொள்ளுதல் முதலிய தொழில்களைச்செய்யினும் உன்னைக் கள்வனென்று கூறுதல்தகாது; இவ்வாறிருக்க, உலகத்தார் இத்தன்மையை ஆய்ந்து அறியாமலே என்னை யானே திருடிக்கொண்ட பெருந்திருடனாகிய என்னைக் கள்வனென்னாமல் ஸர்வஸ்வாமியான உன்னைக் கள்வனென்கின்றனரே, இஃதுஎன்ன பேதைமை! என்று சமத்காரந்தோன்றக் கூறியவாறு. இது நிற்க: பிறர்பொருளைக் கவர்வதுபோலவே தனது தன்மையை மறைத்துக்கொண்டிருப்பதும் கள்வமாதலால் அதையிட்டு இங்குக் கள்வா ! என்றது. தேவர்கள் எம்பெருமான் பக்கலிலே வந்து வரங்கொள்ளும்போது 'நீர் எங்களிடத்திலேவந்து வரங்கேட்பதாகவுங்காட்டி எங்களைப் பெருமைப்படுத்தவேணும்' என்றும் வரங்கேட்பர்களாம்; எம்பெருமான் அதற்கு இணங்கி 'ருக்மிணிப்பிராட்டிக்கு ஒரு பிள்ளைவேணும்.

என்று சிவபிரானிடத்தே வரங்கேட்பனும்; அப்போது, 'அந்தோ! தான் பரத்பரனாயிருக்கிற நிலைமையை மறைத்துக்கொண்டு இப்படி வரங்கேட்கிறானே! இது என்ன கர்வமோ!" என்றீடுபட்டுக் கள்வா! என்று விளிப்பதன்றே; அதைச் சொல்லுகிறதிங்கு. இவ்விடத்தில் அநுஸந்திக்கவேண்டிய ப்ரமாணங்கள் :— * ஸுத்வா ஸ்தோத்ரம் ஸ்தவ | ஸ்ருதிஸாரம் ஸம்புஜனேஷு | ப்ரீதாத்மா ஸர்வதேவ ஈசானாய கேசவ ||' ஈசம் ஸஹஸ்ரஸ்ய ஜிவேச ஸாம் ப்ரீதா ஸ்ருஷ்டாணா ச | யதாஹம் ஸம்ப்ரதிபாதம் பக்ஷாஞ்சல பக்ஷாதிரோ ஸம்ப || * [இங்கு ஸவம் என்றது ஸஸௌம்ய என்றபடி.] இதற்கு எம்பெருமானுடைய மறுமொழி வருமாறு:— (வராஹபுராணத்தில் ருத்ரகீதையில்) * ஜிவகார்யார்த்தா ரக்ஷஸ ஈத்ஷ்யஸுரேசா ஸ்வயிஷாது| ஸ்வேச்சோபாயஷ்ட்ரி ஹர! ஸ்வம் வரத்ரோஸவ || *

இங்கே நட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்:— "தன் ஸ்வாதந்த்ர்யத்தை மறைத்துப் பாதந்த்ரனுப் நிற்கையிறே களவாகிறது. கைலாஸயாத்ரையிலே * நமோ ஹிரண்ய கர்பாய நமஃ கடகடாயச நமோ கண்டாய கஞ்ஜப நமஃ கடகடாய ச * என்று ஸ்தோத்ரம் பண்ணினபடியைக் கேட்ட ஒரு ப்ராஹ்மணன் 'இதற்குமுன்பு ஒருவரை ஸ்தோத்ரம் பண்ணிப்பழியாதவராய் கையாலே மீனடிக்கிறபடிபாராய்' என்றான். 'காத்தழும்பு நான்முகனுமீசனுமாய் முறையாலேத்த' என்கிறபடியே ஸ்தோத்ரம்பண்ணி காத்தழும்புபட்டுக் கிடக்கிறதன்றே."

இவன் தாழநின்ற நிலையும் ஸ்தோத்ரம்பண்ணினபடியும் களவு என்பதை நிரூபிக்கிறது எம்மையுமேழுலகும் நின்னுள்ளேதோற்றிய இறைவ! என்பது. (௧0)

> எத்தவழுலகுங்கொண்ட கோலக்
> கூத்தனை * குருகூர்ச்சடகோபன்சொல் *
> வாய்த்த வாயிரத்துள்ளிவைபத்துடன் *
> ஏத்தவல்லவர்க்கு இல்லையோருனமே.

(௧௧)

ஏத்த	(அனைவரும்) துதிக்க	ஆயிரத்துள்	ஆயிரத்தில்
ஏழ் உலகும் கொண்ட	எல்லா வுலகங்களையு மளந்து கொண்ட	இவை பத்து	இப்பத்துப் பாசுரங்களையும்
கோலம் கூத்தனை	அழகிய கூத்தனான எம் பெருமானைக்குறித்த	உடன்	அர்த்தத்தோடு (கற்று)
குருகூர் சடகோபன் சொல்	ஆழ்வார் அருளிச்செய்த	ஏத்த வல்லவர்க்கு	ஸ்துதிரூபமாகச் சொல்ல வல்லவர்கட்கு
வாய்த்த	உலகுக்கு மஹாபாக்யமாகக் கிடைத்த	ஓர் ஊனம் இல்லை	ஒருகுறையுமில்லையாகும்.

* * * — [ஏத்தவேழுலகும்.] இத்திருவாய்மொழியைக் கருத்துடனே கற்று வல்லார்க்கு, 'எம்பெருமான் ஈச்வரனல்லன்' என்று புத்திபண்ணுதல், 'இதர

தேவதைகள் ஈச்வரர்கள்' என்று புத்தி பண்ணுதல் ஆகிற அவத்யமொன்றும் உண்டாகமாட்டாதென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். எம்பெருமானு டைய பரத்வத்தை நிரூபிக்கக் கீழே பாசுரந்தோறும் பிரதிபாதிக்கப்பட்ட விஷ யங்களுள் உலகமளந்த சரிதை பொன்றேபோதும் என்பது தோன்ற நிகமத் தில் அதனை யெடுத்துக்காட்டுகின்றார். ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில் மாங்கள்யஸ்தவத் தில் — "ஸம்வேஷ்டமாநாம் திவி ஸம்ஸ்துதஸ்யஸ்ய: தயா உதா வெஷ்டமுமாவ வெவவொ: | ஷூதஃ க்ரமேந்து யஃ ஹுதகர்ம லவஷிா உராஷூ உரம்ஹஷுவிவ்ருஙெய ஹரி: = ஸங்கதல் ஸாராணும் திவி ப்ருதலஸ்தை: ததா மநுஷ்யைர் ககநே ச கேசரை:, ஸ்துத: க்ரமாந் ய: ப்ர சகார ஸர்வதா மமாஸ்து மாங்கல்யவிவ்ருத்தயே ஹரி:," என்றதைத் திருவுள் ளம்பற்றி ஏத்தவேழுலகுங்கொண்ட என்றார்.

வாய்த்தவாயிரம் = பராத்பரனை எம்பெருமான் நமக்கு வாய்த்தது ஒரு அதிசயமன்று; அவனது பெருமைகளை வாயாரப்பேச இத்திவ்யப்ரபந்தம் வாய்த்ததுதான் மிக்க அதிசயம் என்று ஆழ்வார் தமக்கே ஆச்சரியமாயிருக் கிறபடி. ... . (கக)

அடிவரவு:— திண்ணனேபாவம் ஏறனைத்தேவும், தகுஞ்சீர்யவரும் பள்ளி பால் கருத்தில், காக்குங்கள்வா ஏத்தவேழுனம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் இத்திருவாய்மொழிக்கான ச்லோகம்.

𑌪𑍂𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑌂 𑌭𑌵𑌦𑍁𑌰𑌿𑌤𑌹𑌰𑌂 𑌵𑌾𑌮𑌨𑌤𑍍𑌵𑍇 𑌮𑌹𑌾𑌙𑍍𑌗𑌂
𑌨𑌾𑌭𑍀𑌪𑌦𑍍𑌮𑍋𑌤𑍍𑌥𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌤𑌦𑌨𑍁𑌗𑍁𑌣𑌦𑍃𑌶𑌂 𑌕𑌲𑍍𑌪𑌤𑌲𑍍𑌪𑍀𑌕𑍃𑌤𑌾𑌬𑍍𑌧𑌿𑌂 |
𑌸𑍁𑌪𑍍𑌤𑌂 𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌪𑌤𑍍𑌰𑍇 𑌜𑌗𑌦𑌵𑌨𑌧𑌿𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌂
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌲𑍀𑌲𑌂 𑌵𑍍𑌯𑌵𑍃𑌣𑍁𑌤 𑌲𑌲𑌿𑌤𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌭𑌾𑌵𑍇𑌨 𑌨𑌾𑌥𑌮𑍍

* திண்ணன்வீடு * இந்தத்திருவாய்மொழியில், எம்பெருமான் மநுஷ்ய ஸஜாதீயனாய் அவதரித்திருக்கச்செய்தேயும் பாத்வத்திற் குறையாமேயிருப்பன் என்பதை ஆழ்வார் தெளிவித்தருளினாரென்கிறார். 1. பூர்ணைச்வர்யாவதாரம் * மண்ணும் விண்ணுமெல்லாமுடனுண்ட நங்கண்ணன். * பூர்ணமான ஐச்வர்யத்தோடே க்ருஷ்ணனாய்வந்து அவதரித்தவன். 2. பவதுரிதஹரம். * மாபாவம்விட அரற்குப் பிச்சைபெய். * ஹரனென்று சிவபிரானுக்குப்பெயர்; அவனுடைய ப்ரஹ்மஹத்யாபாதகத்தைத் தீர்த்தருளினவன். 3. வாமநத்வே மஹாங்கம். * மேல்தன்னை மீதிட நிமிர்ந்து மண்கொண்ட. * முந்துற மாணிக்குறளுருவாயிருந்து பின்பு திரிவிக்கிரமனாய் வளர்ந்தவன். 4. நாபீபத்மோத்த விச்வ . * தேவுமெப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப்படைத்த தேவன். * நாபிக்கமலத்திலே (ஸத்வாரகமாக) ஸகலத்தையும் படைத்தவன். 5. ததநுகுணத்ருசம். * தகுங்கோலத்தாமரைக்கண்ணன். * அதற்குத் தகுதியான தண்டாமரைக்கண்களையுடையவன். 6. கல்பதல்பீக்ருத அப்திம். * அவர் எம்மாழியம் பள்ளியாரே. * பிரளயகாலத்தில் அர்ணவத்தைப் படுக்கையாகக்கொண்டவர். 7. ந்யக்ரோதபத்ரே ஸுப்தம். * பள்ளியாலிலை. * அப்போது ஆலந்தளிரிற்கண்வளர்ந்தவன். 8. ஜகதவநதியம். * மூவுலகும் தம்முளிருத்திக்காக்கும். * மூவுலகங்களையுங் காப்பதையே எப்போதும் சிந்தை செய்பவன். 9. ரக்ஷணாய அவதீர்ணம். * காக்குமியல்வினன் கண்ணபெருமான். * ரக்ஷணார்த்தமாகவே கண்ணபிரானாய்வந்து திருவவதரித்தவன். 10. ருத்ராதிஸ்துத்யலீலம். * வெள்ளேறன் நான்முகன் இந்திரன். * சிவபிரான் முதலானவர்களாலே துதிக்கப்படுகின்ற (வராஹாதிரூபமான) திருவிளையாடல்களையுடையவன். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை [லலித உத்துங்கபாவேந நாதம் வ்யவ்ருணுத.] லலிதபாவமாவது தாழ இழிந்திருக்கை; அவ்விருப்பிலேயே உத்துங்கபாவமாவது பாத்வம். அது இருக்கிறபடியாலே இவனே நாதனென்று ஆழ்வார் அருளிச்செய்தாரென்றதாயிற்று. ... . (*)

தூப்புல்பிள்ளை பொன்னடிகள் போற்றி.

ஸ்ரீ:.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை
நண்ணி யவதாரத்தே நன்குரைத்த — வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் அவரடிக்கே யாங்கவர்பால்
உற்றாரை மேலிடாதூன்.

மாறன்	நம்மாழ்வார்	அறிந்து	தெரிந்துகொண்டு
திருமால் பரத்துவத்தை	எம்பெருமானுடைய பரத்வத்தை	அவர் அடிக்கே	அவ்வாழ்வார் திருவடிகளிலேயே
அவதாரத்தே நண்ணி	அவதாரத்தில் அநுபவித்து	அற்றார்கள் யாவர்	ஈடுபட்டிருப்பவர் யாவரோ,
திண்ணிதாக	திடமாகவும்	அவர்பால் உற்றாரை	அவர்களிடத்தில் பணிந்திருப்பவர்களை
நன்கு	நன்றாகவும்	ஊன்	தேஹஸம்பந்தம்
உரைத்த	அருளிச்செய்த	மேலிடாது	சேராது.
வண்ணம்	ரீதியை		

* * * — திண்ணன் வீட்டில் ஆழ்வாருளிச்செய்த பரத்வத்தை அறிந்துகொண்டு ஈடுபட்டிருப்பவர்களுடைய ஸம்பந்த ஸ்பர்சமும் வாராதபேறு என்கிறது. "திண்ணிதாம் மாறன்" என்று பிரித்து மாறனுக்கு விசேஷணமாக்கியுரைத்தார் பிள்ளைலோகஞ்சீயர். பரத்வே பரத்வவிஷயமான உயர்வற உயர்நலத்திற் காட்டில் இத்திருவாய்மொழிக்குண்டான வாசி விளக்குதற்கு "அவதாரத்தே நண்ணி" என்றார். ஆங்கு—அசை. "அவரடிக்கே அற்றார்கள் யாவர்" என்று கொண்டு கூட்டிப் பொருள்கொள். ... (௨)

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸம்ஶ்லிஷ்ய ஶ்ரீஶவஶதோதித: ப்ரவஸம்ஹாஸ
ஸந்த்ருஷ்டஸ்வேதயதஸ்ய ஸஹேஶகாலே |
ஆஹாத்யமாதிதமதோபி ஸதோஷஹாவே
ஸௌஶாஶிகோக்திநயதஸ்ஸம்ஜிக்ஷிதீவ ||

(கருத்து.) இத்திருவாய்மொழியில் பிரிவாற்றாமையினால் தளர்ந்த ஆழ்வாருக்கு எம்பெருமானோடு கலவிநேர்ந்து துயர்தீர்ந்து ஸந்தோஷமுண்டாக, ப்ராஸங்கிகமாய் எம்பெருமானுடைய பரத்துவம் இத்திருவாய்மொழியில் அந்வய வ்யதிரேக முகத்தாலும் அவதார விஷயமாகவும் புராணப்ரக்ரியையாலும் அருளிச்செய்யலாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து — மூன்றாந் திருவாய்மொழி,

ஊனில்வாழுயிரே.

அவதாரிகை.

இந்த மூன்றாந் திருவாய்மொழியானது இரண்டாந்திருவாய்மொழியாக இருந்திருக்கவேண்டும். முதல் திருவாய்மொழியில் [வாயுந்திரையுகளில்] பட்ட ஆர்த்தி தீர எம்பெருமான் வந்து ஸேவைஸாதித்து ஸம்ச்லேஷ ரஸாநுபவத்தையும் கொடுத்தருள, அந்த ஆனந்தத்தைத்தெரிவிப்பதான இந்தத்திருவாய்மொழி முன்னமே அமைந்திருக்கவேண்டியதாயினும், எம்பெருமானுடைய பரத்வாநுபவம் இடையில் ப்ராஸங்கிகமாக ப்ராப்தமாயிற்று. இப்படிப்பட்ட பராத்பரனன்றோ நம்மோடு இங்ஙனே கலந்தருளினனென்று முந்துறப் பரத்வம் அநுஸந்தான விஷயமானபடியாலே அது சொல்லிற்றாயிற்று கீழ்த்திருவாய்மொழியில். அது பேசியானவாறே * வாயுந்திரையுகளில் ஆர்த்திதீரவந்து ஸம்ச்லேஷித்ததனாலுண்டான இன்பம் இத்திருவாய்மொழியில் அருளிச்செய்யப்படுகிறது.

இந்தப் பேரின்பத்தை யநுபவிப்பதற்கு உசாத்துணையாவார் இந்நிலத்தில் ஆரேனுமுளரோ? என்று பார்க்கையில் * உண்டியே உடையே உகந்தோடும் இம்மண்டலத்திலே அப்படிப்பட்டாரொருவருங் கிடையாமையாலே எம்பெருமானை நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகளின் திரளிலே போய்ப்புகுந்து அவர்களோடு ஒரு கோவையாக அநுபவிக்கப்பெறுவது என்றைக்கோ என்கிற குறைபாட்டை இத்திருவாய்மொழி தலைக்கட்டுகின்றது. .... (*)

ஊனில்வாழுயிரே ! நல்லைபோவுன்னைப்பெற்று *
வானுளார்பெருமான் மதுசூதனென்னம்மான் *
தானும்யானுமெல்லாம் தன்னுள்ளேகலந்தொழிந்தோம் *
தேனும்பாலும்நெய்யும் கன்னலுமமுதுமொத்தே. (க)

ஊனில்	மாம்ஸருபமான சரீரத்தில்	உன்னை பெற்று	உன்னை ஸ்வாதீனமாகப் பெற்றதனால்,
வாழ்	வாழ்கின்ற	வான் உளார் பெருமான்	நித்யஸூரிகட்குத் தலைவனும்
உயிரே	நெஞ்சமே !	மதுசூதன்	மதுவென்னும் அசுரனைக் கொன்றவனும்
நல்லை போ	நீ நல்லவன்காண் ; (எனென்றால்)		

என் அம்மான் தானும்	எம்பெருமானுகிய அவனும்	பாலும்	பாலும் பாலும்
யானும்	(அவனுக்கு அடிமைப்பட்ட) நானும்	நெய்யும்	நெய்யும் நெய்யும்
		கன்னலும்	அக்காரமும் அக்காரமும்
		அமுதும்	அம்ருதமும் அம்ருதமும்
தன் உள்ளே	தனக்குள்ளே	ஒத்து	ஒன்றுசேர்ந்தாற்போன்று
எல்லாம்	எல்லா இனிமையுமாம்படி	கலந்தொழிந்தோம்	கலந்துவிட்டோம்.
தேனும்	தேனும் தேனும்		

* * * — [ஊனில்வாழுயிரே.] ஸர்வேச்வரனைக் கொண்டாடப்பிறந்த ஆழ்வார் தம் திருவுள்ளத்தைக் கொண்டாடுகிறாரிப்பாட்டில். ஏனென்னில்; கைங்கரியச் செல்வத்திற்கு இட்டுப்பிறந்துவைத்து நெடுநாளாக இழந்துகிடந்த நமக்கு இந் நெஞ்சினாலன்றோ இன்று பேறுவாய்த்தது என்ற உவப்பினால். ராஜ்யத்தை இழந்துகிடந்த வொருராஜகுமாரனை ஒருவன் ராஜ்யத்திலே புகுவித்தால் 'இவனாலேயன்றோ நாம் இப்பேறுபெற்றது' என்று அவனைக் கொண்டாடுவர்களன்றோ, அதுபோல.

ஊனில் வாழ் உயிரே!= 'வாழ்' என்னுஞ்சொல் ஸந்தோஷத்தோடுகூடின இருப்பையுஞ்சொல்லும்; ஸாதாரணமான இருப்பையுஞ்சொல்லும். அவ்விருவகைப்பொருளும் இங்கு உரைக்கத்தகும். சரீரத்தில் இருக்கின்ற நெஞ்சே! (அன்றி) தேஹந்தவிரவேறொன்று கிடையாதென்றுகொண்டு அதிலேயே களித்து வர்த்திக்கிற நெஞ்சே!, (அன்றியே) பாழும் ப்ரக்ருதியில் இருந்துவைத்தே பகவத்குணங்களையே தாரமாகக்கொண்டு வாழ்கிற நெஞ்சே!.

உயிர் என்று நெஞ்சைச் சொல்லலாமோவென்னில், இங்கே ஈடுகாண்மின். "மநஸ்ஸை உயிர் என்பானென் என்னில்; ஆத்மாவுக்கு தர்மபூதஜ்ஞாநம் நித்யமாயிருக்கச்செய்தே * மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: * என்று பந்தமோக்ஷங்களுக்கு ஹேது மநஸ்ஸு என்கிற ப்ராதாந்யத்தைப்பற்ற உயிரே! என்று ஆத்மாவை ஸம்போதிக்குமாபோலே ஸம்போதிக்கிறார்"- என்று. இத்தால் ஔபசாரிக ப்ரயோகமென்று காட்டினபடி.

நல்லை போ= வடமொழியில் ஹோ என்கிற விளிக்குறிப்பிடைச்சொல் போ எனத்திரிந்தது என்னலாம். எதிர்மறைபிலக்கணையால், போ என்றது வா வென்றபடியாய் 'நெஞ்சே! வா' என்றதாகவுமாம். முழுச்சொல்லாய் மிகவும் நல்லை என்றதாகவுமாகலாம். வார்த்தைப்பாடு என்னலாம். நல்லை—'நல்லன்' என்பதன் முன்னிலை. நெஞ்சைக்கொண்டாடுவதற்கான காரணத்தை உன்னைப் பெற்று என்று தொடங்கி அருளிச்செய்கிறார். எம்பெருமான் அநாதியாகவேயுளன்; அவனுடைய ஸம்பந்தமும் அப்படியே அநாதி; அவன் நம்மைக் கைப்பற்றவேணுமென்று தட்டித்திரிவதும் நெடுநாளாகவே உண்டு; இவ்வளவிருந்தும் நெஞ்சே! நீ இசைந்துவாராத குறையொன்றினாலன்றோ நெடுங்காலமாக இழந்திருந்தது; இன்று நீ ஆபிமுக்யம்பண்ணப்பெற்றதனாலன்றோ இப்பேறுபெற்றது என்று கொண்டாடுகின்றேனென்கிறார். தாம்பெற்ற பேற்றை

மூன்றடிகளாலுரைக்கிறார். நித்யஸூரிகளுக்கும் அவ்வருகானவன் ஸம்ஸாரிகளில் கடைகெட்டவனான என்னோடே கலந்த கலவியை என்ன பாசுரமிட்டுச் சொல்லுவேன்? அவனும் நானுமான சேர்த்தியிலே எல்லா ரஸங்களும் பிறக்கும்படி கலந்தோம் என்கிறார்.

தேனும் பாலு மித்யாதி ஈற்றடியில் இரண்டுவகையான நிர்வாஹமுண்டு; தேனும் தேனும் கலந்தாற்போலவும் பாலும் பாலும் கலந்தாற்போலவும் நெய்யும் நெய்யும் கலந்தாற்போலவும் கன்னலும் கன்னலும் கலந்தாற்போலவும் அமுதுமமுதும் கலந்தாற்போலவும் என்றுகொண்டு ஏக ஜாதீயத்ரவ்யங்கள் பரஸ்பரம் கலந்தாற்போலே என்று முன்புள்ள முதலிகளின் நிர்வாஹம். எம்பெருமானார் நிர்வஹிக்கும்படியாவது—தேன் பால் நெய் கன்னல் அமுது ஆகிய இவற்றைச் சொன்னது மற்றுமுள்ள ரஸவத்பதார்த்தங்களனைத்தையுஞ் சொன்னபடியாய், அவனும் நானுமான கலவிக்குள்ளே எல்லா ரஸங்களுமாம்படி கலந்தோமென்று. .... (௧)

ஒத்தார்மிக்காரை இலையாயமாமாயா! *
ஒத்தாயெப்பொருட்குமுயிராய் * என்னைப்பெற்ற
அத்தாயாய்த்தந்தையாய் அறியாதனவறிவித்த *
அத்தா! நீசெய்தன அடியேனறியேனே. (௨)

ஒத்தார் மிக்காரை	ஸமானமானவர்களையும் மேற்பட்டவர்களையும்	என்னை பெற்ற	என்னையுண்டாக்கின
இலை ஆய	உடையனல்லாத	அ தாய் ஆய்	அந்தத் தாயாகியும்
மா மாயா.	பெரிய ஆச்சரியகுணங்களையுடையவனே!	தந்தை ஆய்	பிதாவாகியும்
எப் பொருட்கும்	எல்லாப் பொருள்களுக்கும்	அறியாதன அறிவித்த அத்தா	ஆசார்யனாகியும் உபகாரகனானவனே
ஒத்தாய்	ஒப்பாக அவதரித்தவனே!	நீ செய்தன	நீ செய்த உபகாரங்களை
(எப்பொருட்கும்) உயிர் ஆய்	எல்லார்க்கும் பிராணபூதனாய்	அடியேன் அறியேன்	அடியேன் அளவிட்டறியகில்லேன்.

..* — [ஒத்தார்மிக்காரை] கீழ்ப்பாட்டில் நெஞ்சைக் கொண்டாடினார்; பிறகு ஆராய்ந்து பார்த்தவாறே அந்த நெஞ்சை இசைவித்ததும் ஸர்வேச்வரனேயாதலால் அந்த எம்பெருமானையன்றோ கொண்டாடவேணுமென்று அது செய்கிறாரிப்பாட்டில். எம்பெருமானாருடைய காலக்ஷேபகோஷ்டியிலே இப்பாசுரம் வந்தவளவிலே 'இவ்வாத்மாவுக்கு முதல் குரு யார்?' என்று விசாரமுண்டாக; 'ஆசார்யன்' என்று சிலர் சொன்னார்கள். மற்றுஞ்சிலர் 'ஆசார்யனுடைய ஸ்ரீபாதத்திலே கொண்டுசேர்த்த ஸ்ரீவைஷ்ணவன் முதல் குரு' என்றார்கள். முடிவாக எம்பார் அருளிச்செய்ததாவது—* "இசைவித்தென்னையுன் தாளிணைக்கீழ் இருத்துமம்மானே * என்றருளிச்செய்கையாலே அகவாயிலே இருந்து இசைவித்த ஸர்வேச்வரனே முதல்குரு; ஆசார்யன் அழைத்தாலும் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் அழைத்தாலும் இவன் மாட்டேனென்று சொல்லிவிட்டால் செய்யலாவதில்லை; அப்படிச்சொல்லாமல் இசைவித்தது ஸர்வேச்வரனுடைய க்ருத்யமிறே

என்பது திருவுள்ளம். "நிதாநம் தத்ராபி ஸ்வயமகிலநிர்மாணநிபுண:" (ரஹஸ்யத்ரயஸாரே) என்ற வேதாந்த தேசிகனுடைய திவ்யஸூக்தியும் இவ்வர்த்தத்தை நோக்கியுள்ளது.

"ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" "நிஸ்ஸமாப்யதிகஸ்ய யஸ்ய தேவஸ்ஸேவ நிஷ்டீ ஸஹஸ்ரஸ்தீ" இத்யாதிப்படியே, எம்பெருமானுக்குத் தன்னோடொத்தவர்களுமில்லை, மேம்பட்டாருமில்லை—என்பது முதலடி. அப்படியிருந்துவைத்தும் இதர ஸஜாதீயனாய் வந்து அவதரித்தபடியால் எப்பொருட்கும் ஒத்தாய் என்கிறார். ப்ரஹ்மருத்ரர்களிடையே விஷ்ணுவாய்த்தோன்றினது, இந்திரனுக்குத் தம்பியாய்ப்பிறந்தது, ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள் பண்ணினது, திர்யக்ஜாதிகளோடொக்க மீனுமாமையுமேனுமானது ஆக இவற்றையெல்லாங்கொண்டு "எப்பொருட்கு மொத்தாய்" எனப்பட்டது.

'எப்பொருட்கும்' என்றது நடுநிலைத்தீபகமாய் முன்னும்பின்னும் அந்வயிக்கும்; 'எப்பொருட்கும் உயிராய்' என்க. நாம் நமக்குப் பார்க்கும் ஹிதத்தையும் அவனே பார்க்குமவன் என்பதுபற்றி உயிராய் என்றது.

"மாத்ருதேவோ பவ | பித்ருதேவோ பவ | ஆசார்யதேவோ பவ" என்று உபநிஷத்து ஓதிய கட்டளையிலே மாதாவும் பிதாவும் ஆசார்யனுமெல்லாம் அவனே யென்கிறது மூன்றாமடி. எம்பெருமானைத் தாயும் தந்தையுமாகச் சொல்லுகிற வாசகங்கள் பெரும்பாலும் எங்குமுண்டாகிலும் "அறியாதனவறிவித்த அத்தா" என்று ஆசார்யத்வஞ் சொல்லுகிறது இப்பாசுரத்திற்கு விசேஷம். எம்பெருமானே! நீ செய்தவுபகாரம் ஒன்றிரண்டாகில் நானறியலாம்; அவை அளவற்றனவாதலால் நீயே அறிந்தாலறியுமித்தனை, என்னாலறியப்போகாது என்றாயிற்று. .... (உ)

அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து *
அறியாமாமாயத்தடியேனை வைத்தாயால் *
அறியாமைக்குறளாய் நிலம்மாவலிமூவடியென்று *
அறியாமைவஞ்சித்தாய் எனதாவியுள்கலந்தே. (௩)

அறியாமை	(தனது உண்மையைப் பிறர்) அறியாதபடி	அறியா மா மாயத்து அடியேனை	அறியாமையை விளைப்பதான ஸம்ஸாரத்தி லாழ்ந்துகிடந்த என்னை
குறள் ஆய்	வாமனமூர்த்தியாகி	அறியா காலத்துள்ளே	தொண்டுபடுதற்கு அறியாத அந்தக்காலத்திலேயே
மாவலி	'மகாபலியே!		
மூ அடி நிலம் என்று	மூன்றடி நிலம் (வேணும்) என்று சொல்லி		
அறியாமை	(கபடகுணத்தைப் பிறர்) அறியாதபடி	அடிமைக்கண்	தொண்டுசெய்யுந் தொழிலிலே
வஞ்சித்தாய்	வஞ்சித்து நிலத்தைக் கவர்ந்தவனே!	அன்பு	ஆவலை
		செய்வித்து வைத்தாய்	உண்டாக்கிவைத்தாய்;
எனது ஆவி உள் கலந்து	எனது நெஞ்சினுள்ளே சேர்ந்து	ஆல்	ஆச்சரியம்.

* * * [அறியாக்காலத்துள்ளே] தம்விஷயத்தில் எம்பெருமான் செய்தருளின நன்மைகளைப் பேசுகிறாரிதில். இப் பாட்டின் முன்னடிகளை அந்வயிப்பதில் அபிப்ராயபேதமுண்டு; பாட்டு உள்ளபடியே அந்வயித்து (அதாவது) அறிவுநடையாடாத காலத்திலேயே எனக்குக் கைங்கர்ய ருசியைப் பிறப்பித்து (அதை மென்மேலும் வளர்த்துக்கொண்டு போவதற்கு வழியில்லாதபடி) அறிவைத் தொலைப்பதான மாமாயத்திலே [ஸம்ஸாரத்திலே] பின்னையும் வைத்துக்கெடுத்தாய் என்று இழவு தோற்றச் சொல்லுகிறதாகத் திருமாலையாண்டான் உடையவர்க்கு அருளிச்செய்தார். இதை உடையவர் கேட்டு; கீழ்ப்பாசுரங்களும் மேற் பாசுரங்களும் உகப்பை தலையெடுத்துச் செல்லாநிற்க இடையே இப்பாட்டு அப்ரீதி தோற்றச் சொல்லுமது சேராது; ஆகவே வேறுவகையாக அந்வயித்துப் பொருள்கொள்வது ப்ராப்தம்: "அறியாமாமாயத்து" என்பதை "வைத்தாய்" என்பதோடு கூட்டாமல் 'அடியேனை' என்பதோடு கூட்டுக. அறியாமாமாயத்தடியேனை அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்துவைத்தாய் = அறிவு கேட்டை விளைக்கும்தான ப்ரக்ருதியிலே மங்கிக்கிடந்தவென்னை அறிவுநடையாடாத இளமையிலேயே அடிமையில் அன்புடையேனும்படி செய்துவைத்தாய் என்று அர்த்தம். ஆகவே இதுவும் ப்ரீதி தோற்ற உபகாரத்தையே சொன்னபடி என்று நிர்வஹித்தருளினார்.

மூன்னடிகளிற் கூறிய விஷயத்திற்குப் பின்னடிகளிற் கூறும் விஷயம் த்ருஷ்டாந்தம்; மஹாபலியை மயக்கி வசீகரித்ததுபோலவே என்னையும், எனக்குத் தெரியாதபடி என்னுள்ளே கலந்து வசப்படுத்திக்கொண்டாய் என்கை.

நிலம் மாவலி மூவடியென்று = இதை அந்வித பாடமாக வியாக்யானங்களில் திருவுள்ளம் பற்றுகிறார்கள்; அது மிகவும் ரஸமானது. எம்பெருமான் ஒருநாளும் யாசகத்தொழில் செய்தறியாதவனாதலால் உதாரனிடத்திலே சென்று இன்னவிதமாகப் பேசவேணுமென்பதறியாமல், மாவலியே மூவடி நிலம் தா என்று அந்வயக்ரமத்தோடே கூடினதாகச் சொல்லவறியாமல், நிலம் மாவலி மூவடி என்று இப்படியே சொன்னானென்க. (௭)

எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு *
எனதாவி தந்தொழிந்தேன் இனிமீள்வதென்பதுண்டே? *
எனதாவியாவியும்நீ பொழிலேழுமுண்டவெந்தாய்! *
எனதாவியார்? யானார்? தந்தநீகொண்டாக்கினையே. (அ)

பொழில் ஏழும் உண்ட } (பிரளயத்தில்) உலகங்களையும் வயிற்றில் வைத்து நோக்கின | பெருநல் உதவி } நல்ல உதவிக்கு
எந்தாய் எம்பெருமானே! | கைம்மாறு பிரதியுபகாரமாக
எனது ஆவி என் ஆத்மாவை
எனது ஆவியுள் } என் ஆத்மாவுக்குள்ளே ஒருநீர்மையாய் | தந்தொழிந்தேன் } உனக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டேன்;
கலந்த } கலந்த

மீள்வது என் பது உண்டே	கொடுத்ததை மீட்டுப் பெற்றுக்கொள்வதென்பது உண்டோ? இல்லை	எனது ஆவி யார்	என் ஆத்மா யார்?
எனது ஆவியும்	எனது ஆத்மாவுக்கும்	யான் ஆர்	நான் யாவன்?
ஆவி	ஆத்மாவாயிருப்பவன்	தந்த நீ	படைத்துக்கொடுத்த நீ தானே
நீ	நீ (ஆதலால்)	கொண்டாக்கினை	கலந்துகொண்டவனானாய்.

..*.— [எனதாவியுள்கலந்த] உலகத்தில் ஒருவர் ஒரு உபகாரஞ்செய்தால் உபகாரம் பெற்றவர் பிரதியுபகாரஞ்செய்வதென்று ஒரு முறைமையுண்டாதலால் அதன்படியே ஆழ்வாரும் எம்பெருமானுக்குக் கைம்மாறுசெய்யக்கருதி ஆத்மஸமர்ப்பணமாகிற கைம்மாறு செய்ததாக முந்துறக்கூறி, உடனே ஆராய்ந்து பார்த்து ஆத்மவஸ்து நம்முடையதாகவன்றோ நாம் கொடுத்ததாக ஆகும்; நாமும் நம்முடைமையுமெல்லாம் அவனுடைய சரக்காகவேயிருக்கும்போது நாம் கொடுத்ததாகக்கூறுவது பிசகு என்று அநுதபித்து 'உன்வஸ்துவை நீயே கைப்பற்றிக்கொண்டாயத்தனையல்லது நான் ஸமர்ப்பித்ததாகச் சொல்லுவது உசிதமன்று' என்று தலைக்கட்டுகிறார்.

இப்பாசுரத்தின் ஆறாயிரப்படி யருளிச்செயல் பரமபோக்யம், அது வருமாறு;—"இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிகப்ரீதியாலே அறிவழிந்து 'இவ்வாத்மா தம்முடையதன்று' என்று நிரூபிக்கமாட்டாதாராய், அவன் தம்மோடுகலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளாவடிமையாகக்கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து, தருகிற நான் ஆர்! தரப்புகுகிற இவ்வாத்மா ஆர்!; பண்டேயுனக்கு சேஷமாயிருக்கிற இவ்வாத்மாவை நீ கொண்டருளினாயத்தனையிறே யென்கிறார்" என்பதாம்.

இந்த ஒரு பாசுரத்தின் கருத்தை ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்னத்தில் "வபுராதிஷு யோபி கோபிவா" (52) "மம நாத யதஸ்தி" (53) என்ற இரண்டு ச்லோகங்களினாலே அநுஸந்தித்தருளினார். முதலில் அஹம் அத்யைவ மயா ஸமர்ப்பித: என்று ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினதாக அருளிச்செய்தார். அதைத் தாமே மறுபடியும் ஆராய்ந்தார்; 'ஐயோ! என்ன சொன்னோம் என்ன சொன்னோம்' என்று நடுங்கி அதற்கு அநுதபிக்கின்றமைதோன்ற "மம நாத! யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ। நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே? = மம நாத! யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ!, நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிந்நு ஸமர்ப்பயாமி தே?" என்று அடுத்தச்லோக மருளிச்செய்தார். "மயா அஹம் ஸமர்ப்பித:" என்று சொன்னேனே; இப்படிச்சொல்லுவதற்கு எனக்கு என்ன அதிகாரமுள்ளது? நான் என்கிற ஒரு வஸ்துவும் என்னுடையது என்கிற ஒரு வஸ்துவும் ஸ்வதந்த்ரமாகவுண்டோ? யானே நீ என்னுடைமையும் நீயே" என்றபடி எல்லாம் ஏற்கனவே உன்னுடையதாகவேயிருக்கும்போது இந்த ஆத்மவஸ்து உனக்கு இல்லாதது போலவும் இப்போது தருவதுபோலவும் என்

னால் ஸமர்ப்பிக்கப்படுவதுபோலவும் பேசிவிட்டேனே பாவியேன்; ஸமர்ப்பிப்பதற்கு நானார்? ஸமர்ப்பிக்க என்னிடம் என்ன இருக்கிறது? அதிலும் உனக்கு ஸமர்ப்பிக்க என்ன இருக்கிறது? இவ்விஷயங்களை ஆராயாமல்தானே அவிவேகியாய்ச் சொல்லிவிட்டேனே! என்று அநுதாபங்காட்டி அருளிச்செய்தார். அது ஆழ்வார் காட்டினவழியேயாம்.

பண்ணின ஆத்மஸமர்ப்பணத்தைப்பற்றி அநுதாபப்படுவதாகச் சொல்லலாமோ? அப்படியானால், அநுதாபயோக்யங்களான பாபங்களைப்போலே ஆத்மஸமர்ப்பணமும் ஒரு பாபந்தானேயாகும். அது செய்யக்கூடாத காரியம் என்று ஏற்பட்டுவிடாதா? என்கிற கேள்வி பிறக்கும். இதற்குப் பூருவர்கள் அருளிச்செய்கிற ஸமாதானம் யாதெனில்; ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையும் பண்ணினதற்காகப்பிறகு அநுதாபங்காட்டுகையும் ஆக இரண்டும் இவ்விபூதியில் மாறிமாறி நடந்தேயிரும் என்கிறார்கள். "ஸம்ஸாரபீதியால் ஸமர்ப்பிக்கையும் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநத்தால் அநுசயிக்கையுமிரண்டும் யாவதாத்மபாவியிருக்கக்கடவது" என்பது பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி.

செய்த ஆத்மஸமர்ப்பணத்திற்கு அநுதாபப்பட்டால் அந்த ஆத்மஸமர்ப்பணம் தவறான காரியம் என்று ஏற்பட்டுவிடாதோ என்றே கலங்குமவர்கட்குச் சொல்லுகிறோம்;—"ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" (திருவாய்மொழி 3-1-2.) என்று பரஞ்சோதியான எம்பெருமானுக்கு உலகத்திலுள்ள நச்வரமான தாமரை, மேகம், காயாம்பூ முதலியவற்றை ஒப்பாகச் சொல்லுதல் இழிவு என்கிறாழ்வார்; இஃது உண்மையா அன்றா? உண்மையாகில் "கொண்டல்வண்ணா!—கடல்வண்ணா!—காயாம்பூவண்ணங்கொண்டாய்!" என்று பலகாலும் ஆழ்வார்கள் கதறுகின்றார்களே; இது என்ன?

"மாறுளதோ வான்கோலத்தமரர் கோன்வழிப்பட்டால், மாறுளவுனபாதமலர்ச்சேர் திமழுங்காதே" என்று பிரமன் சிவனிந்திரன்முதலான தெய்வங்கள் எம்பெருமானைத் துதிப்பதானது அவனுக்கு நிறக்கேடு என்கிறாழ்வார்; இஃது உண்மைதானே. இவ்வாழ்வார் தாமே பெரியதிருவந்தாதியில் "இருநால்வர் ஈரைந்தின்மேலொருவர், எட்டோடொரு நால்வர் ஓரிருவரல்லால், திருமாற்குயாமார் வணக்கமார்" என்று, அந்தத் தெய்வங்கள் தாம் எம்பெருமானைப் போற்றுதற்கு உரியார் என்கிறாரே, இஃது என்ன? அத்திருவந்தாதியில் தானே "புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்" என்று எம்பெருமானை நாம் புகழ்வதானது பழிப்பதேயாம் என்று சொல்லிக்கொண்டே பலவாறாகப் புகழ்கின்றாரே இஃது என்ன?

ஆளவந்தார் தாமும் ஸ்தோத்ரரத்நத்தில் முப்பத்திரண்டாவது ச்லோகம் முதல் நாற்பத்தாறும் ச்லோகமளவும் பதினைந்து ச்லோகங்களாலே பகவானு

டைய நித்யகைங்கர்யத்தைப் பரமபுருஷார்த்தமாக ப்ரார்த்திக்குத் தாமே (47) [illegible]" என்கிற ச்லோகத்தால், கீழ் அப்படி ப்ரார்த்தித்ததற்கு மனத்தான அநுதாபத்தை ஆவிஷ்கரித்திருக்கின்றாரே; அஃது என்னவென்று ஆராயவேண்டாவோ? கைங்கர்ய ப்ரார்த்தனைகூடும் என்று நிஷ்கர்ஷமாகில் [illegible] என்று நிஷ்கர்ஷமா?

ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் தாமும் சரணாகதி தீபிகை யென்னும் தீப ப்ரகாசஸ்தோத்ரத்தில் (41) "[illegible] = இத்தம் த்வதேக சரணஸ்ய ... தத்ததிங்கர்த்வவிபவே ஸ்ப்ருஹயா அபராத்யந்" என்று— பகவத்கைங்கர்யத்தை ஆசைப்படுவது மஹாபராதம் என்று வாய்விட்டருளிச் செய்கிறார். கைங்கர்ய ப்ரார்த்தனை அபராத கோடியில் அந்வயித்ததாகில் "நித்யகிங்கரோ பவாநி" என்கிற ப்ரார்த்தனை எங்ஙனேகூடும்? தப்பான காரிய மென்று நிர்ணயிக்கப்பட்டபின் அதனை புத்திபூர்வகமாகச் செய்யலாமோ? ஸகல சாஸ்த்ர தத்வஜ்ஞரான தாம் "ஸ்ப்ருஹயா அபராத்யந்" என்றதற்கு முன்னும் பின்னும் பலகால் கைங்கர்ய ஸ்ப்ருஹைபண்ணிப்போந்தது எங்ஙனே?

கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் "யத் ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஸ்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே" என்று நம்மனைவருடைய அச்சுக்ஷணமாகிற புழுக்களைத் தொலைத்தென்று சொல்லி எம்பெருமானை விஞ்சுவதான மூவுலகத்தையும் வென்றிருக்கிற அவனுக்கும் புகழ்க்கிடமில்லையென்று என்று சொல்லிவைத்து அப்படிப்பட்ட கரித்திரங்களையே சொல்லிப் புகழ்கின்றாரே, இஃது என்ன? இவை ஒன்றுக்கொன்று அஸம்பத்தமாகுமோ? இவையெல்லாம் பரஸ்பர விருத்தம்போல் தோன்றினாலும் உண்மையில் விருத்தமன்றே; இரண்டுபடிகளும் சொல்லித்தீரவேண்டியவை யத்தனையிறே. அதுபோலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்பு அதற்கு அநுதபிக்கையும் ஆகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தம் என்று அறுதியிட்டபின் விளையுங்குற்ற மென்கொல்?

இவ்வளவு நிரூபணமின்றியே இப் பாசுரத்தின் பதினொன்றாம்படியில் பரகாலஸ்வாமி — "இப்படி [illegible] இப்பாட்டின் ஈட்டில் '[illegible]யத்தில் ஸமர்ப்பிக்கவும் வேணும் — ஸமர்ப்பணத்தைப்பண்ணி அநுசயிக்கிறார்' என்னும்படியான உக்திகள் [illegible] என்றும் [illegible]மாகையால் அநாதரணீயம்" என்று ஸஹஸா எழுதியுள்ளவை நம்பிள்ளை திருவுள்ளத்தை நன்கு உணரப்பெறாமையின் லாகிய விதயோக்திகளாகையாலே விவேகிகளுக்கு அநாதரணீயங்களாகக் கடவன.

இனியார்ஞானங்களால் எடுக்கலெழாதவெந்தாய் *
கனிவார்வீட்டின்பமே ! என்கடல்படாவமுதே ! *
தனியேன்வாழ்முதலே ! பொழிலேழுமேனமொன்றாய் *
நுனியார்கோட்டில்வைத்தாய் ! உனபாதம்சேர்ந்தேனே, (௫)

யார்	எப்படிப்பட்டவர்களுடையவும்	தனியேன்	அத்விதீயபக்தனான என்னுடைய
ஞானங்களால்	ஞானவிசேஷங்களாலும்	வாழ்	வாழ்ச்சிக்கு
எடுக்கல் எழாத	க்ரஹிக்கப்பார்த்தாலும் க்ரஹிக்கமுடியாத	முதலே	முதற்காரணமே !
எந்தாய்	எம்பெருமானே !,	பொழில் ஏழும்	ஏழுலகங்களையும்
கனிவார்	(உன் பக்கலில்) மனங் கனிந்தவர்களுக்கு	ஏனம் ஒன்று ஆய்	ஒப்பற்ற வராஹரூபியாகி
வீடு இன்பமே	மோக்ஷானந்தமே வடிவெடுத்ததுபோலிருப்பவனே !	நுனி ஆர்	கூர்மையிருந்த
		கோட்டில்	கோரப்பல்லிலே
		வைத்தாய்	வைத்தெடுத்தவனே !
		இனி	இதுமுதலாக
கடல் படா	உப்புக்கடலிலுண்டாகாத	உன பாதம்	உனது திருவடிகளை
என் அமுதே	எனக்குப் போக்யமான அம்ருதமே !	சேர்ந்தேனே	அடியேன் பிரியாதிருப்பவனே.

* * * — [இனியார் ஞானங்களால்.] பிரளய வெள்ளத்திலே மூழ்குகின்ற ஜகத்தையெடுத்தருளினாப்போலே ஸம்ஸாரஸாகரத்திலே மூழ்கிக்கிடக்கிற என்னை உன் திருவடிகளில் உறவையறிவித்து எடுத்தருளுகையாலே இனியுன் திருவடிகளைப் பெற்றேனென்று மகிழ்ச்சிதோற்றப்பேசுகிறார்.

பாசுரத்தின் தொடக்கத்திலுள்ள இனி என்பதற்கு இறுதியிலுள்ள வினைமுற்றோடே அந்வயம்; இனிச் சேர்ந்தேனேயென்க. ஆர் ஞானங்களால் எடுக்கலெழாத எந்தாய் = எப்படிப்பட்ட சிறந்த ஞானிகளுடைய ஞான விசேஷங்களாலும் தம்முயற்சியாலே அறியப் பார்க்குமிடத்தில் பேர்க்கப் போகாதிருக்கிற என்னையனே ! என்கிறார். இந்த வாக்கியத்தில் உம்மைத்தொகை கொள்ள வேணும். ஆர் ஞானங்களாலும் என்க. எடுக்கலெழாத என்றவிடத்து, ஞானத்தினால் அறியக்கூடாதவன் என்கிற பொருள்போலவே 'தூக்கியெடுக்கவும் முடியாதவன்' என்கிற பொருளும் விவக்ஷிதம். இது அவதார சரித்திரங்களிற் காணத்தகும்.

கனிவார் வீட்டின்பமே ! = இதற்கு மூன்றுவகையாகப் பொருள்கொள்ளலாம். வீட்டின்பமென்றது மோக்ஷஸுகமென்றபடியாய், உன் விஷயத்திலே உள்கனிந்து பரிபக்வர்களாயிருப்பார்க்கு மோக்ஷானந்த துல்யனாயிருப்பவனே !. (அன்றியே) வீடு இன்பம் = வீடுகளிலே வந்து சேர்ந்து இன்பம் பயக்குமவன்; க்ருஷ்ணாவதாரம் முதலியவற்றில் நந்தகோபர் முதலானோருடைய க்ருஹங்களிலே வந்து "தொல்லையின்பத்திறுதி கண்டாளே" என்னும்படி செய்பவன். (அன்றியே) வீட்டின்பமென்று அவரவர்களது க்ருஹங்களிலே அர்ச்சையாக அமைந்து இன்பம் தரும்படியைச் சொல்லவுமாம். 'வீட்டின்ப வின்பப்பாக்களில் த்ரவ்யபாஷா நிரூபண ஸமம் இன்பமாரியிலாராய்ச்சி" என்ற ஆசார்ய ஹ்ருதயகாரர்க்கு இவ்வர்த்தம் விவக்ஷிதமிறே.

என்கடல்படாவமுதே ! = கடலில் தோன்றின அமுதம் ப்ராக்ருதமாயும் ப்ரயத்நஸித்தமாயு மிருப்பதுபோலன்றியே அப்ராக்ருதமாய் நிர்ஹேதுக க்ருபா ப்ராப்தமாயிருக்குந்தன்மை சொல்லுகிறது. [தனியேன்வாழ் முதலே !] ஆழ்வார் தம்முடைய வாழ்ச்சிக்குத் தம்மிடத்தில் ஒரு ஸுக்ருதம் காணுமல் எம்பெருமானே மூலஸுக்ருதமென்கிறார். "வரவாறொன்றில்லை வெறிதே யென்று அறுதியிட்டபின் வாழ்முதலென்கிற ஸுக்ருதமொழியக் கற்பிக்கலாவதில்லை" என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியுங்காண்க.

பொழிலேழுமேனமொன்றாய்க் கோட்டில்வைத்த வரலாறு:— ஹிரண்ய கசிபுவின் உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹா வராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற்குத்தி அங்குநின்று எடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளின னென்பதாம். இப்பொழுது நடக்கிற ச்வேத வராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைத்து மஹாவராஹரூபியாகிக் கோட்டுநுனியாற் பூமியை யெடுத்துவைத்தன னென்ற வரலாறுமுண்டு: "பாராருலகம் முதுமுந்நீர்பரந்த காலம் வளைமருப்பில், ஏராருருவத்தேனமாய் எடுத்தவாற்றலம்மான்" என்ற திருமங்கையாழ்வாரருளிச்செயல் காண்க. ... . (ரு)

சேர்ந்தார்தீவினைகட்கு அருநஞ்சைத்திண்மதியை *
தீர்ந்தார்தம்மனத்துப் பிரியாதவருயிரை *
சோர்ந்தேபோகல்கொடாச்சுடரை அரக்கியைமூக்கு
ஈர்ந்தாயை * அடியேனடைந்தேன் முதல்முன்னமே. (சு)

சேர்ந்தார்	பக்தர்களினுடைய	சோர்ந்து போகல் கொடா	தன்னைப்பிரிந்து விஷயங்களில் போகக்கொடாத
தீ வினைகட்கு	கொடிய பாவங்களுக்கு	சுடரை	ஒளியுருவாகவுள்ளவனும்
அரு நஞ்சை	ஆற்றவரிதான விஷமாயிருப்பவனும்	அரக்கியை	ராக்ஷஸியான சூர்ப்பணகையின்
திண் மதியை	திடமான அத்யவஸாயத்தை அளித்தருள்பவனும்	மூக்கு	மூக்கை
தீர்ந்தார் தம் மனத்து பிரியாது	தனக்கே அற்றுத் தீர்ந்தவர்களான பரமைகாந்திகளின் மனத்தைவிட்டுப் பிரியாமல்	ஈர்ந்தாயை	அறுத்தவனுமாகிய வுன்னை
		அடியேன்	நான்
அவர் உயிரை	அவர்களுக்கு உயிராயிருப்பவனும்	முதல் முன்னமே	அநாதிகாலமாகவே
		அடைந்தேன்	சேரப்பெற்றவன்.

* * * — [சேர்ந்தார்தீவினை.] நான் எம்பெருமானைப்பெற்றது இன்றைக்கோ? இவ்வாத்மாவுள்ளபோதே பிடித்து எம்பெருமானைப் பெற்றவனல்லேனோ என்

கிறார். நெடுநாளாகப் பிரிந்திருந்த பிரிவின் வருத்தம் ஒன்றும் தெரியாதபடி எம்பெருமான் தன்னோடே கலந்ததனாலுண்டான களிப்பு இங்ஙனே பேசுவிக்கின்றது காண்மின்.

சேர்ந்தார் தீவினைகட்கு அருநஞ்சை = அடியார்களின் பாவங்களை முடிப்பவன் என்றபடி. சாஸ்த்ரங்களில் பாவங்களைப்பற்றி இரண்டுவகையாகச் சொல்லியிருக்கிறது; * நாபு4க்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி = நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி * என்று பலனை அநுபவித்தே பாவங்களைத் தொலைக்கவேண்டுமென்பது ஒருவகை. * தஸ்யைவ ஸ்யாத் பத3வித்தம் விதி3த்வா ந லிப்யதே கர்மணா பாபகேந * என்றும் * ஏவம் விதி3 பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே * என்றும் * ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ3யந்தே * என்றும் ப்ரஹ்மவித்துக்குப் பாப ஸம்பந்தம் அறவேயொழிந்துபோமென்பது மற்றொருவகை. எம்பெருமானை அடிபணியாதவர்கள் முதல்வகைக்கு இலக்கு; அடிபணியுமவர்கள் இரண்டாவது வகைக்கு இலக்கு என்பது ஸ்ரீபாஷ்யஸித்தாந்தம். * தத3தி4க3ம உத்தரபூர்வாக4யோரஶ்லேஷவிநாஶௌ தத்3வ்யபதே3ஶாத் * என்ற ப்ரஹ்மஸூத்ரத்தில் இது காணத்தக்கது. இவ்வர்த்தம் விளங்குமாறு இங்கு சேர்ந்தார் தீவினைகட்கு எனப்பட்டது.

திண்மதியை = த்ருடமான அத்யவஸாயத்தை அளிப்பவன் என்று பொருள்; திருநெடுந்தாண்டகத்தில் முதற்பாட்டில் வேதநான்காய் என்றதற்கு நால்வேதங்களையும் கொடுப்பவன் என்று பொருளாவதுபோல இங்கும் திண்மதியை யென்பதற்குத் திண்மதியைக்கொடுப்பவன் என்று பொருளாகக் குறையில்லையென்றுணர்க. இங்கே ஒரு இதிஹாஸமருளிச்செய்வர்;—முன்பு அம்பரீஷன் எம்பெருமானை நோக்கித் தவம்புரியாநிற்கையில் அவனுடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷிக்கும்பொருட்டு எம்பெருமான் இந்திரன் வேடம்பூண்டு எதிரேவந்து நின்று 'வேண்டும்வரத்தைக் கேட்டுப்பெற்றுக்கொள்' என்று சொல்ல; அதுகேட்ட அம்பரீஷன் 'இந்திரனே! நான் உன்னை ஆராதிக்குமவனல்லேன்; என்னுடைய ஸமாதி பங்கம்பண்ணாதே போகமாட்டாயோ? உன்னைக் கும்பிடுகிறேன், போ'' என்றானாம். த்ருடாத்யவஸாயம் இப்படியிருக்குமென்று காட்டினபடி.

தீர்ந்தார் தம்மனத்துப்பிரியாது அவருயிரைச் சோர்ந்தேபோகல் கொடாச் சுடரை = எம்பெருமான் தன்னையே உபாயமும் உபேயமுமாகப் பற்றியிருப்பவர்கள் தீர்ந்தார் எனப்படுவர்; அன்னவர்களினுடைய மனத்திலே எப்போதும் ஸந்நிதிபண்ணியிருந்து அவர்களது உயிரை குணாநுபவம் முதலியவற்றால் தரிப்பிக்குமவன் என்றபடி.

அரக்கியை மூக்கீர்ந்த வரலாறு: — இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பணகை தண்டகாரணியத்தில் குடியேறி அங்குள்ள வநவாஸிகளை வருத்திக்கொண்டு உல்லாஸமாகத் திரிந்துகொண்டிருக்கையில் ஸ்ரீராமலக்ஷ்மணர் ஸீதையோடு கோதாவரிக்கரையில் பஞ்சவடியாச்ரமத்தில் 'வஸித்துவருகிறபொழுது

ஒருநாள் இராமபிரானது திருமேனியழகைக்கண்டு பெருங்காதல்கொண்டு அழகியவடிவமெடுத்து அருகில்வந்து தன்னைக்கூடும்படி பலவாறுவேண்டவும், அதற்கு அப்பெருமான் உடன்படாது பலகூறி மறுத்திட்டதனால் மிக வருந்தி மீண்டு 'ஒப்புயர்வில்லாத ஸௌந்தரியமுடைய மனைவி உடனிருத்தலால் அவளுள்ளவளவும் என்னை இவன் விரும்பான்; அவளை வஞ்சனையால் எடுத்துப்போய் மறைத்துவைத்துவிட்டால் நான் இவனுடன் கூடிவாழக்கூடும்' என்றெண்ணி மறுநாளுதயத்தில்வந்து இராமன் காலைக்கடன்கழிப்பதற்குத் தடாகம் நோக்கிச்சென்ற ஸமயம்பார்த்துச் சீதையைப்பிடிக்கத் தொடங்கையில், அப்பிராட்டிக்குக்காவலாக அருகிற்சோலையிலிருந்த லக்ஷ்மணன் கண்டு விரைந்துவந்து இவளது கூந்தலை ஒருகையாற்பற்றிக்கொண்டு மற்றொருகையால் உடைவாளையெடுத்து அதனால் இவளது மூக்கையுங் காதையும் அறுத்துத் தூரத்திவிட்டானென்பதாம். இச்செயல்செய்தது இளையபெருமாளாயினும் இதனைப்பெருமாள் செயலாகவே ஆழ்வார் அருளிச்செய்வர்கள். "சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவளார்க்கவரிந்தானைப்பாடிப்பற" என்றும் "தங்கையை மூக்குந் தமையனைத் தலையுந் தடிந்தவென்தாசரதி" என்றும் பெரியாழ்வாரருளிச்செய்தார். "மலைபோலுருவத்தோரிராக்கதிமூக்கு அரிந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவன்" என்றார் திருமங்கையாழ்வார். இங்ஙனே சொல்லலாமோவென்னில்; இளையபெருமாளைச் சொல்லுமிடத்து வான்மீகி முனிவர் "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:—ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" என்றார், (அதாவது) லக்ஷ்மணனை ஸ்ரீராமபிரானது வலக்கையாகக் கூறினர். ஆதலால் சூர்ப்பணகாபங்கத்தைப் பெருமாளது செயலாகக்கூறுவது பொருந்துமென்க. தன் கையாலேயிறே தண்டித்தது. அன்றியும், ப்ரயோஜ்யகர்த்தா, ப்ரயோஜககர்த்தா என்ற இருவகைக்கர்த்தாக்களுள் ஸ்ரீராமன் ப்ரயோஜக கர்த்தாவாதலால் இதுபற்றியும் சொல்லிற்றென்ப.

அடியேன் முதல் முன்னமே அடைந்தேன் = ஒரு மாணிக்கம் சேற்றிலழுந்தி மழுங்கிக்கிடக்க, அதனைப் பரிஷ்கரித்தால் இயற்கையாகவுள்ள ஒளி விளங்குவது தவிர, புதிதாக வொளி உண்டாவதன்றே; அதுபோலவே ஆத்மாவுக்கும் "திருமாலே! நானுமுனக்குப் பழவடியேன்" என்றபடி பகவத்ஸம்பந்தம் ஸ்வதஸ்ஸித்தமாதலால் இங்ஙனே சொல்லக் குறையில்லையென்க.

ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தம் அநாதியா? பகவத்ஸம்பந்தம் அநாதியா? என்று விகல்பிக்கலாம்படியிருக்கும். ஆனாலும் பகவத்ஸம்பந்தந்தான் அநாதியென்பது துணிபு. இவ்விஷயம் ஆசார்யஹ்ருதயத்தில் — "ஏதந்நிமித்தம் முன்னமே முதல்முன்னமேயான த்விவிதாநாதிஸம்பந்தங்கள். இவை இட்டமும் வேட்டுவேளாணும்போலே ஒண்பொருள் பொருளல்லாதவையென்றே நானிலாதயானுமுளனானவனென்கிற ஸாம்யம் பெறத் நின்றாதி அந்தமும் வாழ்வுமாகிற ஹாநிஸத்தைகளை உண்டாக்கும். ஒன்றுகூடினதாய் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழவடியேனென்னுமதொன்றுமே ஒழிக்கவொழியாதது." என்ற சூர்ணிகைகளில் விசதமாகும். ... . (௬)

முன்னல்யாழ்பயில்நூல் நரம்பின்முதிர்சுவையே *
பன்னலார்பயிலும்பரனே ! பவித்திரனே *
கன்னலே ! அமுதே ! கார்முகிலே ! என்கண்ணு ! *
நின்னலாலிலேன்காண் என்னைநீகுறிக்கோள்ளே. (எ)

முன்	அநாதியாய்	பவித்திரனே	பரிசுத்தனே !
நல்	விலக்ஷணமாய்	கன்னலே	கரும்பின் சாறுபோன்றவனே !
யாழ் பயில்	வீணையைப்பற்றி அப்யஸிக்கப்படுவதான	அமுதே	அமிருதம்போன்றவனே !
நூல்	ஸங்கீத சாஸ்த்ரத்தின் படியேயான	கார் முகிலே	காளமேகத்திருவுருவனே!
நரம்பில்	தந்திக்கம்பியிலே வருடப்பட்டு	என் கண்ணு	எனக்கு நித்யாநுபவத்திற்குரிய கண்ணபிரானே!
முதிர்	முதிர்ந்த	நின் அலால்	உன்னையன்றி
சுவையே	சுவைபோன்றவனே! [பரமபோக்யனே!]	இலேன் காண்	(வேறொருவரைத் தஞ்சமாக) உடையேனல்லேன் காண் ;
பல் நல்லார்	பல விலக்ஷணர்கள்	என்னை	இப்படிப்பட்ட என்னை
பயிலும்	நித்யாநுபவம் பண்ணப்பெற்ற	நீ குறிக்கொள்	நீயே திருவுள்ளத்தில் கொண்டருளவேணும்
பரனே	பரமபுருஷனே !		

* * *—[முன்னல் யாழ்பயில்நூல்.] கீழ்ப்பாட்டில் "அடியேனடைந்தேன் முதல் முன்னமே" என்ருர் ; அதனுல் தம்முடைய நித்ய ஸம்ச்லேஷத்தைத் தெரிவித்துக்கொண்ட ஆழ்வார் இக்கலவிக்கு விச்சேதம் பிறந்தால் என் செய்வது? என்று சங்கித்து, அப்படி ஒருகால் விச்லேஷம் பிறக்குமாகில் தரிக்கமாட்டேனென்று திருவுள்ளத்திலே கொண்டருளவேணுமென்று இப்பாட்டிலருளிச்செய்கிருர். 'தரிக்கமுடியாமைக்குக் காரணம் எம்பெருமானுடைய பரமபோக்யதை முதலானவை' என்பதைக் காட்டிக்கொண்டு மூன்றடிகளில் பகவத்ஸம்போதநங்களை அமைத்தருளுகிருர்.

முன்னல்யாழ்பயில்நூல் நரம்பின் முதிர்சுவையே! என்ற விளி—எம்பெருமானுடைய பரமபோக்யதை எல்லாரையும் ஈடுபடுத்துமது என்று காட்டுதற்காக. "பஶுர்வேத்தி ஶிஶுர்வேத்தி வேத்தி காநரஸம் பணீ = பசுர் வேத்தி சிசுர் வேத்தி வேத்தி காநரஸம் பணீ" என்றபடி பசுக்களையும் சிசுக்களையும் ஸர்ப்பங்களையும் பரவசமாக்கவல்ல ஸங்கீதரஸம் யாதொன்றுண்டு, அதுவே எம்பெருமானுக இங்குச்சொன்னது அதுபோல் இவன் ஸகலர்க்கும் பரமபோக்யன் என்றபடி. முன் என்பதும் நல் என்பதும் நூலுக்கு விசேஷணம். வீணுகாநவிஷயமான சாஸ்த்ரம் அநாதியாயும் விலக்ஷணமாயுமுள்ளது என்றவாறு. அப்படிப்பட்ட சாஸ்த்ரப்படி ஏற்பட்டதாயும், தந்திக்கம்பியில் கிளர்ந்ததாயுமிருக்கிற முதிர்ந்த கீதரஸம்போலே இனிமையே வடிவெடுத்தவனே ! என்றபடி.

பன்னலார்பயிலும் பரனே!="தெள்ளியார்பலர் கைதொழுந்தேவனார்" என்கிறபடியே பகவத்குணாநுபவத்தில் நிலவர்களான கணக்கிறந்த நித்யஸூரிகள் இடைவீடின்றி நித்யாநுபவம் பண்ணினாலும் அநுபவித்த அம்சம் சிறிதாய் அநுபவிக்கவேண்டிய அம்சமே பெரிதாயிருக்கப்பெற்றவனே! என்றபடி. பல் நலார் என்று முமுக்ஷுக்களைச் சொல்லிற்றாகவுமாம். நல்லார் என்பது நலார் என்று தொக்கிக்கிடக்கிறது.

பவித்திரனே!=நித்யஸம்ஸாரிகளான நாமும் நித்யமுக்தர்களின் திரளிலே புகலாம்படி நம்மை நிஷ்கல்மஷராக்கும் தன்மையனே! என்றபடி. கன்னலே அமுதே!=கன்னல்போலவும் அம்ருதம்போலவும் இனியனானவனே!. கார் முகிலே!=காளமேகம்போல் ஔதார்யமே வடிவெடுத்தவனே! என் கண்ணா!=கண்ணனைப்போல் என் விஷயத்தில் பரமஸூலபனாயிருப்பவனே!.

நின் அலால் இலேன்=உன்னைவிட்டுப்பிரிந்து [ஒருநொடிப்பொழுதும் ஜீவிக்கமாட்டேன். உன்னையன்றி வேறொருவரை ரக்ஷகராகக் கொள்ளமாட்டேன் என்னவுமாம். என்னை நீ குறிக்கொள்=இப்படிப்பட்டவனாக என்னைத் திருவுள்ளம்பற்றவேணுமென்றவாறு. என்னைக் கடாக்ஷித்தருளவேணுமென்றுமாம். .... (எ)

குறிக்கோள்ஞானங்களால் எனையூழிசெய்தவமும் *
கிறிக்கொண்டிப்பிறப்பே சிலநாளிலெய்தினன்யான் *
உறிக்கொண்டவெண்ணெய்பால் ஒளித்துண்ணுமம்மான்பின் *
நெறிக்கொண்டநெஞ்சனாய்ப் பிறவித்துயர்கடிந்தே. (அ)

உறி கொண்ட	உறிகளிலே சேமித்து வைத்த
வெண்ணெய்	வெண்ணெயையும்
பால்	பாலையும்
ஒளித்து உண்ணும்	மறைந்திருந்து அமுது செய்த
அம்மான் பின்	எம்பெருமான் பின்னே
நெறிக் கொண்ட	அவன் போனவழியே போகிற
நெஞ்சன் ஆய்	மனத்தையுடையேனாய்
பிறவி துயர்	ஸம்ஸாரத்தொல்லைகளை
கடிந்து	நிராகரித்து,

குறிக்கொள் ஞானங்களால்	யமநியமாதிகளாலே கொள்ளப்படுவதான ஞான விசேஷங்களாலே [உபாஸநாதிகளாலே]
எனை ஊழி	அநேக கல்பகாலங்களில்
செய்	செய்யப்படவேண்டியதான
தவமும்	பக்தியோகமாகிற தவத்தின் பயனை
கிறிக் கொண்டு	[பகவத் க்ருபையாகிற] உபாயத்தைக்கொண்டு
இப் பிறப்பே	இந்தப்பிறவியிலேதானே
சில நாளில்	சிலநாட்களில்
யான்	அகிஞ்சநனாகிய அடியேன்
எய்தினன்	அடைந்தேன்.

* [குறிக்கோள்ஞானங்களால்.] நெடுங்காலம் வருந்தி ஸாதிக்கவேண்டிய புருஷார்த்தத்தை இந்த ஜன்மந்தன்னிலே அற்பகாலத்தில் எளிதாகப்பெற்றேனென்று அவனுடைய கடாக்ஷத்தின் பெருமையைப் பேசுகிறார். வேதநமென்றும் த்யானமென்றும் உபாஸநமென்றும் பக்திக்குள்ள அவஸ்தாபேதங்களை ஞானங்களால் என்ற பன்மையால் காட்டுகின்றார். அவை யமம் நியமம் முத

லானவற்றில் ஊன்றியிருந்து ஸம்பாதிக்கவேண்டியவை யாதலால் குறிக்கோள் எனப்பட்டது. 'வெகு ஜாக்ரத்தையுடன் ஸம்பாதிக்கவேண்டிய' என்று பொருள்.

எனையூழி செய்தவமும்—இங்குத் தவமென்றது தவத்தின் பலனைச் சொன்ன படி. எத்தனையோ கல்பகாலங்கள்கூடி ச்ரவணம் மநநம் முதலியன செய்கை யாகிற தபஸ்ஸின் பலனை ஒரு பெருமுயற்சியின்றியே இப்பிறப்பிலேயே சில நாளிற் சென்றுவிட்டேன்.

எங்ஙனம் பெற்றுவிட்டீரென்ன, கிறிக்கொண்டு என்கிறார். கிறி யென் பதற்கு உபாயமென்று பொருள். எம்பெருமானே இங்கு உபாயபதத்தினால் விவக்ஷிக்கப்பட்டானென்றுணர்க. இவ்வாழ்வார் தாமே திருவிருத்தத்தில் தொண்ணூற்றேராம்பாட்டில் எம்பெருமானைப் பெருங்கிறியான் என்று பணித் திருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

எம்பெருமானாலே பெற்றேனென்கிறீரே; அதற்குப் பொருளென்ன? அப்பெருமான் விஷயமாக பக்தியோகம் முதலியவற்றைச் செய்து பெற்றீரோ? என்ன; இல்லை யில்லை; அவன் கண்ணனாய்த் திருவவதரித்திருந்தகாலத்தில் திருவாய்ப்பாடியில் ஆயர்மனைகளில் உறிகளிலே சேமித்துவைத்திருந்த வெண் ணெயையும் பாலையும் களவுவழியாலே அமுதுசெய்தானென்கிற இச் சரிதையை அநுஸந்தித்தேன்; அவ்வளவாலேயே இது பெற்றேன் காண்மின் — என்றாராகி றார் பின்னடிகளால். .... (அ)

கடிவார்தண்ணந்துழாய்க் கண்ணன்விண்ணவர்பெருமான் *
படிவானமிறந்த பரமன் பவித்திரன்சீர் *
செடியார்நோய்கள்கெடப் படிந்துகுடைந்தாடி *
அடியேன்வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே. (கூ)

கடி வார்	பரிமளம் மிக்க
தண் அம் துழாய்	குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையையுடைய னை
கண்ணன்	ஸ்ரீக்ருஷ்ணனாய்
விண்ணவர் பெருமான்	நித்யஸூரிகளுக்குத் தலைவனாய்
வானம்	பரமபதத்திலும்
படி இறந்த	ஒத்தார் இல்லாதவனான
பரமன்	பரமபுருஷனாய்
பவித்திரன்	பரிசுத்தனான எம்பெருமானுடைய
சீர்	திருக்குணங்களிலே
செடி ஆர் நோய்கள் கெட	தூறுநெருங்கினாற்போலே நெருங்கி யிருக்கின்ற ஸம்ஸார வியாதிகள் தொலையும்படி
படிந்து	கிட்டி
குடைந்து ஆடி	அவகாஹித்து
அடியேன்	தாஸனாகிய நான்
வாய் மடுத்து பருகி	வாயாரப்பருகி
களித்தேன்	களிக்கப்பெற்றேன்.

* * * — [கடிவார்தண்ணந்துழாய்.] பரமபதத்திலே ப்ராப்தமாகக்கூடிய பக வத் குணாநுபவத்தை நான் இந்நிலத்திலேயே பெற்றேனென்று களித்துப்பேசு கிறாரிதில். பரிமளம் மிக்க (அல்லது, தேன்வெள்ளமிடாநின்ற) குளிர்ந்த திருத் துழாய் மாலையை யணிந்துள்ளவனாய், இவ்வலங்காரத்தாலே பெரியதிருவடி

திருவநந்தாழ்வான் முதலான நித்யஸூரிகளை ஆட்படுத்திக்கொண்டவனாய், அங்குள்ள அந்த நித்யஸூரிகளும் தன்படிக்கு ஒப்பாகப் பெறாதவனாய், மிகவும் அபரிசுத்தர்களான நம்போலியரையும் பரிசுத்தர்களாக ஆக்கவல்ல பரமபவித்திரனாய் இராநின்ற எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணங்களிலே நான் பரிபூர்ணமாக அவகாஹித்தேன்; அடி காணவொண்ணாதபடி தூறுமண்டிக்கிடக்கிற ஸகல பாபங்களும் தொலையும்படியான பாக்கியமும் பெற்றேன்; ஆக இத்தகைய பரமாநந்தம் பெற்றேனென்றாராயிற்று.

கடி—பரிமளமும் தேனும். வார்தல்—மிகுதியாக இருத்தலும் பெருகுதலுமாம்.

வானம்படி இறந்த—வானமென்று பரமபதத்திற்கும் மேகத்திற்கும் பெயராதலால், பரமபதத்திலும் தனக்கு ஒப்பில்லாதவன் என்றும், மேகத்தையும் தனக்கு ஒப்பாகப் பெறாதவன் என்றும் பொருள்கொள்ளலாம்.

பவித்திரன்—பவித்ரஃ என்ற வட சொல் திரிபு. .... (௯)

களிப்பும்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று *
ஒளிக்கொண்டசோதியமாய் உடன்கூடுவதென்றுகொலோ *
துளிக்கின்றவானிந்நிலம் சுடராழிசங்கேந்தி *
அளிக்கின்றமாயப்பிரான் அடியார்கள்குழாங்களையே. (௧௦)

களிப்பும்	அல்ப ஸந்தோஷமும்	வான்	ஆகாசத்தையும்
கவர்வும்	மனக்கவலையும்	இ நிலம்	இந்தப் பூமியையும்
அற்று	ஒழிந்து	சுடர்	ஒளிமிக்க
பிறப்பு	ஜன்மமும்	ஆழி சங்கு	திருவாழி திருச்சங்குகளை
பிணி	வியாதிகளும்	ஏந்தி	தாங்கி
மூப்பு	கிழத்தனமும்	அளிக்கின்ற	ரக்ஷித்தருள்கின்ற
இறப்பு	மரணமும்	மாயன் பிரான்	ஆச்சரிய சேஷ்டிதனை பரமபுருஷனுடைய
அற்று	ஒழிந்து	அடியார்கள்	பக்தர்களினுடைய
ஒளிக்கொண்ட சோதியம் ஆய்	ஞானம் முதலிய ஒளிகளுக்கு ஒளியைத்தருவதான ஒளியுருவையுடையோமாய்,	குழாங்களை	கூட்டங்களை
துளிக்கின்ற	மழைபொழிகின்ற	உடன் கூடுவது	சேர்ந்து அநுபவிக்கப் பெறுவது
		என்று கொல்	என்றைக்கோ?

* * * — [களிப்புங் கவர்வுமற்று.] கீழ்ப்பாட்டில் "அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே" என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! பரிபூர்ணமான பேறு பெற்றுவிட்டீரன்றோ? இனியொரு குறையில்லையே; இனியுமக்கு நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லையே' என்ன; அதற்கு ஆழ்வார், 'பெருமானே! இவ்விபூதியில் நான் இப்போது ப்ரஹ்மானந்தம் அநுபவிக்கிறேனென்பதில் ஸந்தேஹமில்லை; ஆனாலும் விஷயாந்தரங்களின் நடுவே என்னை வைத்திருக்கின்றாயாதலால் இவ்வாநந்தம் இங்கே நித்தியமாய்ச் செல்லாதாகையாலே ஒரு அப்ராக்ருத தேச விசேஷத்திலே சென்று அங்கு அடியார்களின்

கோஷ்டியிலே அந்வயிக்க வேண்டிய தொன்றுண்டு; அது எப்போது ப்ராப்த மாகுமோ? என்கிறார்.

தமக்கு நிவர்த்திக்கவேண்டியவற்றை முதலடியில் அருளிச்செய்கிறார். களிப்பு கவர்வு பிறப்பு பிணி மூப்பு இறப்பு ஆகிய இவை அற்றுப்போகவேணு மென்கிறார். களிப்பாவது இந்நிலத்தில் ஏதேனும் அல்ப வஸ்துக்கள் நமது கையில் கிடைக்கும்போது அதனாலுண்டாகும் அற்ப மகிழ்ச்சி; கவர்வாவது — கையில் கிடைத்த அந்த அல்ப வஸ்துக்கள் நஷ்டமாய்விட்டால் அதனாலுண் டாகும் மனக்கவலை; ஆகிய இவை மீண்டும் இந்தப் பூமியில் சரீரமுள்ளவரை யில் இடையறாது அநுவர்த்திக்குமாதலால் சரீர ஸம்பந்தமும் தொலையவேணு மென்கிறார்.

பிறப்புத் தொலையவேணுமென்று ஒன்றைச்சொன்னால் போதுமே; பிணி மூப்பு முதலியவற்றைத் தனியே சொல்லவேணுமோ வென்னின்; அவற்றில் ஆழ்வார் தமக்குள்ள ஜிஹாஸையை வ்யக்தமாகக் காட்டினவாறென்க.

ஒளிக்கொண்ட சோதியமாய் = ரஜோகுணமும் தமோகுணமும் கலசின இந்த உடம்புபோலல்லாமல் சுத்த ஸத்வமயமாய் அளவுகடந்த தேஜோரூப மான சரீரத்தையுடையோமாகி என்றபடி. "சோதியமாய்" என்று பலரும் பதிப்பித்திருப்பதும் ஓதிவருவதும் பிழை, சோதியம் என்னவேணும்.

"உடன்கூடுவதென்றுகொலோ" என்றிதற்குப் பாட்டின் இறுதியிலே அந்வயம். "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்றுகொலோ" என்று இயைக்க. யாருடைய அடியார்களென்னில் மாயப்பிரானுடைய அடியார்கள்; அவன் எப்படிப்பட்டவனென்னில், துளிக்கின்றவான் இந்நிலம் சுடராழி சங் கேந்தி அளிக்கின்றவன் — மழை பெய்யுமிடமான ஆகாசத்தையும், பெய்த மழையினால் பயனளிக்குமதான இந்நிலத்தையும் ரக்ஷித்தருள்பவனென்கை.

சுடராழி சங்கேந்தி = திருவாழி திருச்சங்குகள் பரமபதத்தில் ஆபரண மாய்க் காட்சிதரும்; இந்நிலத்தில் ஆயுதமாயிருந்து காரியஞ்செய்யும் என்ப.(கo)

குழாங்கொள்பேரரக்கன் குலம்வீயமுனிந்தவனை *
குழாங்கொள் தேன்குருகூர்ச்சடகோபன்தெரிந்துரைத்த *
குழாங்கொளாயிரத்துள் இவைபத்துமுடன்பாடி *
குழாங்களாயடியீருடன் கூடிநின்றாடுமினே. (கக)

அடியீர்	பக்தர்களே!
குழாம் கொள்	கூட்டங்கூட்டமான சேனைகளைக்கொண்ட
பேர்	மிக்க பெருமைபொருந்திய
அரக்கன்	ராக்ஷஸ ராஜனாகிய இராவணனுடைய
குலம்	குடும்பம்
வீய	தொலையும்படி
முனிந்தவனை	சீறியருளின பெருமான் விஷயமாக
குழாம் கொள் தென் குருகூர்	(ஸ்ரீவைஷ்ணவ) கோஷ்டிகளை யுடைத்தான திருநகரிக்குத் தலைவரான
சடகோபன்	ஆழ்வார்
தெரிந்து	ஆராய்ந்து
உரைத்த	அருளிச்செய்த
குழாம் கொள் ஆயிரத்துள்	பாசுரங்களின் கூட்டம் நிரம்பிய இவ்வாயிரத்தினுள்
இவை பத்தும்	இப்பத்துப்பாட்டையும்
உடன்	பொருளுடனே
பாடி	பாடி
குழாங்கள் ஆய்	பெரிய கோஷ்டியாய்
உடன் கூடி நின்று	ஒருமிக்கக் கலந்திருந்து
ஆடுமின்	கூத்தாடுங்கள்.

* * * — [குழாங்கொள்பேரரக்கன்.] ஒவ்வொரு பதிகத்திலும் ஈற்றுப் பாசுரத்தில் பயனுரைத்து வருகின்ற ஆழ்வார் இப் பதிகத்திற்குப் பயன் கூறாது, இத் திருவாய்மொழி, பாகவதர் பெருந்திரளாக இருந்து அநுபவிக்கத்தக்கது என்று சொல்லித் தலைக்கட்டுகின்றார். இதற்கொரு பலன் எதிர்பார்க்கவேண்டா; பெரிய கோஷ்டியாக இருந்து இதனை அநுபவிப்பதுதானே ஸ்வயம் ப்ரயோஜனம் என்று தெரிவித்தவாறு. அன்றியே, இத் திருவாய்மொழியைக் கற்கப்பெறில் என்னைப்போலே தனியேயிருந்து துவளாமல் பாகவதகோஷ்டிகளுடன் கூடி அநுபவிக்கும்படியான பெரும்பேறு பெறுவீர்கள் என்று இதனை இத் திருவாய்மொழி கற்கையின் பயனாகவே அருளிச் செய்தாரென்றுங் கொள்ளலாம். ஆடுமின் என்றது ஆடப்பெறுவீர்களாக என்றபடி.

குழாங்கொள் பேரரக்கன் குலம்வீய முனிந்தவனை = கூட்டங் கூட்டமாகக் கூடி நலிந்துகொண்டிருந்த இராவணனை வேரோடுங் களைந்தொழித்த இராமபிரானைக் குறித்து என்றபடி. « [illegible] ஆகர்ணபூர்ணைரிஷுபிர் ஜீவலோகம் துராஸதை:, கரிஷ்யே மைதிலீஹேதோ: அபிசாசமராக்ஷஸம்.'' என்று ஆரண்யகாண்டத்தில் சோதிவாய்திறந்து அருளிச்செய்தபடியே செய்து தலைக்கட்டினபடி.

குழாங்கொள் தென்குருகூர்ச்சடகோபன் = ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹங்கள் சூழப்பெற்ற ஆழ்வார் என்றபடி. இங்கே நம்பிள்ளை ஸ்ரீஸூக்தி காண்மின்;— "ஜநஸ்தானம் அடியறுப்புண்ட பின்பு தண்டகாரண்யம் குடியேறினாப்போலே * வாயுந்திரையுகளுக்குத் தப்பின ஆழ்வாரைக் காணவேணுமென்று ஸ்ரீவைஷ்

ணவவைராக்யமுடையத் திரண்டதாயிற்று." — கீழே 'வாயுந்திரையுகளும்" என்ற திருவாய்மொழி யருளிச்செய்யும்போது ஆழ்வார்க்கு இருந்த நிலைமையை நோக்குங்கால் 'இனி இவரை இவ்விபூதி இழந்ததேயாகும்' என்றே அனைவரும் நினைக்கும்படி யாயிற்றும்; ஸம்ஸாரிகள் பண்ணின பாக்யத்தாலே அத் திருவாய்மொழிக்கு ஆழ்வார் தப்பிப் பிழைத்தார்; அன்னவரை ஸேவிக்கவேணுமென்று பலபல பாகவதர்கள் திரண்டுவந்து சேர்ந்திருந்தார்களாம்; அவ்விருப்பைச் சொல்லுகிறது "குழாங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" என்று. அங்ஙனே திரண்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் ஜீவனம் போரும்படி அருளிச்செய்த ஸ்ரீஸூக்தி இவை யாகையாலே குழாங்கொளாயிரம் எனப்பட்டது. ஆயிரத்தினுள் இப்பத்துப் பாட்டையும் அடியீர்! குழாங்களாய் உடன்கூடி நின்று ஆடுமின் என்று அந்வயம்.

இவ்விடத்தே நம்பிள்ளை அருளிச்செய்ததொரு திவ்ய ஸ்ரீஸூக்தி ஸ்ரீவைஷ்ணவர்களின் ஹ்ருதயத்திலே எப்போதும் குடிகொண்டிருக்கத்தக்கது; அதாவது —

'அவன் பக்கலிலே நிக்ஷிப்தபரரா யிருக்கிற நீங்கள் நால்வரிருவர் இங்கிருக்கும் நாலுநாளும் த்யாஜ்யமான அர்த்தகாமங்களைப்பற்றிச் சீறு பாறென்னாதே நம் பெரிய குழாத்திலே போய்ப்புகுமளவும் ஒருமிடறாய் அநுபவிக்கப் பாருங்கோள்." — என்பதாம்.

மூன்றாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில்

இத்திருவாய்மொழிக்கான ச்லோகம்.

சித்ராஸ்வாதாநுபூதிம் ப்ரியமுபக்ருதிபிர் தாஸ்யஸம்ஹேதுமாத்ம
ந்யாஸார்ஹக்ருத்யம் பஜதம்ருதரஸம் பக்தசித்தைகபோக்யம் |
ஸர்வாக்ஷபூர்ணஹர்ஷம் ஸ்வவிரஹஸஹநம் [illegible]
[illegible] நிரவதி [illegible] ||

1. சித்ராஸ்வாதாநுபூதிம் = முதற்பாட்டில் "தேனும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொத்தே" என்றபடி மதுரபதார்த்தங்கள் பலவும் ஒன்றுசேர்த்து அருந்தப்பட்டால் எவ்வளவு இனிதாயிருக்குமோ அவ்வளவு இனிதாயிருக்கின்ற ஸ்வாநுபவத்தை யுடையவன் என்றவாறு.

2. உபக்ருதிபி: ப்ரியம் = "என்னைப்பெற்றவத்தாயாய்த் தந்தையாயறியாதன வறிவித்த அத்தா" என்றபடி தந்தையும் தாயும் ஆசாரியனும் செய்யுமுபகாரங்களைத் தானே செய்து அதனால் அடியவர்க்கு அன்பனாகவுள்ளவன்.

3. தாஸ்யஸம்ஹேதும் = [illegible] ஸரஸமாக உண்டாவதற்கு ஹேதுவாயிருந்தவன்; "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாய்" என்றதைக் குறிக்கொண்டபடி.

4. ஸ்வாத்மந்யாஸார்ஹக்ருத்யம் = "எனதாவியுள் கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு எனதாவி தந்தொழிந்தேன்" என்றபடி ஆத்மஸமர்ப்பணம் செய்கைக்குறுப்பாக ஆத்மாவினுள்ளே கலந்திருந்த மஹோபகாரகன்.

5. பஜத் அம்ருதரஸம் = "என் கடற்படாவமுதே" என்றபடி அடியவர்க்கு விலக்ஷணமானதோர் அம்ருதமாயிருப்பவன்.

6. பக்தசித்தைகபோக்யம் = "தீர்ந்தார் தம்மனத்துப் பிரியாது" என்றபடி அடியவர்களது உள்ளத்தைவிட்டுப் பிரியாதிருந்து அவர்கட்குப் பரமபோக்யனாயிருப்பவன்.

7. ஸர்வாக்ஷதர்பணார்ஹம் = "முன்னல்யாழ்பயில்" என்கிற பாசுரத்திற் சொல்லுகிறபடியே ஸகலமான இந்திரியங்களையும் த்ருப்திசெய்விப்பதற்கு உரியவன். (அக்ஷமென்று இந்திரியத்திற்குப் பெயர்.)

8. ஸபதி பஹுபலஸ்நேஹம் = "குறிக்கொள் ஞானங்களால்" என்கிற பாசுரத்திற் சொல்லுகிறபடியே நெடுங்காலம் நின்று செய்யவேண்டிய தபஸ்ஸு த்யானம் ஸமாதி இவற்றின் பயனான பக்தியைத் தனக்கன்பரிடத்திலே சடக்கென உண்டாக்குமவன்.

9. ஆஸ்வாத்யசீலம் = "பரமன் பவித்திரன்சீர் - படிந்தகுடைந்தாடி அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேன்" என்றபடி மிகவும் போக்யமாக அநுபவிக்கக்கூடிய திருக்கல்யாணகுணங்களை யுடையவன்.

10. ஸப்யைஸ் ஸாத்யைஸ்ஸமேதம் = "மாயப்பிரானடியார்கள் குழாங்களை" என்றபடி நித்ய முக்தர்களோடே ஒரு ஸபையாகக் கூடியிருப்பவன். — ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை மூன்றாந் திருவாய்மொழியில் பரமபோக்யதையே வடிவுடையவனாக அநுபவித்தார் என்றதாயிற்று. ... ... (*)

தூப்புல்பிள்ளை அமுதமொழிவாழி.

ஸ்ரீ:.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஊனமறவேவந்து உள்கலந்த மாலினிமை
யானது, அனுபவித்தற்காந்துணையா — வானில்
அடியார் குழாங்கூட ஆசையுற்ற மாறன்
அடியாருடன் நெஞ்சே யாடு.

பதவுரை.

நெஞ்சே	மனமே !;	வானில்	பரமபதத்திலுள்ள
ஊனம் அற வந்து	குறையற வந்து	அடியார்	அடியவர்களான நித்ய முக்தர்களினுடைய
உள் கலந்த	அந்தரங்கமாகக் கலந்த	குழாம்	கோஷ்டியிலே
மால்	ஸர்வேச்வரனுடைய	கூட	அந்வயிக்க
இனிமை ஆனது	கலவியின்பத்தை	ஆசை உற்ற	குதூஹலங்கொண்ட
அனுபவித்தற்கு	அனுபவிப்பதற்கு	மாறன்	நம்மாழ்வாருடைய
ஆம் துணை ஆ	அநுகூலமான ஸஹவாஸம் அபேக்ஷிதமாக,	அடியாருடன்	பக்தர்களோடே கூடி
		ஆடு	அநுபவிக்கப்பார்,

* * * — இத் திருவாய்மொழியில், ஆழ்வார் தம்மோடே ஏகதத்துவமென்னும்படி எம்பெருமான் ஸம்ச்லேஷிக்க, அதனால் பரமானந்தம் பொலியநின்ற ஆழ்வார் அந்த எம்பெருமானது பரம போக்யதையைத் தனியே அநுபவித்து த்ருப்திபெறமாட்டாமல் உசாத்துணைவேண்டிப் பரமபதத்தில் நித்ய முக்தர்களினுடைய திரளோடே அந்வயிக்கப் பெறவேணுமென்று ஆசைகொண்டார்; அன்னவாறு பக்தர்களுடனே நெஞ்சே! நீ கூடிக் களிப்பாயாக — என்றுராயிற்று. ... ... (கந.)

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

(கருத்து.) நம்மாழ்வாரானவர், செந்தாமரைக் கண்ணனாகிய எம்பெருமானுடைய ஸகல ரஸமயமான சேர்த்தியாகிற இன்பவமுதக்கடலிலே ஆழமூழ்கி, அப்படிப்பட்ட ஆனந்தாநுபவத்திற்கு நிலவர்களான நித்யமுக்தர்களோடே எனக்குச் சேர்த்தி எப்போது நேரிடுமென்று மூன்றாந் திருவாய்மொழியில் பாரித்தார்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து
மூன்றாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து — நான்காந் திருவாய்மொழி, ஆடியாடி.

அவதாரிகை.

கீழ்த் திருவாய்மொழியில் "பரமன் பவித்திரன் சீர் — அடியேன் வாய் மடுத்துப் பருகிக்களித்தேனே" என்று ஆழ்வார்தாம் பரமானந்தமடைந்ததாக அருளிச்செய்து, அந்த குணாநுபவம் பாகவதர்களோடேகூடிப் பெரிய கோஷ்டியாக இருந்து செய்யவேண்டியதாகையாலே அப்படிப்பட்ட அதிகாரிகள் இந்நிலத்தில் விசேஷமாகக் கிடையாமையாலே திருநாட்டிலே நித்யஸூரிகளின் திரளிலே சென்று புகுந்து அநுபவிக்கவேணுமென்று பாரித்து அந்தப் பாரிப்பைக் களிப்புங் கவர்வுமற்று என்ற பாசுரத்திலே காட்டினார்.

நினைத்தபோதே அந்த நித்யஸூரிகளின் திரளிலேபோய்ச்சேர்ந்து அநுபவிக்கப்பெறாமையினாலே மிகவும் வருத்தமடைந்தார். அந்த வருத்தத்தைத் தம்முடையவர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுக்கு அறிவிக்கிற வகையாக இத்திருவாய்மொழியை அருளிச்செய்கிறார்.

ஆழ்வார் இப்போது தாமான தன்மையையிழந்த நாயகிஸமாதியிலே நிற்கிறார். பராங்குச நாயகியான இவளுடைய நிலைமையைத் தாய்மார் முதலான அன்பர்கள் பேசுகிற பேச்சாக இத்திருவாய்மொழி அமைந்திருக்கின்றது.

நாயகிஸமாதியாலே அருளிச்செய்த திருவாய்மொழிகள் கீழே இரண்டு சென்றன — அஞ்சிறையமடநாராய் என்பதும் வாயுந்திரையுகளும் என்பதும். அவையிரண்டும் நாயகிதானே பேசினபேச்சாக இருக்கின்றன. அஞ்சிறைய மடநாராயில் தானே தூதுவிட்டாள்; வாயுந்திரையுகளில்—கண்ணுற்கண்ட பொருள்களெல்லாம் எம்பெருமானைப் பெறாமையினாலே நோவுபடுகின்றனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத் தான் நோவுபட்டாள். இத்திருவாய்மொழியிலோவென்னில் அங்ஙனம் தன் வாயினால் பேசமாட்டாதபடி வேற்றுவாயாலே பேசக்காண்கையாலே ஆற்றாமை கரைபுரண்டமை விளங்குகின்றது.

'ஸ்ரீராமக்ருஷ்ணாதி அவதாரங்களைப்பண்ணி எல்லாருடைய ஆர்த்தியையும் போக்குவதையே இயல்வாகவுடையீராயிருந்த நீர் உம்மிடத்திலே பெரும் பித்துக்கொண்டிருக்கின்ற இப்பெண்பிள்ளை இப்படி நோவுபடுமாறு பார்த்திருத்தல் தகுதியோ? இவள் திறத்திலே நீர் செய்ய நினைத்திருப்பது என்ன?' என்று எம்பெருமானை நோக்கித் தாய் கேட்கிற பாசுரமாக இத்திருவாய்மொழியுள்ளது. தாய்ப்பேச்சாக இருந்தாலும் பேசுகிறவர் ஆழ்வாரேயன்றோ; அவர்

ஏன் இப்படிப்பேசவேண்டும்? என்று கேட்கலாகாது. வேணுமென்று ஆழ்வார் இங்ஙனே பேசினாரல்லர். அவருடைய அளவுகடந்த ஆற்றாமை உள்ளிருந்து வெளியே பொசியும்போது இவ்வகையான பாசுரங்களாக வடிவு கொண்டதத்தனை. காவிரியாறு பெருவெள்ளமாகப் பெருகி வரும்போது வெள்ளத்தின் மிகுதியினால் இடையிடையே உடைந்து வேறு சில வாய்க்கால் வழியாகவும் பெருகுவதுண்டு; அவையும் திருக்காவேரித் தீர்த்தமாகவேயிருக்கச்செய்தேயும் முடிகொண்டான் முதலான வேறு சில பெயர்களைப்பெற்று வழங்காநிற்கக்காண்கிறோம். அதுபோலவே எல்லாம் ஆழ்வார் பாசுரமாகவேயிருக்கச்செய்தேயும் தாய்பாசுரம், தோழிபாசுரம் என்னும் வேற்றுமைகள் விளைகின்றன.

நாயகிஸமாதியாலே பேசின [மேற்காட்டிய] இரண்டு திருவாய்மொழிகளைப்போல அல்லாமல் இத்திருவாய்மொழி வேற்றுவாயாலே பேசுவதாக விலக்ஷணமாய் அமைந்தபடியாலே ஆற்றாமையிலும் வாசிகாணத்தக்கதாகும். * அஞ்சிறைய மடநாராய் பேசும்போது இருந்த ஆர்த்தி எப்படிப்பட்டது? வாயுந்திரையுகளும் பேசும்போது இருந்த ஆர்த்தி எப்படிப்பட்டது? இப்போது இத்திருவாய்மொழி பேசுகையிலுள்ள ஆர்த்தி எப்படிப்பட்டது? என்று ஆராய்வோம்.

ஒருவன் ஒருநாள் ஒருவெள்ளிக்கட்டியை இழந்துவிடுகிறான்; அப்போது ஒரு ஆர்த்தியுண்டு: அவனே மற்றொருநாள் ஒரு பொன்கட்டியை இழந்துவிடுகிறான்; அப்போது உண்டாகிற ஆர்த்தி முன்னிலும் விஞ்சியதாகும். அவனே மற்றொருநாள் ஒரு சிறந்த ரத்னஹாரத்தை இழந்துவிடுவானாகில் அப்போது உண்டாகிற ஆர்த்தி அறவிஞ்சியதாயிருக்கும்: இழக்கப்படுகிற பொருளுக்குத் தக்கவாறு ஆர்த்தியின் தன்மை இருக்குமென்று இதனால் தேறுகின்றது இவ்வகையாலே ஆழ்வார் திறத்துப்பார்க்கும்போது அஞ்சிறைய மடநாராயில ஓடின ஆர்த்தியிற்காட்டிலும் வாயுந்திரையுகளில் ஆர்த்தி கனத்ததென்றும் அதிற்காட்டிலும் இப்போதைய ஆர்த்தி மிகக் கனத்ததென்றும் நிலையிடலாகும். இதற்குறுப்பாக, ஒவ்வொன்றிலும் (முன்னே) ஆழ்வார் ஆசைப்பட்ட பொருள் என்ன? என்று பார்த்து அவற்றின் வாசிகளை அறுதியிடவேணும். * அஞ்சிறையமடநாரைக்கு முன்னே "பெருநிலங்கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலனலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே" என்று உலகளந்த சேவடியைத் தழுவியநுபவிக்க ஆசைப்பட்டமை காண்கையாலே அங்கு அது பெறாமையாலுண்டான வருத்தம் என்று தெரிகின்றது. * வாயுந்திரையுகளுக்குமுன்னே "நம்பியைத் தென்குறுங்குடிநின்ற" என்று அர்ச்சாவதாரத்திலே அநுபவிக்க ஆசைப்பட்டமை காண்கையாலே அங்கு அது பெறாமையாலுண்டான வருத்தம் என்று தெரிகின்றது. விபவாவதாரத்திற்காட்டிலும் அர்ச்சாவதாரம் சிரியதாகையாலே அவ்விடத்து அநுபவம் பெறாமையினாலுண்டான வருத்தமும் மேற்பட்டதாகவேயிருக்கும்.

இனி, இத்திருவாய்மொழிக்கு முன் ஆழ்வார் ஆசைப்பட்டது என்ன? என்று பார்ப்போம். "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்றுகொலோ" என்கிற பாசுரமிருக்கையாலே பாகவதகோஷ்டியோடே கூடிக்களிக்கும் பேற்றை ஆசைப்பட்டாரென்று விளக்குகிறது. கீழே இவர் ஆசைப்பட்டனவாகக் காட்டப்பட்ட இரண்டு அபேக்ஷைகளுக்கு மிகவும் மேற்பட்டதன்றோ இது. விபவாவதார அநுபவ அபேக்ஷையிற்காட்டிலும் சிறந்தது அர்ச்சாவதாராநுபவ அபேக்ஷை; அதிற்காட்டிலும் மிகச்சிறந்தது பாகவதகோஷ்டியிலே கூடியநுபவிக்க அபேக்ஷிப்பது. ஆகவே இங்ஙனம் மிகச்சிறந்ததான அபேக்ஷை கைகூடப் பெறாமையினாலுண்டான ஆற்றாமையும் இதற்குத்தக்கவாறு கனத்திருக்குமன்றோ; அப்படிப்பட்ட ஆற்றாமை பேசுவிக்கிற திருவாய்மொழியாயிற்று இது.

பாகவதர்களோடே கூடிக்குலாவி அநுபவித்தல் அபேக்ஷிதமாகி அது கிடைக்கப்பெறாமையிலுண்டான வருத்தத்தினால் பேசுகிற திருவாய்மொழி இது வென்னில், அவர்களைச் சொல்லிக்கூப்பிடவேண்டியதன்றோ ப்ராப்தம்; அப்படியில்லையே; பாசுரந்தோறும் அவனைச்சொல்லிக் கூப்பிடுகிறபடியாகவன்றோ இருக்கிறது; இது வென்? என்னில்; எங்கேனுமொரு காட்டிலே ரத்னங்கள் பறியுண்டாலும் நாட்டிலே அரசன் வாசலிலே அவன்பேரைச்சொல்லி முறையிடுவதன்றோவுள்ளது. பாகவத ஸஹவாஸத்திற்கும் கடிகன் அவனாகையாலே அவனைச்சொல்லிக் கூப்பிடுதல்கூடும். .... (*)

ஆடியாடி அகங்கரைந்து * இசை
பாடிப்பாடிக்கண்ணீர்மல்கி * எங்கும்
நாடிநாடி நரசிங்காவென்று *
வாடிவாடும் இவ்வாணுதலே. (க)

இவ் வாள் நுதல்	ஒளிபொருந்திய நெற்றியையுடையளான இப் பராங்குச நாயகி	எங்கும்	எவ்விடத்திலும்
ஆடி ஆடி	பலகாலும் ஆடி	நாடி நாடி	அவன் வரவைப்பலகாலும் ஆராய்ந்து பார்த்து
அகம் கரைந்து	மனமுருகி	நரசிங்கா என்று	நரசிங்கமூர்த்தியே! என்று கதறி
இசை பாடி பாடி	பகவத் கீர்த்தனங்களைப் பலகாலும்பாடி	வாடி வாடும்	(அவன் வாக்காணாமையாலே) மிகவும் வாடுகின்றாள்.
கண் நீர் மல்கி	கண்களில் நீர் நிரம்பப் பெற்று		

* * * — [ஆடியாடி.] ப்ரஹ்லாதாழ்வான் அபேக்ஷித்த ஸமயத்திலே நரசிங்கமாய்வந்து தோன்றி உதவியருளின பெருமான் அந்தோ! எனக்கு உதவுகின்றிலனே யென்று பெண்பிள்ளை வருந்துவதாகத் திருத்தாய் சொல்லுகிறாள். ஆடியாடி யென்றது பெண்பிள்ளையின் சேஷ்டைகளைச் சொன்னபடி. * எம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும் துள்ளுகிற சேஷ்டைகள் உண்டே; அவற்றைச் சொன்னபடி. நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகினபடி சொல்லுகிறது அகங்கரைந்து என்று. அப்படி நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகாநிற்கச் செய்தேயும்

ஆற்றாமையாலே கூப்பிடுகிற கூப்பீடு அழகியதொரு இசையாகத் தலைக்கட்டியிருக்கையாலே இசைபாடிப்பாடி என்றது.

ஆற்றாமையாலே அடித்த அடிப்பு ஆடியாடி எனப்பட்டது; அவ்வாற்றாமை போட்டே கூப்பிட்ட கூப்பீடு இசைபாடிப்பாடி எனப்பட்டது. "அகங்கரைந்து" என்று சொன்னபடி உருகின மனத்தத்துவமானது இசையாய் வழிந்ததுபோக சேஷித்துநின்ற அம்சம் கண்ணீராய் வழிந்தோடுகையாலே கண்ணீர் மல்கி எனப்பட்டது. அசோகவனத்தில் சிம்சுபா வ்ருக்ஷத்தில் நின்றும் கீழே இறங்கிப் பிராட்டியைக்கண்ட திருவடி "கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி சோகஜம் ?" = கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி சோகஜம் ?" [எதுக்கு உம்முடைய திருக்கண்களினின்று சோகக்கண்ணீர் பெருகுகின்றது ?] என்று கேட்டாப்போலே கேட்கவேண்டும்படி கண்ணீர் பெருகாநின்றதாயிற்று.

எங்கும் நாடி நாடி = திக்குக்கள்தோறும் கண்களைச் சுழலவிட்டுப் பார்த்தபடியே யிருக்கிறாளாயிற்று. எம்பெருமான் ஆபத்திலே வந்து உதவத் தவறமாட்டானாகையாலே திடீரென்று ஓடிவந்தே தீருவன் என்று நிச்சயித்துச் சுற்றிலும் பார்த்தபடியே யிருக்கிறாள். "எங்கும் நாடி நாடி" என்கிறவிதனை பட்டர் உபந்யஸிக்கும்போது 'பராங்குசநாயகி தன் சேலையையும் உதறியுதறிப் பார்க்கிறாள் காணும்' என்று அருளிச்செய்வாராம். கீழே ஆழ்வார் தாமே "கடல் மலிமாயப்பெருமான் கண்ணனென்னொக்கலையானே" என்றருளிச்செய்திருக்கையாலே அதனை யடியொற்றிய ரஸோக்தியாமிது.

நரசிங்காவென்று வாடிவாடும் = ப்ரஹ்லாதாழ்வானுக்குத் தான் உதவவேணும், மற்றையோர்க்கு உதவலாகாது என்று ஏதேனும் ஸங்கல்பமுண்டோவென்று சொல்லி வாடுகின்றாள். அவன் எனக்கு வந்து உதவவேணுமென்று திருவுள்ளங்கொண்டால் ஒரு தூணிலோ துரும்பிலோ தோன்றியும் உதவலாமே; அவனுக்கு அசக்யமான தொன்றில்லையே ! என்று சொல்லி வாடுகின்றாளென்னவுமாம்.

வாடிவாடும் என்கையாலே, முடியும்படியான நிலைமை நேர்ந்தவளவிலும் நப்பாசையினால் உயிரை ஒருவாறு தரித்துவைத்துக்கொண்டிருக்கின்றமை தோற்றுவிக்கப்பட்டது. "ஏஷ ஏவ ஆநந்தயாதி" என்று வேதமோதினபடியே, எம்பெருமானருள் இவளுக்குக் கிடைத்தே தீருமென்பது திருமுகமண்டலத்தில் நிழலிட்டுத் தோற்றுகிற தென்கைக்காக இவ்வாணுதல் எனப்பட்டது.

வாணுதல் — அன்மொழித்தொகை. .... (க)

வாணுதலிம்மடவரல் * உம்மைக்
காணுமாசையுள்நைகின்றாள் * விறல்
வாணனாயிரம் தோள்துணித்தீர் ! * உம்மைக்
காண நீரிரக்கமிலீரே. (உ)

வாள் நுதல்	ஒளிமிக்க நெற்றியை யுடைய	விறல்	வலிமையையுடைய
இ மடவரல்	(பராங்குசநாயகி யென்னும்) இம்மடந்தை	வாணன்	பாணாஸுரனுடைய
உம்மை	(அழகிற்சிறந்த) உம்மை	ஆயிரம் தோள்	ஆயிரம் புஜங்களையும்
காணும் ஆசையுள்	காணவேணுமென்ற ஆசையிலகப்பட்டு	துணித்தீர்	அறுத்தொழித்தவரே !
நைகின்றாள்	சிதிலையாகின்றாள் ;	உம்மை காண	(இவள்) உம்மைக்காணுமாறு
		நீர் இரக்கம் இலீர்	நீர் தயை செய்யாமலிருக்கின்றீர்.

* * * — [வாணுதல்.] வாணனுடைய ஆயிரந்தோள்களையுந் துணித்து உஷைக்கும் அநிருத்தாழ்வானுக்கும் அத்தனைகாரியஞ் செய்தருளின நீர் இப்பெண்பிள்ளை திறத்தில் இரங்காதிருப்பது என்னோவென்கிறாள்.

மீண்டும் வாணுதல் என்றது — இவளுடைய நெற்றியழகைக் கண்டால் ஒருநொடிப்பொழுதாகிலும் இவளைவிட்டுப் பிரிந்திருக்கலாம்படி யிருக்கிறதோ? பெற்ற தாயான எனக்கே ஆகர்ஷகமாயிருக்கின்ற இவ்வவயவ சோபை உனக்கு அநாதரவிஷயமானது எங்ஙனேயோ என்று சொல்லுகிறபடி.

மடவரல் = மடம் என்னும் குணத்தின் வருகையையுடையவள் என்றபடி. நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள் பெண்டிர்க்கு இன்றியமையாதவை. இவற்றுள் ஒன்றைச் சொல்லுவது மற்றவற்றிற்கும் உபலக்ஷணமாகும். மடம் என்னுங் குணத்தைப் பலபடியாக விவரிப்பதுண்டு. இங்கு, ‘பிரிந்து கலக்கப்பொறாத ஸௌகுமார்யமே மடம்’ என்று ஆசார்யர்களின் திருவுள்ளம்.

உம்மை என்றது மிக்க கருத்தோடு கூடியது. இவளை நீர் மறந்தாலும் உம்மை நீர் மறக்கலாமோ? உம்முடைய அழகு உமக்குத் தெரியாதோ? நம்மைப் பிரிந்தவர்கள் பிழையார்கள் என்று நீர் அறியமாட்டீரோ? என்கை.

உம்மைக்காணுமாசையுள் நைகின்றாள் = நீர் இவளைக்காண ஆசைப்பட வேண்டியது ப்ராப்தமாயிருக்க விபரீதமானபடி என்னே ! உடைமையைக்காண உடையவனன்றோ ஆசைப்படவேண்டும்; உடையவனைக்காண உடைமை ஆசைப்படும்படியாயிற்றே !. “வாடிவாடும்” என்று சொன்ன நிலைபோய் “நைகின்றாள்” என்னவேண்டும்படியான நிலைமை வந்துவிட்டதுகாண். 1. “உம்மைக்காணுமாசையென்னுங்கடலில்வீழ்ந்து இங்கு அயர்த்தோம்” என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை யுட்கொண்டு நோக்கினால் ஆசை யென்பது ஒரு கடலாகச் சொல்லத்தக்கதாதலால், கடலிலே வீழ்ந்து துடியாநின்றாள் என்பதாகக் கொள்ளலாம்.

1. பெரிய திருமொழி. 4—9—8.

அவனுடைய ஆசை பெரிதாயிருக்கலாம்; இருந்தாலென்ன? ப்ரதிபந்தகங்கள் கனத்திருக்கையாலே அவை நீங்கினாலன்றோ நாம் காட்சி தரலாம்—என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றி யிருப்பதாகக்கொண்டு, வாணனுடைய தோள்வனத்தைத் துணித்த வுமக்கு இவனுடைய ப்ராப்தி ப்ரதிபந்தகங்களைத் தொலைப்பது ஒரு அருமையான காரியமோ என்பாள் விறல்வாணனாயிரந்தோள் துணித்தீர் என்கிறாள்.

வாணன் தோள்துணித்த வரலாறு:—

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்தவனான பாணாஸுரன் ஒரு காலத்தில் சிவபிரானது நடனத்தைக்கண்டு அதற்குத் தனது இரண்டுகைகளால் மத்தளந்தட்ட, சிவபெருமான் அருள்கூர்ந்து அவனுக்கு ஆயிரங் கைகளையும் நெருப்பு மதிளையும் அளவிறந்த வலிமையையும் மிக்க செல்வத்தையும் தான் தனது பரிவாரங்களோடு அவன் மாளிகை வாசலிற் காவல்செய்திருத்தல் முதலிய வரங்களையுந் தந்தருளினன்; அந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒரு நாள் ஒரு புருஷனோடு தான் கூடியதாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிக்க ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, அவனைப் பெறுதற்கு உபாயம் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தஃபுரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்த பாணாஸுரன் தன் சேனையுடன் அநிருத்தனை எதிர்த்து மாயையினாற் பொருது நாகாஸ்த்ரத்தினாற் கட்டிப் போட்டிருக்க த்வாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரத மாமுனிவனால் இவ்வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான், பெரிய திருவடியை நினைத்தருளி, உடனே வந்துநின்ற அக்கருடாழ்வானது தோளின்மேல் ஏறிக்கொண்டு பலராமன் முதலானோரோடுகூட பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் ஸமீபத்திற் காவல் செய்து கொண்டிருந்த சிவபிரானது ப்ரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ் செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத்துறத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுசாரகையாற் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துக்கொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் த்வம்ஸம்பண்ணி, பாணாஸுரனோடு போர்செய்யத்தொடங்க அவனுக்கு பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலிய பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிரயோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற்

கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்துபோம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர், அநேகமாயிரஞ் சூரியர்க்குச் சமனான ஸுதர்சநாழ்வானை யெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையுஞ் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத் தொழுது அநிருத்தாழ்வானுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, கண்ணபிரான் திருவுள்ளமுகந்து த்வாரகைக்கு மீண்டெழுந்தருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது. ... ... (௨)

இரக்கமனத்தோடு எரியணை *
அரக்குமெழுகுமொக்குமிவள் *
இரக்கமெழீர் இதற்கென்செய்கேன்? *
அரக்கனிலங்கை செற்றீருககே. (௩)

இரக்கம் மனத்தோடு	நெகிழ்ச்சியையுடைய நெஞ்சோடு (கூடிய)	அரக்கன்	இராவணனுடைய
இவள்	இப்பெண்பிள்ளை	இலங்கை	லங்காபுரியை
எரி அணை	நெருப்போடு ஸம்பந்தப்பட்ட	செற்றீருக்கு	(ஒரு பிராட்டிக்காக) த்வம்ஸம் செய்தருளின உமக்கு
அரக்கும் மெழுகும் ஒக்கும்	(வன்மையான) அரக்கையும் மெழுகையும் ஒத்திருக்கின்றாள் ;	இதற்கு	இவள் திறத்திலுண்டான உபேக்ஷைக்கு
இரக்கம் எழீர்	(இவள் திறத்து) இரக்கம் உண்டாகப்பெறுகின்றிலீர் ;	என் செய்கேன்	என்ன பரிஹாரம் பண்ணுவேன்?

* * * — [இரக்கமனத்தோடு.] பிரானே! நீர் ஜநகராஜன் திருமகள் திறத்திலே செய்த செயல்களை வால்மீகிபோல்வார் ஸ்ரீராமாயணாதிகளாக எழுதிவைத்தமையாலன்றோ இப்பெண்பிள்ளை துடியாநின்றாள்; ஒரு பிராட்டிக்கு அத்தனை பாடுபட்டுக் காரியஞ்செய்தவர் நம்மை இப்படித் துடிக்கவிட்டிருக்கிறாரே, இது நீதியோ என்று கதறுகின்றாள் — என்கிறாள் திருத்தாய். இன்று இவளை இப்படிக் கைவிட நினைத்த நீர், அன்று, * உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்து அத்தனை செயல்கள் செய்தது எதுக்கு? என்கிறாள் என்னவுமாம்.

இரக்கமே வடிவெடுத்தாற்போலிருக்கின்ற நெஞ்சையுடையவிவள் நெருப்போடே சேர்ந்த அரக்கும் மெழுகும்போலே உருகாநின்றாள். இவளுடைய நிலையோ இது; நீரோ இரக்கமென்பது சிறிதுமில்லாமலிருக்கிறீர். உம்மைப் போலே இவளும் இரக்கமற்றவளாக இருக்கும்படி செய்துவிட்டால் இடையில் நான் துடிக்கவேண்டியதில்லை; இவளோ இரக்கமனத்தள்; நீரோ இரக்கமெழீர்; இதற்கு என்ன செய்வேன்? உம்முடைய இரக்கந்தவிர வேறொன்றால் போக்கக்

கூடியதாக இல்லையே இவளுடைய வருத்தம். வேறு எதைச்செய்வேன் நான்? 'நாம் யாருக்கும் யாதொரு காரியமும் செய்வதில்லை' என்று நீர் சொல்லுவதற்கும் இடமில்லாதபடி ஒரு பிராட்டிக்காக இலங்கையைப் பாழ்படுத்திவைத்தீரே! பக்ஷபாதச் செயல் செய்யாதே கொள்ளும் — என்கிறாள்: ... (௩)

இலங்கைசெற்றவனே ! என்னும் * பின்னும்
வலங்கொள்புள்ளுயர்த்தாய் ! என்னும் * உள்ளம்
மலங்க வெவ்வுயிர்க்கும் * கண்ணீர்மிகக்
கலங்கிக் கைதொழும்நின்றிவளே. (௪)

இவள்	இப்பராங்குசநாயகி,	உள்ளம் மலங்க	மனம் சுழலும்படி
இலங்கை செற்றவனே என்னும்	(என்னோடொத்த ஒருத்திக்காக) லங்காபுரியை யழித்தவனே ! என்கிறாள் ;	வெவ்வுயிர்க்கும்	உஷ்ணமாக மூச்சுவிடுகின்றாள்;
பின்னும்	அதற்குமேலும்	கண் நீர்	கண்ணீரானது
வலம் கொள் புள் உயர்த்தாய் என்னும்	வலிமைமிக்க கருடனைக் கொடியாகக் கொண்டவனே ! என்கிறாள்;	மிக	அதிகமாக
		கலங்கி	(அதனால்) அறிவுகலங்கப் பெற்று
		நின்று	ஸ்தம்பித்துநின்று
		கை தொழும்	அஞ்ஜலிபண்ணுகின்றாள்.

* * * — [இலங்கை.] மகளே! பதறாதே; எம்பெருமான் ப்ரணயிநிகளுக்குக் காரியம் செய்வது தவறமாட்டார்; ஜனகராஜன் திருமகளுக்காகக் காரியஞ் செய்தருளினரென்பது வாஸ்தவமே. அப்பிராட்டி எத்தனை மாதம் தனிச்சிறையிருந்து துவண்டாள் தெரியுமோ? பத்துமாதம் பொறுத்தன்றோ அவளுக்குக் காட்சிதந்தது; ப்ராப்திகாலம் வரவேண்டாவோ? அவளுக்குப்போலே உனக்கும் ஒருநாளிலே காட்சிதராத் தடையிராது; "ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:। மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்॥ = சரைஸ் து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:, மாம் நயேத் யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்." என்று அப்பிராட்டி ஆறியிருந்ததுபோலவே நீயும் ஆறியிருப்பதே தகுதி; அவன் இலங்கை செற்றவன் என்பதையே நீ சொல்லிக்கொண்டிரு — என்று நான் (என்மகளைத்) தேற்றினேன்; அவளும் அப்படியே "இலங்கை செற்றவனே!" என்றே சொல்லிக்கொண்டு ஒருவாறு தரித்திருந்தவள் மீண்டும் கதறத் தொடங்கிவிட்டாளென்கிறாள் திருத்தாய்.

இலங்கை செற்றவனே! என்னும் = என்னைப்போலே ஒரு பெண்பெண்டாட்டிக்கு உதவினவனல்லையோ நீ; அவளைப் பிரிந்து "நைவ தம்ஶாந் ந மஶகாந் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந்। ராகவோऽபநயேத் காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா॥ = நைவ தம்சாந் ந மசகாந் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந், ராகவோபநயேத் காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா." என்னும்படி யிருந்தவனல்லையோ நீ; "ஹா ஸீதா ஹா ஜனகராஜஸுதே = மதுர மதுராலாபா கிமாஹ மம பாமிநீ?" என்று ஒரு குரங்கை உட்காரவைத்துக்

கொண்டு வாய்வெருவினவனல்லையோ நீ என்று ஸ்ரீராமகுணங்களைப் பலபடியாக எடுத்துரையாநின்றாள்.

பின்னும் வலங்கொள் புள்ளுயர்த்தாயென்னும் = நினைத்தபோதே அடியாரிருந்த விடத்தே கொண்டுவந்து சேர்க்கவல்ல பெரிய திருவடியை ஊர்தியாகவுடையவனல்லையோ நீ என்னாநின்றாள். கொண்டுவருகைக்கு ஸாமக்ரியுண்டாயிருக்கச்செய்தேயும் வரக்காணாமையாலே நெஞ்சு கலங்கி நெடுமூச்செறியாநின்றாள்; கண்ணீரைத் தாரைதாரையாகப் பெருகவிடாநின்றாள்; கலங்கினளாய்த் தொழுவதுஞ் செய்யாநின்றாள். இவள்படியோ இது; உன்படியோ உபேக்ஷை; என்செய்வேனென்றாளாயிற்று.

கலங்கிக் கைதொழும் என்றவிடத்து, "தேறும் கலங்கியென்றும் தேறியும் தேறாதும் ஸ்வரூபக்குலையாது" என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் அதன் வியாக்கியானமும் நோக்கத்தக்கன. .... (௪)

இவளிராப்பகல் வாய்வெரீஇ * தன
குவளையொண்கண்ணநீர்கொண்டாள் * வண்டு
திவளும் தண்ணந்துழாய்கொடீர் * என
தவளவண்ணர் தகவுகளே. (௫)

இவள்	இப் பெண்பிள்ளை	திவளும்	படிகின்ற
இரா பகல்	இரவும் பகலும்	தண் அம் துழாய்	குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையை
வாய் வெரீஇ	வாய்பிதற்றி	கொடீர்	தருகின்றீரில்லை ;
தன	தன்னுடைய	தவளம் வண்ணர்	பரிசுத்தாத்மாவான தேவரீருடைய
குவளை ஒண் கண்	நெய்தல் மலர்போன்றழகிய கண்களில்	தகவுகள்	கிருபை முதலிய குணங்கள்
நீர் கொண்டாள்	நீரையுடையளானாள் ;	என	என்னே !.
வண்டு	வண்டுகள்		

* * * — [இவளிராப்பகல்.] பெண்பிள்ளையின் தயநீயதசையைச் சொல்லி, இந்த நிலைமையிலும் நீர் இவள் திறத்து இரங்குகின்றிலீரே! உம்முடைய தயை எங்கே போயிற்று? என்கிறாள், இரவும் பகலும் இவள்விஷயமாக நீர் வாய்வெருவவேண்டியது போய் உம் விஷயமாக இவள் வாய்வெருவ வேண்டும்படியாயிற்றே! "ஸுநிஷ்டப்தாம் ராஜ்ஞ: ஸ்வப்ரவீவ நரோத்தம: | ஸீதேதியேஷாம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே - அநித்ரஸ் ஸததம் ராமஸ் ஸுப்தோபி ச நரோத்தம:, ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே." என்று சொன்ன திருவடியின் வார்த்தையைக்கொண்டு அறியலாமே நீர் வாய்வெருவினபடி. அப்படிப்பட்ட வாய்வெருவுதல்கள் இப்போது இவள் பணியாயிற்றே!. அவ்வளவேயோ? ஆனந்தக் கண்ணநீர்பெருக வேண்டிய கண்கள் சோகக் கண்ணீர் பெருகநின்றனவே!. இவள் ஏதேனும் அதிகமாக ஆசைப்பட்டதுண்டோ? விரஹஜ்வரத்தாலே வாடின இவள் மார்வில் உள்ள மாலையைவாங்கி, உம்முடைய மார்விலுள்ள செவ்வி மாறாத மாலைக்

கொடுத்தால் போதுமே; வண்டுபண்ணின தவமும் இவள் பண்ணவில்லைபோலும்; ஒரு வண்டாகப் பிறக்கப்பெற்றிலேனே யென்று அவளாநின்றாள்காணும்; இவள் அலமாப்புத்தீர இத்தனை திருத்துழாய் ப்ரஸாதமும் கொடுக்கின்றீரில்லையே.

என தவளவண்ணர்தகவுகளே! = என்ன என்பது என என்று தொகுத்தலாகவுள்ளது. 'தவல' என்னும் வடசொல் தவளமென்றுளது. சுத்த ஸ்வபாவரான உம்முடைய தயவு என்னே! என்கிறாள். உம்முடைய ஸ்வபாவம் நிஷ்கல்மஷமன்றோ; இப்படி இரக்கமற்றவராக நீர் இருக்கிற வழக்கமில்லையே; உம்முடைய இரக்கம் எங்கே போயிற்று? என்கிறாள்.

தவளவண்ணர் என்றதைப் பரிஹாஸோக்தியாகவைத்து 'உம்மைப்போலே நாலு சிஷ்டர்கள் இருந்துவிட்டால் பெண்கள் நன்றாகக் குடிவாழ்வர்கள்!' என்று பட்டர் பணிக்கும்படி.

கோதர்—எதிர்மறை முன்னிலைப்பன்மை வினைமுற்று. (௫

தகவுடையவனே! என்னும் * பின்னும்
மிகவிரும்பும்பிரானென்னும் * எனது
அகவுயிர்க்குஅமுதே! என்னும் * உள்ளம்
உகவுருகிநின்றுள்ளுளே. (௬)

உள்ளம்	தன் நெஞ்சு	மிக விரும்பும்	மிகவும் குதூஹலங்கொள்ளாநின்றாள்;
உக	அழியுமாறு		
உருகி	நீர்ப்பண்டமாகி	பிரான் என்னும்	உபகாரகனே! என்று சொல்லுகின்றாள்;
உள்ளுளே நின்று	தன்னில் தான்நின்று	எனது அகம் உயிர்க்கு அமுதே என்னும்	'எனது உள்ளுயிர்க்கு அமுதமே!' என்கின்றாள்.
தகவு உடையவனே என்னும்	தயவு குறைவற்றவனே என்கிறாள்;		
பின்னும்	மேலும்		

* * * — [தகவுடையவனே,] கீழ்ப்பாட்டில் "என தவளவண்ணர் தகவுகளே" என்று எம்பெருமானுடைய தயவில் குறையிருப்பதாகத் தாய் சொன்னவார்த்தையைக் கேட்ட மகள் அந்த வார்த்தையைப் பொறாமல் 'என் கொழுநனுக்குத் தயவில்லையென்று சொல்லலாமோ? கடலில் நீர்வற்றிப்போயிற்று என்பாருமுண்டோ? நம்முடைய பாவமென்று நம்மை நொந்துகொள்ளலாமே யல்லது அவருக்குக் கருணையில்லையென்று வாய்திறக்கலாமோ?' என்று சொன்னாளாக அதை அநுவதிக்கிறாள் திருத்தாய்

தகவு உடையவனேயென்னும் = ஏ என்பதை விளியாகவுங்கொள்ளலாம், [ப்ரிநிலையாகக் கொண்டு] ஸாவதாரணமாகவும் கொள்ளலாம். அசோகவனத்திற் பிராட்டி "க்யாதஸ் ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஸ்ச ஸாநுக்ரோசஸ்ச ராகவ: | ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோச: = க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞச் ச ஸாநுக்ரோசச் ச ராகவ:, ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோச:" [தயவில்லாதவ

ஞன்] என்று சொல்லி உடனே ‘‘ஶங்கே ஸுமஹத்ஸம்க்ஷயாத் = சங்கே மத்பாக்ய ஸம்க்ஷயாத்’’ என்றாள். பெருமாளுக்கு ஒருநாளும் தயவு இல்லாமற் போகாது; என்னுடைய தௌர்ப்பாக்யத்தினால் இங்ஙனம் சங்கிக்கவேண்டியதாகிறதத்தனை என்றாள். ‘‘மமைவ து³ஷ்க்ருதம் கிஞ்சித் மஹத³ஸ்தி ந ஸம்ஶய:= மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:’’ என்றும் சொன்னாள். இந்த வார்த்தையில் சிஞ்சித் என்றும் மஹத் என்றும் உள்ளது. ‘கிஞ்சித்’ என்றால் சிறிது என்று பொருள்; ‘மஹத்’ என்றால் பெரிது என்று பொருள். பிராட்டி தான் அசோகவனத்திற் கிடந்து துடிப்பதற்கு ஹேது சிறிதாயும் பெரிதாயுமுள்ள இரண்டு துஷ்க்ருதங்கள் என்று அறுதியிட்டாள். எது சிறிது? எது பெரிது? என்று ஆராயவேணும். காட்டுக்குப் புறப்படும்போது கூட வரவேண்டாவென்று மறுத்த பெருமாள் விஷயத்திலே ‘‘ராமஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்’’ என்று பதற்றமாகப் பேசினது சிறிதான துஷ்க்ருதம்; பெருமாள் மாயமான் பின்னே எழுந்தருளினபோது மாரீசனது கள்ளக்கூக்குரல் கேட்டு இளையபெருமாளைப் போகச்சொன்னபோது அவர் புறப்படாதேயிருக்க அவர் விஷயமாகக் கடுஞ்சொற்கள் சொன்னது பெரிதான துஷ்க்ருதம்; பகவதபசாரத்திற் காட்டிலும் பாகவதாபசாரம் மிகக்கொடிதன்றோ. ஆக, பகவதபசார பாகவதாபசாரங்களின் பலனாக நான் கஷ்டங்களை அநுபவிக்கிறேனே யல்லது பெருமாளுடைய கருணையிலே ஒரு குறை கூறமுடியுமோ என்று பிராட்டி சொன்னாப்போலவே இப் பராங்குசநாயகியும் அநுஸந்தித்தமை முதலடியிலே நுட்பமாக விளங்கும்.

பின்னும் மிகவிரும்பும் = தன்னுடைய பாபமே வலிதென்று நினைக்கச் செய்தேயும் ‘ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந’’ என்று சொல்லுகிற அவன்படியை நினைத்து, நம்முடைய டாவங்களை ஒரு பொருளாக மதியாதே நிர்ஹேதுகமாக ஓடிவந்து விஷயீகரிக்குமவனல்லனோ என்று கொண்டு ஆசையைப் பெருக்காநின்றாளென்றபடி. அவன் தயாளுதான் என்று அறுதியிட்டுவிட்டால் விருப்பம் வளரச்சொல்லவேண்டாவே.

பிரான் என்னும் = அடியார்க்கு உபகாரஞ்செய்வதையே தொழிலாகவுடையவனல்லனோ வென்கிறாள். ‘மிகவிரும்பும் பிரான்’ என்று ஒரே வாக்கியமாக்கி, விரும்புமென்பதைப் பிரானுக்கு அடைமொழியாக்கி உரைப்பர் வாதிகேஸரிஸ்வாமி.

என்து அகவுயிர்க்கு அமுதே! என்னும் = என்னுடைய வுயிரை அழியாமல் நோக்குகின்ற அம்ருதமன்றோ அவன் என்று சொல்லுகின்றாள்.

உள்ளம் உக உருகிநின்று என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த திருத்தாய் அதைச் சொல்லமாட்டாதே உள்ளுளே என்று முடிக்கிறாள்; வாசாமகோசரம் என்றபடி. ‘உள்ளம் உள்ளுளே மிகவுருகிநின்று’ என்று முன்னுற அந்வயித்து முதல் மூன்றடிகளையும் பின்னே கூட்டி யுரைப்பதுமுண்டு. இப்பாட்டிற்

சொன்ன வார்த்தைகளெல்லாம் நெஞ்சுருகிச் சொன்ன வார்த்தைகளென்ற வாறு. ... . (அ)

உள்ளுளாவி உலர்ந்துலர்ந்து * என
வள்ளலே ! கண்ணனே ! என்னும் * பின்னும்
வெள்ளநீர்க்கிடந்தாயென்னும் * என
கள்வி தான்பட்டவஞ்சனையே. (எ)

என கள்வி	என்னிடத்திலுங்கூட உண்மையை மறைப்பவளான இப்பெண்பிள்ளை	என வள்ளலே	'என்னுடைய பெருங் கொடையாளனே !
தான் பட்ட	தான் அகப்படும்படி அவன் செய்த	கண்ணனே	க்ருஷ்ணனே!'
வஞ்சனை	வஞ்சகம் (பலித்தபடி என்னென்னில்.)	என்னும்	என்கின்றாள்;
உள்ளுள் ஆவி	உள்ளுயிரானது	பின்னும்	அதற்குமேலே
உலர்ந்து உலர்ந்து	மிகவுமுலர்ந்து	வெள்ளம் நீர்	(திருப்பாற்) கடலிலே
		கிடந்தாய்	கண்வளர்ந்தருளினவனே!
		என்னும்	என்கின்றாள்.

* * * — [உள்ளுளாவி.] தன் மகளுடைய வருத்தங்களையும், அவன் தன் குணங்களாலே இவளை வஞ்சித்தபடியையும் தாய் சொல்லுகிறாள். [உள்ளுளாவி உலர்ந்துலர்ந்து] பகவத்கீதையிலே ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லும்போது "[illegible] = அச்சேத்யோயமதாஹ்யோயம் அக்லேத்ய: அசோஷ்ய ஏவ ச." என்று சொல்லப்பட்டுளது. அசோஷ்ய: — உலர்த்தமுடியாதது — என்று சொன்னதும் பழுதாயிற்று; ஆந்தரமான மநஸ்ஸுக்கு தாரகமான ஆத்மா சருகாயிற்று. அந்த நிலைமையிலும் விடாயர் கற்பூரநிகரம் வாயிலிடுமாபோலே எனவள்ளலே! கண்ணனே! என்கிறாள் — அவனுடைய ஔதார்யத்தையும் ஸௌலப்யத்தையுஞ் சொல்லிக் கத்துகிறாளென்க.

பின்னும் வெள்ளநீர்க் கிடந்தாய் என்னும் — ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் "[illegible] = அந்தகாரே அதிதீவ்ரே ச நாஸிம்ஹமநுஸ்மரேத், தாபத்ரயஸந்தாபே ஸாபார்த்தோ ஜலசாயிநம்" என்று சொல்லப்பட்டுளது. திணுங்கின இருளிலே நாரஸிம்ஹமூர்த்தியை நினைக்கவேணுமென்றும், தாபம் மிக்கிருக்குங்காலத்து க்ஷீரார்ணவசாயியான எம்பெருமானை நினைக்கவேணுமென்றும் சொல்லியிருக்கையாலே வெள்ளநீர்க்கிடந்த பெருமானைப் பேசாநின்றாள்.

என கள்வி தான்பட்ட வஞ்சனையே — தன்னுடைய நெஞ்சிலுள்ளது பிறரறியாதபடி மறைத்துக்கொண்டிருக்கு மியல்வுடைய இவள் இப்போது படும்பாடு என்னே! என்கிறாள். தன்னுடைய மருமங்களைப் பிறரறியாமல் மறைத்துக்கொள்பவளென்ற பொருளில் இங்குக் கள்வி எனப்பட்டது.

வஞ்சனை — பிராட்டி திருவடியிடத்தில் "ஊர்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே = ஊர்த்வம் மாஸாந்ந ஜீவிஷ்யே" [ஒரு மாதத்திற்குமேல் நான் பிழைத்திருக்க மாட்டேன்] என்று சொல்லியனுப்பினாள்; அதைக்கேட்ட பெருமாள் "நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம் = ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணாம்" [குவளையங் கண்ணியான பிராட்டியைவிட்டு ஒரு நொடிப்பொழுதும் தரித்திருக்க என்னால் முடியவில்லையே] என்றார்; இங்கே அஸிதேக்ஷணாம் என்று அடைமொழி கொடுத்துச் சொன்னமையாலே பிராட்டியின் கண்ணழகிலே பெருமாள் தோற்றவர் என்பது பெறப்படும். ஆகவே அவர் தோற்கவேண்டியது ப்ராப்தமாயிருக்க இப்போது இவள் தோற்றிருப்பது எதிர் வஞ்சனையாக நடந்தகாரியமே யன்றி ருஜுவாக நடந்தபடியன்று என்கிறாள். இங்கே நம்பிள்ளை யீட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்:— § "அளவுடைக்குப் பெரும்படை தோற்பது வஞ்சகத்தாலேயிறே; பகலை இரவாக்கியும் ஆயுதமெடேனென்று எடுத்தும் செய்த செயல்போலே இவளை வஞ்சித்தித்தனை." என்பதாம். ... . (எ)

வஞ்சனே! என்னும் கைதொழும் * தன
நெஞ்சம்வேவ நெடிதுயிர்க்கும் * விறல்
கஞ்சனை வஞ்சனைசெய்தீர் * உம்மைத்
தஞ்சமென்று இவள்பட்டனவே. (அ)

வஞ்சனே என்னும்	எனக்குத் தெரியாமலே என்னை அடிமைப்படுத்திக்கொண்டவனே! என்கிறாள்;	விறல் கஞ்சனை	மிடுக்கனான கம்ஸனை
கை தொழும்	(அந்த நன்றிக்குத் தோற்றுக்) கைகூப்புகின்றாள்;	வஞ்சனை செய்தீர்	கொன்றொழித்த பெருமானே!
தன நெஞ்சம் வேவ	தனது நெஞ்சு வேகும்படியாக	உம்மை	உம்மை
நெடிது உயிர்க்கும்	பெருமூச்செறிகின்றாள்;	தஞ்சம் என்று	புகலாகப்பற்றி
		இவள் பட்டனவே	இவள் பட்டபாடு என்னே!.

* * * — [வஞ்சனேயென்னும்.] உம்மை ஆச்ரயமாகப் பற்றியிருக்குமிவள் பிரதிகூலர் பட்டபாட்டைப் படுவது தகுதியோ? என்கிறாள். கீழ் "என கள்விதான் பட்ட வஞ்சனையே" என்று தாய்சொன்ன வார்த்தையைக் கேட்டுப் பொறாத மகள் அவனுடைய வஞ்சனையை நற்றமாகக் கொள்ளவேண்டியிருக்கக் குற்றமாகக் கொள்ளலாமோ என்ற கருத்தினால் தன் வாயாலே வஞ்சனே! என்றுசொல்லித் தொழுகின்றாளாம். என்னை மடிமாங்காயிட்டுப் பிடித்து வசப்படுத்திக்கொண்ட பிரானுயிற்றே என்று உபகாரஸ்ம்ருதிபண்ணி, அந்த உபகாரத்திற்குத் தோற்று அஞ்ஜலிபண்ணுகின்றாளென்க. முன்னமே உலர்ந்திருக்கிற

§ அல்பமான சேனையும் ஆயுதமுமுடையவனிடத்தில் பெருப்பெருத்த சேனைகளும் ஆயுதங்களுமுடையவன் தோற்றானென்றால் அந்தத்தோல்வி வஞ்சகவழியினாலாயிருக்குமென்க.

நெஞ்சம் விரஹாக்நியாலே வேம்படி நெடுமூச்செறியாநின்றாள். பிடிக்கையுடைய கம்ஸன் நினைத்த நினைவு அவனோடே போம்படிபண்ணி அவனை முடித்தீர்; உம்மைத் தோற்பிக்க நினைத்தவர்களை நீர் தோற்பிக்கின்றவராயிருந்தீர்; ப்ரதிகூலர் களிடத்திலே வெற்றிபெறுவதும் அநுகூலர்களிடத்திலே தோல்விபெறுவதும் உமக்கு ப்ராப்தமாயிருக்க இரண்டிடத்திலும் வெற்றி உம்முடையதாகவே யிருக்கத்தகுமோ? உம்மையே தஞ்சமாகப் பற்றினவிவள் இப்பாடு படலாமோ? என்கிறாள்.

இவள்பட்டனவே = இவள் படும்பாடுகளைச் சொல்லப்புகுந்தால் ஒரு மஹாபாரதத்திற்காகும் போதும். ஸம்ஸாரிகளைப்போலே உண்டியே உடையே உகந்தோடித் திரியும்படியாக வைத்தீரல்லீர்; நித்யமுக்தர்களைப்போலே நித்யா நுபவம்பண்ண வைத்திருமல்லீர்; எங்களைப்போலே "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் = தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்று ஸ்வரூபாநுஸந்தாநம்பண்ணி ஆறியிருக்கவைத்திருமல்லீர்; கம்ஸனைப்போலே முடியச்செய்திருமல்லீர்; என் வழிவாராதே உம்மையே தஞ்சமாகப்பற்றின இவளை எத்தனைபடுத்தவேணும்.!

பட்டபோது எழுபோதறியாள் * விரை
மட்டலர் தண்டுழாயென்னும் * சுடர்
வட்டவாய் நுதிநேமியீர்! * நும
திட்டமென்கொல் இவ்வேழைக்கே. (௯)

சுடர்	ஒளிபொருந்திய	தண் துழாய் என்னும்	குளிர்ந்த திருத்துழாய் என்று வாய்வெருவுகின்றாள்;
வட்டம் வாய்	வட்டமான வாயையும்	இ ஏழைக்கு	இப்படிப்பட்ட ஏழைத் திறத்திலே
நுதி	கூர்மையையுமுடைய	நுமது இட்டம் என் கொல்	உம்முடைய இஷ்டம் என்ன? [நீர் என்ன செய்ய நினைத்திருக்கிறீர்?]
நேமியீர்	திருவாழியையுடையவரே! (இப்பெண்பிள்ளை)		
பட்டபோது	ஸூர்யாஸ்தமன காலத்தையும்		
எழு போது	ஸூர்யோதய காலத்தையும்		
அறியாள்	அறிகின்றாளில்லை;		
விரை மட்டு அலர்	பரிமளமும் தேனும் பாயின		

* * * — [பட்டபோது.] உம்மைப் பிரிந்ததுமுதல் இடைவிடாது நோவுபடுகின்ற இவ்வேழையின் விஷயத்திலே நீர் செய்ய நினைத்திருப்பது என்ன? என்று எம்பெருமானைக் கேட்கிறாள்.

பட்டபோது எழுபோது அறியாள் = ஸூர்யன் அஸ்தமிப்பது உதிப்பது யாதொன்றுமறியாள். "அந்த்யுதித ஆதித்யே அஸ்தமிதே ச வேளா = அந்தர்த்யுதித ஆதித்யே அஸ்தமிதே ச வேளா" என்று சொல்லுகிறபடியே ஸம்ஸாரிகள் ஸூர்யோதயகாலத்தையும் ஸூர்யாஸ்தமயகாலத்தையும் தெரிந்து கொண்டு களிக்கின்றார்கள்; உதயமானவாறே யதேஷ்டமாகத் திரிந்து வேண்

டிய பொருள்களை ஆர்ஜிக்கலாமென்று களிக்கிறார்கள்; அல்தமித்தவாறே ஆர்ஜித்த பொருள்களைக்கொண்டு யதேஷ்டமாக விஷயபோகங்கள் செய்யலாமென்று களிக்கிறார்கள்; இப்பெண்பிள்ளையோவென்னில் உதயாஸ்தமயங்களில் வ்யுத்பத்தியே யில்லாதவளா யிருக்கின்றாள். சைதந்யமற்றவளோவென்னில், அல்லள்; 'விரைமட்டலர் தண்டுழாய்' என்று ஓவாதே உரையாநின்றாள்; பரிமளமும் தேனும் நிறைந்த திருத்துழாய் விஷயமான வார்த்தையாகவே யிருக்கின்றாள். என்று திருத்தாயார் சொல்லக்கேட்ட எம்பெருமான் 'அவள்படி அதுவாகில் என்னை என்செய்யச் சொல்லுகிறாய்?' என்று உபேக்ஷித்தாற்றவிருக்க, [சுடர்வட்டவாய் இத்யாதி.] சுடரையும் வட்டமான வாயையும் கூர்மையையுமுடைய திருவாழியை நீர் ஏந்தியிருப்பது எதற்காக? 1. "எப்போதும் கைகழலாநேமியான் நம்மேல் வினைகடிவான்" என்றன்றோ அடியார்கள் அநுஸந்தித்திருப்பது. 2 "வாதாஹூணதாஸ்கஷாயாம் விநுஷ்டவைவநைவ | வதாவதுயாயாஸீம் விஹுங்கம நஃ ஸ்ரீரங்கநாயகஃ = பாதுப்ராணதாக்ஷாவாம் விளம்பமஸஹந்நிவ, ஸதா பஞ்சாயுதீம் பிப்ரத் ஸ நஃ ஸ்ரீரங்கநாயகஃ." என்றும் பேசிக்கொண்டிருப்பர்களே. அத்திருவாயுதத்தைக்கொண்டு அநுகூலரை வாழ்விக்கவும்வல்லீர், பிரதிகூலரை அழியச்செய்யவும்வல்லீர்; இவள் திறத்து நீர் செய்யநினைத்திருப்பது ஏதுவோ வென்கிறாள்.

இஷ்டம் என்னும் வடசொல் இட்டமென்று திரிந்து கிடக்கிறது. மதிட்டமென்கோல் என்றவிடத்து நட்டு ஸ்ரீஸூக்தி:— "ராவணனை நிரஸிப்பாநினைப் போலே முடிக்க நினைக்கிறீரோ, சிந்த்யவசிஸனைப்போலே கையுந் திருவாழியுமான அழகை அநுபவிப்பிக்கிறீரோ, தன்னையும் மறந்து உம்மையும் மறந்து ஸம்ஸாரிகளைப்போலே உண்டுடுத்துத் திரியவைக்கிறீரோ, இவள் பேற்றில் நீர் நினைத்திருக்கிறதென்?" என்பதாம்.

ஏழை என்னுஞ்சொல் அறிவில்லாமையைப்பற்றி வந்தது இங்கு. இச்சொல்லுக்கு இப்பொருள் எங்ஙனே கிடைக்குமென்னில், "தன் ஞானமின்மை வறுமை அஃறுடைமை, பன்னப்படுவந்த பெருஞ்செல்வம்" என்பவாதலால் கிடைக்குமென்க. ஸ்வஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞானத்தாலே ஆயிருக்கமாட்டாதவள் என்று தாத்பரியம். ... ... (க)

> ஏழைபேதை இராப்பகல் * தன
> கேழில் ஒண்கண்ணநீர்கொண்டாள் * கிளர்
> வாழ்வைவேவ இலங்கைசெற்றீர் * இவள்
> மாழைநோக்கு ஒன்றும்வாட்டேன்மினே. (௨)

கிளர்	விஞ்சின	ஏழை பேதை	ஏழையும் பேதையுமான இவள்
வாழ்வை	(இராவணனது) செல்வம்	இரா பகல்	இரவும் பகலும்
வேவ	நீறாகும்படி	தன	தன்னுடைய
இலங்கை	லங்காபுரியை		
செற்றீர்	அழித்தவரே!		

1. பெரிய திருவந்தாதி. 87. 2. ஸ்ரீரங்கராஜஸ்தவம், 1—11.

சேழ் இல்	ஒப்பற்ற	மாழை நோக்கு ஒன்றும்	இவநோக்கு ஒன்றையு மாவது
ஒண் கண்ண	அழகிய கண்களில்	வாட்டேன்மின்	வாடச்செய்யாமல் தளிர்ப்பிக்கவேணும்.
நீர் கொண்டாள்	நீரைக்கொண்டாள் ;		
இவள்	இவளுடைய		

* * * — [ஏழை பேதை.] இப்பெண்பிள்ளை திறத்திலே பெரும்பாலும் எல்லாம் ஒடுங்கிப்போயிற்று; இவளுடைய நோக்கு ஒன்றுதான் சேஷித்துக்கிடக்கிறது; அஃதொன்றுமாவது குலையாதபடி நீர் நோக்கிக்கொள்ளவேணுமென்று பிரார்த்திக்கின்றாள். ஏழை — ஸுலபமான வஸ்துக்களிற்போலே துர்லபமான வஸ்துக்களிலும் ஆசைவைக்குமவள் என்றபடி. பேதை — 'இது நமக்கு துர்லபம்' என்றறிந்தாலும் ஆசையைவிடமாட்டாத இளம்பருவமுடையவளென்கை. ஆக இப்படிப்பட்ட இவள் இரவும் பகலும் கண்ணுங் கண்ணீருமாக இருக்கின்றாள். [தாமரையிலே முத்துப்பட்டாற்போலே இக் கண்ணுங் கண்ணீருமாயிருக்கிற இருப்பைக் காட்டுலெறித்த நிலாவாக்காமல் நீர் ஓடிவந்து காணவேண்டாவோ? "ஸுஹ்ருதயீ ததோ த்ராஷ்டும் வநௌகஸ: ஸமாகதா: | ஸஹா வாநராணாம் விசேஷா ஊஷ்டு வஹ்ஸ்வபுஷ்ஹவி: = ஆஹ்லாத சீத நேத்ராம்பு: புலகீக்ருத காத்ரவாந், ஸதா பாகுணவிஷ்ட: த்ரஷ்டவ்யஸ் ஸர்வதேஹிபி:" என்றபடி கண்கொண்டு காணவேண்டிய இருப்பன்றோ இது. இந்த நிலைமை உண்டாவதற்கன்றோ நீர் க்ருஷி பண்ணிற்று; பண்ணின க்ருஷி பலித்தவளவிலே வந்து அநுபவியாதே உபேக்ஷையாயிருக்கலாமோ? என்பது உள்ளுறை.]

அவனிடம் நாம் வந்து கலப்பதற்கு ப்ரதிபந்தகங்கள் எனக்கவுண்டே என்கிறீரேல், இராவணனிலும் வலியதோ இவளுடைய விரோதிவர்க்கம்? அவனுடைய ஐச்வர்யமெல்லாம் நீறாகும்படி இலங்கையைப் பாழாக்கினீர்; ஒன்றை அழிக்க நினைத்தால் கிழங்குகூட மிருந்திராதபடி அழிக்குமவராயிருக்கின்றீர்; அப்படியே இவளையும் அழிக்க நினைத்துவிட்டீரோ? எவ்வளவு அழித்தாலும் இவளுடைய கண்ணழகை மாத்திரமாவது குலையாமே நோக்கியருளவேணுமென்கிறாள். உயிர்போகாதபடி நோக்கிக்கொள்ளவேணுமென்கை.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி:— "இவள்தானே முடிந்து போகிறாள், நாங்கள் தானே யிழக்கிறோம், ஜீவிக்கவிருக்கிற நீர் வேணுமாகில் உம்முடைய ஜீவனத்தை நோக்கிக்கொள்ளப் பாரும்" என்பதாம். — 1. "வண்டார்பூமாமலர்மங்கை மணநோக்க முண்டானே" என்று பிராட்டியின் நோக்கமே எம்பெருமானுக்கு உணவாகச் சொல்லப்பட்டிருப்பதால் "உம்முடைய ஜீவனத்தை நோக்கிக்கொள்ளப்பாரும்" என்று நம்பிள்ளை யருளிச்செய்தது இன்சுவைமிக்க பொருள்.

வாட்டமில்புகழ் வாமனனை * இசை
கூட்டி வண்சடகோபன்சொல் * அமை
பாட்டோராயிரத்திப்பத்தால் * அடி
சூட்டலாகும் அந்தாமமே. (கக)

1. பெரிய திருமொழி. 8-10-1.

வாட்டம் இல் புகழ்	வாட்டமற்ற புகழுடையனை
வாமனனை	வாமனனைக்குறித்து
வண் சடகோபன்	உதாரரான ஆழ்வார்
இசை கூட்டி	இசையோடே சேர்த்து
சொல்	அருளிச்செய்த
அமை	இலக்கணமமைந்த
பாட்டு ஓர் ஆயிரத்து	ஓராயிரம் பாசுரங்களுள்
இ பத்தால்	இப்பதிகத்தினால்
அடி	(அந்த வாமனமூர்த்தியின்) திருவடிகளில்
அம் தாமம்	அழகிய புஷ்பங்களை
சூட்டல் ஆகும்	ஸமர்ப்பிக்கும் படியான பேறு உண்டாகும்.

* * * — [வாட்டமில்புகழ்.] இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. ஆழ்வார்பட்ட க்லேசமொன்றும் படாதே எம்பெருமான் திருவடிகளிலே நித்யகைங்கர்யம்பண்ணப் பெறலாமென்கிறது. [வாட்டமில்புகழ் வாமனனை] முதற் பாட்டிலே "வாடிவாடுமிவ்வாணுதலே" என்று பராங்குச நாயகி வாட்டமடைந்ததாகச் சொல்லிற்று. அவள் வாடினது எம்பெருமானுடைய புகழ் வாடினதாகும். இது வாட்டம் தீர்ந்ததென்றால் ஆழ்வாருடைய வாட்டம் தீர்ந்ததென்பது சொல்லாமலே விளங்கும். இங்ஙனே "இவள் மாழை நோக்கொன்றும் வாட்டேன்மினே" என்று தாய் சொன்னவாறே 'இதோ புறப்பட்டோம்' என்று லஜ்ஜையோடே வந்து தோற்றினான்; தோற்றவே வாட்டமில் புகழ்வாமனனாயினான். இதனால், இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்கு உண்டாயிருந்த அவஸாதம் ஒருவாறு எம்பெருமானால் தீர்க்கப்பட்டது என்பது விளங்கும். இங்கு வாமனன் என்றது தன்பொருளை விடமாட்டாதவன் என்பதைக் காட்டுதற்காக. தான் யாசகனாகியும் தன்னுடைமையைப் பெறுபவனாகையாலே பிறர் யாசிக்கவும் விட்டுக்கொடுப்பனோ என்றபடி. இப்படிப்பட்ட பெருமான் விஷயமாக வண்குருகூர்ச்சடகோபன் இசையோடே புணர்த்துப் பேசின ஆயிரத்தினுள்ளே இப்பத்துப்பாட்டினால் செவ்விமாலையைக்கொண்டு அவன் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம்பண்ணப் பெறலாமென்றதாயிற்று. இப்பத்தும் வல்லார்க்கு இது பலன் என்றவாறு.

தாமம்—தாமா என்னும் வடசொல் விகாரம்; மாலையென்று பொருள். (கக)

நான்காந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் இத்திருவாய்மொழிக்கான ச்லோகம்.

ப்ரஹ்லாதார்த்தே ந்ருஸிம்ஹம் க்ஷபிதவிபுதஷாவல்லபம் க்ஷிப்தலங்கம்
க்ஷ்வேளப்ரத்யர்த்திகேதும் ச்ரமஹரதுலஸீமாலிகம் நைரபேக்ஷ்ய
[ஹேதும் |
த்ராணே தத்தாவதாநம் ஸ்வரிபுஹ்ருதிக்ருதாச்வாஸநம் தீப்தஹேதிம்
ஸத்ப்ரேக்ஷாரக்ஷிதாரம் வ்யஸநநிரஸநவ்யக்தகீர்த்திம் ஜகாத ||

1. ப்ரஹ்லாதார்த்தே ந்ருஸிம்ஹம் — * நாடிநாடி நரசிங்காவென்று * சிறுக்கனான ப்ரஹ்லாதாழ்வானுக்காக நாஸிம்ஹமூர்த்தியாகத் தோன்றினவன்.

2. க்ஷபிதவிபுதஷாவல்லபம் — * விறல்வாணனுயிர்த்தோள் துணித்தீர். * வாணனுடைய மகளான உஷைக்கு வல்லபனான அநிருத்தாழ்வானுடைய ஆபத்தைப் போக்கினவன்.

3. க்ஷிப்தலங்கம் — * அரக்கனிலங்கை செற்றீருக்கே * இராவணனுடைய இலங்கையைப் பாழாக்கினவன்.

4. க்ஷ்வேளப்ரத்யர்த்திகேதும் — * வலங்கொள்புள்ளுயர்த்தாயென்றும். * விஷவிரோதியான பெரியதிருவடியைக் கொடியாகவுடையவன்.

5. ச்ரமஹர துலஸீமாலிகம் — * வண்டுதிவளுந் தண்ணந்துழாய். * விடாய்தீர்க்கவல்ல திருத்துழாய்மாலையை பணிந்துள்ளவன்.

6. நைர்பேக்ஷ்யஹேதும் — * பின்னும் மிகவிரும்பும் பிரானென்றும். * நம்மையொருவராலும் கைவிடமாட்டானென்று நிர்ப்பயத்தோடிருப்பதற்கு உடலானவன்

7. த்ராணே தத்தாவதாநம் — * வெள்ளநீர்க்கிடந்தாயென்றும். * காக்குமியல்வினனாய்த் திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருள்பவன்.

8. ஸ்வரிபுஹ்ருதிக்ருதாச்வாஸநம் — * விறற்கஞ்சனை வஞ்சனைசெய்தீர். * தன்னைக் கொல்ல நினைத்த கம்ஸனைக் கொன்றொழித்து இப்படியே ஆச்ரித விரோதிகளைப் போக்கவல்லவன் என்று அடியவர்க்கு ஆச்வாஸஜநகனுமவன்.

9. தீப்தஹேதிம் — * சுடர்வட்டவாய்நுதிநேமியீர். * தேசபொலிந்த திருவாழி முதலிய திவ்யாயுதங்களைத் திருக்கையிலேந்தியவன்.

10. ஸத்ப்ரேக்ஷாரக்ஷிதாரம் — * இவள் மாழைநோக்கொன்றும் வாட்டேன்மினே. * அடியாருடைய நோக்குக் குலையாமே ரக்ஷித்தருள்பவன்.

11. வ்யஸநநிரஸநவ்யக்தகீர்த்திம் — * வாட்டமில்புகழ். * அடியாருடைய வாட்டத்தைத் தீர்த்துத் தான் வாட்டந் தீர்ந்தானுகி அதனால் விளங்கிய புகழ் பெற்றவன். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை [ஜகாத] ஆழ்வார் இத்திருவாய்மொழியிலே பேசினரென்கை.

தூப்புற்பிள்ளை பொன்னடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஆடிமகிழ் வானில் அடியார்குழாங்களுடன்
கூடியின்பமெய்தாக் குறையதனால் — வாடிமிக
அன்புற்றார் தம்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்துத்
துன்புற்றான் மாறனந்தோ.

பதவுரை.

மாறன்	ஆழ்வார்	அன்பு உற்றார்	அன்பர்களான ஸ்ரீமதுரகவி போல்வார்
ஆடி மகிழ் வானில்	(பிரீத பகவதநுபவத்தாலே) கூத்தாடிக்களிக்குமிடமான பரமபதத்தில்	ஆய்ந்து உரைக்க	ஆராய்ந்து சொல்லும்படியாக [அதாவது, தம் வாயாற் சொல்லுகிறபாசுரமன்றியே வேற்று வாயாற் சொல்லுகிற பாசுரமாம்படியாக]
அடியார் குழாங்களுடன்	(நித்யமுக்தர்களாகிற) அடியார்களின் திரளோடே		
கூடி	கலந்து		
இன்பம் எய்தா குறை அதனால்	ஆனந்திக்கப்பெறாத குறையினாலே	மோகித்து	மோஹமடைந்து
மிக வாடி	மிகவும் வாட்டமடைந்து,	துன்புற்றான்	துக்கித்தார்;
தம் நிலைமை	(அப்படிப்பட்ட) தமது நிலைமையை	அந்தோ	ஐயோ!.

இத்திருவாய்மொழியில் "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்றுகொலோ" என்று பாரித்த ஆழ்வார் அவ்வண்ணமாகவே பரமபதத்தில் நித்யமுக்தர் திரளிலே சென்று சேர்ந்து அநுபவிக்கப்பெறாத குறையினாலே மோஹமடைந்தார்; அந்த மோஹம் எப்படிப்பட்டதென்னில், தம்வாயாலே பாசுரம் பேசவொண்ணாமே தாய்ப் பாசுரமாக வேற்றுவாயாலே பேசலாம்படியாயிற்று. அப்படிப்பட்ட வ்யஸநம் இத்திருவாய்மொழியிலே நிகழ்ந்தது—என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

(கருத்து.) அடியார்கள் குழாங்களை உடன்கூடப்பெறுவதைப் பிரார்த்தித்து அது கிடைக்கப் பெறாமையினாலே ஆர்த்தரான ஆழ்வார், தம்முடைய ஆர்த்தியின் நிவேதநமும், அதை நீக்கியருளவேணுமென்கிற பிரார்த்தனையும் தம் வாயினாலன்றிக்கே அன்பர் வாயினால் செய்யவேண்டும்படியாக மிகுந்த மோஹத்தை யடைந்தார் என்கிறார் திருவாய்மொழியில் என்றவாறு.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து — ஐந்தாந் திருவாய்மொழி, அந்தாமத்தன்பு.

அவதாரிகை.

கீழ்த் திருவாய்மொழியில் ஆழ்வார்க்குண்டான துயரம் முதலையின் வாயிலே யகப்பட்டுத் துடித்த கஜேந்திராழ்வானுடைய துயரத்தோடு ஒப்பிடலாயிருந்தது. அந்த கஜேந்திராழ்வான் 'ஆதிமூலமே!' என்று கதறினபோது அக் கூக்குரல் கேட்டவளவிலே "அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம் அஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதி சாகுலாந்தபுரம் | அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ் த்வராயை நம: = அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம் அஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதி சாகுலாந்தபுரம், அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ் த்வராயை நம:." [ஸ்ரீரங்கராஜஸ்தவம்.] என்னும்படியாகக் கனவேகத்தோடே மடுவின்கரையிலே $ அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து காட்சிதந்து தானும் மகிழ்ந்து அவனையும் மகிழ்வித்தவாறுபோல, ஆழ்வாருடையவும் "வலங்கொள் புள்ளுயர்த்தாய்" என்ற கூக்குரலைக் கேட்டவுடனே 'அந்தோ! நாம் ஜகத்தை நிர்வஹித்தபடி வெகு அழகியதாச்சுது! நாம் ஆரானோம்!' என்று நொந்து, தன்னுடைய ஸ்வரூபரூபகுணங்கள் அலங்காரம் திவ்யாயுதங்கள் சேர்த்த சேர்த்தி இவையெல்லாவற்றோடும் வந்து கலவிதந்து அதனாலே அவன் பரமஸந்துஷ்டனாய் க்ருதக்ருத்யனா யிருக்கிற விருப்பை ஆழ்வார் அநுபவித்து அவ்வநுபவத்தினாலுண்டான மகிழ்ச்சியின் மிகுதியினால் இத்திருவாய்மொழியில், தாம்பெற்றபேற்றைப் பேசி யநுபவிக்கிறார். .... (*)

அந்தாமத்தன்புசெய்து என்னாவிசேரம்மானுக்கு *
அந்தாமவாண்முடிசங்கு ஆழிநூலாரமுள *
செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் *
செந்தாமரையடிகள் செம்பொன் திருவுடம்பே. (க)

$ அரைகுலையத் தலைகுலைய — அரையிலுடுத்தின திருப்பரிவட்டம் அவிழவும் தலைமுடி அவிழவும் என்றபடி.

என் ஆவி	என் ஆத்மாவிலே	கண்	திருக்கண்கள்
அம் தாமத்து அன்பு செய்து	பரமபதத்திற் பண்ணும் விருப்பத்தைப்பண்ணி	செம் தாமரை தடம்	செந்தாமரைத் தடாகம் போன்றன;
சேர்	வந்து பொருந்தின	செம் கனி வாய்	சிவந்துகனிந்த திருவதரம்
அம்மானுக்கு	எம்பெருமானுக்கு.	செம் கமலம்	செந்தாமரையாகவே யிராநின்றது;
அம் தாமம்	அழகிய மாலையையணிந்த		
வான்	ஒளியுள்ள	அடிகள்	திருவடிகளும்
முடி	திருவபிஷேகமும்	செம் தாமரை	செந்தாமரை மலராகவே யிராநின்றன ;
சங்கு ஆழி	சங்கு சக்கரங்களும்		
நூல்	பூணூலும்	திரு உடம்பு	திருமேனி
ஆரம்	ஹாரமும்	செம் பொன்	செம்பொன்னு யிராநின்றது.
உள	உள்ளன;		

* * * — [அந்தாமத்தன்பு.] தாம் மநோரதித்தபடியே தன் பரிகரங்களோடே கூடவந்து தம்மோடே கலக்கையாலே எம்பெருமானுக்குப் பிறந்த புகரைப் பேசுகிறார். இவர் தாம் கீழ்த் திருவாய்மொழியில் "ஒளிக்கொண்ட சோதியமாய் அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்றுகொலோ" என்று திருநாட்டிலே சென்று அங்கு நித்யமுக்தர்களின் திரளிலே இருந்து அநுபவிக்கப்பெறுவதைப் பாரித்தாராகிலும் அஸ்மதாதிகளின் உஜ்ஜீவநத்திற்காக எம்பெருமான் ஆழ்வாரை இந்நிலத்திலே இன்னஞ் சில நாளைக்கு வைத்திருக்கத் திருவுள்ளம் பற்றினனாகையாலே சடக்கென அது செய்யாதே அவ்வநுபவத்தை ஒருவாறு இந்நிலத்திலேயே காட்டி ஆச்வஸிப்பிக்கின்றானென்றுணர்க.

பரமபதத்திலுள்ளாரெல்லார் திறத்திலும் பண்ணும் ஆதரத்தை என்பக்கலிலே பண்ணி என்னோடேவந்து கலந்த பெருமானுக்கு அழகிய மாலையும் ஒளி பொருந்திய திருவபிஷேகமும் திருவாழி திருச்சங்குகளும் யஜ்ஞோபவீதமும் திவ்யஹாரமும் உள்ளன; திருக்கண்களோ சிவந்த தாமரைத் தடாகமாயிராநின்றன; சிவந்து கனிந்த திருவதரமும் தாமரையா யிராநின்றது; திருவடிகளும் செந்தாமரையாகவே யிராநின்றன; திருவுடம்போ செம்பொன்னாயிராநின்றது. என்னோடு கலந்த பின்பு அவனுடைய திருமேனியிற் பிறந்த புகர் இங்ஙனே யிராநின்றது.

அந்தாமத்து = ஸ்தாநம் என்னும் வடசொல் இங்குத் தாமமெனத் திரிந்தது. ஸ்தாநம் என்று பொருள். ஆகுபெயரால் பரமபத ஸ்தாநத்திலுள்ளவர்களான நித்யமுக்தர்களைச் சொல்லுகிறது. அவர்களிடத்துப் பண்ணும் அன்பை என்னிடத்தே பண்ணினனென்கிறது. இரண்டாமடியில் அந்தாமம் என்றவிடத்து தாம என்ற வடசொல் திரிந்தது. ஸ்தாம என்ற வடசொல்லே திரிந்ததாகவுங் கொள்ளலாம்; அப்போது ஒளி என்று பொருள். அச்சொல் வடநூல் நிகண்டுகளில் பலபொருளுடையது. 'வான்முடி' என்றும் 'வாழ்முடி' என்றும் பாடபேதமுண்டு. இரண்டாமடி முழுவதும் நித்யஸூரிகளைச் சொல்லியிருப்பதால், அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்றுகொலோ என்று இவர் ஆசைப்

பட்டபடியே நித்யஸூரிகளோடே வந்து கலந்தான் என்று ஆளவந்தாரருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணித்தாராம். எம்பெருமானாரருளிச் செய்வதாவது — ஆழ்வாரோடு வந்து கலப்பதற்கு முன்பு அவனுடைய இந்த திவ்யபூஷண திவ்யாயுதங்களும் ஒளிமழுங்கி அஸத்கல்பமாயிருந்தன; இவரோடு கலந்தபின்பு உஜ்ஜ்வலமாய் ஸத்தை பெற்றன; அது சொல்லப்படுகிறது இங்கு — என்றும்.

இப்பாட்டுக்கு மற்றொருவகையான நிர்வாஹமுமுண்டு; அந்தராதித்யவித்யையில் சொன்ன ஹிரண்மய விக்ரஹயோகத்தையும் புண்டரீகாக்ஷத்வம் முதலிய அவயவ சோபையையும் கிரீட மகுடாதி ஆபரண சோபையையும் ஸ்ரீவத்ஸவக்ஷஸ்த்வத்தையுஞ் சொல்லி இப்படி ஆதித்யமண்டலத்திலே திகழுமவன் ‹‹ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர:›› என்கிறபடியே அழகிய ஆதித்யமண்டலத்தில் பண்ணும் விருப்பத்தை என்னெஞ்சிலே பண்ணிப்புகுந்து மிகவும் உஜ்ஜ்வலனாயிராநின்றான் — என்பதாம். .... (க).

திருவுடம்புவான்சுடர் செந்தாமரைகண்கைகமலம் *
திருவிடமேமார்வம் அயனிடமேகொப்பூழ் *
ஒருவிடமுமெந்தைபெருமாற்கு அரனேயோ! *
ஒருவிடமொன்றின்றி என்னுள்கலந்தானுக்கே. (உ)

ஒருவு இடம் ஒன்று இன்றி	நீங்கின இடம் ஒன்றுமில்லாதபடி [ஸகல அவயவங்களிலும்]
என்னுள் கலந்தானுக்கு	என்னோடு சேர்ந்தவனை
எந்தை பெருமாற்கு	என் குலநாதனுக்கு
திரு உடம்பு	திருமேனி
வான் சுடர்	திவ்யமான ஒளியை உடைத்தாயிராநின்றது;
கண்	திருக்கண்
செம் தாமரை	செந்தாமரை மலர்களாயிராநின்றன;
கை	திருக்கைகள்
கமலம்	தாமரைமலரே;
மார்வம்	திருமார்பு
திரு இடமே	பிராட்டிக்கு இருப்பிடமாயிற்று;
கொப்பூழ்	திருநாபி
அயன் இடமே	பிரமனுக்கு உறைவிடமாயிற்று;
ஒருவு இடமும்	நீங்கின இடமும்
அரனே	ருத்ரனுடையதே;
ஓ	ஆச்சரியம்.

* * * — [திருவுடம்பு.] பிராட்டி முதலானவர்களும் தன் பக்கலில் ஒரோ இடங்களைப்பற்றி ஸத்தைபெற்றாரம்படியிருக்கிற எம்பெருமான் ஸகல அவயவங்களாலும் என்னோடே ஸம்ச்லேஷித்து அத்தாலே ஒளிமல்கப்பெற்றானென்கிறார் இதில்.

ஒருவிடமொன்றின்றி என்னுள் கலந்தானுக்கு மார்வம் திருவிடம்; கொப்பூழ் அயனிடம்; ஒருவிடமும் அரன்; (இப்படிப்பட்ட எந்தை பெருமாற்கு (என்னுள்கலந்தனுக்கே) திருவுடம்பு வான்சுடர்; கண் செந்தாமரை; கை கமலம்,

இப்பாசுரத்தை அநுபவிக்கும்போது நஞ்சீயர் மிகவும் ஈடுபட்டு அருளிச் செய்வதொரு வார்த்தையுண்டு: அதாவது—எம்பெருமானுக்கு விக்ரஹமில்லை விபூதியில்லை என்கிறவர்கள் முன்பே ஆப்ததமரான ஆழ்வார் திருவுடம்பு வான் சுடர் என்பதே! ஈச்வரனுக்கு விக்ரஹமில்லை குணமில்லை என்கிறவர்கள் பண்ணி வையாத பாவமில்லை; அவர்களை அநுவர்த்தித்து அதுகேட்டுக்கொண்டிராதபடி பெருமாள் நமக்குப் பண்ணின உபகாரம் போலே வேறொரு உபகாரமுமில்லை— என்றும்.

எம்பெருமான் வந்ததும் ஆழ்வாரோடே தன் திருமேனியை அணைத்து நின்றுணைகயாலே அந்த ஸ்பர்சஸுகம் கொண்டாடித் "திருவுடம்பு வான்சுடர்" என்கிறாரென்ப. உடனே குளிரக்கடாக்ஷித்தருளினமையாலே "செந்தாமரை கண்" என்றார். கண்ணழகைக்கண்டு பரத்வங்கொண்டாடி இப்பரம புருஷனெங்கே! நாம் எங்கே! என்று நைச்யம் பாவித்து இறாய்த்தவளவிலே கையாலே பிடித்திழுத்தானதலால் "கை கமலம்" என்கிறார்.

இவன் கேட்பாரில்லாதவனாய் நம்மிடம் வந்தானல்லன்; பிராட்டி முதலானவர்களும் இவனுடைய திருமேனியில் ஏகதேசங்களைப்பற்றி ஸத்தை பெறுமவர்களாக இருக்கின்றார்களென்பதை இரண்டு மூன்றுமடிகளாலருளிச்செய்கிறார். தாமரைப்பூவில் பிறந்த பிராட்டியும் அதைவிட்டு இவன் திருமார்பைப் பற்றிக் கொண்டு 'அகலகில்லேனிறையும்' என்று கிடக்கின்றாள்; பதினான்குலகம் படைக்கும் பிரமனோ திருநாபிக்கமலத்தை விடேனென்றிருக்கிறான்; நீங்கினவிடமோ ருத்ரனுடையதாயிராநின்றது.

ஒருவிடமும் = ஒருவுதல் நீங்குதலாய் நீங்கினவிட மென்றபடி. தாமஸ தேவதையின் இருப்பிடத்தைச் சொல்லுகையாலே அநாதரம் தோற்ற 'நீங்கின விடம்' என்கிறார் என்பர். ... ... (உ)

என்னுள்கலந்தவன் செங்கனிவாய்செங்கமலம்*
மின்னும்சுடர்மலைக்குக் கண்பாதம்கைகமலம்*
மன்னுமுழுவேழுலகும் வயிற்றினுள*
தன்னுள்கலவாதது எப்பொருளும்தானில்லையே. (3)

என்னுள் கலந்தவன்	என்னுள்ளேகலந்தவனாகி	கமலம்	செந்தாமரை மலரே;
மின்னும்	விளங்குகின்ற	மன்னு முழு ஏழ் உலகும்	நிலைபெற்ற ஸகல லோகங்களும்
சுடர் மலைக்கு	ஒளிபொருந்திய மலை போன்ற பெருமானுக்கு	வயிற்றின் உள	(அவனது) திருவயிற்றிலடங்கி யுள்ளன;
செம் கனி வாய்	சிவந்து கனிந்த திருவாய்	தன்னுள்	அவன்தனக்குள்ளே
செம் கமலம்	செந்தாமரை மலர் போன்றது;	கலவாதது	சேராதது
கண் பாதம் கை	திருக்கண்களும் திருவடிகளும் திருக்கைகளும்	எப்பொருளும் தான் இல்லை	யாதொருபொருளுமேயில்லை.

* * [என்னுள் கலந்தவன்] பிராட்டி பிரமன் சிவன் முதலானார் மாத்திர மன்றியே ஸகலலோகங்களும் தன்னைப் பற்றி ஸத்தை பெறும்படி யிருக்கிற எம்பெருமான், இவ்வுலகங்களெல்லாம் தன்னை யொழிந்தால் படும்பாட்டைத் தான் என்னைப் பிரிந்து பட்டு என்னோடே கலக்கையாலே மிகவும் புஷ்கலனானான் என்கிறாரிதில்.

எம்பெருமானுக்கு இப்போது 'என்னுள் கலந்தவன்' என்று ஒரு திருநாமம் கிடைத்தது போலும். * அஞ்சிறைய மடநாரையில் "அருளாதநீர்" என்று திருநாமஞ் சாத்தினார்; இப்போது 'என்னுள்கலந்தவன்' என்று திருநாமஞ் சாத்துகிறார். நாராயணன் வாஸுதேவன் என்கிறாப் போலே இதுவும் ஒரு திருநாமங் காண்மின்.

என்னுள்ளே கலந்தவனாய் அத்தாலே விளங்கின சுடரையுடைய மலை போன்றுள்ளவனான பெருமானுக்கு, செங்கனிவாய் செங்கமலம், கண் பாதம் கை கமலம். இப்போது எம்பெருமானுடைய திவ்யாவயவங்கள் புகர் பெற்ற படியை எத்தனை தடவை வருணித்தாலும் ஆழ்வாருக்கு த்ருப்தி பிறக்கிறதில்லை.

மன்னு முழுவேழுலகும் வயிற்றினுள — ப்ரவாஹநித்யங்களான ஸகல சேதநாசேதநங்களும் தன் ஸங்கல்பத்தைப் பற்றி நிலைநிற்கின்றன. [தன்னுள் கலவாதது எப்பொருளுந் தானில்லையே] தன்னுடைய திருவுள்ளத்தை ஆச்ரயமாகக்கொள்ளாத வஸ்து நாஸ்தி சப்தத்திற்கு அர்த்தமாகவுள்ளதத்தனை. அவை இவனைப்பற்றாதபோது ஸத்தையின்றிக்கே யிருப்பது போல, இவனும் என்னோடு கலவாதபோது ஸத்தை யிழந்தவனாயிரா நின்றானென்கையிலே நோக்கு. (௩)

எப்பொருளும்தானாய் மரதகக்குன்றமொக்கும்*
அப்பொழுதைத்தாமரைப்பூக் கண்பாதம்கைகமலம்*
எப்பொழுதும்நாள்திங்கள் ஆண்டூழியூழிதொறும்*
அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே. (4)

எப் பொழுதும்	எல்லா க்ஷணமும்
எந் நாள்	எல்லா நாட்களும்
எத் திங்கள்	எல்லா மாதங்களும்
எவ்வாண்டு	எல்லா வருஷங்களும்
எவ்வூழி ஊழி தொறும்	கற்பங்கள் தோறும் (அநுபவித்தாலும்)
அப்பொழுதைக்கு அப்பொழுது	அந்தந்தக் காலங்களிலே
என் ஆரா அமுதம்	எனக்குத் தெகுட்டாத அம்ருதமாயிருக்கு மெம்பெருமான்
எப் பொருளும் தான் ஆய்	எல்லாப் பொருள்களும் தனக்குள்ளே அடங்கப் பெற்றவனாய்
மரதகம் குன்றம் ஒக்கும்	மரதகமலையை யொத்திருப்பன்;
கண்	(அவனது) திருக்கண்களும்
அப் பொழுது தாமரை பூ	அப்போதலர்ந்த தாமரை மலர் போன்றவை
பாதம்	திருவடிகளும்
அப் பொழுது கமலம்	அப்போதலர்ந்த தாமரையே;
கை	திருக்கைகளும் (அவ்வண்ணமே.)

* * [எப்பொருளுந்தானாய்] என்னோடே கலந்த எம்பெருமான் யாவஜ்ஜீவம் அநுபவித்தாலும் க்ஷணந்தோறும் புதியனாய்ப் பரம போக்யனாயிரா நின்றானே யென்று உள் குழைகின்றாரிதில். இப்பாசுரத்திற்கு நம்பிள்ளையீட்டில் இட்டருளின அவதாரிகை பரம போக்யம் ;

"நீர் ஒருகால் சொன்னத்தை ஒன்பதின்கால் சொல்லி இங்ஙனே கிடந்து படுகிறதென்னென்ன, நான் அது தவிருகிறேன்; நீங்கள் அவ் விஷயம் ஒருகாலிருந்தபடியே எப்போது மிருக்கும்படி பண்ணவல்லி கோளோ வென்கிறார்."

என்பது அந்த ஸ்ரீஸூக்தி. "செந்தாமரை கண் கை கமலம்" என்றும் "செங்கனி வாய் செங்கமலம்" என்றும் "கண் பாதம் கை கமலம்" என்றும் திருப்பித்திருப்பிப் புநருக்தி பண்ணிக்கொண்டிருக்கிறீரே, இது வென்ன? என்று சிலர் கேட்க, நான் அநுபவிக்கிற விஷயம் நித்யாபூர்வமாகையாலே அவ்வநுபவ பரீவாஹமாக நான் சொல்லுகிற சொற்களும் ரஸிகர்களுக்கு நித்யாபூர்வமாகவே யிருக்கும், புநருக்தியாகத் தோன்றாது என்று ஆழ்வார் ஸமாதாநம் பண்ணுகிறாரென்பது உள்ளுறை.

எல்லாப் பொருள்களும் தானிட்டவழக்காம்படி யிருக்கிறவன் என்னோடே வந்து கலந்து மிகவும் ஒளிபெற்றானகையாலும் திருவளர்த்தியினாலும் என்னை விட்டுப்போகாதே நிற்கையாலும் ஒரு மரதகமலையோ என்னலாம்படி யிரா நின்றான். அவனது திருக்கண்களும் திருவடிகளும் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூப்போன்றன; கைகளும் கமலம். ஸர்வகாலமும் எனக்கு அபூர்வ வஸ்துபோலே புதியனாயிராநின்றானே யன்றித் தெகுட்டுகின்றானில்லை; இப்படியும் ஒரு போக்யதையே! என்று ஈடுபடுகிறாராயிற்று. (ச)

ஆராவமுதமாய் அல்லாவியுள்கலந்த*
காரார்கருமுகில்போல் என்னம்மான்கண்ணனுக்கு*
நேராவாய் செம்பவளம் கண்பாதம்கைகமலம்*
பேரார நீண்முடிநாண் பின்னுமிழைபலவே. (5)

ஆரா அமுதம் ஆய்	தெகுட்டாத அமிருதமாகி	வாய் நேரா	அதரத்திற்கு ஒப்பாக மாட்டா;
அல் ஆவி உள்	ஒருபொருளல்லாத எனது நெஞ்சினுள்ளே	கமலம்	தாமரைப் பூ
கலந்த	கூடி நின்றவனாயும்	கண் பாதம் கை	திருக்கண் திருவடி திருக்கைகளுக்கு
கார் ஆர் கரு முகில் போல்	கார்காலத்திற் பொருந்திய காளமேகம் போன்றவனாயும்	நேரா	ஒப்பாகமாட்டாது;
என் அம்மான்	எனக்கு நாதனாயுமிருக்கிற	பேர் ஆரம்	பெரிய ஹாரங்களும்
கண்ணனுக்கு	ஸ்ரீக்ருஷ்ணனுக்கு	நீள் முடி	உயர்ந்த திருவபிஷேகமும்
செம் பவளம்	சிவந்த பவழங்கள்	நாண்	திரு அரைநாணும்
		பின்னும் இழை	மற்று முள்ள திருவாபரணங்களும்
		பல	அனேகங்கள்.

* * [ஆராவமுதமாய்] எம்பெருமான் என்னோடு கலந்ததனால் பெற்ற அழகுக்கு உபமானமில்லையென்கிறார். இதுவரையில் தாமரையை உபமானமாகச் சொல்லிக்கொண்டு வந்தார்; உட்புகுந்து ஆராய்ந்தவாறே உபமானமாகப் போந்ததில்லை; சீ! என்று தள்ளிப்பேசுகிறார். பரம போக்யனாயிருந்து வைத்து மிகவும் நீசனான என்னோடே கலப்பதுஞ் செய்து அத்தாலே கார்காலத்தில் ஆர்ந்த கருமுகில்போலே விளக்கம் பெற்றவனான எம்பெருமானுக்கு, செம்பவளமானது திருவாயோடு ஒப்பாகமாட்டாது; கமலமானது கண்பாதம் கைகளோடு ஒப்பாகமாட்டாது. அன்றியும், திருமார்பில் அணிந்திருந்த ஹாரமும், தானே உபபவிருத்திக்கும் நிர்வாஹகனென்பது தோன்றத் திருமுடியிலணிந்திருந்த திருவபிஷேகமும் திருவரைநாணும் முதலான திருவாபரணங்கள் அநுபவித்துப் போமித்தனையல்லது என்றாற் சொல்லித் தலைக்கட்டப் போகா. (ரு)

பலபலவேயாபரணம் பேரும்பலபலவே*
பலபலவேசோதி வடிவு பண்பெண்ணில்*
பலபலகண்டுண்டு கேட்டுற்றுமோந்தின்பம்*
பலபலவேஞானமும் பாம்பணைமேலாற்கேயோ! (6)

பாம்பு அணை மேலாற்கு	ஆதிசேஷனைப் பள்ளியாகக் கொண்டிருக்கும் பெருமானுக்கு	பல பல	மிகப் பலவாயிருக்கும்;
பண்பு எண்ணில்	(என்னோடு கலவியாலுண்டான) அழகை நிரூபித்துப் பார்க்குமிடத்து,	கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து இன்பம்	பார்த்தும் உண்டும் கேட்டும் ஸ்பர்சித்தும் மோந்தும் (உண்டாகிற) சுகங்களும்
		பல பல	மிகப் பலபலவாயிருக்கும்;
ஆபரணம்	திருவாபரணங்கள்	ஞானமும்	ஞானங்களும்
பல பல	மிகப் பலவாயிருக்கும்;	பல பல	மிக மிகவாம்.
சோதி வடிவு	ஒளியுருவான திருமேனி		

* * [பலபலவே.] ஆழ்வார் தம்மோடே எம்பெருமான் கலக்கும்போது ஒரு வடிவோடே கலந்து த்ருப்திபெற மாட்டாதே பலவடிவுகள் கொண்டு கலந்து அநுபவிக்கும்படியை அருளிச்செய்கிறார்.

பாம்பணைமேலாற்கு என்றது திருவனந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டாற்போலே என்னோடு கலந்த பெருமானுக்கு என்றபடி. பண்பு எண்ணில்— அவனுடைய ஸ்வபாவங்களை ஆராய்ந்துபார்த்தால், ஆபரணம் பலபல = "செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளும் கிண்கிணியும் அரையில்தங்கிய பொன்வடமும் தாளநன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும் மங்கல வைம்படையுந் தோள்வளையும் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்" ,,கிரீடமகுடசூடாவதம்ஸமகராகுண்டல

"ஹார கேயூர கடக ஶ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாமோதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராத்யபரிமித திவ்யபூஷண" என்கிறபடியே திருவாபரணங்கள் எண்ணிறந்தவை.

பேரும் பலபலவே = அவனுடைய திருக்குணங்களுக்கும் திருவவதாரங்களுக்கும் திவ்ய சேஷ்டிதங்களுக்கும் வாசகங்களான திருநாமங்களும் பலபலவாயிருக்கும். அநுபவிக்குங் காலத்தில் நாமக்ரஹணத்திற்கு இழிந்தவிடமெல்லாம் துறையாகும். சிலப்பேர்கள் சிறப்பேர்கள் என்று அநேகமாயிருக்குமே.

பலபலவே சோதிவடிவு = இங்கே சுட்டுஸ்ரீஸூக்தி :— "ஸௌபரியைப் போலே அநேகம் வடிவு கொண்டாயிற்று இவரை யநுபவிக்கிறது: முக்தன் தன்னையநுபவிக்கும்போது படிமா போலே தான் என்னை யநுபவிக்கப் பலவடிவு கொள்ளா நின்றான்" என்பதாம்.—ஸௌபரியின் வரலாறு வருமாறு:—இந்த மாமுனிவன் நீர் நிலையிலிருந்து கொண்டு தவம்புரியா நின்றவளவில் அங்கு மீன்களெல்லாம் கூடிக்களித்து விளையாடாநின்றமையைக்கண்ணுற்று 'நாமும் இப்படி குடும்பவாழ்க்கையிற் கூடிநின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்க வேணும்' என்று ஆவல் கொண்டு மாந்தாதா என்னும் அரசனுக்குப் பல பெண்கள் இருப்பதாக உணர்ந்து அவனிடஞ் சென்று தனக்குக் கன்னிகாதானம் செய்யுமாறு வேண்ட, அரசன் இவருடைய கிழத்தனத்தையும் குரூபத்தையுங் கண்டு இசைவில்லாமல் 'பெண் கொடுக்கமுடியாதென்று நம் வாயாற் சொன்னால் முனிவர் முனிந்து சபித்துவிடக்கூடும்; பெண்களிருக்குமிடத்திற்கு இவரை அனுப்புவோம்; இவரைக் கண்டு பெண்காமுறுவாளாகில் விவாஹம் செய்து கொள்ளட்டும்; இல்லையாகில் அவர்களே மறுத்துவிடட்டும்; நம் தலையில் பழி வேண்டா' என்றெண்ணி முனிவரைப் பெண்களிருக்குமிடமனுப்ப, முனிவர் அங்குச் செல்லும் போதே தமது தவவலிமையால் திவ்யஸுந்தரமான ரூபத்தை எடுத்துக் கொண்டு போய் அவர்கள் முன்னே நின்றவளவில் அங்கிருந்த ஐம்பது பெண்களும் 'நானே இவரை மணந்து கொள்வேன், நானே இவரை மணந்து கொள்வேன்' என்று போட்டி போட்டுக்கொண்டு மேல்விழுந்தவாறே, முனிவர் அத்தனை பெண்களையும் மணந்து கொள்ள விரும்பித் தமது தவவலிமையால் ஐம்பதுவடிவ மெடுத்து அப்பெண்களனைவரையும் விவாஹஞ் செய்துகொண்டு மகிழ்ந்திருந்தாரென்பதாம்.

கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம் பலபல = கண்டின்பம், உண்டின்பம், கேட்டின்பம், உற்றின்பம், மோந்தின்பம் பலபல என்று அந்வயித்துக்கொள்க. கண்டுகளிக்கப் பெறுவதான ரூபமும், உண்டுகளிக்கப் பெறுவதான ரஸமும், கேட்டுக்களிக்கப்பெறுவதான சப்தமும், தொட்டுக்களிக்கப்பெறுவதான ஸ்பர்சமும், மோந்து களிக்கப்பெறுவதான மணமும் பலபல என்றபடி. எம்பெருமான் நித்யாநந்தரூபனாயிருக்கச் செய்தேயும் ஆழ்வாரையநுபவிக்குங் காலத்தில் அவனுடைய பஞ்சேந்திரியங்களும் த்ருப்திபெற்றவிதம் பலவகைப்பட்டது என்றவாறு.

ஞானமும் பலபலவே = ஸர்வஜ்ஞனாயிருக்கச் செய்தேயும் ஆழ்வாரை யநுபவிக்குங் காலத்திலே புதிய புதிய பலவகை ஞானங்களைக் கொள்ளாநின்று னென்றபடி. "தாம் தம் பெருமையறியார்" என்றும் "தனக்கும் தன் தன்மை யறிவரியான்" என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமான் தன்னுடைய பெருமைகளைப்பற்றின உணர்வு இல்லாதவனாயிருந்து ஆழ்வாரோடு கலந்தபின் அவற்றை நன்கு உணரப்பெற்றானும்; அதைச்சொல்லுகிறது என்று கொள்ளலாம்.(௬)

பாம்பணைமேல்பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்*
காம்பணைதோள்பின்னைக்காய் ஏறுடனேழ்செற்றதுவும்*
தேம்பணையசோலை மராமரமேழெய்ததுவும்*
பூம்பிணையதண்டுழாய்ப் பொன்முடியம்போரேறே. (7)

பால் கடலுள்	திருப்பாற்கடலிலே	எய்ததுவும்	துளையடுத்ததும்,
பாம்பு அணை மேல்	சேஷசயனத்தின் மீது	பூ பிணைய	அழகிய தொடுத்தலை யுடைத்தான
பள்ளி அமர்ந்ததுவும்	கண்வளர்தல் பொருந்தினதும்,	தண்	குளிர்ந்த
காம்பு அணை தோள் பின்னைக்கு ஆய்	மூங்கில்போன்ற தோள்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக	துழாய்	திருத்துழாய் மாலை யணிந்த
ஏழ் ஏறு	ஏழு ரிஷபங்களை	பொன்	பொன்மயமான
உடன்	ஏககாலத்தில்	முடி	திருவபிஷேகத்தை யுடையவனாயும்
செற்றதுவும்	தொலைத்ததும்,	அம்	அழகியவனாயும்
தேன் பணைய சோலை	தேனையும் கிளைகளையுமுடைய சோலையாகத் தழைத்த	போர் ஏறு	போர்க்குரிய இடபம போன்றவனு மான எம்பெருமான் (செய்த செயல்களாம்.)
ஏழ் மராமரம்	ஸப்த ஸாலவ்ருக்ஷங்களையும்		

* * [பாம்பணைமேல்.] எம்பெருமான் சில திவ்விய சேஷ்டிதங்களைத் தமக்குக் காட்டியருளக்கண்டு அநுபவித்துப் பேசுகிறார். பாற்கடலுள் பாம்பணைமேல் பள்ளியமர்ந்ததுவும் = வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாகவிரித்து அதன்மேலே கள்ளநித்திரை கொள்கின்றதும் எங்கள் பெருமானே.

பின்னைக்கா ஏறுடனேழ் செற்றது—யசோதைப்பிராட்டிக்கு உடன்பிறந்தவனான கும்பனென்னும் இடையர்தலைவனதுமகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப்பிராட்டியை மணஞ்செய்துகொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்குமடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன் என்பது வரலாறு. எம்பெருமானால் முன் யுகத்தில் கொலையுண்ட காலநேமி யென்னும் அஸுரனுடைய புத்திரர்கள் ஏழு

வர் கறுக்கொண்டு கண்ணபிரானை வதஞ்செய்யக்கோலி இந்த ஏழுகாளைகளாகப் பிறந்தார்களென்று ஹரிவம்சம் கூறும்.

மராமரமேழெய்தது : — ஸுக்ரீவன் இராமபிரானால் அபயப்பிரதானஞ் செய்யப்பெற்றபின்பும் மனம் தெளியாமல் வாலியின் பேராற்றலைப்பற்றிப் பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒரு யோஜனை தூரம்தூக்கியெறிந்ததையும் குறித்துப்பாராட்டிக்கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்வது ஸாத்தியமாகுமோ? என்று சொல்ல, அதுகேட்ட லக்ஷ்மணன் 'உனக்கு விச்வாஸம் இல்லையாயின் இப்போது என்ன செய்யவேண்டுவது? என்ன, ஸுக்ரீவன் 'இராமபிரான் நீறுபூத்தநெருப்புப்போல் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும்போது ஸந்தேஹமுண்டாகின்றது; ஏழுமராமரங்களையும் துளைத்து இந்தத்துந்துபியின் எலும்பையும் இருநூறு விரற்கடைதூரம் தூக்கியெறிந்தால் எனக்கு நம்பிக்கையுண்டாகும்' என்று சொல்ல, ஸுக்ரீவனுக்கு நம்புதலுண்டாக்குமாறு அவனது வார்த்தைக்கு இசைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டைவிரலினால் இலேசாய்த்தூக்கிப் பத்து யோஜனை தூரத்துக்கு அப்பால் எறிய, அதனைக்கண்ட ஸுக்ரீவன் 'முன்பு உலராதிருக்கையில் வாலி இதனைத்தூக்கியெறிந்தான், இப்போது உலர்ந்துபோன இதனைத்தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று' என்றுகூற, பின்பு இராமபிரான் ஒருபாணத்தை ஏழுமராமரங்களின்மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையுந் துளைத்துச்சென்று மீண்டு அம்பறுத்தூணியை யடைந்தது. மராமரம்-ஆச்சாமரம் எனப்படும். (எ.)

பொன்முடியம்போரேற்றை எம்மானை நால்தடந்தோள்*
தன்முடிவொன்றில்லாத தண்டுழாய்மாலையனை*
என்முடிவுகாணாதே என்னுள்கலந்தானை*
சொல்முடிவுகாணேன்நான் சொல்லுவதென்சொல்லீரே. (8)

பொன் முடி	பொன்மயமான திருமுடியை யுடையனாய்
அம் போர் ஏற்றை	அழகிய போரேறு போன்றவனாய்
எம்மானை	எனக்கு நாதனாய்
நால் தட தோள்	நான்கு பெரிய திருத்தோள்களை யுடையனாய்
தன் முடிவு ஒன்று இல்லாத	தன் பெருமைக்கு முடிவு ஒன்றுமில்லாதவனாய்
தண் துழாய் மாலையனை	குளிர்ந்த திருத்துழாய் மாலையை யுடையவனாய்
என் முடிவு காணாதே	எனது தாழ்வைக் கணியாமல்
என் உள் கலந்தானை	என்னோடு கலவிசெய்தவனுமான பெருமானை
நான் சொல் முடிவு காணேன்	நான் சொல்லி முடிக்கும் வகையறிகின்றிலேன்;
என் சொல்லுவது	என்னவென்று சொல்லலாம்!
சொல்லீர்	நீங்களே சொல்லுங்கள்.

* * [பொன்முடியம் போரேற்றை.] எம்பெருமான் பராத்பரனாயிருந்து வைத்து என்னுடைய நைச்யத்தைக் கணிசியாதே என்னோடே வந்து கலந்த பெருங்குணத்தை நான் பேசவல்லேனல்லேனென்கிறார். அவனுடைய பராத்பரத்வத்தை முன்னடிகளில் அருளிச்செய்கிறார். உபயவிபூதிக்கும் தானே நாதன் என்பது விளங்கத் திருவபிஷேக மணிந்தவனாய், மிகவும் செருக்கையுடைய ஏறு போலே மேனாணித்திருப்பவனாய், தன்னுடைய குணசேஷ்டிதங்களாலே என்னையடிமை கொண்டவனாய், அழகிய திருத்தோள்கள் நாலையுமுடையனாய், ஸர்வேச்வரத்வஸூசகமாய்ப் பரமபோக்யமான திருத்துழாய் மாலையை யணிந்தவனாய், என்னுடைய எல்லையான தாழ்ச்சியைப்பாராதே என்னுள்ளே கலந்தவனான பெருமானை நான் ஒருபடி அநுபவிப்பது தவிர, பாசுரமிட்டுச் சொல்லும் பரிசு அறிகிலேன். விஷயாந்தரங்களை யநுபவித்து அவ்வநுபவத்திற்குப் பாசுரமிட்டுச் சொல்லுகின்ற உங்களைப்போலே இவ்விஷயத்தில் நான் ஒரு பாசுரமிட்டுச் சொல்ல மாட்டுகிறிலேன் என்றவாறு.

என்முடிவு காணாதே — கீழ் அடியாடியில் நான்முடிந்து போவதாயிருக்க, அதனை லக்ஷிக்கமாட்டாமல் என்றும் பொருள்கூறுவர். (அ)

சொல்லீரென்னம்மானை என்னாவியாவிதனை*
எல்லையில்சீர் என்கருமாணிக்கச்சுடரை*
நல்லவமுதம் பெறற்கரியவீடுமாய்*
அல்லிமலர்விரையொத்து ஆணல்லன்பெண்ணல்லனே. (9)

என் அம்மானை	எனக்கு ஸ்வாமியாய்
என் ஆவி ஆவி தனை	என் ஆத்மாவுக்கு ஆத்மாவாயிருப்பவனாய்
எல்லை இல் சீர்	எல்லையற்ற குணங்களையுடைய
என் கரு மாணிக்கம் சுடரை	எனது நீலரத்னம் போன்ற வொளியுருவை யுடையனான பெருமானை
சொல்லீர்	சொல்லுங்கள்.
நல்ல அமுதம்	நல்ல அம்ருதமாய்
பெறற்கு அரிய வீடும் ஆய்	எளிதாகப் பெறுவதற்கு முடியாத மோக்ஷநிலத்திற்கும் தலைவனாய்
அல்லி மலர் விரை ஒத்து	தாமரைப் பூவிலுள்ள பரிமளம்போல் பரமபோக்யனாய்
ஆண் அல்லன் பெண் அல்லன்	ஆணுருவமல்லாதவனாய்ப் பெண்ணுருவமுமல்லாதவனாயிருக்கின்றானவன்.

* * [சொல்லீர்.] கீழ்ப்பாட்டில் "சொல்முடிவு காணேன்நான் சொல்லுவதென் சொல்லீரே" என்று தமக்கு எம்பெருமானைப்பேச முடியாமையாலே பேசவுந் தவிர்ந்த ஆழ்வார் பின்னையும் தம்முடைய கப்பாஸையினால் ஸம்ஸாரிகளையுமழைத்து என்னுடையனான ஸர்வேச்வரனை எல்லாருங் கூடியாகிலும் ஒருபடி சொல்லுவோமே! என்கிறார்.

என்அம்மானைச் சொல்லீர் = அர்பவிஷயங்களை யநுபவித்து அவற்றைப் பரக்கப் பேசித்திரிகிறஸம்ஸாரிகளே! எம்பெருமானைப்பற்றிச்சிறிது சொல்லுங் கோள் என்கிறார். ஸ்ரீவைஷ்ணவர்களை விளித்துச் சொல்லுகிறதாகவுங் கொள்ளலாம்.

என்ஆவிஆவிதனை = (இதுமுதல் எம்பெருமானுக்கு விசேஷணங்கள்.) என்உயிர்க்கும் உயிராயிருப்பவன் என்றபடி. அதாவது—சரீரத்தினுள்ளே ஆத்மா அந்தர்யாமியாயிருந்துகொண்டு அதனை எப்படி ஆள்கின்றானோ அப்படி அந்த ஆத்மாவினுள்ளும் அந்தர்யாமியாயிருந்துகொண்டு அவனையும் ஆள் பவன் பரமாத்மாஎன்றபடி.

எல்லையில்சீர் என்கருமாணிக்கச்சுடரை = அளவிறந்த திருக்கல்யாண குணங்களையும் நீலமணிபோன்ற குளிர்ந்தவடிவழகையும் நான் அனுபவிக்கும் படி அருள்புரிந்தவன் என்கை. நல்லவமுதம் = பரமபோக்யன் என்றபடி. சரீரத்தை மாத்திரம் நோக்குகின்ற அம்ருதம்போலல்லாமல் ஆத்மாவையும் நோக்குகின்ற அம்ருதம் என்க.

பெறற்கு அரிய வீடும்ஆய் = பக்தியற்றவர்களுக்குப் பெறலாகா தமோக்ஷத் தை யளிப்பவன் என்று கருத்து. மோக்ஷதானத்திற்கு நிர்வாஹகன் என்னவு மாம். அல்லிமலர் விரையொத்து—தாமரைப்பூவின் பரிமளம்போல் போக்யன் என்றபடி. ஆணல்லன் பெண்ணல்லன்—புருஷனுகையாலே ஸ்த்ரீகளிற் காட் டில் வேறுபட்டிருக்கிறப்போலே புருஷோத்தமனாகையாலே புருஷர்களிற் காட் டிலும் வேறுபட்டவன் என்றபடி. நாட்டிற்காண்கிற ஆணின் படியுமல்லன், பெண்ணின் படியுமல்லன். (௯)

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன்*
காணலுமாகான் உளனல்லனில்லையல்லன்*
பேணுங்கால்பேணும் உருவாகு மல்லனுமாம்*
கோனைபெரிதுடைத்து எம்பெம்மானைக்கூறுதலே. 10

எம்பெம்மானை கூறுதல்	எம்பெருமானைப் பற்றிச் சொல்லுவதானது
கோனைபெரிது உடைத்து	மிகவும் ப்ரயாஸமுடையதாயிருக்கிறது; (ஏனென்னில், அப்பெருமான்)
ஆண் அல்லன்	ஆணுமல்லன்,
பெண் அல்லன்	பெண்ணுமல்லன்,
அல்லா அலியும் அல்லன்	இவ்விரண்டுமல்லாத நபும்ஸகனுமல்லன்;
காணலும் ஆகான்	கண்ணாற் பார்க்கவும் முடியாதவன்;
உளன் அல்லன்	உள்ளவனல்லன்;
இல்லை அல்லன்	இல்லாதவனுமல்லன்;
பேணுங்கால்	(அடியார்) விரும்பின காலத்து
பேணும் உரு ஆகும்	அவர்கள் விரும்பின வடிவை யுடையனுவன்;
அல்லனும் ஆம்	அப்படி யல்லாதவனுயுமிருப்பன்;

(ஆதலால் என்க.

* * [ஆணல்லன்.] எம்பெருமானைப் பேசித்தலைக்கட்டுவது மிகவும் ஆயாஸம் என்கிறார் ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் — ஸகலவஸ்து விலக்ஷணன் என்றபடி. „ நைஷ ஸ்த்ரீ ந புமாநேஷ நைவ சாயம் நபும்ஸக: । நாயம் பூர்வோ நாபரோ ந மத்யோ ந பஞ்சம: ॥" என்று ருக்வேத ஆரண்யகத்தில் ஓதப்பட்டுள்ளது. அதையடியொற்றி இந்தப்பாசுரம். இப்பாசுரத்தை பட்டர் இங்ஙனம் உபந்யஸித்துக் கொண்டிருக்கையில் கேட்டிருந்த ஒரு தமிழன் 'உலகத்திலுள்ள பொருள்கள் ஸ்த்ரீலிங்க புல்லிங்க நபும்ஸக லிங்கங்களிற் சேர்ந்தல்லது இருக்கமாட்டாவே; எம்பெருமான் இந்த மூன்றுபடியிலும் சேர்ந்திலன் என்றால் சூந்யம் என்று சொன்னபடியாகுமே; பரப்ரஹ்மம் சூந்யம் என்றோ ஆழ்வாருளிச் செய்வது?' என்று கேட்டானாம். அதற்கு உத்தரமாக பட்டர் அருளிச் செய்தது;—பரப்ரஹ்மம் சூந்யவஸ்து என்று சொல்வது ஆழ்வார்க்கு விவக்ஷிதமாகில் "ஸாமாந்யே நபும்ஸகம்" என்றபடி * ஆணல்ல பெண்ணல்ல அல்லாவலியுமல்ல * என்று ஆழ்வார் அருளிச் செய்திருப்பார். அங்ஙனன்றியே அல்லன் அல்லன் அல்லன் என்றே (ஆண்பாலுக்குரிய அன் விகுதியையிட்டு) அருளிச் செய்திருக்கையாலே 'எம்பெருமான் ஸாமாந்ய புருஷனல்லன், புருஷோத்தமன்' என்று தெரிவிக்கப் பட்டதாகாதோ? என்று. இதைக் கேட்டு அவன் மிகவு முகந்தான்.

காணலுமாகான் = ஆண்பெண் அலியென்கிற இவற்றைக்காணும் பிரமாணங்களினால் காணக்கூடாதவன் என்க. „ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம்" „ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்" என்றும் "என்றேனும் கட்கண்ணாற் காணாத வவ்வுரு" என்றும் சொல்லுகிறபடியே மாம்ஸக்கண்ணாற் காணமுடியாதவனென்றவாறு.

உளனல்லன் இல்லையல்லன் = நாஸ்திகர்களுக்கு நாஸ்தி யென்னலாம்படி யிருப்பவன், ஆஸ்திகர்களுக்கு அஸ்தி யென்னலாம்படி யிருப்பவன் என்றபடி. பேணுங்காற் பேணுமுருவாகும் — "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே" என்கிறபடியே அவரவர்கள் விரும்புகிறபடி வடிவு கொள்பவன் என்கை. •தேவகி முதலானவர்கள் தன்னை ஆச்ரயித்தால் அவர்களுகந்தபடியே அவர்கட்குப் பிள்ளையாய்ப் பிறப்பவன் என்னவுமாம். பேணுங்கால்—பிரார்த்திக்குமிடத்து, பேணுமுருவாகும்—மறைத்துக்கொள்ள வேண்டும்படியான உருவத்தோடு வந்து பிறப்பவன் என்றனு மொன்று.

அல்லனுமாம் = பிறந்தவிடந்தன்னிலே விமுகரான கம்ஸ சிசுபாலாதிகளுக்குக் கிட்டவொண்ணாதவன். (ஆக இப்படிப்பட்ட) எம்பெம்மானைக் கூறுதல் கோணை பெரிதுடைத்து — எம்பெருமானைத் துதிப்பது ச்ரமஸாத்யம்—ஒருவிதமாகவும் சொல்வதற்கில்லை என்றபடி. கோணை — மிறுக்கு; ஆயாஸம். (௧௦)

கூறுதலொன்றாராக் குடக்கூத்தவம்மானை*
கூறுதலேமேவிக் குருகூர்ச்சடகோபன்*
கூறினவந்தாதி ஓராயிரத்துளிப்பத்தும்*
கூறுதல்வல்லாருளரேல் கூடுவர்வைகுந்தமே. (11)

ஒன்று கூறுதல் ஆரா	ஒரு குணத்தைச் சொல்லுதலும் முடியாத	ஓர் ஆயிரத்துள்	ஆயிரம் பாசுரத்திலுள்ளே
குடக் கூத்த அம்மானை	குடக்கூத்தாடின கண்ணபிரானைப்பற்றி	இ பத்தும்	இத்திருவாய் மொழியை
கூறுதல் மேவி	சொல்லுவதில் ஆசை கொண்டு	கூறுதல் வல்லார்	ஓத வல்லவர்கள்
குருகூர் சடகோபன் கூறின—;		உளர் ஏல்	உண்டாகில் (அவர்)
அந்தாதி	அந்தாதித்தொடையான	வைகுந்தம் கூடுவர்	பரமபதம் சேரப் பெறுவர்.

• • [கூறுதல்.] இத்திருவாய் மொழியைக் கற்பார் இதிற் சொன்னபடியே எம்பெருமானைப் பரிபூர்ணமாகத் திருநாட்டிலே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. ஒரு குணத்தைப் பேசப்புகுந்தாலும் பேசித்தலைக்கட்ட முடியாமல் „யதோவாசோ நிவர்த்தந்தே” என்று மீள வேண்டும்படியானவனும், குடக்கூத்து முதலான திவ்ய சேஷ்டிதங்களினால் பரம ஸௌலப்யத்தைக்காட்டி ஆட்படுத்திக்கொள்ள வல்லவனுமான எம்பெருமானைப் பேசப்புகுந்து ஆழ்வார் அருளிச்செய்த அந்தாதித் தொடையான இவ்வாயிரத்துள் இத்திருவாய் மொழியை ஓதவேணுமென்னும் விருப்பமுடையாருண்டாகில் அவர் வைகுந்தமே கூடுவர் என்றதாயிற்று.

இங்கே ஈட்டு ஸ்ரீ ஸூக்தி காண்மின்;—“ அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்று கொலோவென்று ஆசைப்பட்டுப் பெறாதே * அடியாடியாய் வ்யஸநப்படாதே இப்பாசுர மாத்திரத்தைச் சொல்லவே நான் பிரார்த்தித்த பேறு பெறுவர்கள்; பித்ருதநம் கிடந்தால் புத்ரன் அழித்து ஜீவிக்குமத்தனையிறே. ஆழ்வார்பட்ட வ்யஸநம் படவேண்டா. இது கற்றார்க்கு இவர் பேற்றிலே அந்வயம்.” என்பதாம்.

வல்லாருளரேல் என்கையாலே இவ்விருள்தரு மாஞாலத்திலே இதில் ருசியுடையார் துர்லபர் என்பது பெறப்படும். (கக.)

ஐந்தாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளீ.

ஸ்வப்ராப்த்யா ஸித்தகாந்திம் ஸங்கடிததயிதம் விஸ்புரத்துங்கமூர்த்திம்
ப்ரீத்யுந்மேஷாதிபோக்யம் நவகநஸரஸம் நைகபூஷாதித்ருச்யம் ।
ப்ரக்யாதப்ரீதிலீலம் துரபிலபரஸம் ஸத்குணாமோதஹ்ருத்யம்
விச்வவ்யாவ்ருத்தசித்ரம் வ்ரஜயுவதிகணக்யாதரீத்யாந்வபுங்க்த ॥

1. ஸ்வப்ராப்த்யா ஸித்தகாந்திம்— * அந்தாமத்தன்பு செய்து என்னவி சேரம்மானுக்கு * ஆழ்வார் தம்மோடே கலக்கப் பெறுகையாலே உஜ்ஜ்வலனானபடி.

2. ஸங்கடிததயிதம் — * திருவிடமே மார்வம் * ஆழ்வாரோடே கலந்த பிறகுதான் பிராட்டியோடே சேர்ந்தானாயிருக்கிறபடி.

3. விஸ்புரத்துங்க மூர்த்திம் — * மின்னுஞ் சுடர்மலைக்கு * தேசு பொலிந்த மலை போலுயர்ந்த திருமேனியையுடையவன்.

4. ப்ரீத்யுந்மேஷாதி போக்யம் — * அப்பொழுதைக்கப்பொழுதென்னாரா வமுதமே * உவப்பின் மிகுதியாலே க்ஷணந்தோறும் அபூர்வ வஸ்துபோல் பரம போக்யன்.

5. நவகநஸரஸம் — * காரார் கருமுகில்போலென்னம்மான். * நீர் கொண்டெழுந்த காளமேகம்போலே க்ருபாரஸத்தைப்பொழியுமவன்.

6: நைகபூஷாதித்ருச்யம் — * பலபலவே யாபரணம் பேரும் பல பலவே* பல திருவாபரணங்கள் முதலியவற்றால் ஸ்ப்ருஹணீயன்.

7. ப்ரக்யாதப்ரீதிலீலம் — * பாம்பணைமேல் பாற்கடலுள் * திருப்பாற்கடலில் சேஷசயனத்தின்மீது பள்ளிகொண்டது, நப்பின்னைபிராட்டிக்காக எழுகாளை களைச் செருக்கடக்கினது, வாலி வதத்திற்கு அங்கமாக மராமரமேழெய்தது முதலான ஸம்ப்ரஸித்த ப்ரேம லீலைகளையுடையவன்.

8. துரபிலபரஸம் — * என்னுள் கலந்தானைச் சொல் முடிவு காணேன் நான் * வாசாமகோசரமான ஆச்ரித ப்ரேமமுடையவன்.

9. ஸத்குணாமோதஹ்ருத்யம் — * எல்லையில் சீர் என்கருமாணிக்கம்... ... அல்லிமலர் விரையொத்து * சிறந்த திருக்குணங்களாலும் திவ்ய பரிமளத்தாலும் மநோஹரன்.

10. விச்வவ்யாவ்ருத்தசித்ரம் — * ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியுமல்லன். * உலகிற்காணும் பொருள்களைப் போலல்லாதவனாய் அற்புதமாய் இருப்பவன். — ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை [வ்ரஜயுவதிகணக்யாதரீத்யா அந்வபுங்க்த] இந்த ஐந்தாவது திருவாய்மொழியிலே ஆழ்வார் 'தம்மோடே வந்து ஸம்ச்லேஷிக்கையாலே திவ்யாயுத திவ்யாபரணங்களெல்லாம் புதுக்கணிக்கப் பெற்றான்' என்றுகந்து ஆயர்குலத்திலே வந்துபிறந்து தங்களோடே சேருகையாலே நிறம் பெற்ற குண விக்ரஹாதிகளையுடைய கண்ணபிரானை ஆய்ச்சிகள் அநுபவித்தாற்போலே அநுபவித்தார். நிகமனப்பாசுரத்தில் "குடக்கூத்தவம்மானைக் கூறுதலேமேவி" என்று ஆழ்வாருளிச்செய்ததை அடியொற்றி வ்ரஜயுவதீத்யாதி அருளிச் செய்யப்பட்டது.

தூப்புல்பிள்ளை பொன்னடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அந்தாமத் தன்பால் அடியார்களோ டிறைவன்
வந்தாரத் தான்கலந்த வண்மையினல்—சந்தாபந்
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே
வாய்ந்தவன்பை நாடோறும் வை.

பதவுரை.

நெஞ்சமே	மனமே!	ஆர கலந்த வண்மையினல்	பரிபூர்ண ஸம்ச்லேஷம் தந்த ஔதார்யத்தினல்
அம் தாமத்து அன்பால்	ஸ்ரீ வைகுண்டத்திற் பண்ணும் விருப்பத்தோடே	சந்தாபம் தீர்ந்த	தாபம் நீங்கப்பெற்ற
அடியார்களோடு வந்து	(அஸ்த்ர பூஷணாதிகளாயுள்ள) நித்ய ஸூரிகளோடு கூடிப் (பரமபதத்தினின்றும்) வந்து	சடகோபன்	ஆழ்வாருடைய
இறைவன் தான்	எம்பெருமான்	திரு அடிக்கே	திருவடிகளிலேயே
		வாய்ந்த அன்பை	பொருத்தமான பக்தியை
		நாள் தோறும் வை	எப்போதும் செலுத்துவாயாக.

திருநாட்டிலுள்ள நித்யஸூரிகளோடே கூடி அநுபவிக்கவேணுமென்று பாரித்த ஆழ்வாருடைய மனோரதத்தை ஒருவாறு தீர்க்கநினைத்த எம்பெருமான் பரமபதத்தில் தனக்குள்ள விருப்பத்தை ஆழ்வார் பக்கலிலே பண்ணி, திவ்யாபரண திவ்யாயுதங்களாகிற நித்யஸூரிகளோடே தானே இந்நிலத்தில் திருநகரியேற எழுந்தருளி ஸம்ச்லேஷ ரஸம் தந்தருளினபடியாலே வருத்தம் தீரப்பெற்ற ஆழ்வாருடைய திருவடிகளிலேயே பக்தி பண்ணுமாறு திருவுள்ளத்திற்கு உரைத்தாராயிற்று. (கரு)

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஶ்ரீமாந் ஸூரிஸஹித ஸ்வாவாஸக்ருதாகதி:
ஸத்ருஷ்ணஜநதாபப்ரஶமநஹர்ஷ: ।
ஸம்ஶ்லேஷோத்புல்லகஞ்ஜாக்ஷிகராங்க்ரிராஸீத்
தத்த்வம் ஹ்யேதத் ஸகம்ய நிரநந்த ॥

மிக விளங்குகின்ற மரகதக்குன்றமொக்கு மெம்பெருமான் நித்யஸூரிகளோடு கூடினவனாய் வந்தருளி ஆழ்வாருடைய ஆர்த்தியைப் போக்கினவனாய் ஆழ்வாரோடே ஸம்ச்லேஷித்து, திருக்கண் திருக்கை திருவடி முதலிய அவயவங்கள் அப்போதலர்ந்த செந்தாமரை மலர்போல் விளங்கப் பெற்றவனாயினன் என்கிற விஷயத்தை இந்த ஐந்தாந் திருவாய் மொழியில் ஆழ்வார் அருளிச்செய்து மகிழ்ந்தார் என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து—ஆறாந் திருவாய்மொழி,
வைகுந்தா மணிவண்ணனே.

அவதாரிகை.

ஆடியாடி யென்னுந் திருவாய்மொழியில் ஆழ்வார்பட்ட ஆர்த்தியெல்லாம் தீர எம்பெருமான்வந்து ஸம்ச்லேஷித்தமை கீழ்த்திருவாய்மொழியில் சொல்லிற்று. அந்த ஸம்ச்லேஷத்தினால் எம்பெருமான் அளவுகடந்த த்ருப்தியை யடைந்தவனாய் 'இவ்வாழ்வார்க்கு என்னவுதவி செய்வேன் நான்!, இவர்க்கு என்ன கொடுப்பேன்!' என்று தடுமாறி நிற்பவனாய், இவ்வாழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ணி 'இப் பரமபுருஷனையா நாம் அணுகுவது? நம்மால் இவனுக்கு நிறக்கேடு உண்டாகுமே! அஃது உண்டாகலாமோ? நாம் இவனைவிட்டு ஒதுங்கி நிற்பதே நன்று' என்று நினைத்து ஒருகால் அகன்று போய்விடுவாராயின் அலப்யலாபமான இதனை நாம் இழந்துவிடுவோமே! இவ்வாழ்வார்க்கும் நமக்குமுண்டான இக்கலவி நித்யமாயிருக்க வேணுமே' என்று அதிசங்கை கொண்டிருக்கையில், அதைத் தெரிந்துகொண்ட ஆழ்வார் 'பிரானே! நீ இங்ஙனம் அதிசங்கை கொள்ள வேண்டா; உன்னை நான் பிடித்தபிடி ஸாமாந்யமன்று; இனி ஒருநாளும் உன்னை நான் விடமாட்டேனாப்படி திடமாகப் பற்றிக்கொண்டேன் காண்' என்றுகூறி எம்பெருமானைத் தேற்றுகிறார் இத்திருவாய் மொழியில். ()

வைகுந்தா! மணிவண்ணனே என்பொல்லாத்திருக்குறளா! என்னுள்மன்னி *
வைகும் வைகல்தோறும் அமுதாய வானேறே!
செய்குந்தாவருந்தீமை யுன்னடியார்க்குத்தீர்த்து அசுரர்க்குத்தீமைகள்
செய்குந்தா! * உன்னைநான் பிடித்தேன்கோள் சிக்கெனவே. (க)

வைகுந்தா	பரமபத நாதனே!
மணி வண்ணனே	நீலமணி போன்ற வடிவை யுடையவனே!
என்	என்னுடைய அநுபவத்திற்கு உரிய
பொல்லா திருகுறளா	அழகிய வாமன மூர்த்தியே!
என் உள்	என் மனத்தில்
மன்னி வைகும்	நிலைபெற்றுத் தங்கியிருப்பவனும்
வைகல் தோறும்	ஒவ்வொரு க்ஷணத்திலும்
அமுது ஆய	அம்ருதமாயிருப்பவனுமான
வான் ஏறே	நித்யஸூரி நாதனே!,
செய்	செய்யப்பட்டு

குந்தா	குறைபடாத
அரு தீமை	போக்குதற்கரிய பாவங்களை
உன் அடியார்க்கு தீர்த்து	உன் தொண்டர்கட்குப் போக்கி
அசுரர்க்கு	ஆஸுரப்ரக்ருதிகளுக்கு
தீமைகள்	அந்தத் தீமைகளை
செய்	உண்டாக்குகின்ற
குந்தா	பரிசுத்தனே!
உன்னை	இப்படிப்பட்ட வுன்னை
நான்	அடியேன்
சிக்கென	உறுதியாக
பிடித்தேன்	பிடித்துக்கொண்டவன் (என்று)
கொள்	திருவுள்ளம் பற்ற வேணும்.

• • [வைகுந்தா.] இத்திருவாய் மொழியில் இவர் கூறின பாசுரங்களில் "அல்லாவி யுள்கலந்த" என்றும் "என்முடிவு காணாதே யென்னுள் கலந்தானை" என்றும் பேசினர். அல்லாவி என்றதும் என்முடிவு காணாதே என்றதும் தம் முடைய நைச்சியத்தைக் காட்டினபடியாதலால், அந்த நைச்யாநுஸந்தானம் முற்றி இவர் நம்மை விட்டுவிடுவரோ? என்று எம்பெருமானுக்கு அதிசங்கை பிறக்க அதனை அகற்றிக்கொண்டு உன்னை நான் சிக்கனப் பிடித்தேன் என்கிறார்.

வைகுந்தா! என்பதனால் பரத்வத்தையும், மணிவண்ணனே! என்பதனால் ஸௌலப்யத்தையும் தெரிவிக்கிறார். மணியாவது சிறந்த ரத்னம்; அஃது எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் கைக்குள்ளே அடக்கியாளலாம்படியிருக்குமா போலே எம்பெருமானும் அடியவர்கையில் அடங்கியவன் என்பதைக் காட்டிற்று கும். உன்னுடைய பெருமைகளையெல்லாம் மறந்து எனக்குக் கையாளாக ஆயினை யே! என்று ஆழ்வார் வியந்து கூறுகிறபடி.

மஹாபலியின் யஜ்ஞபூமியிற் சென்றபோது பரமஸுந்தரமான வடிவைப் பரிக்ரஹித்து அவ்வடிவழகினாலும் மனோஹரங்களான வார்த்தைகளாலும் அந்த மாவலியை மயக்கினாப்போலே தம்மையும் மயக்கினனென்பது தோன்ற "என் பொல்லாத் திருக்குறளா" என்கிறார். எம்பெருமானைப்பற்றிச் சொல்லுமிடத்து பொல்லா என்று சொல்லலாமோ வென்னில்; த்ருஷ்டி தோஷம் வாராமைக்காகக் குழந்தைகளின் முகத்திலே கரிபூசுமாபோலே ஆழ்வாரும் 'அழகிய' என்று சொல்ல வேண்டிய ஸ்தானத்தில் இது சொல்லுகிறாரென்ப; விபரீத லக்ஷணை யென்று கொள்வது. அன்றியே, பொல்லா—தீதற்ற என்றனு மொன்று.

"திருக்குறளா வென்னுள் மன்னி" என்ற சொற்சேர்த்தி யழகினால் தொனிக்கும் அர்த்தத்தை நம்பிள்ளை அருளிச் செய்கிறபடி பாரீர்—"இந்த்ரன் ராஜ்யலாபம் பெற்றுப்போனான்; மஹாபலி ஔதார்யலாபம் பெற்றுப்போனான்; அவ்வடிவழகு(க்கு) ஊர்றிருந்தது இவர் நெஞ்சிலேயாயிற்று" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. ஸ்ரீவாமந மூர்த்தியாய்த் திருவவதரித்து யாசகத்தொழில் செய்த காலத்திலே இந்திரன்தான் ஸாம்ராஜ்யம் பெற்றுக் களித்துப்போனானகையாலே அவனும் அந்த வாமன வடிவழகை நெஞ்சிற்கொள்ள அவகாசம் பெற்றிலன்; மஹாபலி இழவோடே போனானகையாலே அவனும் வடிவழகிலே யீடுபடப் பெற்றிலன்; சுக்கிரன் நமுசிபோல்வார் கண்ணிழந்தும் வானிற் சுழற்றப்பெற்றும் அல்லலோடே சென்றார்களாதலால் அவர்களும் இவ்வடிவழகை யநுபவிக்க இழந்தார்கள்; அக்குறைகளெல்லாந் தீர, ஆழ்வார்தாம் அவ்வழகை அப்படியே தம் திருவுள்ளத்தில் ஊன்றவைத்துக் கொண்டாரென்றவாறு.

வைகும் வைகல்தோறும் அமுதாய வானேறே! = க்ஷணந்தோறும் எனக்கு அபூர்வமான அம்ருதம்போலே பரம போக்யனாயிருப்பவனே!, உன்னுடைய போக்யதையை நித்யஸூரிகளுக்கு அநுபவிப்பிக்குமாபோலே அடியேனுக்கும் அநுபவிப்பித்தருள்பவனே! என்றபடி. வைகு மென்பதை வைகலிலுங்கூட்டலாம்.

[செய்குந்தா வருந்தீமை இத்யாதி.] "செய், குந்தா, அருந்தீமை" என்றும் செய்கும், தாவருந் தீமை என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: முந்தினவகையில், செய்—செய்யப்பட்டு, குந்தா—தப்பாமல் பயன் தரக்கூடிய, அரு—ஸ்வப்ரயத்நத்தாலே போக்கிக்கொள்ளமுடியாத, தீமைகளைத் தொலைத்து என்று பொருள் காண்க. பிந்தினவகையில்செய்கும்—செய்யப்பட்டனவும், தாவரு—(பலன் அனுபவியாமல்) தப்பமுடியாதனவுமான பாவங்களைத் தொலைத்து என்று பொருள் காண்க. சொற்பிரிவில் சிறிது வாசியேயன்றி, கருத்தில் வாசியில்லை.

"அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் = அவச்யமநு போக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" என்றும் "நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி ஶதைரபி = நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி" என்றும் சொல்லுகிறபடியே பல்லூழியூழி காலம்வரையிற் பலாநுபவம் பண்ணியே தொலைக்கவேண்டிய பாவங்களை பக்தர்கள் விஷயத்தில் க்ருபாமாத்திரத்தினாலே தொலைத்தருளி, ஆஸுரப்ரக்ருதிகளான தீயவர்திறத்திலே அவற்றின் பலனை நிக்ரஹத்தைச் செய்தருள்பவனே! என்றபடி. [முதற்பத்தில் "காணுநின்றடு நம் பழமையங் கொடுவினையுடனே மாளும்" (1—3—8) என்ற பாசுரத்தின் உரையிலே சாரீரகமீமாம்ஸையின் நிர்ணயத்தை யெடுத்து விரிய வுரைத்திருக்கின்றோம்; அஃது இவ்விடத்திற்கும் அறியவுரியது; அங்கே கண்டுகொள்க.]

> இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"கடக்கவரிதான தீமைகளை உன்பக்கலிலே நிக்ஷிப்தபரராயிருப்பார்க்கு வாராதபடி பரிஹரித்து ஆஸுரப்ரக்ருதிகளின்மேலே பொகடும்படியான சக்தியை யுடையவனே!, முன் ப்ராதிகூல்யம் பண்ணினவர்கள் அநுகூலித்து நாலடி வரநின்றவாறே பின்னை அவர்கள் சத்ருக்கள்மேலே பொகடுமாயிற்று.— 'த்விஷந்த: பாபக்ருத்யாம்—த்விஷந்த: பாபக்ருத்யாம்' என்கிறபடியே. கடலுக்குத் தொடுத்த அம்பை, அவன் முகங்காட்டினவாறே மருகாந்தாரத்தில் அஸுரர்கள்மேலே விட்டாப்போலே. அங்ஙன் ஒரு போக்கடி கண்டிலனாகில் 'உரஸா தாரயாமாஸ பார்த்தம் ஸஞ்சாத்ய மாதவ:—உரஸா தாரயாமாஸ பார்த்தம் ஸஞ்சாத்ய மாதவ:' என்று பகதத்தன் விட்ட சக்தியை அர்ஜுநனைத் தள்ளித் தன் அந்த:புரத்திலே ஏற்றுப்போலே தான் ஏறிட்டுக்கொண்டு அநுபவித்தல் செய்யுமித்தனை." என்று.

குந்தா! = இதற்கு மூவகையாகப் பொருள் கொள்ளலாம்: 1. குந்தமென்று குருந்தமலரின் பூவைச் சொன்னபடியாய், அது வெண்ணிறத்ததாதலால் அதுபோல் நிஷ்கல்மஷமான ஸ்வபாவ முடையவனே!. 2. "குமுத: குந்தர: குந்த:—குமுத: குந்தர: குந்த:" என்று ஸஹஸ்ரநாமமாதலால் இங்குக் குந்தனென்று ஒரு திருநாமஞ் சொன்னபடி யாகலாம். அத்திருநாமத்திற்கு சங்கராசார்யர் உரைத்த பொருள்:—குந்த மலர்போல அழகான அங்கமுடையவர்; ஸ்படிகம்போலத் தெளிவாயிருப்பவரென்கை. பரசுராமாவதாரத்தில் பூமியைக்

கச்யபருக்கு யாக தக்ஷிணையாகக் கொடுத்தவர்; பூமியை க்ஷத்ரியர்களில்லாமற் கண்டித்தவர்.—இத் திருநாமத்திற்கு ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்த அர்த்தமாவது—ஞானம் வைராக்யம் முதலிய முற்படிகள் ஏறினவர்களுக்குப் பரபக்தி பரஜ்ஞானம் பரமபக்திகளாகிய மேற்படிகளைக் கொடுப்பவர்; அழிக்கப்பட்ட பாவம் திரும்பி யணுகாமலிருக்கும்படி போக்குகிறவர் என்பதாம்.

3. வடமொழியில் கூடஹமென்று ஒரு ஆயுத விசேஷத்திற்கு [ஈட்டிக்கு]ப் பெயராதலால் அதனை யுடையவரே! என்னவுமாம். ஷோடசாயுதங்களில் குந்தமும் பகவானுக்கு ஒரு ஆயுதமாகும். (இப்பொருள் பன்னீராயிரப்படி யுரையிற் காண்பது.)

உன்னை நான் சிக்கனப்பிடித்தேன்—என்னை நீ விட்டாலும் உன்னை நான் விடமுடியாதபடி பற்றிக்கொண்டேன். ... ... (க)

சிக்கெனச்சிறிதோரிடமும் புறப்படாத்தன்னுள்ளே * உலகுகள்
ஒக்கவேவிழுங்கிப் புகுந்தான்புகுந்ததற்பின் *
மிக்கஞானவெள்ளச்சுடர்விளக்காய்த் துளக்கற்றமுதமாய் * எங்கும்
பக்கநோக்கறியான் என்பைந்தாமரைக்கண்ணனே. (உ)

சிறிது ஓர் இடமும்	மிக அற்பமான இடமும்
புறப்படா	வெளிப்பட்டிராமல் [எல்லாம் உள்ளே யடங்கும்படி]
உலகுகள்	உலகங்களை
தன் உள்	தனக்குள்ளே
ஒக்க	சமமாக
விழுங்கி	அமுது செய்து (அந்தத் திருக்கோலத்துடனே)
சிக்கன	உறுதியாக
புகுந்தான்	என்னுள் பிரவேசித்தான்;
புகுந்ததன்பின்	பிரவேசித்தபின்
மிக்க	மிகுந்த
ஞானம் வெள்ளம்	ஞானப்பிரவாஹமாகிற
சுடர்	ஒளியுள்ள
விளக்கு ஆய்	தீபமாகி
துளக்கு அற்று	(நான் ஒருகால் விட்டு விடுவேனோ என்கிற) ஸந்தேஹம் தீர்ந்து
அமுதம் ஆய்	அம்ருதமாகி
என்	எனக்கு விதேயனான
பைந் தாமரை கண்ணன்	அழகிய தாமரைமலர் போன்ற திருக்கண்களை யுடைய பெருமான்
எங்கும்	எவ்விடத்திலும்
பக்கம் நோக்க அறியான்	திரும்பிப்பார்ப்பது மின்றியே யிராநின்றான்.

* * * [சிக்கனச்சிறிது] எம்பெருமான் ஆழ்வார் தம்மோடே கலந்து மிக்க ஒளி பெற்றுனைப் கொண்டு வேறு போக்கிட மற்றுத் தம் பக்கலிலேயே படுகாடு கிடக்கிறபடியைப் பேசுகிறார்.

"உலகுக ளொக்கவே விழுங்கிப் புகுந்தான்" என்ற சொல் நயத்தை நோக்கி ஆறாயிரப்படியில் பிள்ளானருளிச் செய்கிறார்—"ஜகத் ஸ்ருஷ்ட்யாதி அந்ய பரதையைப் போக்கிக்கொண்டு என்னுள்ளே புகுந்தான்" என்று. அதை

அடியொற்றி ஈடு முப்பத்தாறாயிரத்திலும்—"நாம் ஆழ்வாரை யநுபவிக்கும் போது செருப்புவைத்துத் திருவடி தொழப்புக்காப்போலே யாகவொண்ணாது என்று பார்த்து ஜகத்ரக்ஷணத்துக்கு வேண்டும் ஸம்விதாந மெல்லாம் பண்ணி அநந்யபரனாய் அநுபவித்து, போகமாட்டாதே யிருந்தான்: ராஜாக்கள் அந்தப்புரத்திலே புகுவது நாட்டுக்கணக்கு அற்றபின்பிறே" என்றருளிச் செய்தார். பாசுரத்தில், உலகுகளை விழுங்கினது மாத்திரமே சொல்லப்பட்டிருந்தாலும் ஜகத்ரக்ஷணார்த்தமாக எம்பெருமான் செய்யும் ஸகல காரியங்களுக்கும் அது உபலக்ஷணமாக இங்குக் கொள்ளத்தக்கது. உலகுக்குச் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் ஒருவாறு செய்து முடித்துக்கொண்டு க்ருதக்ருத்யனாய் ஆழ்வாரை யநுபவிக்கப் புகுந்தானும்.

அங்ஙனம் புகுந்தபின்பு எம்பெருமானுக்குண்டான வைலக்ஷண்யம் பின்னடிகளிற் கூறப்படுகின்றது. அவன்தான் இயற்கையிலே ஸர்வஜ்ஞனாயிருக்கச் செய்தேயும் ஆழ்வாரோடு கலப்பதற்கு முன்பு அந்த ஸர்வஜ்ஞத்வம் சிறிது சுருங்கியிருந்து பிறகு விரிந்ததுபோலும். பெரிய பிராட்டியார் வந்து திருமுலைத்தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் புரிந்து பார்க்கவறியாதபடி இங்கே அத்யந்தம் ஆழங்காற்பட்டான்.

எங்கும் பக்கநோக்கறியான் என்ற விடத்து ஈட்டில் ஒரு ஐதிஹ்ய ஸம்வாதம் காட்டப்படுகிறது. அதாவது—மணக்கால்நம்பி ஆளவந்தாரை விசேஷ கடாக்ஷம் செய்தருளின பின்பு ஒருநாள் "குருகை காவலப்பனிடத்திலே யோக ரஹஸ்ய முண்டு" என்று ஆளவந்தார்க்குச்சொல்ல, அவரும் அப்பன் ஸ்ரீபாதத்திலே சென்று அதைப் பெறவேணுமென்று விரும்பி அவரெழுந்தருளியிருக்குமிடமான கங்கைகொண்ட சோழபுரத்தேறச் செல்ல, அப்பனும் அங்கே ஒரு குட்டிச்சுவரிலே யோகநிரதராய் எழுந்தருளியிருக்க, அப்போது அவர்க்கு ஸமாதிபங்கம் பண்ணவொண்ணாதென்றெண்ணிய ஆளவந்தார் அந்தச் சுவர்க்கு இப்பால் நிற்க, யோகநிஷ்டரான அப்பனும் திரும்பிப்பார்த்து 'இங்குச் சொட்டைக் குலத்தார் ஆரேனும் வந்தாருண்டோ?' என்று கேட்க, உடனே ஆளவந்தார், அடியேன் என்று எதிரே சென்று தண்டன் ஸமர்ப்பித்து, 'அடியேன் இங்கு விடைகொண்டது தேவரீருக்குத் தெரியாதபடி பின்னே நிற்க, தேவரீர் அறிந்தது எங்ஙனே?' என்று கேட்க, அதற்குக் குருகை காவலப்பனருளிச் செய்த வார்த்தை—எம்பெருமானும் நானுமாக அநுபவித்துக் கொண்டிருந்தால் பெரிய பிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் அவளது முகத்தையுங்கூடப் பாராத ஸர்வேச்வரன் என் கழுத்தை யமுக்கி நாலுமூன்று தரம் நீரிருந்த பக்கமாக எட்டிப்பார்த்தான்; அப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக்குலத்திலே சிலர் வந்திருக்கவேணும் என்றிருந்தேன்காணும் என்றார். ஸ்ரீமந்நாத முனிகளின் குலம் சொட்டைக்குல மெனப்படும். ஆழ்வார் பக்கலில் எம்பெருமான் பண்ணியிருந்த விசேஷ கடாக்ஷம் அவர்க்குப்பிறகு ஸ்ரீமந்நாத முனிகளின் திருவம்சத்தில் பெருகத் தொடங்கிற்றென்பது இங்கு அறியத்

தக்கது. "எங்கும் பக்க நோக்கறியான்" என்ற விடத்திற்கு இது மிகப் பொருத்தமான ஸம்வாதம். ... . (உ)

தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவும் தலைமகனை * துழாய்விரைப்
பூமருவுகண்ணி யெம்பிரானைப்பொன்மலையை *
நாமருவிநன்கேத்தியுள்ளிவணங்கி நாம்மகிழ்ந்தாட * நாவலர்
பாமருவிநிற்கத்தந்த பான்மையேவள்ளலே ! (௩)

தாமரை கண்ணனை	தாமரைமலர் போன்ற திருக்கண்களை யுடையவனும்
விண்ணோர் பரவும்	நித்யஸூரிகள் புகழ்கின்ற
தலைமகனை	ஸ்வாமியும்
விரை பூ மருவு	பரிமளமுள்ள புஷ்பங்கள் பொருந்திய
துழாய் கண்ணி	திருத்துழாய் மாலையை யணிந்த
எம்பிரானை	எம்பெருமானும்
பொன் மலையை	பொன்மலைபோன்று உயர்ந்து விளங்குபவனுமான திருமாலை
நாம் மருவி	யாம் அடைந்து
நன்கு ஏத்தி	நன்றாகத் துதித்து
உள்ளி	சிந்தித்து
வணங்கி	நமஸ்கரித்து (இப்படி மூன்று கரணங்களாலு மூண்டான அநுபவத்தாலே)
நாம் மகிழ்ந்து ஆட	நாம் ஸந்தோஷத்தோடு நர்த்தனம் பண்ணும்படியாகவும்
நா அலர் பா மருவி நிற்க	நாக்கில் அலர்கின்ற பாசுரங்களிலே பொருந்தி நிற்கும்படியாகவும்
தந்த	உபகாரம் செய்தருளின
வள்ளல் பான்மை ஏ	உதாரகுணம் என்னே !

* * * [தாமரைக் கண்ணனை.] நித்ய ஸூரிகளுக்குப்போலே எனக்குத் தன்னுடைய ஸௌந்தரியம் முதலானவற்றை வருணிப்பதற்குப் பாங்கான வாக்கை அளித்தருளினானெம்பெருமான்; அவனுடைய வள்ளல்தனம் இருக்கும்படி என்னே! என்று விஸ்மயப்படுகிறார்.

"தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந் தலைமகனை" என்ற சொற் சேர்த்தியினால் கிடைக்கும் ரஸப்பொருளை நம்பிள்ளை காட்டுகிறார்—"ஒருகால் திருக்கண்களாலே குளிர நோக்கினால் அதிலே தோற்று ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அடைவுகெட ஏத்தாநிற்பர்களாயிற்று நித்யஸூரிகள் என்று. நித்யஸூரிகளைத் தன்னுடைய கண்ணழகிலே தோற்பித்து அதைப்பற்றியே அவர்கள் வாய் வெருவிக்கொண்டிருக்குமாறு செய்வதுபோல அடியேன் திறத்திலும் செய்தருளினானென்பது குறிப்பு.

[துழாய் விரை யித்யாதி.] பூவும் பரிமளமும் மாறாதேயிருக்கும் திருத்துழாய் மாலையாலே அலங்கரிக்கப்பட்ட தன்னுடைய வடிவழகை எனக்கு நிர்ஹேதுகமாகக் காட்டித்தந்தவனென்றவாறு. [பொன்மலையை] ஆழ்வாரை விட்டுப் பெயர்ந்து போகமாட்டாமல் ஸ்தாவரப்ரதிஷ்டையாக எம்பெருமானிருக்கிற விருப்புக்குப் பொன்மலை உவமை யென்க.

[நாம் மருவி யித்யாதி.] நித்யஸூரிகள் துதிக்கவேண்டிய விஷயத்தை அயோக்யனான நானும் நன்கு பொருந்தித் துதிக்கும்படியாகச் சில பாசுரங்களைப் பாடுந்திறமையை எனக்குத் தந்தருளின ஔதார்யம் என்னே! என்றதாயிற்று. மூன்றாமடியில் நாம் என்கிற சொல் இரண்டு தடவை வந்தது தம்முடைய தகுதி யின்மையைச் சுட்டிக் காட்டுதற்காம். ... . (௩)

வள்ளலே! மதுசூதனா! என்மரதகமலையே! * உனைநினைந்து
எள்கல்தந்தவெந்தாய்! உன்னையெங்ஙனம் விடுகேன்? *
வெள்ளமேபுரைநின்புகழ்குடைந்தாடிப்பாடிக் களித்துகந்துகந்து *
உள்ளநோய்களெல்லாந்துரந்து உய்ந்துபோந்திருந்தே. (௪)

வள்ளலே	உதாரனே!	குடைந்து	மூழ்கி
மது சூதனா	மதுஸூதனனே!	ஆடி பாடி	ஆடியும் பாடியும்
என் மரதகம் மலையே	என்னுடைய அநுபவத்திற்குரிய மரகதமலை போன்றவனே!	களித்து	செருக்குக் கொண்டு
உனை நினைந்து	உன்னை யநுஸந்தித்து	உகந்து உகந்து	மிகவும் மகிழ்ந்து
எள்கல்	ஈடுபட்டிருக்கும்படியான தன்மையை	உள்ள நோய்கள் எல்லாம் துரந்து	உண்டான துன்பங்களெல்லாம் தொலையப் பெற்று
தந்த	உண்டாக்கின	உய்ந்து	உஜ்ஜீவித்து
எந்தாய்	ஸ்வாமியே!,	போந்து இருந்து	(உன்னைக்) கிட்டினவனாயிருந்துவைத்து
வெள்ளமே புரை	கடல் போன்ற	உன்னை எங்ஙனம் விடுகேன்	உன்னை எப்படி விட்டிடுவேன்?.
நின் புகழ்	உன்னுடைய திருக்குணங்களில்		

* * * [வள்ளலே.] கீழ்ப்பாட்டில் நாம் நாம் என்று ஒரு தடவைக்கு இரு தடவையாகச் சொன்னது ஆழ்வார் தம்முடைய நைச்யத்தை யெடுத்துக்காட்டினபடியாதலால், நைச்யாநுஸந்தானம் பண்ணப் புகுந்தவிவர் நம்மை யொருகால் விட்டுவிடுவரோ? என்று எம்பெருமான் அதிசங்கை கொள்ள, உன் வடிவழகை நிர்ஹேதுகமாக நீயே யென்னை அநுபவிப்பிக்க அநுபவித்து அதனாலே சிதிலனாயிருக்கின்ற நான் உன்னைவிட ப்ரஸக்தியுண்டோ வென்கிறார். உலகத்தில் தானஞ் செய்கிறவர்களெல்லாரும் வள்ளல் என்று சொல்லப்படார்கள்; ஒருவித வுபகாரமும் செய்யாதவர்களிடத்துக் கைம்மாறு கருதாமல் உபகாரம் செய்பவர்களே வள்ளல் எனப்படுவார்கள். இங்கு அப்படியே எம்பெருமான் நிர்ஹேதுகமாகத் தம்மை விஷயீகரித்தமை தோன்ற வள்ளல்! என்கிறார். எம்பெருமான், தன்னை ஸர்வஸ்வதானமாகக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளவொண்ணாதபடி தடையாக நிற்கக்கூடிய பிரதிபந்தகங்களையும் தானே போக்கித்தந்தானென்ற கருத்துப்பட மதுசூதனா என்கிறார். "நீ உன்னைத் தருமிடத்தில் நான் ஸ்வீகரியாதபடி பண்ணும் விரோதிகளை, மதுவாகிற அஸுரனை நிரஸித்தாப்போலே நிரஸித்தவனே" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

எம்பெருமான் தமக்கு உபகரித்தருளினது அவன்றன்னுடைய அற்புதமான வடிவழகு என்பது தோன்ற என் மரதகமலையே! என்கிறார். பச்சைமாமலைபோன்ற திருமேனியை எனக்கு அநுபவிக்கத் தந்தருளினவனே! என்றபடி.

உனை நினைந்து எள்கல்தந்த எந்தாய் = இதற்கு இரண்டுவகையாகப் பொருள் கூறுவர்; எள்கல் என்பதற்கு இகழ்ச்சியும் ஈடுபாடும் பொருளாகும்; இகழ்ச்சியாகப் பொருள்கொண்டால், உன்னைச் சிந்தித்து விஷயாந்தரங்களை நான் இகழ்ந்துவிடும்படி பண்ணினவனே! என்றதாம்; ஈடுபாடாகப் பொருள் கொண்டால், உன்னை யநுஸந்தித்து, "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" [பெரிய திருவந்தாதி-34] என்கிறபடியே ஆழ்ந்து ஈடுபடும்படி பண்ணித்தந்தவனே! என்றதாம்.

உன்னை எங்ஙனம் விடுவேன் = உன் பக்கலில் எந்த விஷயத்திற் குறை கண்டு உன்னை விடுவேன்? ஔதார்யம், விரோதிநிரஸநசீலத்வம், வடிவழகிற் சிறப்பு முதலிய எல்லாவற்றாலும் குறையற்றிருக்கிற வுன்னை எப்படி விடுவேன்?

பின்னடிகளில் தம்முடைய நிலைமையின் வைலக்ஷண்யத்தை விவரித்துரைக்கின்றார்; கடல்போன்ற வுன்னுடைய திருக்கல்யாண குணங்களை ஒரிடமொழியாமே எங்கும்புக்கு அவகாஹித்து அதனாலுண்டான மகிழ்ச்சி மிகுதியினால் ஆடிப்பாடிக்களித்து க்ஷணந்தோறும் ப்ரீதி பெருகிவர, அயோக்யதாநுஸந்தாநத்தாலும் விச்லேஷத்தாலும் வந்த வ்யஸநங்களெல்லாவற்றையும் போக்கி உஜ்ஜீவித்து உன் திருவடிவாரத்திலே வந்து சேர்ந்திருக்கின்ற யான் உன்னையெங்ஙனம் விடுகேன்? என்று அந்வயிப்பது. ... ... (ச)

உய்ந்துபோந்தென்னுலப்பிலாத வெந்தீவினைகளைநாசஞ்செய்து * உனது
அந்தமிலடிமையடைந்தேன் விடுவேனோ? *
ஐந்துபைந்தலையாடரவணைமேவிப் பாற்கடல்யோகநித்திரை *
சிந்தைசெய்தவெந்தாய்! உன்னைச்சிந்தைசெய்துசெய்தே. (ரு)

பால் கடல்	திருப்பாற்கடலிலே	எந்தாய்	என் ஸ்வாமியே!,
ஐந்து	ஐந்தாகிய	உன்னை	உன்னை
பை தலை	படங்களோடுகூடிய சிரங்களை யுடையவனாய்	சிந்தை செய்து செய்து	நிரந்தரமாகச் சிந்தித்து
ஆடு	ஆடுகின்ற	உய்ந்து போந்து	உஜ்ஜீவனம் பெற்று
அரவு	ஆதிசேஷனாகிற	உலப்பு இலாத	முடிவில்லாத
அணை	சயனத்தின்மீது	வெம்	கொடிய
யோகநித்திரை	யோகநித்ரையிலே	என் தீ வினைகளை	எனது பாவங்களை
மேவி	பொருந்தி	நாசம் செய்து	தொலைத்து
சிந்தை செய்த	லோகரக்ஷண சிந்தனை பண்ணின		

உனது	உன்னுடைய	அடைந்தேன்	அடைந்தவனான நான்
அந்தம் இல்	முடிவில்லாத		
அடிமை	கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை	விடுவேனோ	இனிவிட்டு நீங்குவேனோ?

* * * [உய்ந்து போந்து.] நித்ய கைங்கர்யத்திலே ஊன்றியிருக்குமடியேன் உன்னை விடுவதற்கு ப்ரஸக்திலேசமுமில்லையென்று மீளவும் வற்புறுத்திப் பேசுகிறார்.

உய்ந்து போந்து என்றது ஸ்வரூபலாபம் பெற்றமை சொன்னபடி. இதற்கு முன்னே "அஸந்நேவ ஸ பவதி—அஸந்நேவ ஸ பவதி" என்னும்படி கிடந்த நான் இப்போது சேதநகோடியிற் புகுந்தேனென்றபடி. அஸத்தான நிலைமை தவிர்ந்து ஸத்தான நிலைமை யடைந்தவாறே பாவங்களெல்லாம் தொலையப் பெறுகையாலே என் உலப்பில்லாத வெந்தீவினைகளை நாசஞ்செய்து என்கிறார். உலப்பு—முடிவு; எத்தனை காலமனுபவித்தாலும் முடிவு பெறமாட்டாத கொடுவினைகளெல்லாம் தொலையப் பெற்று என்றவாறு. உனது அந்தமில் அடிமை யடைந்தேன் விடுவேனோ? = ஆத்மா வுள்ளவரையில் கைங்கரியம் செய்வது தவிர வேறு விதமான போதுபோக்கைக் கொள்வதில்லை யென்று திண்ணிய வுறுதி கொண்ட நான் எவ்விதத்திலும் உன்னை விடுவதற்கு ப்ரஸக்தியில்லை யென்றபடி. அந்தம் இல் அடிமை = ஆத்மஸ்வரூபத்திற்கு அந்தம் இல்லாமையாலே ஸ்வரூபாநுபந்தியான கைங்கரியத்திற்கும் அந்தமில்லை யென்க.

அடிமையின் சுவையை யறிந்த திருவனந்தாழ்வான் உன்னை விடாதது போலவே நானும் விடமாட்டேனென்ற கருத்துப்படப் பின்னடிகள் அருளிச் செய்கிறார். பெருவெள்ளம் பெருகப்புகுந்தால் பல வாய்க்கால்கள் உண்டாவது போல, பகவதநுபவத்தால் வந்த ஆனந்த மிகுதிக்குப் போக்கு வீடாகப் பல தலைகளையுடையனாய், மதுபானத்தினால் மதித்தவர்கள்போல் ஆடாநிற்பவனாய், மென்மை குளிர்ச்சி நறுநாற்றம் முதலிய நலங்களை யுடையனான திருவனந்தாழ்வான்மேலே திருப்பாற் கடலிலே 'ஸகல ப்ராணிகளும் துயர்தீர்ந்து உய்யும் வகை என்னோ!' என்று யோக நித்ரையிலே யிராநின்ற எம்பெருமானே! எங்களைப் பற்றி நீ நினைத்திருப்பதுபோல உன்னைப்பற்றி நான் இடைவிடாது நினைத்திருப்பவனாதலால் ஒரு நொடிப்பொழுதும் உன்னைவிட ப்ரஸக்தி யில்லைகாண் என்றாராயிற்று. ... ... (ரு)

உன்னைச்சிந்தைசெய்துசெய்து உன்நெடுமாமொழியிசைபாடியாடி * என்
முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான் *
உன்னைச்சிந்தனையினலிகழ்ந்த இரணியனகல்மார்வங் கீண்ட * என்
முன்னைக்கோளரியே! முடியாததென்னெனக்கே? (சு)

உன்னை	உன்னை	உன்மாமொழி	உன்னைப்பற்றின திரு வாய் மொழியை
சிந்தையினால்	நெஞ்சாலே	இசை பாடி	இசையுடனே பாடி
இகழ்ந்த	அநாதரித்த	ஆடி	(ஆனந்தத்திற்குப் போக்கு வீடாக) ஆடி
இரணியன்	ஹிரண்யகசிபுவினுடைய	என் முன்னை தீ வினைகள்	எனது தொல்லைப் பாவங்களை
அகல் மார்வம் கீண்ட	அகன்ற மார்பைக் கிழித்தவனும்	யான்	நான்
என்	எனக்கு அநுபவிக்க வுரியவனும்	முழு வேர் அரிந்தனன்	முழுதும் வேரோடு அறுத்தொழித்தேன்;
முன்னை	அநாதி வித்தனுமான	எனக்கு	அடியேனுக்கு
கோள் அரியே	மிடுக்குடைய நரசிங்க மூர்த்தியே!	முடியாதது என்	(இனி) அஸாத்யமான துண்டோ?
உன்னை சிந்தை செய்து செய்து	உன்னை இடையறாது சிந்தித்து		
நெடு	உயர்ந்த		

* * * [உன்னைச் சிந்தை செய்து செய்து] ஆழ்வாரே! உமக்கு நான் இனிச் செய்யவேண்டுவதென்ன? என்று எம்பெருமான் கேட்க, நான் பெறாததுண்டோ? எல்லாம் பெற்றேனே; இனிச் செய்யவேண்டுவதொன்றுமில்லை காண் என்கிறார். ஆச்ரிதன் ப்ரதிஜ்ஞை பண்ணின ஸமயத்திலே வந்து தோன்றுமியல் வினனாக நீயிருக்கும்போது எனக்கு என்ன குறையென்கிறார். ஆபத்துக்கு உதவுமவனும் ப்ராப்த சேஷியாய்ப் பரம போக்யனுமிருக்கின்ற வுன்னை அநவரதமும் ஹ்ருதயத்திலே பாவனை பண்ணி, உன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளுக்கு வாசகமான இத்திருவாய்மொழியை இசையோடே பாடி, அப்பாட்டுக்கு ஈடான அபிநயம் தோற்றும்படி ஆடி, இப்படி மனமொழி மெய்கள் மூன்றினாலு முண்டான போகத்தாலே என்னுடைய அநாதி பாபங்களை ஒன்றொழியாமல் வேரோடே அறுத்தொழித்தேன் என்பது முன்னடிகளின் கருத்து.

ப்ரஹ்லாதாழ்வானுக்காக நரஸிம்ஹாவதாரம் செய்தருளினபடியைப் பின்னடிகளிற் பேசுகிறார். சிந்தையினாலிகழ்ந்த என்ற விடத்து ஒரு விசேஷார்த்த முண்டு: ஒருவன் எம்பெருமானைத் துதி செய்கிறான், ஒருவன் நிந்தனை செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள்; துதி செய்பவன் காயியிலிருந்தெழுந்த அன்போடே துதி செய்கிறானா? கபடமாக மேலெழத் துதி செய்கிறானா என்று ஆராய்ந்து பார்ப்பதில் எம்பெருமான் ப்ரவர்த்திப்பதில்லை; பக்தனென்று கைக்கொள்வதற்கு, 'ஸஹ்ருதயமாகவோ அஹ்ருதயமாகவோ துதிசெய்பவனிவன்' என்று சிறிது வியாஜம் கிடைத்தாலும் போதும். நிந்தனை செய்பவனிடத்திலோ வென்னில், இவனுக்குப் பகை உள்ளூற இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்து அப்படியிருப்பதாகத் தெரிந்தாலொழியத் தண்டிப்பதில்லை. ஆகவேதான் இரணியனை நெஞ்சு தொட்டுப் பிளந்து உள்ளிலும் ஆராய்ந்து பார்த்தானாம். பகவத் விஷயத்தில் அவனுக்கு இருந்த பகை மேலெழவன்று; உள்ளூறவேயிருந்ததாம். அது தெரிந்தபின்பே அவனைத் தண்டிக்கலானார். இது தோன்ற,

சிக்கையினல் என்று ஆழ்வார் விசேஷித்து அருளிச் செய்தாரென்க. எம்பெருமானுக்கு அநுக்ரஹத்திலேயே அதிக நோக்கு என்பது இதனுல் பெறப்படும். ()

முடியாததேன்னேனக்கேலினி முழுவேழுலகுமுண்டான் * உகந்துவந்து
அடியேனுள்புகுந்தான் அகல்வானு மல்லனினி *
செடியார்நோய்களெல்லாம்துரந்து எமர்கீழ்மேலெழுபிறப்பும் *
விடியாவெந்நரகத்து என்றும்சேர்தல்மாறினரே. (எ)

முழு ஏழ் உலகும் உண்டான்	ஏழுலகங்களையும் முற்ற அமுது செய்து (பிரளயங் கொள்ளாதபடி காத்தருளின) பெருமான்	செடி ஆர் நோய்கள் எல்லாம் துரந்து	பெருங்காடாகப் பரம்பின நோய்களெல்லாம் தொலையப் பெற்று
உகந்து	விரும்பி	என்றும்	ஒருநாளும்
அடியேன் உள் வந்து புகுந்தான்	அடியேனுள்ளத்தில் வந்து புகுந்தான் ;	விடியா	ஓய்வில்லாத
இனி அகல்வானும் அல்லன்	இனிமேல் (அப்பெருமான்) அகன்றுபோகவும் மாட்டான் ;	வெம் நரகத்து	கொடிய ஸம்ஸார நரகத்தில்
கீழ் மேல் எழு பிறப்பும்	கீழும் மேலும் ஏழ் பிறப்புக்களிலும்	சேர்தல் மாறினர்	சேராமலிருக்கும்படி பெற்றார்கள் ;
எமர்	எம்மவர்கள்	இனி	இப்படியான பின்பு
		எனக்கு	எனக்கு
		முடியாதது என்	எல்லாம் வித்தமே.

* * * [முடியாததேன்.] கீழ்ப்பாட்டில் "முடியாததென் எனக்கே" என்றார் ; எல்லாம் பெற்றுவிட்டீரோ? என்று அன்பர் கேட்க, என்னிடத்து எம்பெருமான் பண்ணின விசேஷ கடாக்ஷத்தாலே என்னோடு ஸம்பந்தி ஸம்பந்திகளானவர்களுங்கூட உஜ்ஜீவிக்கப் பெற்றார்களே! இன்னமும் நான் பெறவேண்டியது என்ன இருக்கிறது என்கிறார்.

பிரளய காலத்தில் இந்த ஜகத்தை யெல்லாம் தன் திருவயிற்றிலே வைத்துக் கொண்டவன், ஜகத்துக்குத் தன்னை யொழியச் செல்லாதாப்போலே என்னை யொழியத் தனக்குச் செல்லாமை தோன்ற மிக்க அபிநிவேசத்தோடே என்னுள்ளே வந்து புகுந்தான், ஒருநீராகக் கலந்தான். அந்த ஜகத்து ப்ரளயங் கழிந்தவாறே அகன்று போயிற்றே; இங்கு அப்படியன்று; இனி அகல்வானுமல்லனிவன். இதனுல் எனக்குண்டான பேறு பனிநிழல்போலே என்னொருவனளவிலே விச்ரமித்துப் போவதன்று ; [கீழ்மேல் எழுபிறப்பும் எமர் செடியார் நோய்களெல்லாம் துரந்து விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினர்.] எம்பெருமானுக்கு என்பக்கல் அபிநிவேசம் என்னொருத்தனளவில் பர்யவஸியாதே என்னோடு ஸம்பந்தித்தவர்கள் மீதும் வெள்ளங் கோத்தது என்கிறார்.

விடியா வெந்நரக மென்கிறது ஸம்ஸாரத்தை. அந்த நரகம் ஒரு நாள் வரையிலே விடியும் ; இது விடியாத வெந்நரகம். .... (எ)

மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து அடியையடைந்துள்ளம்தேறி *
ஈறிலின்பத்திருவெள்ளம் யான்மூழ்கினன் *
பாறிப்பாறியசுரர்தம் பல்குழாங்கள்நீறெழ * பாய்பறவையொன்
றேறிவீற்றிருந்தாய்! உன்னையென்னுள் நீக்கேலெந்தாய். (அ)

பல பிறப்பும்	பல பிறவிகளிலும்
மாறி மாறி பிறந்து	பலகாலும் பிறந்து (இப்படிச் செல்லுகிற ஜன்ம பரம்பரைகளிலே இன்று)
அடியை அடைந்து	உன் திருவடிகளைக் கிட்டி
உள்ளம் தேறி	மனம் தெளிந்து
ஈறு இல்	முடிவில்லாத
இன்பத்து இரு வெள்ளம்	ஆனந்தப் பெரு வெள்ளத்திலே
யான் மூழ்கினன்	நான் ஆழ்ந்துவிட்டேன்;
அசுரர் தம்	அஸுரர்களினுடைய
பல் குழாங்கள்	பல கூட்டங்கள்
பாறி பாறி	அடியோடு அழிந்து
நீறு எழ	நீறாகும்படி
பாய் பறவை ஒன்று ஏறி வீற்றிருந்தாய்	பாய்கின்ற பெரிய திருவடியை வாஹனமாகக்கொண்டு எழுந்தருளியிருப்பவனே!
எந்தாய்	என் தந்தையே!
உன்னை	உன்னை
என்னுள்	என்னிடத்தில் நின்று
நீக்கேல்	பிரியச் செய்யாதிருக்க வேணும்.

* * * [மாறி மாறி.] பிரானே! உன்னுடைய நிர்ஹேதுகமான அநுக்ரஹத்தாலே பெற்ற இந்த நன்மை இனியொருநாளும் இடையறுதொழிய வேணும்; இதுவே யெனக்கு வேண்டுவது என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றார். கடலிலே கிடந்ததொரு துரும்பானது அலைமேலலையாகத் தள்ளவந்து கரைசேருமாபோலே அடியேனும் பிறப்பதும்இறப்பதுமாய் மாறிமாறிப் பிறந்து வந்துகொண்டே திருவடிகளிலே கிட்டிக்கொண்டு நிற்கக்கண்டேனித்தனை. இங்ஙனே திருவடிகளிற் கிட்டினவாறே 'இனி நாம் வாழ்ந்தோமாவோம்' என்று ஒருவாறு நெஞ்சு தேறுதலடைந்தேன்; அந்தத் தேறுதலுண்டானவாறே பெரிய ஆனந்தக் கடலிலே ஆழ மூழ்கினவனானேன்; என்னோடே இப்படி வந்துகலந்த நீ ஒருநாளும் இனிப் பிரியாதிருக்க வேணும்; பலவகைப்பட்ட அசுரக்குழாங்கள் நீறாகும்படியாகப் பாய்கின்ற பெரிய திருவடியை நியதமாக அடிமைகொண்டிருக்குமாபோலே அடியேனையும் ஆத்மாவுள்ளதனையும் ஆட்கொண்டருள வேணுமென்று அபேக்ஷித்தாராயிற்று. ... ... (அ)

எந்தாய்! தண்திருவேங்கடத்துள்நின்றாய்! இலங்கைசெற்றாய்! * மராமரம்
பைந்தாளேழுருவ ஒருவாளிகோத்தவில்லா! *
கொந்தார்தண்ணந்துழாயினாயமுதே! உன்னையென்னுள்ளேகுழைத்தவெம்
மைந்தா! * வானேறே! இனியெங்குப்போகின்றதே? (கூ)

எந்தாய்	ஸ்வாமியே!
தண் திருவேங்கடத்துள் நின்றாய்	குளிர்ந்த திருவேங்கட மலையிலே நிற்பவனே!
இலங்கை செற்றாய்	லங்காபுரியை அழித்தவனே!
மராமரம்	மராமரங்களினுடைய
பைதாள் ஏழ்	பருத்த அடிகள் ஏழும்
உருவ	உருவும்படி
ஒரு வாளி கோத்த வில்லா	ஒரு அம்பைத் தொடுத்த வில்லையுடையவனே!
கொந்து ஆர் தண் அம் துழாயினாய்	கொத்துக்கள் நிறைந்து குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையணிந்துள்ளவனே!
எம் அமுதே	எமக்கு அமுதமானவனே!
உன்னை என்னுள்ளே குழைத்த எம்மைந்தா	என்னோடு ஒரு நீராகக் கலந்த மைந்தனே!
வான் ஏறே	நித்யஸூரி நாதனே!
இனி எங்கு போகின்றது	இனி என்னைத் தவிர உனக்கு வேறு போக்கிட முண்டோ?

* * [எந்தாய் தண்.] முதலிலே உன்னை யறியாதிருந்த வெனக்கு உன்னையும் உன்னுடைய போக்யதையையுமறிவித்து, உன்னைவிட்டகன்று உயிராற்றமாட்டாதபடியான நிலைமையை விளைவித்த நீ இனி என்னை விட்டுப் பிரிந்துபோவது தகுதியோவென்கிறார். என்னை அடிமைகொண்டருளுகைக்காகப் பரமபோக்யமான திருவேங்கட மலையிலே நின்றருளினவனே!, அஹங்காரமே வடிவெடுத்த இராவணனைத் தொலைத்தாப்போலே என்னுடைய அஹங்கார மமகாரங்களையும் போக்கியருளினவனே!, வாலிவதத்திற்குப் பூர்வாங்கமாக மராமரமேழையும் எய்து ஸுக்ரீவனை விச்வஸிப்பித்தாப்போல எனக்கும் அரியனசெய்து விச்வாஸத்தையுண்டாக்கினவனே; தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும்புனைந்த தண்ணந்துழாயுடையம்மானே! என்னமுதமே!, என்னோடே கலக்கிறபோது ஒரு நீராகக் கலந்துவிட்டு இனி அகல்வது எங்ஙனேயோ? உனக்குப் போக்கிடந்தானுண்டோ? ... ... (கூ)

போகின்றகாலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள் ✦ தாய்தந்தையுயி
ராகின்றாய்! உன்னை நானடைந்தேன் விடுவேனோ? ✦
பாகின்றதொல்புகழ்மூவுலகுக்கும் நாதனே! பரமா! ✦ தண்வேங்கடம்
மேகின்றாய்! தண்டுழாய் விரைநாறு கண்ணியனே! (க0)

போகின்ற காலங்கள்	நிகழ் காலங்கள்
போய காலங்கள்	இறந்த காலங்கள்
போகு காலங்கள்	எதிர் காலங்கள் (ஆகிய இவற்றில்)
தாய் தந்தை உயிர் ஆகின்றாய்	தாயும் தந்தையும் உயிருமாயிருப்பவனே!
பாகின்ற	பரவுகின்ற
தொல் புகழ்	நித்யமான கீர்த்தியையுடையனாய்
மூ உலகுக்கும் நாதனே	மூன்று லோகங்களுக்கும் நாதனாயிருப்பவனே!
பரமா	ஸர்வோத்க்ருஷ்டனே!
தண் வேங்கடம் மேகின்றாய்	குளிர்ந்த திருவேங்கட மலையை விரும்பியிருப்பவனே!
தண் விரை நாறு	குளிர்ந்து பரிமளம் வீசப்பெற்ற
துழாய் கண்ணியனே	திருத்துழாய் மாலையையுடையவனே!

உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ?

* * * [போகின்ற காலங்கள்] ஆழ்வாரே! என்னைநீர் வளைத்துப்பேசுவது கிடக்கட்டும்; நீர் அபோக்யதாநுஸந்தானம்பண்ணி என்னைவிட்டகன்று போய்விடுவீரோ! என்று நான் கவலைகொண்டிரா நிற்கையில் நீர் இங்ஙனே பேசக்கடவீரோ? நான் உம்மைவிட்டு எங்கும்போகப் போகிறதில்லை; நீர் என்னைவிட்டுப் போகாதிருப்பீரா? சொல்லும் என்று எம்பெருமான் திருவுள்ளமாக, முக்காலத்திலும் எல்லாப்படியாலும் எனக்கு உபகாரம் செய்தருளின வுன்னைப்பெற்றுவைத்து இனிநான் அகன்று போவதற்கு என்னப்ரஸக்தி யென்று உறுதியாகக்கூறி முடிக்கின்றார். முதலடியில் மூன்று காலங்களையுமெடுத்திருக்கின்றார்; இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் எம்பெருமான் செய்யும் நன்மையைத் தெரிந்துகொண்டு பேசமுடியும்; எதிர்காலத்தில் இனி அவன் செய்யப்போகிற நன்மையை இவர் எங்ஙனே தெரிந்து கொண்டாரென்று சிலர் சங்கிக்கக்கூடும்: எந்தக்காலத்திலும் எம்பெருமானல்லது வேறொருவன் ரக்ஷகனல்லலன் என்கிற சாஸ்த்ரப்ரஸித்தியைக் கொண்டு கூறக்குறையில்லையென்க. இறந்தகாலமும் நிகழ்காலமும் ஒருகாலத்திலே எதிர்காலமாக இருந்தவைதானே; ஆதலாலும் சொல்லக் குறையில்லை யென்ப. ... ... (௧௦)

கண்ணித்தண்ணந்துழாய்முடிக் கமலத்தடம் பெருங்கண்ணனை ❖ புகழ்
நண்ணித்தென்குருகூர்ச் சடகோபன் மாறன்சொன்ன ❖
எண்ணில்சோர்விலந்தாதி ஆயிரத்துள்ளிவையுமோர்பத்திசையோடும் ❖
பண்ணிற்பாடவல்லாரவர் கேசவன் தமரே. (௧௧)

தண் அம் துழாய் கண்ணி முடி	குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையணிந்த முடியையும்
கமலம் தடம் பெரு கண்ணனை	தாமரை போன்று விசாலமான நீண்ட திருக்கண்களையுமுடைய பெருமானுடைய
புகழ் நண்ணி	திருக்குணங்களை யநுபவித்து
தென் குருகூர் சடகோபன் மாறன் சொன்ன—;	
எண்ணில் சோர்வு இல்	அநுஸந்தானத்தில் சோர்வு இல்லாத
அந்தாதி	அந்தாதித்தொடையான
ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து	ஆயிரத்தினுள்ளே இப்பத்துப் பாட்டையும்
இசையொடும்	இசையோடுகூட
பண்ணில் பாட வல்லார் அவர்	பண்ணில் அமைத்துப் பாட வல்லவர்கள்
கேசவன் தமர்	எம்பெருமானடியாராகப் பெறுவர்.

* * * [கண்ணித்தண்ணந்துழாய்,] இப்பதிகத்தை இனிதாக அநுஸந்திக்குமவர்கள் பாகவதர் என்றபேர்க்கு உரியராவர் என்று இதுகற்றார்க்குப் பயனுரைத்துத்

தலைக்கட்டுகின்றார். தம்மோடே கலக்கையாலே எம்பெருமானுக்குப் பிறந்த செவ்வியைச் சொல்லுகிறது முதலடி. புகழ்நண்ணி = புகழ் என்பது திருக்கல்யாண குணங்களெல்லாவற்றிற்கும் பொதுச் சொல்லாயினும், தம்பக்கலில் அவன்பண்ணின அபிநிவேசமாகிற விசேஷகுணத்தை இங்குக் குறிக்கின்றதென்னலாம். (கக)

அருந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து—நைகின்ற
தன்மைதனைக் கண்டுன்னைத் தான்விடே னென்றுரைக்க
வன்மை யடைந்தான் கேசவன்.

வைகுந்தன்	பரமபத நாதனான எம்பெருமான்	சிந்தித்து	(எம்பெருமான்) விசார மடைந்து
வந்து கலந்ததற்பின்	வந்து (தம்முடன்) கலந்த பிறகு	நைகின்ற தன்மைதனை கண்டு	சிதிலனாகிறபடியைப் பார்த்து
வாழ்	ஸத்தை பெற்ற	உன்னை விடேன் என்று உரைக்க	'உன்னை நான் விட மாட்டேன் (ஆதலால் கவலைப்படவேண்டா)' என்று தெரிவிக்க
மாறன்	ஆழ்வார்	கேசவன்	எம்பெருமான்
செய்கின்ற	செய்கிற	வன்மை அடைந்தான்	(கவலை நீங்கி) நிலைபெற்று நின்றான்.
நைச்சியத்தை	நைச்யாநுஸந்தானத்தைக் குறித்து		

• • * ஆடியாடி யென்கிற திருவாய் மொழியிலே பட்ட வ்யஸநம் தீர அந்தாமத்தன்பில் எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷிக்க அதனால் துயர் தீர்ந்து வாழ்ந்த ஆழ்வார் "அல்லாவி" என்றும் "என் முடிவு காணாதே" என்றும் நைச்யாநுஸந்தாநப்ரஸக்தி பண்ண, அது கண்ட எம்பெருமான் 'இவர் நம்மைவிட்டு அகன்றுபோவார்போலிருக்கிறதே!' என்று அதிசங்கை கொள்ள, அஃதறிந்த ஆழ்வார் 'பிரானே!' உன்னை யொருநாளும் விடமாட்டேன்' என்று உறுதியாகக் கூற அது கேட்டு எம்பெருமான் கவலை தீர்ந்தானான் என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளீ.

ஸ்வாஸ்வாத்யத்வாத் ச்ரிதநியதருசே: நைகபோகப்ரதாநாத்
திவ்யாகாராநர்கப்ரகாசாத் ஸ்திரபரிசரணஸ்தாபநாத் பாபபங்காத் ।
துஸ்ஸாதார்த்தஸ்ய ஸித்தேர் விரஹபயக்ருதேர் துர்விபேதாத்மயோகாத்
நித்யாநேகோபகாராத் ஸ்வவிஷயவசிதம் வைசக்ஷதாம் ஆஹ முமு-
க்ஷு: ॥

1. ஸ்வாஸ்வாத்யத்வாத்— *கைகலந்தாறும் அமுதாயவானேறே. (எம்பெருமான்) தன்னுடைய பரமபோக்யதையைக் காட்டிக்கொடுத்தானென்கிறது.

2. ச்ரித நியதருசே: — *எங்கும் பக்க நோக்கறியான். ஆச்ரிதரான தம்மை விட்டு வேறோரிடத்திற் கண்வையாதவ னென்றது.

3. நைக போகப்ரதாநாத்— *நாமருவி நன் கேத்தியுள்ளிவணங்கி நாமகிழ்ந்தாட* துதித்தல் சிந்தித்தல் வணங்குதல் களித்துக் கூத்தாடுதல் முதலிய பல்வகை ரஸானுபவங்களைக் கொடுத்தருளினனென்கிறது.

4. திவ்யாகாராநர்கப்ரகாசாத்— *என்மரதகமலையே—உன்னை யெங்ஙனம் விடுகேன்*விட்டுப் பிரியவொண்ணாதபடி மிகவழகிய மரகதக்குன்றுபோலே பரமபோக்யனாக ப்ரகாசித்தானென்கிறது.

5. ஸ்திரபரிசரணஸ்தாபநாத்— *உனது அந்தமிலடிமை யடைந்தேன் * யாவஜ்ஜீவமுள்ளதான அடிமையிலே நிலைநிறுத்தினனென்கிறது.

6. பாப பங்காத்— *முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன்யான் *பாவங்களை வாஸனையோடே போக்கினனென்கிறது.

7. துஸ்ஸாதார்த்தஸ்ய ஸித்தே:—*முடியாததென் எனக்கேலினித்தம்மோடு பரம்பராஸம்பந்தம் பெற்றவர்களும் உத்தீர்ணராம்படி அரியபெரிய காரியம் ஸித்தித்தமை சொன்னபடி.

8. விரஹ பயக்ருதே:—உன்னை யென்னுள்நீக்கேலெந்தாய் 'இவன் நம்மை விட்டுப்பிரிந்து போய்விடுவானோ' என்கிற அச்சத்தை விளைத்தமை சொன்னபடி.

9. துர்விபேதாத்ம யோகாத்— உன்னை யென்னுள்ளே குழைத்த எம்மைந்தா ஆத்மாவோடே பிரிக்கவொண்ணாதபடி ஒருநீராகக் கலந்தமை சொன்னபடி.

10. நித்யாநேகோபகாராத்— போகின்ற காலங்கள் இத்யாதி*மூன்று காலங்களிலும் தாய்தந்தையர்பண்ணும் உபகாரங்களை யெல்லாம் பண்ணிக் கொடுப்பானென்றது.

ஆக இத்தகைய காரணங்களையிட்டு [அம்போருஹாக்ஷம் ஸ்வவிரஹசகிதம் ப்ரைக்ஷத] (நிகமநப்பாசுரத்தில்) "கமலத்தடம் பெருங்கண்ணன்" என்னப்பட்ட எம்பெருமானை இத்திருவாய் மொழியில் 'ஆழ்வார் நம்மை ஒருகால்விட்டு நீங்கி விடுவரோ' என்ற அதிசங்கையுடையனாகக் கண்டு பேசினாரென்றதாயிற்று.

தூப்புல்பிள்ளை பொன்னடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

𑌨𑍀𑌚𑌂𑌚 𑌶𑌾𑌶𑌿𑌮𑌪𑍇𑌤𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌸𑍁𑌶𑍀𑌲𑌶𑌙𑍍𑌕𑌾
𑌜𑌾𑌤𑌾𑌂 𑌹𑌰𑍇𑌃 𑌸𑍍𑌵𑌵𑌿𑌰𑌹𑌾𑌦𑍍𑌰𑌮𑌣𑍇𑌨𑍍𑌤𑌿𑌶𑌙𑍍𑌕𑌾𑌂 ।
𑌷𑌷𑍍𑌠𑍇 𑌨𑌿𑌰𑌸𑍍𑌯 𑌨𑍃𑌶𑌂𑌸𑌮𑌿𑌤𑌾 𑌪𑌰𑌾𑌰𑍍𑌤𑌿𑌃
𑌆𑌤𑍍𑌤𑌾 𑌨𑌯𑌿𑌷𑍍𑌵𑌿 𑌤𑌥𑌾𑌥𑌰𑍇𑌤𑌾𑌸𑍍𑌯𑌨𑌥𑌃 ॥

(கருத்து). இத் திருவாய் மொழியில் "மிக நீசனாகிய என்னோடும் எம்பெருமான் ஸம்ச்லேஷித்தானே!" என்று ஆழ்வார் அருளிச்செய்ததனால் இங்ஙனே நைச்யாநுஸந்தானஞ் செய்தவிவர் ஒருகால் நம்மைவிட்டுப் பிரிந்திடுவரோ வென்று எம்பெருமானுக்கு உண்டான அதிசங்கையை, 'ஒருநாளும் உன்னைவிடேன்' என்கிற உறுதி மொழியினால் போக்கி, தம்மோடு பரம்பரா ஸம்பந்திகளுக்கும் ஸத்கதி யுண்டாகப் பெற்றபடியையுங்கூறி ஆழ்வார் மகிழ்வுற்றார் ஆறாந்திருவாய் மொழியிலே யென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறாந் திருவாய்மொழி
உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து—ஏழாந் திருவாய்மொழி,

கேசவன்தமர்.

அவதாரிகை :— கீழ்த் திருவாய்மொழியில் "எமர் கீழ்மேலெழுபிறப்பும் விடியாவெங்நரகத்து என்றுஞ் சேர்தல் மாறினர்" என்று—எம்பெருமான் தம்மிடத்து வைத்த காதல் முன்னும் பின்னும் வெள்ளக்கோத்தபடியைச் சிறிதளவாக ப்ரஸ்தாவித்தார்; அந்த மஹோபகாரத்தைப் பெருக்கப் பேசவேணுமென்று ஆழ்வார்க்கு அபிநிவேச முண்டாயிற்று. அஃது இத்திருவாய்மொழிக்கு முக்கியமான ப்ரமேயமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களில் இது வொரு மிகச் சிறந்த குணம்: அதாவது—ஒருவனை விஷயீகரிக்கத் திருவுள்ளம் பற்றினால் அந்த விஷயீகாரம் அவ்வொருத்தனளவிலே நில்லாமல் அவனோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றாரளவிலும் கொந்தளிக்குமது.

இவ்விஷயத்திற்குச் சார்பாக நம்பிள்ளை "𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌵𑍈𑌰𑌾𑌣𑌿 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 । 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌮𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌷 𑌯𑌥𑌾 𑌤𑌵 ॥ மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம், க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தை யெடுத்துப் பரம ரஸமாக வியாக்கியானித் தருளியுள்ளார். இராவணன் மாண்டபின்பு இந்த மஹா பாபிக்கு நான் உத்தரக்ரியை பண்ணமாட்டேனென்று ஒரு நிலைநின்ற விபீஷணாழ்வானை நோக்கிப் பெருமாளருளிச் செய்த ச்லோகமிது. இதற்குப் பிறர் கூறும் பொருள் எங்ஙனே யென்னில்; உலகத்தில் ஒருவனிடத்து ஒருவனுக்குப் பகை மரண பர்யந்தமேயாதலால் இந்த இராவணன் மாண்டொழிந்த பின்பும் இவனிடத்து நாம் பகை வைப்பது ஏதுக்கு? இவனை வதை செய்வதும் பிராட்டியைக் கைக்கொள்வதுமே நமக்குப் பிரயோஜனமாதலால் அது நிறைவேறப்பெற்ற பின்பும் இவன்மீது நாம் பகை பாராட்டலாகுமோ? பகையை மறந்து இனி இவனுக்குச் செய்யவேண்டியதைச் செய்—என்று பெருமாள் கூறுவதாக.

இப்பொருள் சிறிதும் பொருந்தாதென்றும் இராமபிரானுடைய திருவுள்ளத்திற்கு ஒவ்வாதென்றும் நம்பிள்ளை திருவுள்ளம்பற்றி வேறு வகையாக வியாக்கியானித்தருளினர். இதுவரையில் பெருமாள்மீது இராவணன் பகை பாராட்டியிருந்தானே யல்லது இராவணன்மீது பெருமாள் சிறிதும் பகைபாராட்டியிருந்ததில்லை.

"விபீஷணோவா ஸுக்ரீவ ! யதிவா ராவண: ஸ்வயம்—விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்" என்றருளிச்செய்த பெருமாளுடைய திருவுள்ளத்திற்கு இணங்கவல்ல பொருளன்றோ பணிக்கவேணும். அதை நம்பிள்ளையல்லது வேறொருவர் பணிக்க முடியுமோ? இங்கு நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகள் அமுதமயமேயாதலால் அவை அப்படியே காட்டப்படுகின்றன :—

"[மரணாந்தாநி வைராணி] ரிஷிகளின் குடியிருப்பை யழித்து மைதிலியைப் பிரித்து, நம் உயிர் நிலையிலே நலிந்தாப்போலே ஸ்ரீ ஜடாயு மஹாராஜரை நலிந்து இவையெல்லாம் செய்யமாட்டானே இவனினி.

[நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்.] இவன் ஜீவிக்கிற நாளிலே நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காணவெண்ணியிருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம் : நாம் தேடியிருந்தது முந்துற முன்னம் ஸித்திக்கப் பெற்றோமிறே.

[க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்கார:] இவன் நாம் செய்யும் நன்மை விலக்காதானவளவு பிறந்தவின்றும் இழக்கவேணுமோ? வேண்டுவன செய்யப்பாரும்.

[மமாபி ஏஷ யதா தவ.] நீர் இருந்திருந்தீராகில் குடல் துடக்குடையாரிலே ஒருவன் செய்யுமித்தனையன்றோ; நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய நீர் பின்னைக் கடக்கில்லீர் என்றாரிறே."

இந்த திவ்ய ஸூக்திகளின் தாத்பர்ய ஸாரமாவது—விபீஷணா ! இவ்விராவணன் ஜீவித்திருக்கும் நாளிலேயே இவனுக்குச் சில நன்மைகள் நான் செய்யக் கருதியிருந்தேன் ; அவை ஈடேறுதபடிக்கு இவன் பலவகையான த்வேஷ காரியங்களை இயற்றி வந்தானாதலால் நம்முடைய மனோரதம் நிறைவேற வழியில்லையாகிறதே யென்று வருந்தப்பட்டே நான் காலங்கழிக்க நேர்ந்தது. இப்போது இவன் மரண மடைந்து விட்டானாதலால் இனி ஒருவிதமான த்வேஷகாரியமும் இவன் பண்ண ப்ரஸக்தியில்லையே. நாம் இவனுக்குச் செய்ய நினைத்த நன்மைகளுக்கு இவன் ஆபிமுக்கியம் பண்ணாதொழிந்தாலும் இவற்றைத் தடை செய்ய மாட்டாத நிலைமைக்கு இப்போது வந்திட்டானன்றோ. சேதநர்களிடத்தில் இவ்வளவுதானே நான் எதிர்பார்த்திருப்பது. அதுவோ கைபுகுந்து விட்டது. இவனுடைய உயிருக்கு நன்மைசெய்ய நினைத்திருந்தபடி செய்ய இழந்த குறைதீர இவனுடலுக்காவது சில நன்மைகளைச் செய்யாய்; நீ செய்யப் பின்வாங்கினாயாகில் இதோ நான் செய்யக் காத்திருக்கிறேன்; நீ எப்படி எனக்கு ஆப்தனோ அப்படி இவனும் எனக்கு ஆப்தன்தானே—என்பதாம். ஸ்ரீவிபீஷணாழ்வானிடத்தில் பெருமாள் வைத்திருந்த ஆதரம் அவனோடு தேஹஸம்பந்தமுள்ள ராவணனிடத்திலும் எதிர்ப்பாய்ந்த தென்கைக்காக இது சொல்லப்பட்டதென்க.

எம்பெருமான் யாரிடத்து அருள் செய்தாலும் அவ்வருளை அவர்களிடத்திலேயே நிறுத்திவிடாமல் அவர்களோடு ஸம்பந்தஸம்பந்தம் பெற்றவர்கள் பக்கலிலும் பெருகச் செய்யுமியல்வினன் என்பதற்குப் பல உதாரணங்களுண்டு.

இத்திருவாய்மொழியில் இவ்விஷயம் முக்கியமாகப் பேசப்படுகிறது. அன்றியும் இத்திருவாய்மொழியில் மற்றொரு விசேஷமுமுண்டு; அதாவது—கேசவன் முதலாகத் தாமோதரனளவாக வுள்ள துவாதச நாமங்களும் பாட்டுத்தோறும் வரிசைக்கிரமமாகத் தொடுக்கப்பட்டிருக்கின்றன வென்பதாம். அனது பற்றியே இப்பதிகம் மாத்திரம் மற்றைப் பதிகங்கள்போல் பதினொரு பாசுரங்கள் கொண்டதன்றியே பதின்மூன்று பாசுரங்கள் கொண்டதாயிருக்கின்றது. *

கேசவன்தமர் கீழ்மேலெமரேழெழுபிறப்பும் *
மாசதிரிதுபெற்று நம்முடைவாழ்வுவாய்க்கின்றவா *
ஈசனென் கருமாணிக்கமென்செங்கோலக்கண்ணன் விண்ணோர்
நாயகன் * எம்பிரானெம்மான் நாராயணனாலே. (க)

ஈசன்	எல்லார்க்கும் ஸ்வாமியாய்
என்	என்னுடைய அநுபவத்திற்கு உரிய
கரு மாணிக்கம்	கரியமாணிக்கம் போன்ற வடிவையுடையனாய்
என் செம் கோலம் கண்ணன்	சிவந்து அழகிய திருக்கண்களை நான் அநுபவிக்கும்படி செய்தவனாய்
விண்ணோர் நாயகன்	நித்யஸூரிநாதனாய்
எம்பிரான்	எமக்கு உபகாரகனாய்
எம்மான்	எமது பெரியோனாகிய

நாராயணனாலே	நாராயணனாலே,
எமர்	என்னைச் சேர்ந்தவர்கள்
கீழ் மேல் எழ் எழு பிறப்பும்	கீழும்மேலுமுள்ள எழேழ் பிறப்புக்களிலும்
கேசவன் தமர்	பகவத் பக்தராகப் பெற்றார்கள்;
இது	இப்படிப்பட்ட
மா சதிர்	பெரிய சிறப்பை
பெற்று	அடைந்து
நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா	நமது வாழ்ச்சி வளருகிறபடி என்னே!;

* * * [கேசவன்தமர்] பின்னடிகளை முந்துற அந்வயித்துக்கொண்டு முன்னடிகளைப் பிறகு அந்வயித்துக் கொள்க. ஸர்வேச்வரனாய், அழகு நிறைந்த திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய், நித்யஸூரி நாதனாய் எனக்கு ஸ்வாமியாயிருக்கின்ற நாராயணனாலே, என்னோடு ஏதேனுமொருபடி ஸம்பந்தமுடையாரெல்லாரும் கேசவன்தமர் என்னும்படியான சிறப்புப் பெற்றார்கள்; அதனாலே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ விலக்ஷணமாகவுள்ளது என்கிறார்.

தமர்—அடியார்கள் என்றபடி: கேசவன் என்ற திருநாமத்திற்கு மூன்று வகையாகப் பொருள்கூறுவர்; 1. சிறந்த மயிர்முடியை யுடையவன். 2. கேசியென்னும் அசுரனை (ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில்) வதஞ் செய்தவன். 3. பிரமனுக்

கும் சிவபிரானுக்கும் நியாமகன்—என்பன மூன்று அர்த்தங்கள். இப்பொருள்களைத் தெரிந்துகொண்டு எம்பெருமான் பக்கலில் அன்பு பூண்டிருக்குமவர்கள் கேசவன்தமர் என்னலாம். விஷய மொன்றையு மறியாமற்போனாலும் கேசவனென்கிற திருநாமம் பெற்ற பகவானே நமக்குத் தலைவன் என்று கொண்டிருக்குமவர்களும் கேசவன்தமர் என்னத்தகுவர். எமர் கீழ்மேலே ழெழுபிறப்பும் கேசவன் தமராயினர்கள். ஏழெழுபிறப்பும் என்றது—ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் „குலம் தாரயதே தாத ஸப்த ஸப்த ச ஸப்த ச—குலம் தாரயதே தாத ஸப்த ஸப்த ச ஸப்த ச." என்று சொல்லியிருப்பதை அடியொற்றியதாம். "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்" என்கிறார் பெரியாழ்வாரும்.

மாசதிர்இதுபெற்று = இதிற்காட்டிலும் பெரிய சதிர் வேறு உண்டோ? எம்பெருமானுடைய திருவருள் இங்ஙனே பெருகிற்றென்றால் இதைவிட வேறு மாசதிர் ஏது? நம்முடைய முயற்சியாலே வரும் சதிர் அற்பம்; எம்பெருமானுடைய க்ருஷியாலே விளையும் சதிர் மாசதிர்.

நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா! = நம்முடை வாழ்வென்று ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்தைச் சொல்லுகிறது. தம்மோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களும் வாழ்ச்சி பெறுவதைத் தம்முடைய வாழ்வாக நினைப்பதே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமாகும். ஊற்றுமாறாமல் இந்த வாழ்ச்சி மேன்மேலும் வளர்ந்து செல்லுகிறபடி என்னே! என்று ஆச்சரியப்படுகிறார்.

இப்படி விஷயீகரித்த எம்பெருமானைப் பின்னிரண்டடிகளில் வருணிக்கிறார். ஸர்வேச்வரனாயும், கண்ணழகாலே என்னை யீடுபடுத்தித் தன்வடிவழகை மூற்றாட்டாக அநுபவிக்கக் கொடுத்தவனாயும், நித்யஸூரிகளைத் தோற்பிக்குமா போலே வடிவழகாலே என்னையும் தோற்பித்து விஷயீகரித்த மஹோபகாரகனாயுமிருக்கின்ற நாராயணனாலே இப்படிப்பட்ட சதிர்வாழ்ச்சி யுண்டாயிற்று என்றாராயிற்று. ... ... (க)

நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன் வேதமயன் *
காரணம்கிரிசை கருமமிவைமுதல்வனேந்தை *
சீரணங்கமரர்பிறர்பலரும் தொழுதேத்தநின்று *
வாரணத்தைமருப்பொசித்தபிரான் என்மாதவனே. (உ)

நாரணன்	நாராயணனும்
முழு ஏழ் உலகுக்கும் நாதன்	எல்லாவுலகங்களுக்கும் ஸ்வாமியும்
வேதமயன்	வேதஸ்வரூபியும்
காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன்	காரணப் பொருள்கள் காரியப் பொருள்கள் பிரயோஜனங்கள் ஆகிய இவற்றுக்கு நிர்வாஹகனும்

சீர் அணங்கு அமரர்	சீர்மை பொருந்திய திவ்யர்களான நித்யஸூரிகளாலும்	மருப்பு	கொம்பை
பிறர் பலரும்	மற்றும் பலபேர்களாலும்	ஒசித்த	முறித்த
தொழுது ஏத்த நின்று	வணங்கித் துதிக்கப்பட்டு	பிரான்	உபகாரகனும்
வாரணத்தை	(கம்ஸனது) யானையினுடைய	என் மாதவன்	எனக்கு உரியவனுமான திருமால்
		எந்தை	என்னை யடிமை கொண்டவன்.

◆ ◆ ◆ [நாரணன்.] கீழ்ப்பாட்டில் நாராயணத் திருநாமம் ப்ரஸ்துதமாகவே அதனுடைய அர்த்தாநுபவம் பண்ணுவதாக இப்பாசுரம் அமைகின்றது. இங்குத் தொடக்கத்தில் நாரணன் என்றது—நாராயண பதத்திற்குப் பொருள் யாதெனில் என்றபடி. முழுவேழுலகுக்கும் நாதன் என்றது நாராயண நாமத்தின் திரண்ட பொருள் சொன்னபடி. நார சப்தத்தாலே உலகத்திலுள்ள ஸகல சேதநாசேதநப் பொருள்களும் சொல்லப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் [அயநம்] தான் இருப்பிடமாக வுள்ளவன் என்று ஸர்வஸ்மாத் பரத்வஞ் சொன்னபடி.

இப்படிப்பட்ட நாராயணனொருவனுளன் என்பதில் பிரமாணம் ஏதென்ன, வேதமயன் என்கிறது. "நாராயணபரம்ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:। நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:॥" இத்யாதி வேதவாக்யங்களினால் ஸர்வஸ்வாமியாக ஓதப்படுகிறவனென்க. வேதமயன் என்றவாறே "நாராயண ஏவேதம் ஸர்வம்। யத்பூதம் யச்ச பவ்யம்॥" இத்யாதிகளான வேதவாக்கியங்களையும் திருவுள்ளம் பற்றி அவற்றின் பொருளை விவரிக்கிற வகையில் காரணம் கிரிசை கருமமிவை முதல்வனேந்தை என்றருளிச் செய்கிறார். எல்லாப் பொருள்களும் தானேயா யிருக்கின்றானென்று ஓதுகின்ற உபநிஷத்துக்களின் கருத்து இதுதான் என்று காட்டுகிறபடி. காரணம் என்பதனால், உலகில் ஒன்றுக்குக் காரணமாகத் தென்படுகின்ற பொருள்கள் யாவும் கொள்ளத்தகும். கிரிசை என்பதனால் அக்காரணப் பொருள்களினால் படைக்கப்படுகின்ற காரியப் பொருள்கள் யாவும் கொள்ளத்தகும். கருமம் என்பதனால், என்ன காரியத்திற்காக இப்பொருள் ஏற்பட்டதென்று விசாரிக்குமளவில் கூறப்படுகின்ற பலன் கொள்ளத்தகும். 'பானை என்ன காரியத்திற்காக?' என்று கேட்டால் 'தண்ணீர் கொண்டுவருதற்காக' என்று சொல்லுவோமன்றோ; அதுவே இங்குக் கருமம் என்பதனால் விவக்ஷிதம். ஆக, இவையெல்லாம் ஈச்வரனிட்ட வழக்கு என்றவாறு. கிரிசை கருமம் என்பதற்கு மற்றொரு வகையாகவும் பொருள் கொள்ளலாம்; ஒரு காரணப் பொருளிலிருந்து ஒரு காரியப் பொருள் பிறப்பதற்கு ஹேதுவாக இடையில் செய்யப்படுகின்ற காரியம் எதுவோ அது கிரிசை என்றும்; அதனால் பிறக்கும் காரியப் பொருள் கருமமென்றும் கொள்க.

நாராயணத் திருநாமத்திற்கு இரண்டு வகையாக வ்யுத்பத்தி யுண்டு; நாரங்களுக்கு அயநம் என்பது ஒன்று; நாரங்களை அயநமாக வுடையவன் என்பது மற்றொன்று. இவ்விருவகை வ்யுத்பத்திகளாலும் பரத்வமும் ஸௌலப்ய மும் பலிக்குமென்று முமுக்ஷுப்படி முதலியவற்றில் ஆசாரியர்கள் நிரூபித் தருளினார்கள். இங்கு ஆழ்வார் ஸௌலப்யம் பலிக்கக் கடவதான யோஜனை யையும் திருவுள்ளத்திற் கொண்டு க்ருஷ்ணாவதாரத்தை நினைத்து அதிற் செய்த வொரு செய்தியைப் பின்னடிகளிற் பேசுகின்றார். அவதாரங்களும் அவதார சேஷ்டிதங்களுமெல்லாம் நாராயண நாமத்தின் பொருளே யாகுமன்றோ.

வாரணத்தை மருப்பொசித்த வரலாறு:—தநுர்யாக மென்கிற வியாஜம் வைத்துக் கம்ஸனால் வரவழைக்கப்பட்டு ஸ்ரீக்ருஷ்ண பலராமர்கள் கம்ஸனரண் மனையை நோக்கிச் செல்லுகையில் அவ்விடத்துத் தன்னைக் கொல்லும்படி அவ னால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீட மென்னும் மதயானை கோபித்துவர, அவ் யாதவவீரர் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அவற்றால் அடித்து அவ்யானையை உயிர் தொலைத்துவிட்டு உள்ளே போயின ரென்பதாம். அக்காலத்தில் தேவர்கள் மஹர்ஷிகள் முதலாயினோர் அந்தச் சிறுச்சேவகத்திற்கு ஈடுபட்டு வணங்கித் துதி செய்தனரென்கிறது மூன்றாமடி.

'சிரணங்கு' என்பதை அமரர்க்கு விசேஷணமாகக் கொள்ளாமல் தனிப் பட்ட விசேஷ்யமாகக் கொள்வதுமுண்டு. தெய்வமகளான பிராட்டியைச் சொன்னபடி. பிராட்டியும் அமரரும் பிறர் பலரும் தொழுதேத்த நின்ற என்ற படி. "சூருமணங்கும் தெய்வப்பெண்ணே" என்பது நிகண்டு. அணங்கு என்ற விது அமரர்க்கு விசேடணமாமிடத்து 'தெய்வத்தன்மை வாய்ந்த' என்று பொருள்படும்.

வாரணம்—வட சொல். மருப்பு—யானைத்தந்தம். .. (உ)

மாதவனென்றதேகொண்டே என்னையினியிப்பால்பட்டது *
யாதவங்களும்சேர்கொடேனென்று என்னுள்புகுந்திருந்து *
தீதவம்கெடுக்குமமுதம் செந்தாமரைக்கட்குன்றம் *
கோதவமிலென்கன்னற்கட்டி யெம்மானென்கோவிந்தனே. (ங)

எமமான் என் கோவிந்தன்	எனக்காகக் கண்ணனா யவதரித்த எம்பெருமான்	அவங்கள் யாதும்	ஒருவிதமான குறையும்
மாதவன் என்றதே கொண்டு	'மாதவன்' என்று நான் வாயினாற் சொன்னவளவையே கொண்டு	சேர்கொடேன் என்று	சேரவொட்டேன் என்று ஸங்கல்பித்துக் கொண்டு
என்னை	என் விஷயத்தில்	என் உள் புகுந்து இருந்து	என்னுள்ளே பிரவேசித்திருந்து
இனி இப்பால் பட்டது	இனிமேலுள்ள காலமெல்லாம்	தீது அவம்	பலவகைப் பாவங்களையும்

கெடுக்கும்	போக்கியருள்கின்ற	குன்றம்	குன்றம்போல் நிலைபெயராமலிருந்து
அமுதம்	பரமபோக்யனாய்	கோத அவம் இல் என் கன்னல் கட்டி	கோதும் அவமுமில்லாத கன்னல் கட்டிபோலே எனக்கு இனியனாயிருக்கின்றான்.
செம் தாமரைக்கண்	செந்தாமரைபோன்ற திருக்கண்களையுடையனாய்		

• • • [மாதவனென்றதே.] எம்பெருமான் என்னிடத்தில் இவ்வளவு கனத்த விஷயீகாரஞ் செய்வதற்கு அடியாக நான் செய்த ஸாதநாநுஷ்டாநம் பெரிதாக வொன்றுமில்லை; மாதவன் என்று வெறுமனே வாயாற் சொன்னவளவையே கொண்டு என்னுடைய தீமைகளெல்லாவற்றையும் போக்கி ஆட்கொண்டானென்கிறார். எம்பெருமானுக்குப் பல திருநாமங்களிருந்தாலும் பிராட்டி ஸம்பந்தத்தை முன்னிட்டிருக்கின்ற திருநாமத்தில் அவனுக்கும் ஒரு ப்ரீதியுண்டு; „ஜாமாதா தயிதஸ் தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா ஹரிம் பச்யேம— ஜாமாதா தயிதஸ் தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா ஹரிம் பச்யேம" என்று பட்டரும் ஸ்ரீகுணரத்நகோசத்திலருளிச் செய்கிறார். ஜநக சக்ரவர்த்தியின் ஜாமாதா என்றும், பிராட்டிக்குக் கொழுநன் என்றும் உம்முடைய ஸம்பந்தத்தை யிட்டே நாங்கள் எம்பெருமானை உகக்கக்கடவோமென்று பெரிய பிராட்டியாரை நோக்கி யருளிச்செய்த ச்லோகம் அது. எம்பெருமானுக்குண்டான அதிசயங்களெல்லாம் பிராட்டியடியாகவே உண்டாவதாக ச்ருதிஇதிஹாஸ புராணங்களால் நன்கு விளங்கும். „ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்கிறான் வேதபுருஷன். „அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா— அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்று மாரீசன் சொன்னதாக வான்மீகி முனிவர் கூறுகின்றார். இவற்றையெல்லாம் திருவுள்ளம்பற்றி பட்டர் „ஸ்ரீரங்கேச்வரஸ்ய ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் சந்த்ரவதநே! த்வதாச்லேஷோத்கர்ஷாத் பவதி கலு நிஷ்கர்ஷ ஸமயே— ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் சந்த்ரவதநே! த்வதாச்லேஷோத்கர்ஷாத் பவதி கலு நிஷ்கர்ஷஸமயே" என்றும் „தவ ஸ்பர்சாதீசம் ஸ்ப்ருசதி கமலே! மங்களபதம்— தவ ஸ்பர்சாதீசம் ஸ்ப்ருசதி கமலே! மங்களபதம்" என்றும் அருளிச் செய்தார். ஆகவிப்படி எம்பெருமான்தனக்கும் மிக்க பெருமை பயக்குமதான ஸ்ரீஸம்பந்தத்தைக் காட்டுகிற திருநாமத்தில் அப்பெருமானுக்கும் ஆதராதிசயம் இருக்கப்ராப்தமாகையாலே மாதவன் என்கிற உக்தி மாத்திரத்தையே கொண்டு அவன் அளவுகடந்த அநுக்ரஹத்தைச் செய்தானென்பது உசிதமேயாகும். மா—பிராட்டிக்கு, தவன்—நாயகன் என்றபடி.

வாசி யறியாமல் பல பெயர்களையும் வாயாற் சொல்லிவருமடைவிலே மாதவனென்கிற ஒரு உக்தியும் என் வாக்கில் வந்துவிட்டது; இதையே அவன் பெரிய ஸாதநமாகக் கொண்டான்போலும். இவ்விடத்தில்... "மாதவன் மலைநீர் நிழலென்று எடுமேது ஸாங்கேதிகம், பாரிஹாஸ்யம், ஸ்தோபம், ஹேலநம்,

ஸுவிஹிதம், ஸநிர்வேதம், ஸாநுதாபஹேது" என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணிகையின் வியாக்கியான முணரத்தக்கது.

யாதவங்களும் என்றவிடத்து, 'யா, தவங்களும்' 'யாது' அவங்களும்' என்று இருவகையாகவும் பிரித்துப் பொருள் கூறுவர். "உன்னை யாதொரு தபஸ்ஸிலும் புக்குக்லேசிக்கவிடே னென்று" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. காய க்லேசகரமான வியாபாரம் தவமெனப்படும்; "ஊன்வாட வுண்ணாது உயிர்காவ லிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து, தான் வாடவாடத் தவஞ்செய்ய வேண்டா" என்று திருமங்கையாழ்வார் சேதநர்கட்கு உபதேசிப்பதுபோலே எம்பெருமான் ஆழ்வார்க்கு உபதேசிப்பன்போலும். "காயிலை தின்றும் கானி லுறைந்தும் கதிதேடித், தீயிடைநின்றும் பூவலம்வந்தும் திரிவீர்காள்!, தாயினு மன்பன் பூமகள் நண்பன் தடநாகப், பாயன் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே" என்றார் திருவரங்கக் கலம்பகத்தில் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

யாது அவங்களும் என்று பிரித்தால், அவம் என்பது அவம் என்ற வட சொல்லின் விகாரமாகக் கொள்ளத்தக்கது. அவத்யம் என்ற வடசொல் ஈறு கெட்டு அவமென்று கிடக்கிறது என்பாருமுளர். நரக ஹேதுவான அவித்யை முதலான கெடுதல் யாதொன்றும் என்றபடி. 'நான் அயோக்யன்' என்று நைச் யாநுஸந்தாநம் பண்ணி அகன்றுபோதல், உபாயாந்தரப் படுகுழியில் வீழ்ந்து ஒழிந்துபோதல் முதலிய ஒரு தீமையும் நேராதபடி நோக்கிக்கொள்ளுகிறேன் ஆழ்வீர்! என்று பிரதிஜ்ஞை பண்ணி உட்புகுந்திருந்தபடி.

தீது அவம் கெடுக்கும் = புத்தி பூர்வகமாகச் செய்த பாவங்களை ஒன்றுக்கு அர்த்தமாகவும், தெரியாமல் நேர்ந்துவிட்ட பாவங்களை மற்றொன்றுக்கு அர்த்த மாகவுங் கொள்க. பகவத்ப்ராப்திக்குப் பிரதிபந்தகமான கருமங்களெல்லாவற் றையும் தொலைத்தமை சொன்னவாறு. அன்றியே, தீது அவம் என்பதற்கு, ப்ராயச்சித்தங்களாலே போக்கக்கூடிய பாவங்களையும், பிராயச்சித்தமே யில்லாத பாவங்களையும் அர்த்தமாகக் கூறுவதுமுண்டு. "மித்ரத்ரோஹே ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா। நிஷ்க்ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நானாம் நிஷ்க்ருதி:—கோக்நே சைவ ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா, நிஷ்க்ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:" என்ற ஸ்ரீராமாயணச்லோ கம் இங்கு உணரத்தக்கது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளுங் காண்க.

"தீதவம் கெடுக்குமமுதம்" என்ற சொற்போக்கால், அவனுடைய போக் யதையை நான் அநுபவித்த மாத்திரத்திலே எனது பாவங்களெல்லாம் தொலைந் தன என்கிறாரென விளங்கும். "செந்தாமரைக் கட்குன்றம்" என்ற விடத் திற்கு நம்பிள்ளை அருளிச் செய்யும் அர்த்த விசேஷம் அற்புதமானது :—"இத் தலையில் தீதும் அவமும் போக்கினுயிருக்கையன்றிக்கே தனக்குண்டாய்

Released By Maaran's Dog Toronto, Canada

கழிந்தது என்று தோற்றும்படியாயிற்று வடிவிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யம். *ஹ்லாஸ நேஷு உந்மேஷ்ராணாம் ஹ்ருஷம் ஹவதி ஊஷித:* என்றிருக்குமவனிறே" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

கோது அவம் இல் கன்னல்கட்டி = உலகில் கன்னலுக்கு இருவகையான தோஷங்கள் ஸம்பாவிதம்; இதரவஸ்து ஸம்பந்தத்தினால் விளையும் தோஷம் ஒன்று; பாகத்தில் கெடுதலினால் விளையும் தோஷம் மற்றொன்று. இவ்விரு வகைக் குற்றமுமற்ற கன்னலை த்ருஷ்டாந்தமாகச் சொன்னதனால் எம்பெருமானுக்கும் இருவகைக் குற்றமில்லாமை இங்கு விவக்ஷிதம். எதிர்த்தலையில் ஒரு உபாயத்தை யெதிர்பார்த்துக் காரியஞ் செய்வதும் எதிர்த்தலையின் பேறாகச் செய்வதுமாகிய குற்றமற்றவன் என்க. தன்பேறாகக் காரியஞ் செய்யுமவனென்கை. இங்கு எம்மான் என்றது வேறொரு வஸ்துவில் நான் போக்யதாபுத்தி பண்ணாதபடிக்குத் தன் பரமபோக்யதையைக் காட்டி என்னைத் தோற்பித்தவனென்றவாறு. என் கோவிந்தன் = க்ருஷ்ணாவதாரஞ் செய்தருளினதும் ஆழ்வார் தம்மை அகப்படுத்திக் கொள்ளுகைக்கு என்றிருக்கிறார் போலும். ... (ரு)

கோவிந்தன்குடக்கூத்தன் கோவலனென்றென்றேகுனித்து *
தேவும்தன்னையும் பாடியாடத்திருத்தி * என்னைக்கொண்டென்
பாவந்தன்னையும்பாறக்கைத்து எமரேழெழுபிறப்பும் *
மேவும்தன்மையமாக்கினான் வல்லனெம்பிரான்விட்டுவே. (சு)

வல்லன்	ஸர்வசக்தனும்	பாடி	புகழ்ந்துபாடி
எம்பிரான்	எமக்கு உபகாரங்கள் செய்பவனுமான	ஆட	திரியும்படி
விட்டு	விஷ்ணுபகவான் (எமக்குச் செய்தது யாதெனில்)	திருத்தி	கடாக்ஷித்து
கோவிந்தன் குடக்கூத்தன் கோவலன் என்று என்றே குனித்து	கோவிந்தன் என்றும் குடக்கூத்தாடுபவன் என்றும் கோபாலன் என்றும் இத்தகைய திருநாமங்களையே சொல்லிக் கூத்தாடி	என்னை	அடியேனை
தேவும்	பரத்வத்தையும்	கொண்டு	ஆட்படுத்திக்கொண்டு
தன்னையும்	தானான தன்மையாகிய ஸௌலப்யத்தையும்	என் பாவம் தன்னையும்	எனது பாவங்களையும்
		பாற கைத்து	ஓடவடித்து
		எமர் ஏழ் எழு பிறப்பும்	எம்மைச் சேர்ந்தவர்கள் ஏழேழ்பிறப்பும்
		மேவும் தன்மையம் ஆக்கினான்	(தன்னை) அடையும்படியான தன்மையையுடையோமாம்படி செய்தான்.

* * * [கோவிந்தன்.] என்னை மாத்திரமன்றியே என்னோடு ஸம்பந்த ஸம்பந்தமுடையாரையுங்கூட என்னைப்போலே யாக்கின எம்பெருமானுடைய ஸாமர்த்தியம் என்னே! என்று வியந்து பேசும் பாசுரமிது. ஸௌலப்ய குணத்திற்கு ஏகாந்தமான திருநாமங்களை இடைவிடாது சொல்லி உவகை தலைமண்டை

கொண்டு கூத்தாடி அந்த ஸௌலப்யத்திற்கு அடியான பரத்வத்தையும் தனக்கு அஸாதாரண ஸ்வபாவமான நீர்மையையும் பாடித் திரியும்படி, இரும்பைப் பொன்னாக்குவாரைப்போலே என்னை நித்யஸூரி யென்னலாம்படி திருத்தித் தன்னுடையவனாகக் கைக்கொண்டு, தன்னுடைய அங்கீகாரத்திற்கு விரோதியாயிருந்த என்னுடைய பாபங்களையும் ஓடிப்போம்படி துரத்தி என்னோடு ஸம்பந்த முள்ளவர்கள் ஏழேழு ஜன்மமும் தன்னை ப்ராபிக்குந் தன்மையை யுடையோமாம்படி பண்ணினான்! இப்படியும் ஒருவல்லமை யுண்டாவதே! என்றாராயிற்று. வல்லனெம்பிரானென்பதை முடிவிலேயே அந்வயிக்கவுமாம்.

கோவிந்தன் = இந்தத் திருநாமம் ஸஹஸ்ரநாமத்தில் இரண்டிடத்தில் படிக்கப்பட்டுள்ளது; அங்கு பட்டருடைய பாஷ்யம் வருமாறு:—கோ (கோ) என்று வாக்குக்குப்பெயராதலால் துதிகளைப்பெற்றவர் என்க. தேவர்கள் செய்யும் துதிகளாகிய வாக்குக்களைப பெறுகிறவர். கோ என்று பூமிக்கும் பெயராதலால் பூமியைத் திரும்பவும் அடைந்தவர். 'குகைக்குள் போய்க் காணாமற்போன பூமியை நான் கண்டெடுத்தேன்; அதனால் நான் கோவிந்தனென்று சொல்லப் படுகிறேன்' என்று ஸ்ரீமஹாபாரத சாந்திபர்வத்திலுள்ளது.—வேதாந்த வாக்குக் களினால் அறியப்படுகிறவர் அல்லது அடையப்படுகிறவர் என்பது சங்கரபாஷ்யம். பசுக்களை அடைந்தவன் என்பது ப்ரஸித்தமான அர்த்தம். கோவர்த்தனோத் தாரணத்திற்குப் பிறகு தேவேந்திரன் வந்து கோவிந்தாபிஷேகம் செய்தனன் என்பது முணர்க. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி :—" ஸ்ரீவைகுண்டத்தில் இல்லாத தொரு ஸம்பத்திறே இது : கோஸம்ருத்தியாலுண்டான ஐச்வர்ய முள்ளது இங்கே யிறே," என்பதாம்.

குடக்கூத்தன் = அந்தணர்க்குச் செல்வம் விஞ்சினால் யாகங்கள் பண்ணு மாபோலே இடையர் செல்வம் மிக்கால் செருக்குக்குப் போக்குவீடாக ஆடுவ தொரு ஆட்டமாம் குடக்கூத்து. தலையிலே அடுக்குக் குடமிருக்க இருதோள் களிலும் அங்ஙனே அடுக்குக்குடமிருக்க இவைசிறிதும் சலியாதபடி இரண்டு கைகளாலும் குடங்களை மாறிமாறி யெறிந்து ஆடுங்கூத்து இது.

கோவலன்—கோபாலனென்பதன் விகாரம். கோ—பசுக்களை மேய்ப் பதில், வலன்—வல்லன் என்றும் சிலர் கூறுவர். 'கோ அலன்' என்று பிரித்து, ஆச்ரிதபரதந்திரன் என்று சொல்லுவாருமுளர்; கோ என்று அரசனுக்குப் பெயராய் ஸ்வதந்திரனென்றபடி; கோ அல்லாதவன்-பரதந்திரன்.

தேவும் தன்னையும் = தேவு என்றது தேவத்வமாய் பரத்வத்தைச் சொன்னபடி. தன்னை என்று ஆச்ரித பாரதந்திரியமாகிற ஸௌலப்யத்தைச் சொன்னபடி. இச்சொல் அப்பொருளை எங்ஙனே சொல்லுமென்னில்; எம் பெருமானுக்கு ஸௌலப்யமே தானான தன்மை என்று அறுதியிட்டிருக்குமவ ருடைய வாக்காதலால் இதுவே பொருளாகும்.

ஆழ்வானும் வரதராஜஸ்தவத்தில் "அநந்யாதிசயத்வம் தவ விலஜ்ஜுர் வைதிகா: பராதீசம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே—அநந்யாதிசத்வம் தவ இல ஜகுர் வைதிகரா: பராதிசம் த்வாம் து ப்ரணத பாரதந்த்ரம் மநுமஹே" என்றருளிச் செய்தார். ஸ்ரீபரதாழ்வானோடுகூட சித்திரகூடஞ் சென்ற வஸிஷ்ட பகவான் ஸ்ரீராமபிரானை நோக்கி "ஆத்மாநம் நாதிவர்த்தேதா:—ஆத்மாநம் நாதிவர்த்தேதா:" என்றான். 'தன்னை மீறாதே' என்பது சப்தார்த்தம். இங்கே ஆத்மாநம் என்பதற்கு 'உயிர்நிலையான பரதாழ்வானை' என்று சிலர் பொருள் கூறுவதுண்டு; அப்படியல்லாமல் பட்டர் அருளிச் செய்வதாவது—ஆத்மாநமென்றது தானான தன்மையை யென்றபடி: தானான தன்மையாவது ஆச்ரிதபாரதந்திரியம்; அதனை இழக்கவேண்டா என்பதாக.

தன்மையம் = தன்மையன் என்பது ஒருமை; அதன் பன்மை இது. தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று. விட்டு—விஷ்ணு. ... ... (ச)

விட்டிலங்குசெஞ்சோதித் தாமரைபாதம்கைகள்கண்கள் *
விட்டிலங்குகருஞ்சுடர் மலையேதிருவுடம்பு *
விட்டிலங்குமதியம்சீர் சங்குசக்கரம்பரிதி *
விட்டிலங்குமுடியம்மான் மதுசூதனன் தனக்கே. (ரு)

விட்டு இலங்கு முடி அம்மான்	நன்றாக விளங்குகின்ற திருவபிஷேகத்தை யுடைய ஸ்வாமியான	திரு உடம்பு	திருமேனியோ வென்றால்,
மது சூதனன் தனக்கு	மதுவைக்கொன்ற பெருமானுக்கு	விட்டு இலங்கு கரு சுடர் மலையே	நன்கு விளங்குகின்ற நீலவர்ணப்ரபையை யுடைய மலைபோன்றது;
பாதம் கைகள் கண்கள்	திருவடிகளும் திருக்கைகளும் திருக்கண்களும்	சீர் சங்கு	சிறந்த சங்கானது
விட்டு இலங்கு செம் சோதி தாமரை	விரிந்து விளங்குகின்ற சிவந்த சுடரையுடைய தாமரைப்பூக்களேயாம்;	விட்டு இலங்கு மதியம்	மிகவிளங்குகின்ற சந்திரனைப் போன்றது;
		சக்கரம்	திருவாழி
		பரிதி	ஸூர்யனைப்போன்றது;

* * * [விட்டிலங்கு]. தம்மையும் தம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளையும் எம்பெருமான் வைஷ்ணவராக்கினது தன் வடிவத்தைக் காட்டி யென்கிறார்.

திருமாலையாண்டான் பக்கலில் எம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுங்காலத்தில் பாசுரந்தோறும் எம்பெருமானார் விலக்ஷணமாக ஒவ்வொரு அர்த்த விசேஷம் தாம் சொல்லி 'இப்படியிருக்கலாமோ?' என்பராம்; ஆண்டான் அதுகேட்டு 'இது விச்வாமித்ர ஸ்ருஷ்டியாயிருக்கிறது; ஆளவந்தாரருளிச்செய்ய நான் கேட்டதில்லை' என்று ஸாதிப்பாராம். இப்பாசுரம் வருகையில்

எம்பெருமானார் ஒன்றும் ஸாதியாமல் இருக்கக்கண்ட ஆண்டான் 'இப்பாட்டில் விச்வாமித்ர ஸ்ருஷ்டி ஒன்றுமில்லைபோலும்!' என்று புன்முறுவலோடே கேட்டு விட்டாராம். எம்பெருமான் தன்னுடைய திருமேனியழகைக் காட்டி ஆழ்வாரைத் தனக்காக்கிக் கொண்டமையை இப்பாட்டில் சொல்லுவதாக ஆளவந்தாரருளிச் செய்தபடி. உடையவரும் இப்படியே அருளிச் செய்துவந்தார்; பட்டர் அருளிச் செய்யும்போது 'ஆழ்வாரையும் ஆழ்வாருடைய ஸம்பந்திகளையும் விஷயீகரித்து அத்தாலே எம்பெருமானது திருமேனியிற் பிறந்த புகரைச் சொல்லுகிறது' என்பராம். எம்பெருமானுடைய வடிவழகைக் காரண கோடியிலே நிறுத்தி ஆளவந்தாருடைய நிர்வாஹம். அதைக் கார்ய கோடியிலே நிறுத்தி பட்டருடைய நிர்வாஹமென்று வாசிகாண்க.

> பன்னீராயிரப்படி யுரையில்-" இப்பாட்டில் முதலடியில் விட்டு வென்று திருநாமமாகப் பிரித்து, விட்டிலங்கு முடியம்மானென்று நாலாமடியோடே அந்வயித்துக் கிடக்கிறது; அல்லாதபோது, திருநாமம் முதலாக எழுகிற பாட்டுக்களின் மர்யாதை குலையும்."

என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதற்குப் பெரியோர்கள் அருளிச் செய்வதாவது—பாட்டின் தொடக்கத்திலுள்ள விட்டு என்பதை 'விஷ்ணு' என்கிற பதத்தின் விகாரமாகவே கொள்ளவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. கேசவாதி நாமங்கள் பாசுரந்தோறும் வரவேணுமென்கிற இவ்வளவு நியமமே யுள்ளது. இப்பாட்டில் மதுசூதனனென்கிற திருநாமம் வந்துவிட்டது கீழ்ப் பாட்டில்வந்த விஷ்ணுநாமம் இப்பாட்டிலும் வரவேணுமென்கிற நியதியில்லை. அப்படி நியதிகொண்டாலும் பாட்டின் ஆதியில் விட்டு என்றிருப்பதால் அது அர்த்தசக்தியால் விஷ்ணுபோதகமாகாவிடினும் சப்தசக்தியால் விஷ்ணுப்ரத்யபிஜ்ஞாபகமாகக் குறையில்லை. திருவெழுகூற்றிருக்கையில் இருமலர், நால்வாய், இருநீர், ஆறுபோதி என்றிவை முதலான பதங்கள் அர்த்தசக்தியாலன்றிக்கே சப்தசக்தியால்மாத்திரம் எண்களைக் குறிப்பிடுகின்றமை இதற்கு நிதர்சனமாகக் கொள்ளத்தகும். ஆகவே, ஈடு முப்பத்தாறாயிரப்படியி லருளிச் செய்கிறபடி பாகுநிர்வாஹமே பொருந்தும் என்று. ஒன்பதினாயிரப்படியிலும் இருபத்திநாலாயிரப்படியிலும் விட்டு என்கிற சொல் நான்கடிகளிலும் ஸமரூபமாகவே கொள்ளப்பட்டிருக்கின்றமையும் அறியத்தக்கது.

மிகவிளங்காநின்ற திருவபிஷேகத்தை யணிந்துள்ள எம்பெருமானுக்குப் பாதங்களும் கைகளும் கண்களும் அழகிய தாமரைகளே யாம்; திருமேனியோ நீலாஞ்சநாத்ரியேயாம்; சங்குசக்கரங்கள் சந்த்ர ஸூர்யர்கள்—என்று திவ்யாவயவ சோபையையும் திவ்யாயுத சோபையையும் அநுபவித்துப் பேசினாராயிற்று.

வடமொழியில் பரிதி என்னுஞ்சொல் ஸூர்யனைச் சுற்றியிருக்கின்ற பரிவேஷத்திற்கு [ஊர்கோளுக்கு]ப் பெயர்; அச்சொல்லே தமிழில் இலக்கணையால் ஸூர்யனை யுணர்த்திநிற்கும்.

6

மதுசூதனனென்ற திருநாமத்திற்கு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள்—“[மதுஸூதந:] மது என்னும் அஸுரனைக் கொன்றவர், திருமாலினுடைய காதின் குறும்பியிலிருந்து முண்டான மது வென்னும் பெயரையுடைய அஸுரனை அவர் ப்ரஹ்மாவின் நன்மைக்காகக் கொன்றார். அதனால் தேவர்களும் தானவர்களும் மநுஷ்யர்களும் ரிஷிகளும் அவரை மதுஸூதநரென்று சொல்லுகிறார்களென்று ஸ்ரீமஹாபாரதத்திற் கூறப்பட்டுளது” என்றார். பட்டருடைய பாஷ்யத்தில்—மது வென்னுமஸுரனை ஸம்ஹரித்தவரென்கிற பொருள் தவிர, நித்யஸூரிகளின் மதுக்களென்னும் புலன்கள் தம்மிடத்தில் இடையூறில்லாமல் சேர்ந்திருக்கும்படி ஆகர்ஷிப்பவர்-என்கிற பொருளும் அருளிச் செய்யப்பட்டுளது.

மதுவைச் சொன்னவிட மெங்கும் கைடபாஸுரனையும் கொள்ளவேணும்; அவ்விருவரும் கூடியே உலகுக்குத் தீங்கிழைத்துத் திருமாலால் முடிக்கப்பட்டனர். இவர்கள் முடிந்தவரலாறு பலவிதமாகச் சொல்லப்படுவதுண்டு: அவற்றுள் ஒருவிதம் வருமாறு:—பிரமதேவனது தினப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினுல் எங்கும நீர்மயமாயிருந்த பொழுது அவ்வெள்ளத்தில் திருமால் அரவணையில் அமர்ந்திருக்கையில் அத்திருமாலினிடத்து நின்று ரஜஸ் தமோ குணங்களின் வடிவமாகத்தோன்றி ‘எம்மை நீ கொல்லுக என்று தம் வாயாற் சொல்லிய பின்னரே தம்மைப்பிறர் கொல்லலாகும்’ என்று வரம்பெற்ற இவ்வசுரரிருவரும் அப்பிரளயநீரைக் குழப்பிக்கொண்டு பேராரவாரத்துடன் சென்று பிரமதேவனைக் கண்டு அவனிடத்து நின்று வேதங்களையெல்லாம் பறித்துக்கொண்டு அப்பிரளய வெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்ய வேண்டுவது இன்னதெனத் தேறாது திகைப்புக்கொண்ட அப்பிரமன் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத் துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அக்கடவுள் ஹயக்ரீவாவதாரஞ் செய்து அக்கடலிற் புக்கு இனியதோர் இசையைப்பாட, அவ்வினிய கீதத்தைக்கேட்ட அவ்வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலிவந்த வழியைப் பிடித்துச் செல்லுமளவில் திருமால் அவ்வேதங்களுள்ளவிடத்திற் சென்று அவற்றைக் கொணர்ந்து பிரமனுக்குத் தந்தருள அப்போது ஒருவரையுங்காணுதவராய் வேதங்களும் எடுத்துக் கொண்டு போகப்பட்டதை யுணர்ந்த அவ்வசுரர்கள் மிகச்சினந்து அரவணையில் அறிதுயிலமரும் பரம்பொருளைக் கிட்டிப் போர்செய்யத் தொடங்கவே திருமாலுக்கும் அவ்வசுரர்க்கும் வெற்றி தோல்விகளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் ‘உனது ஆற்றலுக்கு உவந்தோம்; வேண்டும் வரம் பெற்றுக்கொள்’ என்ன; அக்கடவுள் ‘யான் உங்களைக் கொல்லவேணும்’ என்று வரம் வேண்ட, அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் உங்கட்கு வேண்டும் வரங் கொண்மின் என்ன; ‘ஒருவரும் இறவாத விடத்தில் நாங்கள் இறக்கவேண்டும்’ என்று அவர்கள் வேண்ட, திருமாலும் அங்ஙனமே வரமளித்துத் தனது திருத்தொடையைக் கொண்டு அவர்களை இறுக்கிக் கொன்றிட்டனன் என்பதாம்.

கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் அழகருடைய திருத்துடைகளை வருளிக்குங்கால் "விஷ்டூஷ்ட ஜயாஒெகடஹகீடள—பிஷ்டதஷ்ட மதுகைடபகீடெள" என்றும், பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய திருத்துடைகளை வருளிக்குங்கால் "ஊஷிவ ஜயாஒெகடஹவ....... கிஊவபிஜீஊஹி ஙஂஹகாஜுஒராவெ-ஙா:—மதயிவ மதுகைடபஸ்ய.....கிமுபமீமஹி ரங்கஞுஞ்ஜரோர்வோ:" என்றும் அருளிச் செய்திருக்கையாலே மதுகைடபர்கள் திருமாலின் திருத்துடையில் இறங்கிமுடிந்தனரென்பது தெற்றென விளங்கும். அரவணையில் துயில்கொள்ளும் எம்பெருமானோடு போர்புரிவதாக மதுகைடபர்கள் கிட்டவந்த மாத்திரத்திலே திருவனந்தாழ்வானுடைய உஷ்ணமான மூச்சுக்காற்று வீசினவளவிலே அவ்வசுரர்கள் வயிறுருகி மாண்டொழிந்தனர் என்பதாகப் பேயாழ்வார் மூன்றாந்திருவந்தாதியில் "காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள், ஏய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப, வாய்ந்த மதுகைடபரும் வயிறுருகி மாண்டார், அது கேடவர்க்கிறுதிபாங்கு, (66) என்ற பாசுரத்திலருளிச் செய்கிறார். இதிஹாஸ புராணங்கள் பலவகைப்பட்டிருத்தலால் இங்ஙனேயும் ஒருவிதமுண்டு போலும். "மேருகிரியவுணனுடல் மிடல் கெடுத்தாயென்பர் அது, உன் கூருகிரேயறிந்ததல்லால் கோவேயீயறியாயால்" (திருவரங்கக் கலம்பகம்) என்றாற்போலே, உண்மையில் திருத்துடைகளால் இறக்கிக் கொல்லப்பட்ட அவ்வசுரர்களை ஆதிசேஷனுடைய வெவ்வுயிர்ப்பினால் வயிறுருகி மாண்டனராகச் சொன்னாரென்றுங் கொள்ளலாம்: அதிசயோக்தி ப்ரபேதங்கள். (ரு)

மதுசூதனையன்றிமற்றிலேனென்று எத்தாலும்கருமமின்றி *
துதிசூழ்ந்தபாடல்கள்பாடியாட நின்றூழியூழிதோறும் *
எதிர்சூழல்புக்கெனைத்தோர்பிறப்பும் எனக்கேயருள்கள்செய்ய *
விதிசூழ்ந்ததாலெனக்கேலம்மான் திரிவிக்கிரமனையே. (சு)

மது சூதனை அன்றி	மதுவை முடித்த எம்பெருமானைத்தவிர
மற்று இலேன் என்று	வேறொரு பற்றுடையேனல்லேன் என்று அநுஸந்தித்து
எத்தாலும்	எந்தவஸ்துவினாலும்
கருமம் இன்றி	ஒருகாரியமில்லாமல் [அநந்யப்ரயோஜநமாக]
துதி	ஸ்தோத்ரரூபத்தாலே
சூழ்ந்த	அவனது திருக்குணங்களை வளைந்த
பாடல்கள்	பாசுரங்களை
நின்று பாடி ஆடி	நிலைநின்று பாடியாடும்படி

ஊழி ஊழி தொறும்	ஸதாகாலமும்
எனைத்து ஓர் பிறப்பும்	(நான் பிறந்த) எல்லாப் பிறவிகள் தோறும்
எதிர்	எனக்கெதிரே
சூழல் புக்கு	சூழ்ச்சியோடே அவதரித்து
எனக்கே	என்பொருட்டே
அருள்கள் செய்ய	க்ருபைபண்ணுதற்கு
எனக்கு எல்	எனக்கென்னவே
அம்மான் திரி விக்கிரமனை விதி சூழ்ந்தது	ஸ்வாமியான த்ரிவிக்ரமனை விதிசூழ்ந்து கொண்டது.

* * * [மதுசூதனையன்றி.] எம்பெருமான் பக்கலிலே நான் ஊன்றுகைக்காக அவன்றான் நெடுங்காலம் க்ருஷி பண்ணினதுண்டு; அதுவும் பரமக்ருபையாலே யென்கிறார். எம்பெருமானைத் தவிர வேறு எந்த உபேயமும் உபாயமும் எனக்கு வேண்டாவென்று தள்ளி அவனையே துதித்துப்பாடி யாடும்படியாக என்னைத் திருத்திப் பணிகொள்ளும் பொருட்டு, நான் பிறக்கும் பிறவிதோறும் தானும் எதிரேவந்து பிறந்து எனக்கு வலை போடும்படியாக எம்பெருமானை ஒரு பரம க்ருபை ஆக்ரமித்துக் கொண்டது என்கிறார்.

மற்றிலேன் என்பதனால் தமக்கு வேறு ப்ராப்யம் இல்லையென்பது சொல்லப்படுகிறது. எத்தாலுங் கருமமின்றி என்பதனால் வேறு உபாயம் இல்லை யென்பது சொல்லப்படுகிறது என்று அழகிய மணவாளச்சீயர் அருளிச் செய்யக் கேட்டிருக்கை.

"அநாதிகாலந் தொடங்கி இன்றளவும்வர நான் பிறந்த பிறவிகள்தோறும் என்னை வசீகரிக்கைக்கீடான வடிவுகளைக் கொண்டுவந்து பிறந்தருளி என்னை வசீகரித்து" என்பது ஆறாயிரப்படி திவ்யஸூக்தி. இதிலே சிலர் சங்கிப்பதுண்டு; ஒரு சேதநனை எம்பெருமான் வசப்படுத்திக்கொள்ளத் திருவுள்ளம்பற்றினால் அதற்காக அவன் பல திருவவதாரங்கள் செய்யவேணுமோ? அவன்தானே வாரிப்பிடியாகப் பிடித்துக்கொள்ளுமளவில் தடைப்பாரில்லையே. அப்படியிருக்க, இவர் தம்மை வசீகரிக்க அவன் பல பிறப்புக்கள் பிறந்தருளினதாகச் சொல்லுகிறவிது என் கொல்? என்று.—இதற்குப் பெரியோர் பணிப்பதாவது—எம்பெருமான் கேட்பாரற்ற ஸ்வதந்திரனே யாகிலும் ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக ஒரு வ்யாஜமாத்திரமாவது இத்தலையிற் கொண்டே ஸ்வீகரிப்பதாக ஒரு வரம்பு இட்டுக்கொண்டிருக்கிறான்; இதுவரையில் இவ்வாழ்வார் பல யோனிகளிற் பிறந்தவிடத்து அப்பெருமானுக்கு இவரை வசீகரிக்கைக்கு உறுப்பான அல்ப வ்யாஜமுங் கிடைக்கவில்லை யென்பதையும், இந்தப் பிறவியில்தான் இவரைக் கைக்கொள்வதற்கு ஸ்வல்பவ்யாஜம் அவனுக்குக் கிடைத்தது என்பதையும் தெரிவிப்பதாகுமிந்தப் பாசுரம்—என்று. எம்பெருமானுடைய க்ருபாகாஷ்டையைப் பேசுவதிலாவது, ஆழ்வார் தம்முடைய நைச்யகாஷ்டையைப் பேசுவதிலாவது இப்பாசுரத்திற்கு முக்கிய நோக்கு என்பர்.

ஸ்ரீவசந பூஷணத்தில்—

"ஆகையால் இவன் விமுகனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணின ஈச்வரனை யநுஸந்தித்தால் எப்போதும் நிர்ப்பரனாயே யிருக்குமித்தனை.

"எதிர்சூழல் புக்கு."
ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப் போலே வ்யாப்தியும்.
ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப் போலே ஸ்வார்த்தமாக வென்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்பது."

என்றுள்ள ஸ்ரீஸூக்திகளும் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களும் இங்கு அநுஸந்திக்க வுரியன.

தம்மை விஷயீகரித்தல்லது எம்பெருமானை யிருக்கவொட்டாமையால் அவனுடைய க்ருபையை விதி என்றார். .... (கூ)

திரிவிக்கிரமன்செந்தாமரைக்கண் எம்மானென்செங்கனிவாய் *
உருவில்பொலிந்த வெள்ளைப்பளிங்குநிறத்தனன் * என்றென்றுள்ளிப்
பரவிப்பணிந்து பல்லூழியூழிநின்பாதபங்கயமே *
மருவித்தொழும்மனமேதந்தாய் வல்லைகாணென்வாமனனே. (எ)

என் வாமனனே	எனக்காக வாமனாவதார மெடுத்த பகவானே!	உள்ளி	அநுஸந்தித்து
திரிவிக்கிரமன் என்று	மூவடியாலே உலகங்களை யெல்லாமளந்தவன் என்றும்	பரவி	துதித்து
செம் தாமரை கண் எம்மான் என்று	செந்தாமரை போன்ற கண்களையுடைய ஸ்வாமியென்றும்	பணிந்து	வணங்கி
என் செம் கனி வாய் உருவில் பொலிந்த வெள்ளை பளிங்கு நிறத்தனன் என்று	எனக்கு போக்யமாய்ச் சிவந்து கனிந்த அதரத்தினுடைய அழகு பொலிந்த சுத்த ஸ்படிக வர்ணமான திருமுத்துக்களையுடையவன் என்றும்	பல் ஊழி ஊழி	நெடுங்காலம்
		நின் பாத பங்கயமே	உனது பாதாரவிந்தங்களிலேயே
		மருவி தொழும் மனம்	பொருந்தி அடிமை செய்தற்குறுப்பான மனத்தை
		தந்தாய்	கொடுத்தருளினாய்;
		வல்லை காண்	நீ ஸமர்த்தனன்றோ ?

* * * [திரிவிக்கிரமன்] எம்பெருமானே! உன்னுடைய குணாநுஸந்தான பூர்வகமாக உன்னைத் துதித்துவணங்கி யநுபவிக்கு மிவ்வளவையே பிரயோஜனமாகக் கொண்டிருக்கும்படியான மனத்தை எனக்குத் தந்தருளினாய்: உன்னுடைய ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம்! என்று கொண்டாடுகிறார்.

மூன்றடியாலே ஸகல லோகங்களையும் தன் காற்கீழே யிட்டுக்கொண்டவனே! என்றும், கடாக்ஷவீக்ஷணத்தாலே என்னைத் தன் திருவடிக்கீழ் இட்டுக் கொண்டவனே! என்றும், சிவந்து கனிந்த திருவதரத்திலே பரபாகசோபையுடன் விளங்காநின்ற திருமுத்துக்களின் அழகைக்காட்டி என்னை யீடுபடுத்திக் கொண்டவனே! என்றும் இங்ஙனே பலகால் நினைத்தும் வாய்வந்தபடி பேசியும் குணபரவசனாய் வணங்கியும் இப்படி உள்ளதனை நாளையும் அநந்யப்ரயோஜநனாய்க் கொண்டு உன் திருவடிகளிலே அடிமை செய்யும்படியான மநஸ்ஸைத் தந்தாய்; வல்லைகாண் எம்பிரானே! வல்லைகாண்; ஒருவர்க்குஞ் செய்யமுடியாத காரியமன்றோ நீ செய்தது! என்று கொண்டாடிப் பேசினாராயிற்று.

மருவித்தொழும் மனமே தந்தாய் என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி பரம போக்யமானது; "பழைய நெஞ்சைத் திருத்தினவளவன்றிக்கே கருவுகலத்திலே யொரு நெஞ்சைத்தந்தாய். * ஷிவ்ஹூஷூஷி போலே, 'பழைய நெஞ்சு இது' என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணவொண்ணாதபடி யிராநின்றது' என்பதாம் — கருவுகலமாவது ஸந்நிதிகளில் திருவாபரணம் முதலிய சிறந்த வஸ்துக்கள் சேமித்து வைக்குமிடம்: அதிலிருந்து ஒரு மநஸ்ஸை யெடுத்து ஆழ்வார்க்கு எம்பெருமான் நற்கொடையாகக் கொடுத்தானாம். ... . (எ)

வாமனனென்மரதகவண்ணன் தாமரைக்கண்ணினன்
காமனைப்பயந்தாய் * என்றென்றுன்கழல் பாடியேபணிந்து *
தூமனத்தனனாய்ப் பிறவித்துழதிநீங்க * என்னைத்
தீமனங்கெடுத்தாய் உனக்கென்செய்கேனென்சிரீதரனே. (அ)

என் சிரீதரனே	எனது திருமாலே !,	உன் கழல்	உன் திருவடிகளில்
வாமனன் என்று	வாமனமூர்த்தியே யென்று சொல்லியும்	பாடி பணிந்து	பாடிவணங்கி
என் மரதகம் வண்ணன் என்று	மரதகம்போன்ற வொளியையுடைய எம்பெருமானேயென்று சொல்லியும்	தூ மனத்தனன் ஆய்	பரிசுத்தமான மனத்தை யுடையேனாய்
தாமரக் கண்ணினன் என்று	புண்டரீகாக்ஷனே யென்று சொல்லியும்	பிறவி துழதி நீங்க	பிறவித்துயரம் தீரும்படியாக
காமனை பயந்தாய் என்று	மன்மதனை மகனாகப் பெற்றவனே யென்று சொல்லியும்	என்னை தீ மனம் கெடுத்தாய்	என்னைத் தீயமனம் அற்றவனாக ஆக்கினாய்;
		உனக்கு	இப்பெருநன்றி செய்தவுனக்கு
		என் செய்கேன்	என்னகைம்மாறு செய்வேன்?

* * * [வாமனன்] தம் விஷயத்தில் எம்பெருமான் பண்ணின மஹோபகாரத்திற்கு இன்னது கைம்மாறு செய்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றமையைத் தெரிவிக்கும் பாசுரமிது. அவன் செய்த உபகாரம் யாதெனில், தன்னை யநுபவிப்பதற்கு உறுப்பாகாமலிருந்த நெஞ்சை மாற்றிப் பதஞ்செய்வித்த விதுவே மஹோபகார மென்கிறார்.

முன்பெல்லாம் திருநாமஞ் சொல்லுவதென்றால் வேப்பங்கஷாயம் குடிப்பதுபோல் வெறுத்துக்கிடந்த நான் இப்போது ஒரு நொடிப்பொழுதும் இடைவீடின்றி வாமனனே! என் மரதகவண்ணனே! புண்டரீகாக்ஷனே! காமன் தன் தந்தையே! என்றிப்படிப் பலபல திருநாமங்களையே சொல்லி உன் திருவடிகளைப் பாடியே பணிந்து ப்ரயோஜநாந்தரங்களை விரும்பாத சுத்தமான ஹ்ருதயத்தை யுடையேனாய் இனி யொருநாளும் ஸம்ஸாரபந்தம் நேராதபடியாகப் பழைய தீய மனம் கெட்டுப்போம்படி பண்ணி யருளினாயே!, இங்ஙனே பண்ணின வுபகாரத்தின் கனத்தைப் பார்த்தாலோ ஏதேனுமொரு கைம்மாறு செய்தல்லது தரிக்க

மாட்டுகின்றிலேன்; என்ன கைம்மாறு செய்வதென்று மறிகின்றிலேன்; திருமகள் கொழுநனாய் அவாப்த ஸமஸ்தகாமனாயிருக்கின்ற வுனக்கு க்ஷுத்ரனான நான் செய்யத்தக்க தொன்றுமில்லையே! என்றாராயிற்று.

முதலடியிலுள்ள பதங்களெல்லாம் அண்மை விளிகள். ருக்மிணிப்பிராட்டியினிடத்து மன்மதனுடைய அம்சமாகப் பிறந்த ப்ரத்யும்நனுக்குக் கண்ணபிரான் தந்தையாதலால் காமனைப் பயந்தாய்! என்றது.

துழதி—அலமாப்பு, ஆயாஸம்.

"என்னைத் தீமனங் கெடுத்தாய்" என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்:— "அம்ருதத்தையும் விஷத்தையும் ஒக்க விரும்புவாரைப் போலே உன்னையுமுகந்து க்ஷுத்ர விஷயங்களையுமுகக்கும் பொல்லாத நெஞ்சைத் தவிர்த்தாய்." ... ... (௮)

சிரீஇதரன்செய்யதாமரைக்கண்ணன் என்றென்றிராப்பகல்வாய்
வெரீஇ * அலமந்துசண்கள்நீர்மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து *
மரீஇயதீவினைமாளவின்பம்வளர வைகல்வைகல்
இரீஇ * உன்னையென்னுள்வைத்தனை யென்னிருடீகேசனே. (௯)

என் இருடீ கேசனே	எம்பெருமானான ஹ்ருஷீ கேசனே!
சிரீஇதரன் என்று	ஸ்ரீதரனே! என்றும்
செய்ய தாமரை கண்ணன் என்று	செந்தாமரைக் கண்ணனே! என்றும்
இரா பகல்	இரவும் பகலும்
வாய் வெரீஇ	வாய் பிதற்றி
அலமந்து	சுழன்று
கண்கள் நீர் மல்கி	கண்களில் நீர் ததும்பப் பெற்று
வெம் உயிர்த்து உயிர்த்து	வெப்பமாக நெடுமூச் செறிந்து,
மரீஇய தீ வினை மாள	சேர்ந்திருக்கின்ற பாவங்கள் தொலையும்படியாகவும்
இன்பம் வளர	ஆனந்தம் பெருகும்படியாகவும்
வைகல் வைகல்	க்ஷணந்தோறும்
உன்னை	உன்னை
என் உள்	என் நெஞ்சினுள்ளே
இரீஇ வைத்தனை	இருத்திவைத்தாய்; (இப்படியும் ஒரு உபகாரமுண்டோ!)

* * * [சிரீஇதரன்.] கீழ் * ஆடியாடி யென்கிற நான்காந் திருவாய்மொழியில் நான்பட்ட ஆயாமெல்லாம் தொலைந்து மகிழ்ந்தேனாம்படி என்னுள்ளே வந்து போகாதபடி புகுந்தருளி என்னுடைய இந்திரியங்களை அடக்கி ஆண்டனையே! என்று உகக்கிறார். இப்பாசுரத்தைப் பூருவர்கள் நிர்வஹிக்கிறபடி ஒருவகை; பட்டர் நிர்வஹிப்பது ஒருவகை. மூன்றாமடியில் "மரீஇப தீவினைமாள" என்றிருப்பதை முன்னிரண்டடிகளோடு ஸம்பந்தப்பட்டதாகக் கொள்ளாமல் உரைத்தார்கள் பூருவர்கள்; அதாவது—என்னிடத்தில் மருவியிருந்த தீவினைகளெல்

லாம் மாளும்படி நீ அநுக்ரஹம் செய்ததனாலே ஸ்ரீதரன் செய்யதாமரைக் கண்ணன் என்றென்று இரவும்பகலும் வாய் வெருவிக்கொண்டு கண்ணீர் சொரிவதும் பெருமூச்சுவிடுவதுமா யிருந்துகொண்டு இப்படிப்பட்ட பக்திப்பேரின்பம் க்ஷணந்தோறும் வளர்ந்து செல்லும்படியாக உன்னை யென்னுள் வைத்தனை என்பதாக முன்னோர்கள் நிர்வஹிக்கும்படி. இதனால், முன்னிரண்டடிகளிற் கூறப்பட்டுள்ள விஷயம் ஆழ்வார்க்கு இந்தப்பாசுரம் பேசும் ஸமயத்திலிருப்பதாக நிர்வஹிக்கின்றமை விளங்கும். வாய் வெருவுவதும் அலமருவதும் கண்ணீர்மல்கப் பெறுவதும் வெவ்வுயிர்க் கொள்வதுமாகிய இவை இன்பமாகக் கூடுமோவென்னில், ஆழ்வார் பக்தி பரவசராகையாலே இந்த நிலைமை இவர்க்கு தேஹயாத்ரா சேஷமாய் நித்யமாக இருக்கக்கூடியதாகையாலே இவை இன்பமாகக் குறையில்லை யென்பதும் பூருவர்களின் திருவுள்ளம். ஆக, முன்னடிகளிற் கூறப்பட்ட விஷயம் 'தீவினைமாள' என்பதிலேயல்லாமல் இன்பம் வளர வென்பதிலே அந்வயிப்பதாகப் பூருவர்கள் நிர்வஹித்தார்களென்றதாயிற்று.

இனி, பட்டருடைய நிர்வாஹமெங்ஙனே யென்னில்; முன்னடிகளிற் சொல்லப்பட்டிருக்கின்ற வாய்வெருவுதல் முதலியவை ஆழ்வார்க்கு இப்போதுள்ளவை யல்ல. வாய் வெருவியும் அலமந்தும் கண்ணீர் மல்கியும் வெவ்வுயிர்த்துயிர்த்தும் இருந்த விச்லேஷவ்யஸநம் மாளவும் இன்பம் வளரவும் உன்னை யென்னுள் வைத்தனை யென்பதாக. தீவினை யென்றது பிரிவாற்றாமையைச் சொன்னபடி. காயெ—காரணௌாவபவார மெனக. *ஆடியாடியிலிருந்த பிரிவாற்றாமை முன்னடிகளில் சொற்போக்கினால் நன்கு தெரிகின்றது. அங்கு "இவளிராப்பகல் வாய்வெரீஇ" என்றது; இங்கு "என்றென்றிராப்பகல் வாய்வெரீஇ" என்கிறது. அங்கு "எங்கும் நாடிநாடி" என்றது; இங்கு "அலமந்து" என்கிறது. அங்கு "தனகுவளையொண்கண்ணநீர் கொண்டாள்" என்றது; இங்கு "கண்கள் நீர்மல்கி" என்கிறது. அங்கு "உள்ளம்மலங்க வெவ்வுயிர்க்கும்" என்றது; இங்கு "வெவ்வுயிர்த்துயிர்த்து" என்கிறது. ஆகவிப்படி மருவிய தீவினைமாள—என்று அந்வயித்துப் பொருளுரைப்பர் பட்டர்.

இப்பாட்டில் அடிதோறும் முதற்சொற்களில் இசை நோக்கிய அளபெடை. ஹ்ருஷீகேசன் என்னும் வடசொல் இருடீகேசனெனத் திரியும். ஹ்ருஷீகமென்று இந்திரியங்களுக்குப் பெயர்; அவற்றுக்கு ஈசன்—நியாமகன் என்றபடி. ... . (கூ)

இருடீகேசனெம்பிரான் இலங்கையரக்கர்குலம் *
முருடுதீர்த்தபிரான் எம்மானமரர்பெம்மானேன்றென்று *
தெருடியாகில்நெஞ்சேவணங்கு திண்ணமறியறிந்து *
மருடியேலும்விடேல்கண்டாய் நம்பிபற்பநாபனையே. (ய)

நெஞ்சே	மனமே!
தெருடி ஆகில்	நீ அறிவுடையை யாகில்,
இருடீகேசன் என்று	ஹ்ருஷீகேசனே யென்றும்
எம்பிரான் என்று	எம்பிரானே யென்றும்
இலங்கை அரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான் என்று	இலங்கையிலிருந்த ராக்ஷஸ குலத்திற்கு முருடான ராவணனைத் தொலைத்தபிரானே யென்றும்
எம்மான் என்று	எம்பெருமானே யென்றும்
அமரர் பெம்மான் என்று	நித்யஸூரி நாதனே யென்றும் சொல்லி
வணங்கு	அவனை வணங்கு;
திண்ணம் அறி	இதைத் திடமாக அறிவாயாக;
அறிந்து	அறிந்தபின்
மருடி எலும்	(மீண்டும்) கலங்குவா யாகிலும்
நம்பி பற்ப நாபனை	குணபரிபூர்ணனான பத்மநாபனை
விடேல் கண்டாய்	விடாதே கொள்.

* * * [இருடீகேசன்.] இங்ஙனம் மஹோபகாரகனை எம்பெருமானை ஒரு நாளும் விடலாகாதென்று நெஞ்சுக்கு உரைக்கும் முகத்தால் தம்முடைய அத்யவஸாயத்தை வெளியிடுகிறார்.—இராவணன் பத்துத்தலையையுடையனாய்க் கடல் சூழ்ந்த இலங்காபுரியிலே அரசனாய் வஸித்துவந்தது போல, ஐந்து ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்களாகிற பத்துத் தலைகளையுடைத்தாகி ஸம்ஸாரக் கடல் சூழ்ந்த சரீரபுரத்திலே ஸ்வதந்திர ப்ரபுவாய் இருக்கின்றது மனம்: அப்படிப்பட்ட மனத்தைத் திருத்தினதும் ராவணஸம்ஹாரம் செய்ததும் இரண்டு மொக்குமென்கிற கருத்தை ஒன்றரையடிகளாற் காட்டுகின்றார். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின் :—"இவருடைய இந்த்ரிய வச்யதையைத் தவிர்த்தது—லங்கையில் ராக்ஷஸஜாதியில் விபீஷணாதிகளை வைத்து முரடரான ராவணாதிகளை நிரஸித்தாப்போலே யாயிற்று." என்பதாம்.

எம்மான் அமரர் பெம்மான் = இந்திரியங்களினுடைய இதர விஷயப்ராவண்யத்தைத் தவிர்த்த மாத்திரமேயல்லாமல், நித்யஸூரிகளுக்குத் தன்னையநுபவிக்கக் கொடுக்குமாபோலே எனக்குத் தன்னையநுபவிக்கத் தந்தருளினவன் என்று கருத்து.

என்றென்று = இதற்கு 'வணங்கு' என்பதனோடே அந்வயம். நெஞ்சமே! எம்பெருமான் நமக்குச் செய்தருளின உபகாரபரம்பரைகளைப் பலபடியாலும் அநுஸந்தானஞ் செய்துகொண்டே அவனை வணங்கு என்றபடி.

தெருடியாகில் வணங்கு என்கிறார்—சைதந்யத்திற்குப் பலன் எம்பெருமானை வணங்குதலேயாமென்று காட்டுதற்கு. 'தெருள்' என்னும் வினைப்பகுதியின்மேல், தி என்ற நிகழ்கால முன்னிலை யொருமை விகுதியேறி, தெருடி யென்றாயிற்று.

நான் சொல்லும் வார்த்தையை ஸாமாந்யமாக நினையாமல் விசேஷித்துக் குறிக்கொள்ள வேணுமென்பார் திண்ணமறி என்கிறார். அறி என்றபின் அறிந்து

என்று மீண்டும் ஒரு வினையெச்சம் வேணுமோ வென்னில்; அதன் உட்கருத்தை நம்பிள்ளை காட்டுகிறார்—

" அறிகைதானே போரும் ப்ரயோஜநம்; அதுக்குமேலே "

என்ற ஸ்ரீஸூக்தியால். நான் சொல்லும் வார்த்தையை நீ குறிக்கொள்வதே பரமப்ரயோஜநங் காண் என்று காட்டுதற்கே மீண்டும் அறிந்து என்றது.

மருடியேலும் விடேல்கண்டாய் = 'மருடி' என்கிற சொல்லின் வடிவமும் 'தெருடி' என்றது போலவே. 'மருளுதி' என்றபடி. அயோக்யதாநுஸந்தாநம் பண்ணி அறிவு கலங்குமளவிலும் எம்பெருமானை விடாமலிருக்கப்பார் என்று திருவுள்ளத்திற்கு உபதேசித்தாராயிற்று.

நம்பி பற்பநாபனையே என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி பரமபோக்யம்;— "கெடுவாய்! இவ்விஷயத்தைவிட்டுப் புறம்பேபோய் மண்ணை முக்கவோ? அவன் குண பூர்த்தியிருந்தபடி கண்டாயே, வடிவழகிருந்தபடி கண்டாயே, முன்பு நமக்கு உபகரித்தபடி கண்டாயே." .... (கo)

பற்பநாபனுயர்வறவுயரும் பெருந்திறலோன் *
எற்பரனென்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் * என்னமுதம்கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் * விசும்போர்பிரான் எந்தைதாமோதரனே. (கக)

பற்பநாபன்	(உலகமெல்லாம் தோன்றுவதற்குக் காரணமான) தாமரையைத் திருநாபியிலுடையவனும்	என் அமுதம்	எனக்குப் பரமபோக்யனும்
உயர்வு அற உயரும் பெரு திறலோன்	வேறு எங்கும் உயர்த்தியில்லை யென்னும்படி [illegible] அபார சக்தியையுடையவனும்	கார் முகில் போலும்	காளமேகம் போன்றவனும்
என் பரன்	என்னிடத்து ஊற்றமுடையவனும்	வேங்கடம் நல் வெற்பன்	திருவேங்கடமென்கிற நல்ல திருமலையை இருப்பிடமாக வுடையவனும்
என்னை ஆக்கிக் கொண்டு எனக்கே தன்னை தந்த கற்பகம்	என்னை யுண்டாக்கி அங்கீகரித்து எனக்கே அஸாதாரணமாம்படி தன்னைத் தந்த கல்பவ்ருக்ஷப்ராயனும்	விசும்போர் பிரான்	நித்யஸூரிகளுக்குத் தலைவனும்
		தாமோதரன்	ஆச்ரித விதேயனுமான எம்பெருமான்
		எந்தை	எனக்கு ஸ்வாமி.

• • • [பற்பநாபன்.] மிகவும் விலக்ஷணனாய் மிகவும் எளியனாய் என்னையடிமை கொண்ட எம்பெருமான் என்னைத்தவிர வேறொன்றையும் அறியாதபடியானான்

என்கிறார். ஸகல ஜகத்தும் உத்பத்தியாவதற்குக் காரணமான திருநாபிக்கமலத்தை யுடையவனாய், பேசப்புகுந்தால் அளவிட்டுப் பேசமுடியாத ஸௌர்யவீர்யம் முதலிய திருக்குணங்களை யுடையவனாய், இவ்வளவு மேன்மைகிடக்க என்பக்கலிலே ஊற்றமுடையவனாய், எனக்குத் தன்னை ஸர்வஸ்வதானம் பண்ணினபடியாலே எனக்குக் கல்பவ்ருக்ஷ மென்னலாம்படி யிருப்பவனாய், யாசகனாகிய என்னையும் உத்பத்திபண்ணித் தந்தருளினமையாலே கல்பவ்ருக்ஷத்திற் காட்டிலும் சிறப்புப் பெற்றவனாய், எனக்குப் பரமபோக்யனாய், கொடுத்தோமென்று நினையாதே கொடுக்கும் மேகத்தின் ஔதார்யம்போன்ற ஔதார்யத்தையுடைய திருவேங்கடமலையில் வாழ்பவனாய், நித்யஸூரிகளுக்குத் தலைவனாயிருந்துவைத்து அன்பரான இடையர்க்குமிடைச்சிகட்கும் கட்டவுமடிக்கவுமாம்படி வந்து அவதரித்து அச்செயலாலே என்னையாட்படுத்திக் கொண்டானானென் என்றதாயிற்று.

கற்பகத்திற்காட்டில் எம்பெருமானுக்குள்ளவாசி—யாசகனையும் தானே யுண்டாக்குகையும் அவனைத் தானே ஸ்வீகரிக்கையும் அவன் விரும்பினதைக் கொடுக்கையன்றியே தன்னையே கொடுக்கையும் தானே போக்யமாகையும்.

“ கார்முகில் போலும் ” என்ற அடைமொழி வேங்கட மலைக்குமாகலாம் மலையப்பனுக்குமாகலாம். .... (கக)

தாமோதரனைத்தனிமுதல்வனை ஞாலமுண்டவனை *
ஆமோதரமறிய ஒருவர்க்கேன்றேதொழுமவர்கள் *
தாமோதரனுருவாகிய சிவற்கும்திசைமுகற்கும் *
ஆமோதரமறிய எம்மானையென்னாழிவண்ணனையே. (கஉ)

தாமோதரனை	தாமோதரனென்கிற திருநாமமுடையவனும்
தனி முதல்வனை	ஒப்பற்ற ஸகல ஜகத் காரணபூதனும்
ஞாலம் உண்டவனை	(பிரளயகாலத்தில்) உலகங்களைத் திருவயிற்றிலே வைத்து நோக்கினவனுமான எம்பெருமானை
தரம் அறிய	பகுத்து அறிவதற்கு
ஒருவர்க்கு ஆமோ என்று	ஒருவராலும் ஸாத்யமாகாதென்று துணிந்து

தொழுமவர்கள்	வணங்குகின்றவர்களான
தாமோதரன் உரு ஆகிய சிவற்கும் திசைமுகற்கும்	எம்பெருமானுக்கு அவயவபூதர்களான சிவனுக்கும் பிரமனுக்கும்
என் ஆழி வண்ணனை எம்மானை	கடல்வண்ணனான எம்பெருமானை
தரம் அறிய ஆமோ	அளவிட்டு அறிதல் கூடுமோ?.

* * * [தாமோதரனை.] தம் விஷயத்தில் எம்பெருமான் பண்ணின உபகாரம் மாஞானிகளாலும் அளவிட வொண்ணாதது என்கிறார். அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு இலக்காயிருக்கின்ற தம்மைப்போன்றவர்கள் அவனைக் காணக்கூடுமேயல்லது ‘ நம்முயற்சியாலே யறிவோம் ’ என்றிருப்பார்க்கு அறியலாகாது என்கிறாராகவுமாம்.

அடியவர்கட்குப் பரதந்திரனும் ஸகல ஜகத்துக்களுக்கும் முதற்காரணமானவனும் பிரளயாபத்திலே பேருதவி புரிகின்றவனுமானவனை அளவிட்டறிய ஆராலாவது ஆகுமோவென்று சொல்லிக்கொண்டு தொழுமவர்களாய் அந்த தாமோதரனுக்குச் சரீரபூதர்களான சிவனுக்கும் பிரமனுக்கும்—கடுகிலே கடலையடக்குமாபோலே என்பக்கலிலே தன் குணக்கடலை வைத்து என்னை யடிமைகொண்ட ஸ்வாமியை அளவிட்டு அறியப்போமோ? என்றூராயிற்று. உலகப் பொதுவாக அவன் செய்யுமுபகாரங்களை ஒருபடி யறிந்தாலும் என்பக்கலில் அவன் பண்ணின விசேஷோபகாரம் அறியவரிது என்றவாறு. ... (கஉ)

வண்ணமாமணிச்சோதியை அமரர்தலைமகனை *
கண்ணனைநெடுமாலைத் தென்குருகூர்ச்சடகோபன் *
பண்ணியதமிழ்மாலை ஆயிரத்துள்ளிவைபன்னிரண்டும் *
பண்ணில்பன்னிருநாமப்பாட்டு அண்ணல்தாளணைவிக்குமே. (கந)

வண்ணம் மா மணி சோதியை	நல்ல நிறமுடைய நீல மணியின் ஒளியை யுடையனாய்	தென் குருகூர் சடகோபன்	ஆழ்வார்
அமரர் தலை மகனை	நித்யஸூரி நிர்வாஹகனாய்	பண்ணிய	அருளிச் செய்த
கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணனாகத் திருவவதரித்தவனாய்	தமிழ் மாலை ஆயிரத்துள்	தமிழ்மாலையாகிய இவ்வாயிரத்தினுள்ளும்
நெடு மாலை	(ஆச்ரிதர் பக்கலில்) அளவுகடந்து செல்லுகின்ற வ்யாமோஹத்தை யுடையவனான எம்பெருமானைக் குறித்து	பண்ணில் பன்னிரு நாமம் பாட்டு இவை பன்னிரண்டும்	பண்ணோடு கூடின த்வாதசநாம கர்ப்பிதமான இப் பன்னிரண்டு பாசுரங்களும்
		அண்ணல்	ஸர்வேச்வரனுடைய
		தாள்	திருவடிகளை
		அணைவிக்கும்	சேர்ப்பிக்கும்.

* * * [வண்ணமாமணி.] இத்திருவாய்மொழி வல்லார் எம்பெருமானைப் பெறுவாரென்று பலனுரைத்துத் தலைக்கட்டுகிறார். அழகிய நீலமணிநிறத்தனாய், இவ்வழகு நித்யஸூரிகளுக்கும் எல்லைகாண வொண்ணாதபடி பெரியவனாய் அடியார்களைத் தாமே அநுபவிக்குமவனாய் அதற்கு அடியான அபாரவ்யாமோஹத்தை யுடையனான எம்பெருமான் விஷயமாக ஆழ்வாரருளிச்செய்த ஆயிரத்திலுள் பண்ணிலே புணர்க்கப்பட்டதாய் த்வாதச நாமங்களைப்பற்றி வருகிற பாட்டான இவைபன்னிரண்டும் எம்பெருமான் திருவடிகளோடே சேர்த்துவிடும். இத்திருவாய்மொழியோடுண்டான ஸம்பந்தந்தானே கேசவன்தமராக்கிவிடும் என்றவாறு. ... ... (கங)

ஏழாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌥𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌜𑌨𑌨𑍀𑌵𑌲𑍍𑌲𑌭𑌃 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑍀
𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑍋 𑌵𑌿𑌮𑌤𑌨𑌿𑌰𑌸𑌨𑌃 𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌦𑌾𑌯𑍀 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍈 𑌵𑌾𑌮𑌨𑌾𑌙𑍍𑌗𑌃 𑌸𑍍𑌵𑌵𑌿𑌭𑌵𑌰𑌸𑌦𑌃 𑌸𑍍𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌯𑍋𑌗𑍍𑌯𑌃
𑌸𑍍𑌵𑌾𑌯𑌤𑍍𑌤𑍇𑌹𑍋 𑌵𑌶𑍍𑌯𑌶𑍋𑌕𑌾 𑌸𑍍𑌵𑌜𑌨𑌹𑌿𑌤𑌤𑌯𑌾 𑌆𑌦𑌿𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍇𑌵𑍍𑌯𑍇 ॥

1. ஸர்வ ஆதி :—* கேசவன்தமர். * கேசவனென்ற திருநாமத்தில் நோக்காக இந்த விசேஷணம். ப்ரஹ்மருத்ரர்களுக்கும் நிர்வாஹகனென்பது இத்திருநாமத்தின் அர்த்தங்களுள் ஒன்று. அதை இங்கு விவக்ஷிக்கிறார்.

2. ஸர்வநாத :—* நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன். *

3. த்ரிபுவந ஜநநீவல்லப :—* மாதவனென்றதே கொண்டு. * மூவுலகுக்கும் தாயான பெரிய பிராட்டியார்க்குக் கொழுநன்.

4. ஸ்வாச்ரிதார்த்தீ:—* எமரேழெழுபிறப்பும் மேவுந்தன்மையமாக்கினான். * ஆச்ரிதர்கள் எல்லையில்லாதபடி உண்டாக வேணுமென்று ஆசம்ஸிக்குமவன்.

5. விஷ்வக்வ்யாப்த்யா அதிதீப்த :—* விட்டிலங்கு செஞ்சோதி. * விஷ்ணுவாயும் மிகவிளங்குமவனாயு மிருப்பவன்.

6. விமதநிரஸந :—* மதுசூதனையன்றி மற்றிலேன். * மது என்கிற விரோதியைக் கொன்றொழித்தாப்போலே ஆழ்வாருடைய விரோதிகளை முடித்தவன்.

7. ஸ்வ அங்க்ரி ஸத்பக்திதாயீ:—* நின் பாதபங்கயமே மருவித்தொழும் மனமே தந்தாய். * தன் திருவடிகள் விஷயமான சிறந்த பக்தியை ஆச்ரிதர்களுக்குக் கொடுக்குமவன்.

8. வீச்வாப்த்யை வாமநாங்க :—* வாமனனென் மரதகவண்ணன். * மாவலியாலே கொள்ளை கொள்ளப்பட்ட உலகங்களை யெல்லாம் மீட்கும் பொருட்டு வாமநாவதாரஞ் செய்தருளினவன்.

9. ஸ்வவிபவரஸத :—* ஸ்ரீதரன் செய்ய தாமரைக் கண்ணன் என்றென்றிராப்பகல் * தன்னுடைய ஸ்ரீதரத்வ புண்டரீகாக்ஷத்வாதி விபவங்களை இடைவிடாது அநுஸந்திக்குமாறு ருசியைப் பிறப்பித்தவன்.

10. ஸ்வாந்த நிர்வாஹ யோக்ய :—* இருடீகேச னெம்பிரான் * ஹ்ருஷீகேசனுகையாலே மநஸ்ஸைத் தன் திருவடிகளில் நின்றும் போகாதபடி நிர்வஹிக்க வல்லவன்.

11. ஸ்வார்த்த ஈஹ :—* எற்பரன்.* தம்மிடத்து விருப்பமுடையான்.

12. பந்தமோக்தா :—* தாமோதரனை * தான் கட்டுண்டிருந்த சரித்திரத்தை அநுஸந்திக்குமவர்களுடைய ஸம்ஸார பந்தங்களை யறுப்பதற்காகத் தாமோதரனானவன். ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் [ஸ்வஜந ஹிததயா த்வாதசாக்யாபி : ஊசே] ஆச்ரிதருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் ஹிதனென்று பன்னிரு நாமப்பாட்டான இத்திருவாய்மொழியினால் பேசப்பட்டான்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

தே கேஶவாதிஷு ததாத்மஜுஷோ ஹ்யஸ்ய
யே ஸந்தி ஸந்தி வஶயிஷ்யஸ்ய ஸ: ।
தஸ்ய ஹ்ருஷீகவஶதா த்வஷ்டவாதிகாரம்
ஸ்வாதுஷ்டபுத்திரீர ஸத்தோஷிஸ்ஸ நீஜ்ஞ: ॥

(கருத்து) ஏழாவது திருவாய்மொழியில் நம்மாழ்வார் — என்னைச் சேர்ந்தவர்களெல்லாரும் கேசவனுடைய அபிமானத்தைப் பெற்றவர்களாக ஆனார்களென்று அருளிச்செய்யா நிற்பவராய் அப்பெருமானுடைய ஸ்வரூப குண சேஷ்டிதங்களைச் சொல்லுகின்ற பன்னிரு நாமங்களைக்கொண்ட பாசுரங்களினால் பேசி மகிழ்ந்தாரென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கேசவனு லென்தமர்கள் கீழ்மே லெழுபிறப்பும்
தேசடைந்தா ரென்று சிறந்துரைத்த—வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லா முய்கைக்கு
ஆறென்று நெஞ்சே யணை.

நெஞ்சே	மனமே !,	வீசு புகழ்	எங்கும் பரவிய புகழை யுடையருமான
கேசவனுல்	'எம்பெருமானுலே	மாறன்	ஆழ்வாருடைய
என் தமர்கள்	என்னைச் சேர்ந்தவர்களான	மலர் அடியே	திருவடித்தாமரைகளே
கீழ் மேல் எழு பிறப்பும்	கீழும் மேலுமுண்டான ஸம்பந்தி ஸம்பந்திகள் வரையிலும்	மன் உயிர்க்கு எல்லாம்	நிலைநின்ற ஆத்மாக்களுக்கெல்லாம்
தேசு அடைந்தார் என்று	வீறு பெற்றார்கள்' என்று	உய்கைக்கு ஆறு என்று	உஜ்ஜீவனோபாய மென்றுகொண்டு
சிறந்து உரைத்த	நன்றாக அருளிச் செய்தவரும்	அணை	(அத்திருவடிகளை) ஆச்ரயிப்பாயாக,

இருபத்தொரு தலைமுறை யளவாகவுள்ள என்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் எம்பெருமானுலே விஷயீகரிக்கப் பெற்று வீறு பெற்றார்களாயினர் என்று நன்கு அருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே யாவர்க்கும் உய்வுபாயம் என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்;

ஏழாந் திருவாய்மொழி
முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து—எட்டாந்திருவாய்மொழி

அணைவதரவணைமேல்.

அவதாரிகை:—எம்பெருமானுக்குத் தம்பக்கலில் உண்டான வ்யாமோஹம் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளளவிலும் ஏறிப்பாய்ந்து அனைவரையும் விஷயீ கரித்தபடியைக் கீழ்த்திருவாய்மொழியில் அருளிச் செய்தார். அவ்வளவிலும் எம்பெருமான் பர்யாப்தி பெறாமல், நித்ய முக்தர்களுடையதான ஐச்வர்யத்தை யும் தமக்கும் தம்மைச் சேர்ந்தவர்கட்கும் தருவதாக அவன் முயற்சிகொண் டிருக்குமிருப்பை ஆழ்வார் கண்டு மிகவுமுகந்து 'நம்மோடுண்டான ஸம்பந்தமே ஹேதுவாக எம்பெருமான் இப்படி விஷயீகரிப்பவனாயிருக்கும்போது ஸம்ஸாரி கள் இழக்கலாமோ? அவர்களுக்கும் நம்மோடே ஒரு ஸம்பந்தத்தை யுண்டாக்கி அவனுடைய விஷயீகாரத்திற்குஇலக்காக்குவோம்' என்று பார்த்து அந்த ஸம் ஸாரிகளுக்கு உபதேசம் செய்தருள இழிகிறார் இத்திருவாய்மொழியில்.

எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வத்தை இதில் உபதேசிக்கிறதாகச் சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பர்கள். அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தை உபதேசிக் கிறதாக பட்டர் அருளிச் செய்யும்படி. இந்த நிர்வாஹ பேதத்தில் விசேஷமான வ்யத்யாஸம் யாதொன்றுமில்லை; ஸர்வேச்வரனாயிருந்தால்தான் மோக்ஷப்ரத னாக முடியும்; மோக்ஷப்ரதனுக்கே ஸர்வேச்வரத்வம் கூடும்: ஆதலால் இவை யிரண்டும் ஒன்றையொன்று விட்டிராவாகையால் எங்ஙனே நிர்வஹித்தாலும் குறையில்லை. ஆனாலும் * திண்ணன் வீடு * என்கிற திருவாய்மொழியில் ஸர்வே ச்வரத்வம் பிரதிபாதிக்கப்பட்டபடியால் இத்திருவாய்மொழியில பிரதிபாதிக்கப் படுவது மோக்ஷப்ரதத்வமாயிருக்கவடுக்கும்—என்று போலும் பட்டர் திருவுள் ளம். "புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே" என்றும் "வீடுமுதலாம்" என்றும் "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகளில் அதிக நோக்காக பட்டர் நிர்வஹிக்கும்படி யென்று கொள்க.

பரோபதேசத்தில் நோக்கான இத்திருவாய்மொழியில் பத்தாம் பாட்டில் "கண்ணனை நான் கண்டேனே" என்றருளிச் செய்திருப்பதை நோக்கி ப்ரவேசத் தில் நம்பிள்ளை பணிக்கும் ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"ஸம்ஸாரிகளையும் சத்ருச போகிகளாம்படி பண்ணவேணும் என்று பார்த்து அவர்களைக் குறித்து ஹித மருளிச் செய்ய, அதுகேட்ட பின்பும் அவர்கள் பழையநிலையில் நின்றுங் குலை யாதே மால்யவான் தொடக்கமானார் ராவணனுக்குச் சொன்ன ஹிதம்போலே யாய் அவர்கள் இத்தை அநாதரித்திருக்க, 'நாம் நம்முடைய அநுபவத்தை விட்டு இவர்களோடே துவக்குண்கிற இதுக்கு ப்ரயோஜநமென்?' என்று உப

தேசத்திற் கையொழிந்து, வழிபறிக்கும் நிலத்தில் தம் கைப்பொருள் கொண்டு தப்பினார் ஹ்ருஷ்டராமாப்போலே 'நாம் முந்துறமுன்னம் இவர்களைப்போலே ஆகாதொழியப் பெற்றோமிறே' என்று கொண்டு ஸ்வலாபத்தை யநுஸந்தித்து இனியராகிறார்" என்று.

ஆகவே, பரோபதேசமும் ஸ்வாத்ம ஸந்தோஷமும் இத்திருவாய்மொழியின் ப்ரமேய மென்றுணர்க. ... ... (*)

அணைவதரவணைமேல் பூம்பாவையாகம்
புணர்வது * இருவரவர்முதலுந்தானே *
இணைவனுமெப்பொருட்கும் வீடுமுதலாம் *
புணைவன் பிறவிக்கடல்நீந்துவார்க்கே. (௩)

அரவு அணை மேல்	ஆதிசேஷ சயனத்தின் மீது
அணைவது	சேர்வது;
பூ பாவை ஆகம் புணர்வது	பெரிய பிராட்டியின் திருமேனியைக்கூடுவது; (ஆகிய இவை நித்ய விபூதியில் எம்பெருமானுடைய காரியங்கள்)
அவர் இருவர்	ப்ரஸித்தர்களான பிரமன் ருத்ரன் என்கிற இருவர்க்கும்
முதலும் தானே	முதல்வனும் அப்பெருமான் தானேயாயிருப்பன்; (அவதார முகத்தாலே)
எப் பொருட்கும்	எல்லாப் பொருளுக்கும்
இணைவன் ஆம்	ஸஜாதீயனாயிருப்பன்;
வீடு முதல் ஆம்	மோக்ஷத்தை யளிப்பவனுமவனே;
பிறவி கடல்	ஸம்ஸார ஸமுத்ரத்தை
நீந்துவார்க்கு	நீந்திக் கரையேற விரும்புமவர்கட்கு
புணைவன்	தெப்பமாயிருப்பவனுமவனே.

* • • [அணைவது.] இப்பதிகத்தில் கூறப்படும் பொருள் இப்பாசுரத்தில் சுருங்கவருளிச் செய்யப்படுகிறது. முதலடி நித்ய விபூத்யைச்வர்யத்தைக் காட்டுகின்றது. சேஷசயனத்தின்மீது பள்ளிகொள்ளுதலும் பெரிய பிராட்டியின்-திருமார்போடே அணையப் பெறுதலும் அவ்விபூதியிலைச்வர்யத்திற்கு எல்லையென்க. மற்ற மூன்றடிகளால் இவ்வுலகத்தார்க்கு அவன் செய்யும் செயல்திறம் சொல்லுகிறது. லீலாவிபூதியை நிர்வஹிக்கும் விஷயத்தில் காரணேச்வரராக ப்ரஸித்தர்களான பிரமன் சிவன் என்பவர்களின் உத்பத்தி ஸ்திதி முதலியவற்றுக்கும் தானே முதல்வனாய், ரக்ஷ்யமான ஜகத்திலுள்ள ஸமஸ்த பதார்த்தங்களுக்கும் அவதாரமுகத்தாலே ஸஜாதீயனாயிருப்பவனாய், ரக்ஷணத்திற்கு மேலெல்லையான மோக்ஷ ப்ரதானத்திற்கும் கடவனாய், ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராமைக்காக ஸம்ஸாரக்கடலை நீந்திக் கரையேற வேண்டுவார்க்குத் தெப்பமாயிருப்பவன் எம்பெருமான் என்றதாயிற்று.

இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின் ;—"அவ்விபூதியைச் சொல்லுகிற விடத்திலே அணைவது புணர்வது என்கையாலே அது ஹோமஹத்தி [போகபூமி] யாய் நித்யமாயிருக்குமென்னுமிடமும், இங்கு முதல் என்கையாலே இவ்விபூதியில் கார்ய காரணபாவத்தால் வந்த ஸம்பந்தமும் இதுதான் ஆவது அழிவதாமென்னுமிடமும் சொல்லுகிறது. இத்தால் ப்ரஹ்மருத்ரர்கள் ஸம்ஸார பத்தர்களென்னுமிடமும் ஈச்வரனே மோக்ஷப்ரதனாகவல்லானென்னுமிடமும் சொல்லுகிறார்."

எப்பொருட்கும் இணைவனும் = தேவமநுஷ்யாதி ஸகல யோநிகளிலும் ஸஜாதீயனாய்வந்து அவதரிப்பவனென்றபடி. "[illegible] = ப்ரஹ்மேசமத்யகணநா கணநார்க்கபங்க்தௌ இந்த்ராநுஜத்வமதிதேஸ் தநயத்வயோகாத், இக்ஷ்வாகுவம்சயதுவம்சஜநிச் ச ஹந்த ச்லாக்யாந்யமூந்யநுபமஸ்ய பரஸ்ய தாம்நஃ" என்று ஆழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் அருளிச் செய்தபடியே ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே வந்தவதரிப்பது, உபேந்திரனாவது, தசரத வஸுதேவர்களுக்குப் புத்திரனாவது, மத்ஸ்ய கூர்மவராஹாதி யோநிகளிலே பிறப்பது ஆக இவற்றாலே இதர ஸஜாதீயனாம்படியைச் சொன்னவாறு.

இங்ஙனே தாழவிட்டுப் பிறக்கிறது எதற்காக வென்னில், வீடு முதலாம்—மோக்ஷமளிப்பதற்காக வென்றபடி. அவதரித்த விடங்களிலே பக்ஷிக்கும் பிசாசுக்கும் மோக்ஷம் கொடுப்பதாகக் காணாநின்றோமன்றோ. அவன் வந்து அவதரிப்பது மோக்ஷ மளிப்பதற்காகவாகில் பின்னை யெல்லாரும் முக்தராக வேண்டாவோ வென்ன, பிறவிக்கடல் நீந்துவார்க்குப் புணைவன் என்கிறார்.

'ஸம்ஸாரமென்பது ஒரு பெருங்கடல், அஃது எங்களால் கடக்கப் போகாது ; வல்லவனான நீயே கடத்தித் தரவேணும்' என்று வேண்டுவார்க்குக் காரியம் செய்பவனென்கை

புணைவன்—ப்ரதிபூ [ஜாமீன்தாரன்] என்றும் பொருள் கூறுவர் ; "போயினால் பின்னையித்திசைக்கென்றும் புணைக்கோடுக்கிலும் போகவொட்டாரே" என்ற பெரியாழ்வார் பிரயோகமுங் காண்க. ... ... (க)

நீந்தும்துயர்ப்பிறவி உட்படமற்றெவ்வெவையும் *
நீந்தும்துயரில்லா வீடுமுதலாம் *
பூந்தண்புனல்பொய்கை யானையிடர்கடிந்த *
பூந்தண்டுழாயென் தனிநாயகன்புணர்ப்பே. (உ)

பூ தண் புனல் பொய்கை	அழகிய குளிர்ந்த நீரை யுடைய தடாகத்தில்
யானை	கஜேந்திராழ்வானுடைய
இடர்	ஆர்த்தியை
கடிந்த	தொலைத்தருளினவனும்
பூ தண் துழாய்	அழகிய குளிர்ந்த திருத் துழாய் மாலையை யுடையவனுமான
என் தனி நாயகன்	எம்பெருமானுடைய
புணர்ப்பு	ஸம்பந்தமானது,
நீந்தும்	கடத்தற்கு அரிதான
துயர்	துன்பத்திற்கு ஹேதுவான
பிறவி உட்பட	பிறப்பு முதலாக
மற்று	மேலுமுள்ள
எவ்வெவையும் நீந்தும்	எப்படிப்பட்ட துன்பங்களையும் கடத்தும்; (அன்றியும்)
துயர் இல்லா வீடு முதல் ஆம்	துயர் சிறிதுமில்லாத மோக்ஷத்திற்கும் ஹேதுவாகும்.

* * * [நீந்துந் துயர்.] கீழ்ப்பாட்டில் 'வீடுமுதலாம்' என்றதை விவரிக்கிறதாயிருக்கின்றது இப்பாசுரம். எம்பெருமான் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை, அவனோடுண்டான ஸம்பந்தமே போரும் மோக்ஷமளிப்பதற்கு—என்கிறார்.

"நீந்துந் துயர்ப்பிறவியுட்பட மற்றெவ்வெவையும் நீந்தும்" என்னுமளவும் ஒரு வாக்கியமாக்கி "துயரில்லா வீடுமுதலாம்" என்று மற்றொரு வாக்கியமாக்கி யுரைப்பதும், அன்றியே, இரண்டடிகளுஞ் சேர்ந்து ஓரே வாக்கியமாகி 'நீந்துந் துயர்ப் பிறவியுட்பட மற்றெவ்வெவையும் நீந்துந் துயரில்லா' என்னுமளவும் வீட்டுக்கு விசேஷணமாக்கி யுரைப்பதும் ஆக இருவழிகளுமுண்டு. முதல் யோஜனையில்—

நீந்துந் துயர்ப்பிறவி யுட்பட மற்றெவ்வெவையும் நீந்தும்—	போக்கிக்கொள்ள முடியாத துக்கத்தை விளைக்கின்ற பிறப்பு முதலான ஜராமரணாதிகளெல்லாவற்றையும் (பகவத் ஸம்பந்தம்) போக்கடிக்கும்;
துயர் இல்லா வீடுமுதல் ஆம்—	துக்க லேசமுமில்லாத முக்தியையும் அளிக்கும் என்றபடி.

இரண்டாவது யோஜனையில்—அபாரமான துயரங்களை விளைப்பதான பிறவிமுதலாக மற்றும் அபாரமான ஜராமரணாதிகளான எவ்வகைப்பட்ட துக்கமும் ஸ்பர்சியாத மோக்ஷாநந்தத்திற்கு ஹேதுவாம் என்றபடி.

அது எது என்ன, பகவத் ஸம்பந்தம் என்கிறது பின்னடிகளில். கஜேந்திராழ்வானைக் காத்தருளினவனும், அப்படியே பக்தர்களனைவரையும் காத்தருள்வதாகத் தனிமாலை யிட்டுக்கொண்டு அத்விதீய நாயகனாக விளங்குபவனுமான எம்பெருமானோடுண்டான ஸம்பந்தம் இவை செய்யும் என்க. அவன் திருவடிகளில் ஸம்பந்தம் துக்கநிவ்ருத்தியையும் பண்ணிக் கொடுத்துப் பரமாநந்தத்தையும் பெறுவிக்கு மென்றதாயிற்று.

நீந்தும் என்றதற்குக் 'கடக்கவரிதான' என்னும் பொருள் எங்ஙனே கிடைக்குமென்னில், நீந்திக்கொண்டேயிருக்க வேணுமேயன்றிக் கரையேற இய

லாதென்று தாற்பரிய முகமாகக் காட்டினபடி யென்ப. இரண்டாமடியிலுள்ள நீந்தும் என்பது வினைமுற்றாகக் கொள்ளப்படுகிற நிர்வாஹத்தில் நீத்தும் என்ற வல்லொற்று மெல்லொற்றாயிருக்கிறபடி யென்பர் ... . (உ)

புணர்க்குமயனும் அழிக்குமரனும் *
புணர்த்ததன்னுந்தியோடு ஆகத்துமன்னி *
புணர்த்ததிருவாகித் தன்மார்வில்தான்சேர் *
புணர்ப்பன்பெரும்புணர்ப்பு எங்கும்புலனே. (௩)

தன் புணர்த்த	தன்னைப் படைத்த	புணர்த்த	சேர்த்துக் கொள்ளப் பட்ட
உந்தியோடு	திருநாபியோடேகூட	திரு ஆகி	பிராட்டியை யுடைய னாய்
ஆகத்து	திருமேனியி லொரு பக்கத்திலும்	தான் சேர்	தானே தனக்குத் தகுதியான
மன்னி	பொருந்தியிருந்து	புணர்ப்பன்	செயலை யுடையனான அப்பெருமானது
புணர்க்கும்	லோக ஸ்ருஷ்டியைப் பண்ணுகிற	பெரு புணர்ப்பு	பெரிய வியாபாரம்
அயன் ஆம்	பிரமனும் தானேயா யிருப்பன்;	எங்கும்	எவ்விடத்தும்
அழிக்கும் அரன் ஆம்	ஸம்ஹரிக்கிற ருத்ரனும் தானேயாயிருப்பன்;	புலன்	ப்ரத்யக்ஷ யோக்யமே.
தன் மார்வில்	தனது திருமார்பிலே		

* * * [புணர்க்கும்.] முதற்பாட்டில் "இருவரவர் முதலுந்தானே" என்றதை விவரித்துக்கொண்டு அப்பெருமானுடைய ஐச்வர்ய ஸூசகமான சேஷ்டிதங்கள் எங்கும் ப்ரஸித்தமாகவே யுள்ளன வென்கிறார். "தன் புணர்த்தவுந்தியோடு ஆகத்துமன்னிப் புணர்க்குமயனும், அழிக்கும் அரனும்" என்று மூன்னடிகளை அந்வயித்துக் கொள்க. பிரமன் எம்பெருமானது திருநாபியில் தோன்றினது மாத்திரமேயல்லாமல் "சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர்திருவாகம்" என்றும், "ஏறுளுமிறையோனும் திசைமுகனுந் திருமகளும், கூறுளுந் திருவுடம்பன்" என்றுஞ் சொல்லுகிறபடியே திருமேனியோடுங் கூறுடையனானது பற்றித் "தன் புணர்த்தவுந்தியோடு ஆகத்துமன்னி" எனப்பட்டது. ஸ்ருஷ்டி கர்த்தாவாக ப்ரஸித்தனான பிரமனுக்கும், ஸம்ஹார கர்த்தாவாக ப்ரஸித்தனான ருத்ரனுக்கும் தானே அந்தர்யாமியா யிருந்துகொண்டு அவ்வக்காரியங்களை நடத்திப் போருமவனென்றபடி.

[தன் மார்வில் புணர்த்த திருவாகித் தான்சேர் புணர்ப்பன் பெரும் புணர்ப்பு-எங்கும் புலன்] லக்ஷ்மீபதித்வமும் ஐச்வர்ய லக்ஷணமாகையாலே அது மூன்றாமடியில் சொல்லிற்று. தான்சேர் புணர்ப்பன் என்றதற்கு இருவகைப் பொருள் கூறுவர்; ஸ்ருஷ்டிக்காக ஏகார்ணவத்திலே சாய்ந்தருளினவன் என்றும், தனக்குத் தகுதியான சேஷ்டிதங்களை யுடையவன் என்றும். புணரி என்று

கடலுக்குப் பேருண்டாதலால் புணர்ப்பு என்பதையும் கடலுக்குப் பேராகக் கொண்டு முதற்பொருள் கூறியிருக்கலாமென்று சில பெரியோர் கருதுவர்.

பெரும் புணர்ப்பு எங்கும் புலனே = பிரமன் முதலானோர்க்கு இட்ட காரியங்களை அவர்கள் வழியாலே தானே நடத்தியும், தன் தலையில் வைத்துக்கொண்ட காரியங்களையும் தானே நடத்தியும் போருகையாலே அவனுடைய ஆனைத் தொழில்கள் எங்குங் காணலாயிருக்குமென்க. ... ... (௩)

புலனைந்துமேயும் பொறியைந்துநீங்கி *
நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர் *
அலமந்துவீய அசுரரைச்செற்றான் *
பலமுந்துசீரில் படிமினோவாதே. (௪)

புலன் ஐந்து	சப்தாதி விஷயங்கள் ஐந்திலும்	அசுரரை	அசுரர்களை
மேயும்	மேய்கின்ற	அலமந்து வீய செற்றான்	நடல் குழம்பிச் சாகும் படி கொன்ற பெருமானுடைய
பொறி ஐந்தும்	பஞ்சேந்திரியங்களின் வசத்தில் நின்றும்	பலம் முந்து சீரில்	பலனே முந்தியிருக்கின்ற திருக்குணங்களில்
நீங்கி	விலகி	ஓவாதே	அநவரதம்
நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்	ஆனந்தம் அளவிறந்திருப்பதான திருநாட்டிலே போய்ப்புக வேண்டியிருப்பவர்களே !,	படிமின்	அவகாஹியுங்கள்.

* * * [புலனைந்துமேயும்.] அற்பமான விஷய ஸுகங்களைவிட்டு அற்புத இன்பமயமான மோக்ஷ புருஷார்த்தத்தைப் பெற்றுக் களிப்புறவேண்டியிருப்பீர் ! எம்பெருமானுடைய திருக்குணங்களிலே இடைவிடாது அவகாஹித்துப் போருங்கோள் என்கிறார். ஐந்து இந்திரியங்களும் ஐந்து விஷயாந்தரங்களிற் பட்டிமேய்வது இயல்பு. கண் ரூபங்களைக்காண்பதும், காது ஒலிகளைக் கேட்பதும், நாக்கு உணவுகளைச் சுவைப்பதும், மூக்கு மணங்களை மோந்து பார்த்தலும், உடல் உடல்களைத் தீண்டுதலும் ஆக இப்படிப்பட்ட காரியங்கள் இந்திரியங்களுக்கு ஏற்பட்டவை. இவை "ஜிஹ்வே! கீர்த்தய கேசவம் முராரிம்" என்ற முகுந்தமாலை ச்லோகத்திற் சொல்லியபடியே நிகழுமாயின் குறையொன்றுமில்லை ; விபரீதமாக நிகழ்வதே உலகவியற்கையாதலின் அந்த நிகழ்ச்சியை மறுக்கக் கூறுகின்றார் முதலடியில்.

நலமந்த மில்லதோர்நாடு புகுவீர் ! = இவ்வுலகம் துன்பங்களுக்கு அந்தமில்லாமலிருக்கப் பெற்றிருப்பதுபோல அவ்வுலகம் இன்பங்களுக்கு அந்தமில்லாதிருக்கப் பெற்றது. துக்கங்கள் தொலைந்தொழிவதே மோக்ஷமென்று கூறும் புறமதத்தவர்களைப் போலன்றியே மஹாநந்த ப்ராப்தியே மோக்ஷமென்று கூறுகின்ற பரம வைதிகர்களில் ஆழ்வார் தலைவராதலால் 'நலமந்த மில்லதோர்நாடு'

என்றார். அதனைப் புக விரும்பியிருப்பவர்களே!—என்று விளித்து அவர்கட்குக் காரியம் விதிக்கிறார் பின்னடிகளில்.

உங்களுடைய விரோதிகளை அவன் நிச்சேஷமாகப் போக்கவல்லவன் என்பது சுட்டி 'அலமந்து வீயவசுரரைச் செற்றான்' என்கிறார். அஸுரவர்க்கங்கள் தடுமாறி முடியும்படி அவற்றைத் தொலைத்தாப்போலே உங்கள் விரோதிவர்க்கங்களை முடிப்பவனான அப்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களிலே ஈடுபடுங்கோள் என்றபடி. [பலம் முந்து சீர்] சில காரியங்கள் முதலிலே மிக வருத்தமாய் முடிவிலே இன்பமாயிருக்கும்; பகவத் குணானுபவம் அப்படிப்பட்டதன்று. ஸாரஸ்யத்தாலே ஆரம்ப தசையே பிடித்துப் பலனாகவே யிருக்குமென்பது கருத்து. ... ... (ச)

ஓவாத்துயர்ப்பிறவி உட்படமற்றெவ்வெவையும் *
மூவாத்தனிமுதலாய் மூவுலகும்காவலோன் *
மாவாகியாமையாய் மீனாகிமானிடமாம் *
தேவாதிதேவபெருமான் என்தீர்த்தனே. (ரு)

ஓவா துயர்	இடைவிடாத துக்கத்தை விளைக்கிற	தேவ ஆதி தேவர் பெருமான்	தேவர்களுக்கும் ஆதி தேவர்களான நித்ய ஸூரிகளுக்கும் அதிபதியாய்
பிறவி உள்பட	ஜன்மம் முதலாக	என் தீர்த்தன்	என்னைப் பரிசுத்தனாக்க வல்லனான பெருமான்
மற்று எவ்வெவையும்	மற்றுமுள்ளவை யெல்லாவற்றுக்கும் [அதாவது-ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளுக்கென்றபடி]	மா ஆகி	ஹயக்ரீவனாக அவதரித்தும்
மூவா	ஒருநாளும் கைவாங்காத	ஆமை ஆய்	கூர்மமாக அவதரித்தும்
தனி முதல் ஆய்	அஸஹாய காரண பூதனாய்க் கொண்டு	மீன் ஆகி	மத்ஸ்யமாக அவதரித்தும்
மூ உலகும்	மூன்று லோகங்களையும்	மானிடம் ஆம்	(ராமக்ருஷ்ணாதி ரூபேண) மநுஷ்யனாகவும் அவதரிக்குமவன்.
காவலோன்	ரக்ஷிக்க வல்லவனாய்		

* * * [ஓவாத்துயர்.] முதற்பாட்டில் "இணைவனா மெப்பொருட்கும்" என்றது இப்பாசுரத்தினால் விவரிக்கப்படுகிறது. ஹயக்ரீவ மத்ஸ்ய கூர்ம ராமக்ருஷ்ணாதி ரூபத்தாலே திருவவதாரங்கள் பண்ணி மூவுலகங்களையுங் காத்தருள்பவனென்கிறது.

ஓவாத்துயர்ப் பிறவியுட்பட மற்றெவ்வெவையும் மூவாத்தனிமுதலாய் = இடையறாத துயரத்தை விளைக்கின்ற பிறப்பைத்தருதலாகிற ஸ்ருஷ்டியென்ன, மற்றும் ஸம்ரக்ஷணம் ஸம்ஹாரம் முதலான செயல்களென்ன ஆகிய எல்லாவற்றிற்கும் ஒருநாளும் சோம்பிக் கைவாங்காத அத்விதீய காரணபூதன் என்றபடி.

இவ்விடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில் ஜெங்கவஹாஸ்ரீ நிவாஸாநு மாக ஒருபிழை புகுந்து அது அரும்பத வுரைகாரராலும் ஆதரிக்கப்பட்டுவிட்ட தென்பதை நிரூபித்துக் காட்டுகிறோம். இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்தி எங்ஙனே காண் கின்றதென்னில் ;

" ஜங்மம் தொடக்கமாக மற்றுமுண்டான வைந்துக்கும் ; அவற்றையுடைத் தான பதார்த்தங்களுக்கும்......அத்விதீய காரணமாய்."

என்று காண்கிறது. ஆடையவளேந்தானரும்பதவுரையிலும் மற்றோரும்பத வுரையிலும்—" ஐந்துக்கும் என்றது அஸ்தி பரிணமதே விவர்த்ததே அபக்ஷீயதே நச்யதி என்கிற ஐந்து விகாரங்களுக்குமென்றபடி" என்று விவரணமும் செய்யப் பட்டிருக்கிறது. உண்மையில் ஐந்துக்கும் என்கிற சொல் ஈட்டில் கிடையாது. பொருந்தவும் பொருந்தாது. வடக்குத் திருவீதிப்பிள்ளை அருளிச் செய்திருந்த ஸ்ரீஸூக்தி "ஜங்மம் தொடக்கமாக மற்று முண்டானவற்றுக்கும்" என்பதே.

ஓலை ஸ்ரீகோசங்கள் எழுதுகிறவர்கள் 'அவற்றுக்கு' என்பதை அவைத் துக்கு' என்றே பெரும்பாலும் எழுதுவர்கள். பலர் உச்சரிக்கும்போதும் 'அவைத்துக்கு' என்று ஐகாரம் நன்கு தெரியும்படியே உச்சரித்து வருவதை யுங் காண்கிறோம். ஆசார்ய ஹ்ருதயத்தை வியாக்கியானத்துடன் முதன்முத லாகத் தெலுங்குலிபியில் பதிப்பித்தவர்களும் பிறகு அதையே தமிழ்லிபியில் பதிப்பித்தவர்களும் 'அவற்றுக்கு' என வருமிடங்களில் (அவைத்துக்கு) என்றே அச்சிட்டிருப்பதை யாவரும் எடுத்துக்காணலாம். அதில் முதல் ப்ரகரணத்தில் 4, 6, 8 ஆம் சூர்ணிகைகள் "இவற்றுக்கு" என்றே தொடங்குபவை. அவ் விடங்களிலெல்லாம் மேற்குறித்த இரண்டு பதிப்புக்களிலும் மூலத்திலும் வியாக் கியானத்திலும் இவைத்துக்கு என்றே அச்சிட்டிருப்பதைக் கடகூடாகக் காண லாம் இலக்கண இலக்கியப் பயிற்சி சிறிதுமில்லாதவர்கள் அச்சிடுவிக்கும் புத்த கங்களிலும், எழுதியிருக்கும் ஓலை ஸ்ரீகோசங்களிலும் மிகமிகவே இங்ஙனமே யிருப்பதை அபாரமாகக் காணலாம முதல் வேற்றுமையில் இவை, அவை என்று ஐகாரம் காண்பதால் மற்ற வேற்றுமைகளிலும் அந்த ஐகாரம் இருக்கே தீரவேணுமென்று இப்படி அந்த பரம்பரையாக க்ரஹித்து "இவைத்தால், அவைத்தால், இவைத்துக்கு, அவைத்துக்கு" என்றே எழுதுவதும் உச்சரிப் பதும் ஒரு வழக்கமாக வந்துவிட்டது. அந்தோ ! அதனாலுண்டான அநர்த்தம் பெரிதுமுண்டு.

அதே ஆசார்ய ஹ்ருதயத்தில் மூன்றாம் பிரகரணத்தில் "தமருகந்த வடி வே முக்கே யென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்" என்கிற ஒன்பதாவது சூர்ணிகையின் வியாக்கியானத்திலே—

"அர்ச்சாவதாரத்திலே முற்பட்ட ஐந்திலுள்ளவையும் காணலாமாகையாலே"

என்று தெலுங்குலிபி தமிழ்லிபிப் பதிப்புகளிரண்டிலு முள்ளது. இங்கு 'முற் பட்ட ஐந்து' எவை? என்று கேட்டால் உத்தரம் துர்லபம். பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களாகிற ஐந்திலுள்ளும் அர்ச்சாவதாரமே சிறந்த

தென்று ஸ்தாபிக்கவந்த இவ்விடத்தில் அர்ச்சாவதாரம் தவிர மற்ற நான்கில் உள்ளவையும் இங்குக்காணலாம் என்று அருளிச்செய்கிற ஸந்தர்ப்பத்தில் "முற்பட்ட வைந்திலுள்ளவையும் அர்ச்சாவதாரத்திலே காணலாம்" என்கிற ஸ்ரீஸூக்தியிருக்கச் சிறிதும் தகுதியில்லை. ஆனால் இங்கு ஸ்ரீஸூக்தி யுண்மை எங்ஙனே யெனின் ;

முற்பட்டவற்றிலுள்ளவையும் என்று ஆசிரியர் அருளிச் செய்திருந்தார். (கீழே விரிவாக நாம் நிரூபித்தபடி) பிறகு அதை எழுதினவர்கள் "முற்பட்ட வைந்திலுள்ளவையும்" என்றெழுதினார்கள். அதிலிருந்து (ந்) என்பது (ங்) ஆக மாறிற்று. தகரநகாரங்களுக்கு அதிக வேற்றுமை யில்லையே. இந்த மாறுபாடு அச்சில் அன்று; ஓலைஸ்ரீ கோசங்களிலேயே எப்போதோ மாறுபட ஆரம்பித்து விட்டது. இந்த நம் நிரூபணத்தில் யாருக்காவது விப்ரதிபத்தி யுண்டாக ப்ரஸக்தியுண்டோ? "முற்பட்ட வைந்தில்" என்று இங்கே யிருக்கத்தகா தென்பதையும், அப்படி யிருப்பதானது நாம் விவரித்தவிதமாக வந்து புகுந்த பிழையே,யென்பதையும் யாவரும் இசைந்தே தீருவர்கள். ஆனால், ஓலை—அச்சு ஸ்ரீ கோசங்களைப் பூர்வாசார்ய ஸ்வஹஸ்த லிகிதமாகவே கொண்டு 'அவற்றில் பிழை யென்றால் வாய் வெந்துபோம்' என்று ஸாதிக்கின்ற பரமைகாந்திகளையும் நாம் பெரும்பாலும் காண்கிறோம். இப்படிப்பட்ட விடங்களில் அவர்கள் காலக்ஷேபம் ஸாதிக்கும்போது 'இது பொருந்தவில்லையே' என்று விவேகிகளான சிஷ்யர்கள் கேட்டுவிட்டால் அப்போது அவர்களுக்குண்டாகும் சீறுபாறு வாசாமகோசரம். 'பூர்வாசார்யர்களைவிட நீ மஹாவ்யாபகனோ?' என்று வெகுளியோடே தலைக் கட்டி நிற்பர்கள். எதற்கு எது உத்தரம்!. அப்படிப்பட்டவர்களை நோக்கி நாம் எதுவும் பணிக்கின்றிலோம். ஸாரக்ராஹிகளான ரஸிகர்கட்கே போக்யமாகு மென்று எதுவும் நாம் நிரூபிப்பது.

மேற்குறித்த ஆசார்ய ஹ்ருதயப்பிழை புகுந்த விதமாகவே இந்தத் திரு வாய்மொழிப் பாசுரத்தின் ஈட்டிலும்—"ஜந்மம் தொடக்கமாக மற்று மூண்டான வற்றுக்கும்" என்று அருளிச் செய்யப்பட்டிருந்த ஸ்ரீஸூக்தி 'மற்றுமுண்டான வைத்துக்கும்' என்று முதலில் திரிந்து, பிறகு 'மற்றுமுண்டான வைந்துக்கும்' என்று திரிந்திட்டது. ஆசார்ய ஹ்ருதயத்தில் நிரூபித்துக் காட்டிய திரிபு உண் மையேயாயினும், இங்கு ஏதுக்கு அப்படிச் சொல்லவேண்டும்? இங்கு அரும் பதவுரைகாரர் விவரணம் காட்டியிருக்கிறபடியே ஐந்துக்கும் என்றிருப்பதில் அவத்ய மொன்றுமில்லையே! என்று கூறுவார்க்கு இனி விடையளிப்போம்.

"ஓவாத்துயர்ப் பிறவியுட்பட மற்றெவ்வெவையும்" என்றவிதனால் என்ன விவக்ஷிதம் என்பதை ஆராய வேண்டும். பன்னீராயிரப்படியில் "அவிச்சிந்நமான து:க்கத்தைத்தருவதான ஜந்ம ஸம்பந்தரூபமான ஸ்ருஷ்டியகப்பட மற்ற ஸ்திதி ஸம்ஹாராதிகளான எல்லா வ்யாபாரங்களுக்கும் ஸஹாயாந்தர நிரபேக்ஷகாரண பூதனாய்க் கொண்டு" என்றுள்ளது. இருபத்தினாலாயிரப்படியில் பெரியவாச் சான்பிள்ளை—"ஜந்மம் தொடக்கமாக மற்றுமுண்டான ஸ்திதி ஸம்ஹாராதி

ஸர்வத்துக்கும் மூவாத்தனிமுதலாய்" என்றருளிச் செய்துள்ளார். ஒன்பதினாயிரப்படியில் "ஜந்மமகப்பட மற்று மெல்லாவற்றுக்கும் காரணமாய்" என்று ஈட்டின்படியாகவே உள்ளது. மற்ற இரண்டு வியாக்கியானங்களையும் பாசுரத்தின் போக்கையும் நோக்கினால் "ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணபூதன்" என்பதே இங்கு விவக்ஷிதம் என்று நிஸ்ஸந்தேஹமாக விளங்கும். மூலத்திலுள்ள பிறவி என்ற சொல் ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தில் ஜந்ம பதம்போலே ஜந்மாத்யர்த்தகமான ஸ்ருஷ்டியைச் சொல்லுகிற தென்னுமிடத்தைப் பெரியவாச்சான் பிள்ளையும் வாதிகேஸரியும் கண்ணாடிபோல் காட்டியருளினர். மூலத்தில் 'உட்பட' என்னுஞ் சொல் வடமொழியில் ஆதிபதம் போலேயாதலால் இங்கு ஆதிபதக்ராஹ்யம் எவை? என்று கேள்வியாக, ஸ்ருஷ்டி ஸஹபடிதங்களான ஸ்திதி ஸம்ஹாராதிகள் என்று ஆசாரியர்கள் காட்டியருளினார்கள். அரும்பத வுரைகாரர் எழுதியுள்ளபடி அஸ்தி பரிணமதே இத்யாதிகளான ஐந்து விகாரங்களை இங்கு விவக்ஷிப்பதற்கு என்ன ப்ரஸக்தியுளது? அந்த விகாரங்களுக்கெல்லாம் எம்பெருமான் காரணபூதன் என்று சொல்லுகை ஒருபொருளோ?

இவ்விடத்தில் இருபத்தினாலாயிரப்படி பன்னீராயிரப்படிகளின் வழி வேறுதான்; ஈட்டுக்காரர் அந்தவழியிற் செல்லாமல் வேறொருவழியிற் செல்லுகின்றார்; ஆகவே இவருடைய நோக்கத்திற்கிணங்க "மற்று முண்டான ஐந்துக்கும்" என்கிற ஸ்ரீஸூக்தி இருக்கலாமே—என்று சிலர் ஸமர்த்திக்க முற்படுவாருமுளர். அப்படிச் சொல்வதற்கு இங்கு இடமில்லை யென்பதை மீண்டும் ஸமயம் நேரும் போது விவரித்துரைப்போம்.

இதே திருவாய்மொழியில் * நீந்தும் துயர்ப்பிறவி * என்கிற இரண்டாம் பாட்டில் "பிறவியுட்பட மற்றெவ்வெவையும் நீந்தும்" என்று மூலமிருக்கையாலே அவ்விடத்திற்குப் பொருந்த "ஜநநம் தொடக்கமாக மற்றுமுண்டான அபக்ஷயவிநாசாதிகளையும் கடந்தும்" என்று ஈட்டில் அருளிச் செய்துள்ளார். அவ்விடத்து மூலத்திற்கு அந்த அர்த்தம் அழகாகச் சேரும். இவ்விடத்து மூலத்திற்கு அப்பொருள் ஒருபடியாலும் சேராதே. ஆதலால் "ஜந்மம் தொடக்கமாக மற்றுமுண்டானவற்றுக்கும்" என்று ஆசிரியர் அருளிச் செய்திருந்த ஸ்ரீஸூக்தியே மூந்துற நாம் உபபாதித்தபடியே "மற்றுமுண்டான வைத்துக்கும்" என்று முதலில் விகாரப்பட்டுப் பிறகு மற்றுமுண்டான வைந்துக்கும் என விகாரப்பட்டதென்று நுண்ணிதினுணர்க.

"மற்றுமுண்டானவற்றுக்கும்" என்றதற்பின் "அவற்றை யுடைத்தான பதார்த்தங்களுக்கும்" என்கிற ஒரு வாக்யம் (ஈட்டில்) உள்ளதே, அதற்கு யாது பொருளென்னில், 'எம்பெருமான் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு மாத்திரமே நிர்வாஹகனல்லன், அவற்றுக்குக் கர்மீபூதங்களான ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகன் என்பதும் இங்கு அறியத்தக்கது என்றபடி. மூலத்தில் 'மற்றெவையும்' என்னாதே எவ்வெவையும் என்று இரட்டித்துக்கூறியதற்காக

இப்பொருள் அருளிச் செய்யலாயிற்று. [ஆக்ஷேபத: ப்ராஸ்தாவிகப்ராஸங்கிக உத்தரமேதத்.]

இங்கு ஸர்வாத்மநா அஸம்பத்தமான 'ஐந்துக்கும்' என்கிற ஒருபதத்தை உள்ளதாகவே வைத்துக்கொண்டு கதாநுகதிகந்யாயத்தாலே மேலெழுந்தவாரியாகவே காலக்ஷேபம் ஸாதித்துப் போரும் ஸ்வாமிகளுக்கு இந்த நிரூபணம் மிகவும் சிற்றத்திற்கே ஹேதுவாகுமாயினும் "உத்பத்ஸ்யதே மம து கோபி ஸமாநதர்மா காலோஹ்யயம் நிரவதிர்விபுலா ச ப்ருத்வீ" என்று பவபூதிமஹாகவி சொன்ன கட்டளையிலே நின்று நிரூபித்தோமாகக் கொள்க.

மூவாத்தனிமுதலாய் = கீழ்ச்சொன்ன ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளை நடத்துமிடத்து வேறொரு உபகரணத்தை வேண்டாத நிரபேக்ஷ நிர்வாஹகன் என்றபடி. மூவா என்பதை முதலடியோடுங் கூட்டிப் பொருள் கொள்ளலாம். இரண்டாமடியோடுங் கூட்டிப் பொருள் கொள்ளலாம் என்று நம்பிள்ளை திருவுள்ளம். முதலடியோடு கூட்டுகிற பக்ஷத்தில், மூவாத எவ்வெவற்றுக்கும் தனி முதல் என்றபடியாய் ப்ரவாஹநித்யங்களான ஸகல வஸ்துக்களுக்கும் தனி முதல்வன் என்றபடி: இரண்டாவது பக்ஷத்தில் மூவா என்றவிது தனிமுதலுக்கு விசேஷணமாகிறது; ஒருநாளுங் கை வாங்காத தனி முதல்வனென்றபடி. கை வாங்குவதற்கு ப்ரஸக்தி யுண்டோவென்னில்; இங்கே ஈடு முப்பத்தாறாயிரப்படி காண்மின்;—" தான் தன் பக்கலிலே வழிபட வேணுமென்று நினைத்து உபகரணங்களைக் கொடுத்துவிட, கொடுத்த உபகரணங்களைக் கொண்டு வழி கெட நடவா நின்றால் 'இப்போது இங்ஙனே போயிற்றதாகில் க்ரமத்திலே நம் பக்கலிலே ருசியைப் பிறப்பித்து மீட்டுக்கொள்ளுகிறோம்' என்று அநுமதி தானத்தைப் பண்ணி உதாஸீநனா யிருக்கும்; இப்படி தன்னினைவைத் தப்பிப்போரச் செய்தேயும், கர்ஷகனா யிருக்குமவன் ஒருகால் பதர்த்ததிறே யென்று சோம்பிக் கை வாங்காதே மேலே மேலே கோலுமாப்போலே 'ஒரு காலல்லா வொரு காலாகிறதாகிறது' என்று ஸ்ருஷ்டியா நிற்கும், * சோம்பாது இப்பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா * என்னக் கடவதிறே."

இப்படி எம்பெருமான் ஸ்ருஷ்டித்து ரக்ஷிப்பது கீழும் மேலும் நடுவுமுள்ள—அல்லது, க்ருதகம் அக்ருதகம் க்ருதாக்ருதகம் என்கிற மூவுலகையுமென்கிறார் மூன்றுநங் காவலோன் என்று. இப்படி ரக்ஷிப்பது தன் மேன்மை குலையாமே யிருந்தன்று; அவதார முகத்தாலே யென்கிறார் பின்னடிகளில். ... ... (௫)

தீர்த்தனுலகளந்த சேவடிமேல்பூந்தாமம் *
சேர்த்தியவையே சிவன்முடிமேல்தான்கண்டு *
பார்த்தன்தெளிந்தொழிந்த பைந்துழாயான்பெருமை *
பேர்த்துமொருவரால் பேசக்கிடந்ததே ? (௬)

தீர்த்தன்	பரம பவித்திரனை கண்ணபிரானுடைய	தான் கண்டு	தானே பார்த்து
உலகு அளந்த சே அடி மேல்	உலகமளந்த திருவடிகளிலே	தெளிந்து ஒழிந்த	நன்றாகத் தெளியப் பெற்ற
பூ தாமம்	புஷ்பமாலையை	பைந்துழாயான் பெருமை	பைந்துழாய் மாலையனான பெருமானுடைய பெருமை
பார்த்தன்	அர்ஜுனன்	பேர்த்தும் ஒருவரால்	மற்ற பேர்களாலே
சேர்த்தி	ஸமர்ப்பித்து	பேச கிடந்ததே	பேசவேண்டும்படி யிரா நின்றதோ?
அவையே	அப்பூமாலையையே		
சிவன் முடி மேல்	சிவபிரானுடைய தலை மேல்		

* * * [தீர்த்தனுலகளந்த] "தேவாதி தேவபெருமான்" என்று மேற்பாட்டில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட பெருமேன்மை பண்டேஅர்ஜுனன் கிருமித்து நிர்ணயித்த விஷயமாதலால் மிகப்ரஸித்தமானவதில் மற்றையோருடைய ஆராய்ச்சி வேணுமோ வென்கிறார்.

மஹாபாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்திரம் வேண்டியிருந்தது; சிவபிரானை ஆராதித்து அதனைப் பெறவேணுமென்று அவன் முயற்சி செய்யப் போகையில், இவனுக்கு இத்தனை பரிச்ரமம் எதுக்கு என்று கருணை கொண்ட கண்ணபிரான் அவ்வர்ஜுனனை நோக்கி 'ருத்ரனிடத்தில் நீ செய்ய நினைத்திருக்கிற ஆராதனையை என் காலிலே செய்து அபேக்ஷிதம் பெறுவாயாக' என்று கட்டளையிட்டுத் தனது முழந்தாளைக் காட்ட, அங்கேயவன் சில புஷ்பங்களையிட்டு அர்ச்சிக்க, அற்றை யிரவு கனவிலே உருத்திரக் கடவுள் அந்த புஷ்பங்களைத் தனது தலையிலே அணிந்துகொண்டு வந்து காட்சி தந்து அஸ்த்ரப்ரதானம் பண்ணினதாகச் சொல்லப்படுகிற கதை இங்கு உணரத்தக்கது.

ருத்ரன் எம்பெருமானுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை முடிமேல் தரித்து சிவனாயினான் என்பதையும் இங்கு ஜ்ஞாபிக்க வேண்டி "தீர்த்தனுலகளந்த சேவடி" என்றார். "குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து, மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—கறைகொண்ட கண்டத்தான் சென்னி மேலேறக் கழுவினான், அண்டத்தான் சேவடியை யாங்கு" என்ற திருமழிசைப் பிரான் பாசுரம் இங்கு நோக்கத்தக்கதாகும். ... ... (௬)

கிடந்திருந்துநின்றளந்து கேழலாய்க்கீழ்புக்
கிடந்திடும் * தன்னுள்கரக்குமுமிழும் *
தடம்பெருந்தோளாரத்தழுவும் பாரென்னும்
மடந்தையை * மால்செய்கின்றமால் ஆர்காண்பாரே. (௭)

கிடந்து	(கடற்கரையில் வழி வேண்டிக்) கிடந்தும்
இருந்து	(சித்திரகூட கிரியில்) இருந்தும்
நின்று	(ராவணனை முடித்தபிறகு இலங்கை வாசலில் வீர ஸ்ரீயோடே) நின்றும்,
அளந்து	த்ரிவிக்ரமாவதாரஞ் செய்தும்,
கேழலாய்	வராஹ ரூபியாகி
கீழ் புக்கு	பிரளய வெள்ளத்தின் கீழே புகுந்து
இடந்திடும்	அண்ட கடாஹத்தினின்றும் பூமியை ஒட்டுவிடுவித்தெடுத்தும் (ஆக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவனாய்)
தன்னுள்	தனக்குள்ளே
கரக்கும்	(மூவுலகையும்) மறைத்துவைப்பவனும்
உமிழும்	பிறகு வெளிப்படுத்துபவனுய்
தட பெரு தோள் ஆர தழுவும்	மிகப் பெரிய திருத் தோள்கள் நிரம்பும்படி தழுவிக்கொள்பவனுய் (ஆக இப்படிகளாலே)
பார் என்னும் மடந்தையை	பூமிப்பிராட்டி திறத்திலே
மால்	ஸர்வேச்வரன்
செய்கின்ற	படுகிற
மால்	வ்யாமோஹத்தை
ஆர் காண்பார்	அறியவல்லாரார் ?

* * * [கிடந்திருந்து] இவ்விபூதி எம்பெருமானுக்கே அஸாதாரணமென்னுமிடத்திற்குத் தனித்தனியே உபபத்திகள் பலபல வுளவென்கிறார். கிடந்திருந்து நின்று = இதற்கு இரண்டு படியாக நிர்வாஹம் செய்தருள்வர்கள்; திருப்பார்கடலிலே தெய்வக் குழாங்கள் கை தொழக் கிடக்குங் கிடையையும், பரமபதத்திலே வீற்றிருக்குமிருப்பையும், திருமலையிலே நிலையார நிற்கும் நிலையையும் அநுஸந்திக்கிறாரென்னுதல். கடலரசனை வழி வேண்டிக் கடற்கரையிலே சாய்ந்த படியையும், மஹர்ஷிகளின் ஆச்ரமத்திலே சென்று இருந்த படியையும், வாலியைக் கொன்று (அல்லது இராவணனைக் கொன்று) நின்ற நிலையையும் அநுஸந்திக்கிறாரென்னுதல். முந்தின நிர்வாஹத்திற்குப் பரத்வ ப்ரகாசநத்தில் நோக்கு; பிந்தின நிர்வாஹத்திற்கு ஸௌலப்ய ப்ரகாசனத்தில் நோக்கு. ஸௌலப்யமான நிலையிலும் பரத்வம் பொலியக் குறையில்லை யென்பதை நம்பிள்ளை மூதலிக்கிறபடி பாரீர்!;—$ "அவர்களுடைய ஸ்த்ரீகள் பக்கலிலே கேட்டுமித்தனையிறே இவனுடைய பரத்வம்; * தலை வொ யாதா ஸம்வத்ஸ முதாயுஸ: *, என்னுதல், * தஸ்ய தேஜஸா * என்னுதல் செய்யா நிற்பர்களிறே."

"அன்றியே, புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை யிருந்து வைகுந்தத்துள் நின்று * என்கிறபடியே அர்ச்சாவதாரஸ்தலத்திலே கிடந்து மிருந்தும் நின்றும்" என்ற ஒன்பதினாயிரமுங் காண்க.

அளந்து சேழலாய் என்று தொடங்கி இப் பூமிப்பிராட்டி யிடத்து எம்பெருமான் மால் கொண்டு செய்த செயல்கள் பலவுங் கூறப்படுகின்றன.

இடந்திடும், கரக்கும், உமிழும், தழுவும் என்பனவற்றை வினை முற்றாகவுங் கொள்ளப் பொருந்தும். .... (எ)

[$ 'அவர்களுடைய' என்றது ராவண வாலிகளுடைய என்றபடி.]

காண்பாராரெம்மீசன் கண்ணனையென்காணுமாறு *
ஊண்பேசில் எல்லாவுலகுமோர்துற்றாற்றா *
சேண்பாலவீடோ உயிரோமற்றெப்பொருட்கும் *
ஏண்பாலுஞ்சோரான் பரந்துளனாமெங்குமே. (அ)

எம் ஈசன்	எமக்கு ஸ்வாமியான
கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணனை
காண்பார் ஆர்	அறியவல்லார் யார் ?
காணும் ஆறு என்	அறியும் விதந்தான் யாது ?
ஊண் பேசில்	(அவனுக்கு) உணவு இன்னதென்று சொல்லப் புகுந்தால்
எல்லா உலகும்	எல்லா வுலகங்களும்
ஓர் துற்று	ஒரு கபளத்திற்கும்
ஆற்றா	போதாது;
வீடோ	(அவனுக்கு) வீடாயிருக்குமிடமோ
சேண்பால	எல்லா வுலகங்களுக்கும் மேற்பட்டு வெகுதூரத்திலுள்ளது;
மற்று எப் பொருட்கும்	(அவனே) (தன்னை யொழிந்த) எவ் வகைப் பொருட்கும்
உயிர்	அந்தர்யாமி;
ஏண்பாலும்	எண்ணப்பட்ட ஓரிடமும்
சோரான்	விடாதவனாய்
எங்கும்	எல்லா விடங்களிலும்
பரந்து	வியாபித்து
உளன் ஆம்	இருப்பவனாவன்.

* * [காண்பாரார்] எம்பெருமானது அற்புதத் தொழில்கள் எப்படிப் பட்டவர்கட்கும் எல்லை காண முடியா வென்கிறார். ஸர்வேச்வரனா யிருந்து வைத்துக் கண்ணனாய் வந்தவதரித்து எனக்குக் கையாளானவனை அவன் தானே காட்ட நான் கண்டாப்போலே காண்பார்க்குக் காணலாமேயல்லது ஸ்வப்ர யத்நத்தாலே காணப் புகுவார்க்கு ஒருநாளும் காணமுடியா தென்கிறது.

"எம்மீசன் கண்ணனைக் காண்பாரார்" என்று சொல்லி வைத்து மீண்டும் "என் காணுமாறு" என்றதற்குக் கருத்து என்னென்னில்; காணக் கூடிய வல்லமை பெற்ற மஹான்கள் உண்டானாலும் அவர்கள் காணுமளவாக இல்லையே பகவத் விஷயத்தின் பெருமை என்றவாறு. "அளவுடையார் சிலர் காண விழிந்தார்களென்னா விஷயத்தைப் பரிச்சேதிக்கப் போகாதே" என்ற ஈடு காண்க.

ஏன் பரிச்சேதிக்கப் போகாதென்ன, அதற்கு நிரூபகம் மேல் மூன்றடிகள். அவனுடைய ஊணாகிற ஒரு செயலைச் சொல்லப் பார்க்கில் ஸகல லோகங்களும் அவனுடைய ஒரு க்ராஸத்திற்குப் போராது. திருவரங்கக் கலம்பகத்தில் "அண்டமெலாமுண்டை யென்பரறியாதார் ஆங்கவை நீ, உண்டருளுங் காலத்தில் ஒரு துற்றுக் காற்றுவால்" என்றது இப் பாசுரத்தையுட் கொண்டென்க.

பின்னடிகட்குப் பொருள் கொள்ளுந் திறத்துப் பன்னீராயிரப்படியின் வழி வேறு, மற்ற படிகளின் வழி வேறு. சேண்பால என்றதைக் குறிப்பு வினைமுற்றாகக் கொண்டார் வாதி கேஸரி; வீட்டுக்கு அடைமொழியாகக் கொண்டனர் மற்றுள்ள ஆசிரியர்கள். மேலுள்ள பதங்களின் பொருளிலும் வாசியுண்டு

"உயர்த்தியையே ஸ்வாபவமாக வுடைத்தான பரமபதமென்ன, முக்தாத்மஸ்வரூபமென்ன, மற்றுமுண்டான தேவாதிகளென்ன — ஆக எல்லாப் பதார்த்தங்களுக்கும் வ்யாபகன்" என்க.

'ஏண்பாலும்' என்றதை நீட்டல் விகாரமாகக் கொண்டு, எண்டிசையும் என்றுரைத்தலு மொன்று. .... (அ)

எங்குமுளன்கண்ணனென்ற மகனைக்காய்ந்து *
இங்கில்லையாலென்று இரணியன்தூண்புடைப்ப *
அங்கப்பொழுதே அவன்வீயத்தோன்றிய * என்
சிங்கப்பிரான்பெருமை ஆராயும்சீர்மைத்தே. (கூ)

கண்ணன் எங்கும் உளன் என்ற	எம்பெருமான் எங்குமிருக்கிறனென்று சொன்ன	அங்கு	அந்தத் தூணிலே
		அப்பொழுதே	அந்த க்ஷணத்திலேயே
மகனை	புத்திரனை (ப்ரஹ்லாதனை)	அவன் வீய	அவ்விரணியன் முடியும்படி
இரணியன்	(பிதாவான) ஹிரண்யாசுரன்	தோன்றிய	ஆவிர்ப்பவித்த
காய்ந்து	கோபித்து	என் சிங்கப் பிரான்	நரஸிம்ஹ மூர்த்தியான எம்பிரானுடைய
இங்கு இல்லை என்று	இவ்விடத்தில் இல்லை கிடாய் என்று	பெருமை	மேன்மை
தூண் புடைப்ப	தூணை அறைய,	ஆராயும் சீர்மைத்தே	ஆராய்தற்குரிய தன்மையதோ?

* * * [எங்குமுளன்] கீழ்ப்பாட்டில் ஏண்பாலுஞ்சோரான் பரந்துளனுமெங்குமே" என்றதில் சிலர் சங்கை கொண்டார்களாக, அவர்களை நோக்கிக் கூறுகின்றார் — எம்பெருமானுடைய வ்யாபகத்வத்திலே விப்ரதிபத்தியுடையார் இரணியன்பட்ட பாடுபடுவர்கள்; ஆகையாலே கெடுவீகாள்! அவன் பட்ட பாடு படாதே பிடிகோள் — என்கிறார்.

இரணியனுகிறன் — தேவர் மனிதர் முதலிய எவ்வுயிர்களாலும் பகலிலும் இரவிலும் வானத்திலும் பூமியிலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமுண்டாகாதபடி வரம் பெற்றவன். இவன் தேவர் முதலிய யாவர்க்கும் பல பல கொடுமைகளைப் புரிந்து அனைவரும் தன்னையே கடவுளாக வணங்கும்படி செய்து வருகையில், அவன் மகனான ப்ரஹ்லாதாழ்வான் இளமை தொடங்கி மஹாவிஷ்ணு பக்தனாய்த் தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன் பெயரைச் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயண நாமம் சொல்லிவரவே கடுங்கோபங்கொண்ட இரணியன் ப்ரஹ்லாதனைத் தன் வழிப்படுத்துவதற்குப் பல வாறு முயன்றபின் அங்ஙனம் வழிபடாத அவனைக் கொல்வதற்கு என்ன வுபாயஞ் செய்தும் அவன் பகவானுடைய அநுக்ரஹ பலத்தினால் ஒரு கேடுமின்றியிருக்க, ஒருநாள் சாயங்காலத்திலே அந்த ஹிரண்யன் தன் புத்திரனை நோக்கி, "நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கேயுளன்? காட்டு' என்ன

தூணிலுமுளன், துரும்பிலுமுளன், எங்குமுளன்" என்று அக்குமாரன் உறுதியாய்ச் சொல்ல, உடனே இரணியன் "இங்கு உளனோ?" என்று சொல்லி எதிரில் நின்ற தூணைப் புடைக்க, உடனே அதிலிருந்து திருமால் மனுஷ்ய ரூபமும் சிங்கவடிவுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாசற்படியில் தன் மடிமீது வைத்துக்கொண்டு தன் திருக்கையில் நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்திட்டு ப்ரஹ்லாதனுக்கு அருள் செய்தானென்பது பிரஸித்தம்.

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால், முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளே வைத்து நாட்டிய தூண் அது என்று சொல்லிவிடக் கூடுமாகையாலே, அந்த வார்த்தைக்கு இடமில்லாதபடி அந்த இரணியன் தானே தனது உயரம் பருமனுக்குப் பொருந்தப் பார்த்து அளந்து நாட்டிய அவன் வாசல் தூணிலிருந்தே திருமால் நரசிங்கமாய்த் தோன்றினனென்பதும், வேறு யாரேனும் கையால் தட்ட அத் தட்டியவிடத்திலிருந்து தோன்றினால் 'அவர் தம் கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டு வந்து தூணிலே பாய்ச்சினர்' என்று சொல்லிவிடக் கூடுமாகையாலே, அந்த வார்த்தைக்கு அவகாசமில்லாதபடி அவ்விரணியன் தானே தன் கையால் தட்டினவளவில் திருமால் தோன்றினனென்பதும்,—அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினால் 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த பிரதிஜ்ஞை தவறி 'நீ சொல்லுகிறவன் இங்கில்லை' என்று இரணியன் செய்த பிரதிஜ்ஞை நிலைநிற்குமாகையாலே அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே திருமால் தோன்றினனென்பதும், — அவன் தட்டினபிறகு சிறிதுபோது கழித்து நரசிங்கம் தோன்றினால் 'நான் தட்டினபொழுது திருமால் அங்கில்லை' என்று அவன் சொல்லி, திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப் பொருள்களினும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிற உண்மை நிலையை மறுக்கக் கூடுமாகையாலே, அதற்கு இடமறும்படி கர்ப்பம், கருமுதிர்தல், ப்ரஸவித்தல் முதலியனவும் குழந்தையாய் ஜனித்தல் பிறகு நாளடைவில் வளர்தல் என்பனவுமில்லாமல் அவ்வெதிரியினும் பருத்து வளர்ந்த வடிவையுடையவனாய் அப்பொழுதே தோன்றினனென்பதும் — அங்ஙன் தோன்றியவிடத்தும் ஹிரண்யன் ஜயசீலனாகவும் நரஸிம்ஹன் பராஜிதனாகவும் நேர்ந்தால் 'எங்குமுளன்' என்ற உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமற் போய்விடுதல் பற்றி அதைவிடத் தோன்றாமெயிருப்பதே நலமென்னும்படியிருக்குமாதலால் அங்ஙனமாகாதபடி அக்கொடியவனைத் தவறாது அழித்தனனென்பதும்,—தேவர், மனிதர், விலங்குகள், தாவரம் என்னும் நால்வகைப் பிறப்புக்களிலுள்ளவற்றில் ஒவ்வொன்றினாலும் தனித்தனி சாகாதபடியும், ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு உட்பட்ட எந்த பிராணியினாலும் சாகாதபடியும் அவன் ப்ரஹ்மருத்ராதிகளிடத்திற் பெற்ற வரம் பழுதுபடாமைக்காக நரங்கலந்த சிங்கமாய் ப்ரஹ்மஸ்ருஷ்டியினுட்படாமல் தன்னைத் தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினனென்பதும்,—அஸ்த்ரசஸ்த்ரங்களொன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாததினாலும் இறவாதபடியும் பெற்ற வரம் வீண் போகாமே நகங்களினால் கீண்டு கொன்றனனென்பதும்,

பகலிலுமிரவிலுஞ் சாகாதபடி பெற்றவரம் பொய்ப்படாதபடி அப்பகலிரவுகளின் ஸந்தியாகிய மாலைப்பொழுதிலே கொன்றனனென்பதும், — பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்றவரம் மெய்பாகும்படி தன் மடிமீது வைத்துக் கொன்றனனென்பதும்,—வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதிருக்கும்படி பெற்ற வரத்திற்கு விரோதமின்றி வாசற்படிமீது வைத்துக் கொன்றானென்பதும் இவை போன்ற பல விசேஷங்கள் இவ்வவதாரத்திலே அருமையாக நோக்கத்தக்க விஷயங்களாம். "சுராசுரர், முனிவர், நரர், கையில், பாரில், சுடர்லானில், பகலிரவில், உள்புறம்பில், பெரு படையில் தான் சாகா விரண்யன்றன்னைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்ற தூணில், நரஹரியாய்ப் பொழுதுபுக நேரந்தன்னில் நாடியுதித்துபர் வாசற்படி மீதேறி, இரணியனைத் தொடையிசைவைத் துகிரினாலே இருபிளவாக்கினை யரியே எம்பிரானே" என்றார் பின்னோரும். .... (௯)

சீர்மைகோள்வீடு சுவர்க்கநரகீறு*
ஈர்மைகொள்தேவர் நடுவோமற்றெப்பொருட்கும் *
வேர்முதலாய் வித்தாய்ப் பரந்துதனிநின்ற *
கார்முகில்போல்வண்ணன் என்கண்ணனைநான்கண்டேனே. (௧௦)

சீர்மை கொள்	மேன்மை பொருந்திய	பரந்து	எங்கும் வியாபித்து
வீடு	மோக்ஷமும்	தனி நின்ற	பரம விலக்ஷணனாயிருக்கின்ற
சுவர்க்கம்	ஸ்வர்க்கமும்	கார் முகில் போல் வண்ணன்	காளமேக நிறத்தனான
நரகு	நரகமும்	என் கண்ணனை	எம்பெருமானை
ஈறு ஆ	மேலெல்லையாக	நான் கண்டேன்	நான் அநுபவிக்கப் பெற்றேன்.
ஈர்மை கொள் தேவர் நடு ஆ	ஈர நெஞ்சுடையரான தேவர்கள் நடுவாக		
மற்று எப்பொருட்கும்	மற்றெல்லாப் பொருள்களுக்கும்		
வேர் ஆய் முதல் ஆய் வித்து ஆய்	மூவகைக் காரணமும் தானேயாய்		

* * * [சீர்மை கொள்] ஸம்ஸாரிகள் எம்பெருமானை மறந்து எப்படியாவது தொலைபட்டுப் ; அவர்களில் ஒருத்தனான நானும் அவர்களைப் போலே பாழ்பட்டொழியாமே ஒருவாறு உஜ்ஜீவிக்கப் பெற்றேனே! என்று தமக்கு நேர்ந்த லாபத்தைக் குறித்துக் களித்துப் பேசுகிறார்.

ஸ்வர்க்கம் மோக்ஷம் முதலிய ஸகல புருஷார்த்தங்களுக்கும், நரகம் முதலிய அபுருஷார்த்தங்களுக்கும், இவற்றுக்கு போக்தாக்களான தேவாதி ஸ்தாவராந்தமான ஸகலாத்மவர்க்கத்துக்கும் தாரகனாய்க் காரணபூதனாய் நியாமகனாய், தன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்றும்படி ஸ்ரீ வைகுண்டத்திலே கார்காலத்துக் கார்முகில் போலே யிருக்கிற அழகிய திருமேனியை யுடையவனாயிருந்து வைத்து

ஸ்ரீக்ருஷ்ணனாய் வந்தவதரித்து எனக்குக் கையாளானவனை முந்துறமுன்னம் நான் கண்டு அநுபவிக்கப் பெற்றேனே! என்று தம் பேற்றுக்குத் தாம் உவந்து பேசினாராயிற்று.

ஈர்மைகொள் தேவர் = ஈர்மை யென்பது ஈரம்; மனவிரக்கம்; தம்மை வணங்கி வழி படுகின்ற சேதநர்கட்குப் பலனளிப்பதற்கேடான கருணை வாய்ந்தவர்கள் என்றபடி. இனி, ஈர்மை என்றது இரண்டு என்ற படியாய், கர்மபாவனையும் ப்ரஹ்மபாவனையுமாகிற இரண்டு பாவனையையுமுடையவர்களென்னவுமாம். இது வாதிகேஸரியின் நிர்வாஹம்.

வேர், முதல் வித்து என்ற மூன்று சொற்களும் காரண வாசகங்களே; ஸஹகாரிகாரணம் நிமித்தகாரணம் உபாதாநகாரணம் என்கிற மூவகைக் காரணங்களும் தானேயாய் என்றவாறு ... ... (கo)

கண்டலங்கள்செய்ய கருமேனியம்மானை *
வண்டலம்புஞ்சோலை வழுதிவளநாடன் *
பண்டலையில்சொன்னதமிழ் ஆயிரத்திப்பத்தும்வல்லார் *
விண்டலையில்வீற்றிருந்தாள்வர் எம்மாவீடே. (கக)

கண் தலங்கள் செய்ய	திருக்கண்கள் சிவந்திருக்கப் பெற்றவனாய்	பண் தலையில் சொன்ன	தலைமையாகிய பண்களில் அமைத்துச் சொன்ன
கரு மேனி	கரிய திருமேனியையுடையனான	தமிழ் ஆயிரத்து இப்பத்தும் வல்லார்—;	
அம்மானை	ஸ்வாமி விஷயமாக,	விண் தலையில்	பரமபதத்தில்
வண்டு அலம்பும் சோலை வளம் வழுதி நாடன்	வண்டுகள் ஒலிக்கின்ற சோலைவளம் பொருந்திய திருவழுதி நாட்டுக்குத் தலைவரான ஆழ்வார்	வீற்றிருந்து	வஸிக்கப்பெற்று
		எம்மா வீடு	அறப் பெரிய ப்ரஹ்மானந்தத்தை
		ஆள்வர்	அநுபவிக்கப் பெறுவர்.

* * * [கண்டலங்கள்.] பரந்து சிவந்திருந்துள்ள திருக்கண்களையும் அவற்றுக்குப் பரபாகமாகக் கறுத்த திருமேனியையுமுடைய எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் பண்ணின் மேலே அருளிச் செய்தவாயிரத்துள் இப் பதிகத்தை ஓதவல்லவர்கள் திருநாட்டிலே வீற்றிருந்து நித்யானந்தமநுபவிக்கப் பெறுவார்களென்று இத் திருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று. ... ... (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ.

ப்ராப்யாகாரோபபத்த்யா ஜநிபரிஹரணாத் விச்வஸ்ருஷ்ட்யாதிசக்தே:
நிஸ்ஸீமாநந்ததேசாந்வயத உபஜகத் ரக்ஷணாயாவதாராத் ।
ஸௌப்ரக்யாதாநுபாவாத் விவிதவிஹரணாத் வ்யாப்திவைசித்ர்ய
வத்த்வாத்
பக்தைஸ்த்ராக் த்ருச்யபாவாதவிதுரமுநிக்ருத் தேசிகஸ்ஸர்வம் ஶம்ஸதே ॥

1. ப்ராப்ய ஆகார உபபத்த்யா. *அணைவதரவணைமேல் பூம்பாவை யாகம் புணர்வது.* எம்பெருமானே ப்ராப்யன் என்பதற்கிடான உபபத்திகள் அமைந்திருக்கும்படி முதற்பாட்டில் வ்யக்தம்.

2. ஜநிபரிஹரணாத். *நீந்தும் துயர்ப்பிறவியுட்பட மற்றெவ்வெவையும் நீந்தும்.* ஜன்மம் முதலான எல்லாவற்றையும் போக்குமவன்.

3. விச்வஸ்ருஷ்ட்யாதி சக்தே: *புணர்க்குமயனும் அழிக்குமரனும்.* பிரமனுக்கும் ருத்ரனுக்கும் அந்தர்யாமியாயிருந்து ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணுமவன்.

4. நிஸ்ஸீமாநந்த தேசாந்வயத:. *நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்.* எல்லையில்லாத ஆனந்தம் மிக்க பரமபதத்திலே புகுவிக்க வல்லவன்.

5. ரக்ஷணர்த்தாவதாராத். *மாவாகி யாமையாய் மீனாகி மானிடமாம்.* உலகங்களை யளித்தற்பொருட்டு ஹயக்ரீவ கூர்ம மத்ஸ்ய ராமக்ருஷ்ணாதி ரூபியாய் அவதரிக்குமவன்.

6. ஸுப்ரக்யாதாநுபாவாத். *நீர்த்தனுலகளந்த..............பார்த்தன் தெளிந்தொழிந்த.* தன் திருவடிகளிலே அர்ஜுனனிட்ட பூக்களை அவன் சிவபிரான் முடிமேற்கண்டு தெளிவு பெறும்படியாக மிகவும் ப்ரஸித்தமான பெருமையை யுடையவன்.

7. விவிதவிஹரணாத். *கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்* பல வகைப்பட்ட விஹார சேஷ்டிதங்களைப் பண்ணுமவன்.

8. வ்யாப்திவைசித்ர்யவத்த்வாத். *எண்பாலுஞ் சோரான் பரந்துளனாமெங்குமே.* ஒரு குறைவின்றியே எங்கும் வியாபித்திருப்பவன்.

9. பக்தை; த்ராக் த்ருச்யபாவாத். *இரணியன் தூண்புடைப்ப அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய.* அன்பர் நினைத்தவிடத்தே அப்பொழுதே தோன்றிக் காட்சி தருமவன்.

10. அகிலபலக்ருதே: • சீர்மைகொள் வீடு சுவர்க்க மித்யாதி.* மோக்ஷம் ஸ்வர்க்கம் முதலிய ஸகல பலன்களையும் அளிக்குமவன்.—ஆக இப்படிப்பட்ட தன்மைகளைக் கொண்டு [முக்தி ஸௌக்யம் முகுந்தே உபஜகௌ] முகுந்தனை மோக்ஷ ஸுகப்ரதன் என்னுமிடத்தை "அணைவதரவணைமேல்" என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார் உபதேசித்தருளினாராயிற்று. ... (*)

காப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஆர்ஜவஸ்திதிஷு ஹரே: ப்ரியதாம் ஸ்வேக்ஷ்ய
ஸர்வாத்மந: ஸ்வஜநயந் ஸ்வநிரீக்ஷணேந ।
மோக்ஷப்ரதத்வமுபதிஶ்ய ததாபிஶோச்யாந்
ஶ்லாகாம் ஸ்வலாபவிஷயாம் ஸஹஸாந்வதந்த ஸ: ॥

(கருத்து) எட்டாவதான இந்தத் திருவாய்மொழியில் ஆழ்வார் செய்தது என்னென்னில்; தம்மோடு ஸம்பந்தமுடையாரிடத்திலும் எம்பெருமான் அன்பு பாராட்டியிருக்கும் நிலைமையைக் கண்ட ஆழ்வார் எல்லா ஆத்ம வர்க்கங்களையும் ஸ்வஜநமாகக் கடாக்ஷித்து அவர்களை நோக்கி எம்பெருமானுடைய மோக்ஷப்ரதத்வத்தை உபதேசித்தவிடத்திலும் அவர்கள் திருந்திவரக் காணாமையாலே, 'இந்த ஸம்ஸாரிகள் எக்கேடாவது கெடட்டும்; இவ்விருள்தருமா ஞாலத்திலே நானொருவன் வாழப்பெற்றேனே!' என்று கொண்டு தம்முடைய பேற்றுக்குத் தாம் ஆனந்தித்துத் தலைக்கட்டினார் என்பதாம். ... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அணைந்தவர்கள் தம்முடனே யாயனருட்காளாம்
குணந்தனையே கொண்டுலகைக்கூட்ட—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன் மலரடியே
வீசுபுகழெம்மா வீடு

தம்முடனே அணைந்தவர்கள்	தம்மோடு ஸம்பந்தஸம்பந்தம் பெற்றவர்களுங் கூட	மிக இணங்கி	மிகவும் பொருந்தி
ஆயன் அருட்கு	எம்பெருமானுடைய திருவருளுக்கு	மாசு இல் உபதேசம் செய்	குறறமற்ற உபதேசத்தைச் செய்தருளின
ஆள் ஆம்	இலக்காகும்படியான	மாறன்	ஆழ்வாருடைய
குணம் தனையே கொண்டு	குணத்தையே பற்றாசாகக்கொண்டு	மலர் அடியே	பாதாரவிந்தமே
உலகை	ஸம்ஸாரி லோகத்தை	வீசு புகழ்	எங்கும் பரவிய புகழையுடையதாய்
கூட்ட	எம்பெருமானோடுசேர்க்க	எம் மா வீடு	எல்லாப்படியாலும் மேன்மையுடையதான மோக்ஷம்.

ஆழ்வார், தம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காகி உஜ்ஜீவிக்கப் பெறுகிறபடியைக்கண்டு, எல்லா ஸம்ஸாரிகளையும் நம்மோடே சேர்த்துக் கொள்வோமென்று ஆசைப்பட்டவராய் அந்த ஸம்ஸாரிகளுக்கு நல்ல உபதேசங்களைச் செய்தருளினார் இத்திருவாய்மொழியில். அவருடைய திருவடிகளின் கீழ் வாழ்வதே நமக்கு மோக்ஷ புருஷார்த்தம்; அன்றி, வேறு கிடையாது என்றாயிற்று. ... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந் திருவாய்மொழி
உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து—ஒன்பதாந் திருவாய்மொழி
எம்மாவீட்டுத் திறமும்.

அவதாரிகை :—புருஷார்த்த நிஷ்கர்ஷம் பண்ணுகிற திருவாய்மொழியாமிது. அதாவது கீழ்த் திருவாய்மொழியில் "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" இத்யாதிகளாலே ஆழ்வார் திருநாட்டைப்பற்றி ஸ்தோத்ராவஞ் செய்தது கண்ட எம்பெருமான் 'இவர்க்கு மோக்ஷத்திலே ருசியாகில் அதை இவர்க்குக்கொடுத்து விடுவோமே'என்று திருவுள்ளம்பற்றி 'ஆழ்வீர்! நீர் அபேக்ஷிக்கிற மோக்ஷத்தைக் கொள்ளும்'என்று அருளிச் செய்ய, அதுகண்ட ஆழ்வார், 'எம்பெருமான் இங்ஙனே சொல்லிக் கொடுக்கிற மோக்ஷம் நமக்கு எதுக்கு? நம்முடைய அபேக்ஷிதத்தை நிறைவேற்ற வேணுமென்கிற திருவுள்ளத்தோடே அவன் தந்தருளும் மோக்ஷம் நமக்குப் புருஷார்த்தமாகுமோ? அவன்றன்னுடைய ருசிக்கீடாகக் கொடுத்தருளினால் அது பாங்கேயல்லது நம்முடைய ருசிக்காகக் கொடுக்குமது நமக்கு நரகத்தோடொக்குமத்தனை'என்று திருவுள்ளம்பற்றி, 'பிரானே! நான் முக்தனாகி எல்லையிலின்பம் அநுபவிக்கவுமாம்; கைவல்யாநுபவத்தைப் பெறவுமாம்; ஆத்ம விநாசமேயாகவுமாம்; நரகாநுபவம் பண்ணவுமாம்; இவற்றில் எனக்கு ஒரு நிர்ப்பந்தமில்லை; உன்னுடைய ருசிக்கீடாக வருமதாகில் இவையித்தனையும் வரவுமாம்; எனக்காக வருமதாகில் மோக்ஷமும் வேண்டா; ஆனபின்பு தேவரீருடைய ருசிக்கு ஏற்றது எதுவோ அதுவே எனக்கு ப்ராப்யமாம்படி பண்ணியருளவேணும்' என்கிறாராயிற்று.

"எம்பார் இத்திருவாய்மொழி அருளிச் செய்யப்புக்கால் இருந்தவர்களை யார் என்று கேட்டுக் கதவுகளையும் அடைப்பித்து குஹ்யமாகவாம் அருளிச் செய்வது"என்ற சுட்டு ஸ்ரீஸூக்தி யறிக. இத்திருவாய்மொழியின் ப்ரமேயத்திற்கு அதிகாரிகள் துர்லபர் என்று காட்டினபடி. ... ... (*)

எம்மாவீட்டுத்திறமும்செப்பம் * நின்
செம்மாபாதபற்புத்தலைசேர்த் தொல்லை *
கைம்மாதுன்பம் கடிந்தபிரானே *
அம்மா! அடியேன் வேண்டுவதீதே. (க)

கைம்மா துன்பம் கடிந்த பிரானே	கஜேந்திராழ்வானுடைய இடரைத் தீர்த்த பிரபுவே!	எம்மா வீடு திறமும்	மிகவும் விலக்ஷணமான மோக்ஷத்தைப்பற்றின பேச்சையும்
நின்	தேவரீருடைய	செப்பம்	ப்ரஸ்தாவிக்கமாட்டோம்;
செம்	சிவந்த	அம்மா	ஸ்வாமியே!
மா	மேன்மைதங்கிய	அடியேன் வேண்டுவது	நான் பிரார்த்திப்பது
பாத பற்பு	பாத பத்மங்களை	ஈதே	இதுதான். (நின் செம்மாபாத பற்புத்தலை சேர்க்கவேணுமென்பதே யென்றபடி.)
தலை	என் தலையிலே		
ஒல்லை	சீக்கிரமாக		
சேர்த்து	சேர்க்கப்பெற்றால்		

* * * பிரானே! உன் திருவடிகளை என் தலைமீது வைக்குமித்தனையே வேண்டுவது; எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷத்திலும் எனக்கு விருப்பமில்லை யென்கிறார். பாசுரந் தொடங்கும்போதே எம்மாவீட்டுத்திறமும் செப்பம் என்கிறார்—தம்முடைய அத்யவஸாயத்தின் உறைப்பை உபக்ரமத்திலேயே நன்கு காட்டுகிறபடி. 'எம்முடைய' என்னும் பொருளதான எம் என்கிற சொல் அன்று முன்னேயிருப்பது. 'எப்படிப்பட்ட' என்னும் பொருளதான சுட்டு அது என்றுணர்க. எல்லாப்படியாலும் விலக்ஷணமான மோக்ஷத்தைக் கொடுத்தாலும் வேண்டா என்றபடி.

செப்பம் என்றது தன்மைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று; செப்போம் என்றவாறு. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி—"ஒரு தமிழன் 'எம்மாவீட்டு விகல்பமும் செவ்வியவாம்' என்றான்; அந்த பக்ஷத்திலே வீட்டு விகல்பமாவது ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்ய மென்கிறவை; செவ்வியவாகையாவது ஸாலோக்யாதிகளெல்லாம் இம்மோக்ஷத்திலே யுண்டாகை." என்றுள்ளது. இது வொரு நிர்வாஹம். திருப்பாவையில் "செப்பமுடையாய்" என்றும், திருவாய்மொழியிலேயே ஏழாம்பத்தில் "செப்பமே செய்து" என்றும் உள்ளவிடங்களிலே செப்பம் என்பது பெயர்ச்சொல்லாக வுள்ளதன்றோ; அப்படியே இங்கும் இருப்பதாகக் கொண்டு இந்த நிர்வாஹம். இப்போது, செப்பம் என்பதற்கு 'நன்றாகவுள்ளது' என்று கருத்துத் தேறும். நின் செம்மா பாதபற்பை என் தலைமேல் சேர்த்தால் நான்கு விதமான மோக்ஷ ஸாம்ராஜ்யங்களும் இதிலேயே அடங்கிவிட்டனவாகும் என்பது தேர்ந்த கருத்து.

கைம்மா துன்பம் கடிந்த வரலாறு:—இந்திரத்யும்நனென்ற அரசன் மிகுந்த விஷ்ணுபக்தி யுக்தனாய் ஒருநாள் விஷ்ணுபூஜை செய்கையில் அகஸ்திய மாமுனிவன் அவனிடமெழுந்தருள, அப்பொழுது அவ்வரசன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப்பூஜிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின் வருகையை அறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றும் செய்யாதிருக்க, அம்முனிவன், தன்னை அரசன் அலக்ஷியஞ் செய்தானென்று மாறாகக் கருதிக்

கோபித்து, 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் காட்டில் ஒரு யானையாகத் தோன்றினனாயினும் முன்செய்த விஷ்ணு பூஜையின் வைபவத்தினால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அர்ச்சித்துவருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறிக்கப் போய் இறங்கியபொழுது, அங்கே முன்பு நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தாற் பெரிய முதலையாய்க்கிடந்த ஹூஹூ என்னும் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள அதனை விடுவித்துக் கொள்ள முடியாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் பெரிய திருவடியின்மீதேறி அங்கு எழுந்தருளித் தனது சக்கரப்படையைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன்வாயினின்று விடுவித்து இறுதியில் அதற்கு முக்தியை அருளினான் என்பதாம்.

பாதபற்பு—பாதபத்மம். 'பத்மம்' என்னும் வட சொல் பற்பு எனத் திரிந்தது. ... ... (க)

ஈதேயானுன்னைக் கோள்வதேஞ்ஞான்றும் * என்
மைதோய்சோதி மணிவண்ணவேந்தாய் *
எய்தாநின்கழல் யானெய்த * ஞானக்
கைதா காலக்கழிவுசெய்யேலே. (உ)

என்	எனது அநுபவத்திற்கு உரிய	ஈதே	இஃதொன்றேயாகும்; (அது யாதெனில்;)
மை தோய் சோதி மணி வண்ணம் எந்தாய்	கருமைபடிந்த ஒளியையுடைய மாணிக்கம் போன்ற வடிவழகுள்ள ஸ்வாமியே!	எய்தா	பெறுதற்கரிதான
யான்	நான்	நின் கழல்	தேவரீருடைய திருவடிகளை
எஞ்ஞான்றும்	என்றைக்கும்	யான் எய்த	நான் அடையும்படியாக
உன்னை	தேவரீரிடத்தில்	ஞானம் கை	ஞானமாகிய கையை
கொள்வது	பிரார்த்திப்பது	தா	தந்தருளவேணும்;
		காலம் கழிவு செய்யேல்	காலதாமதம் செய்ய வேண்டா

* * * எம்பெருமான் திருவடிகள் தம் தலைமேல்வந்து பொருந்தவேணுமென்று கீழ்ப்பாட்டில் வேண்டினார்; ஞானக்கை தந்தருள வேணுமென்று விரும்புகிறார் இப்பாட்டில்.

"அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்று நிஷ்கர்ஷமாகக் கீழ்ப்பாட்டில் சொன்னவர் மீண்டும் "ஈதே யானுன்னைக் கொள்வது" என்னவேணுமோ? மறுபடியும் ஈதே என்பானேன்? என்னில்; ஒரு வஸ்துவை விரும்பினவொருவரையே

பலகால் கேள்விகேட்டால் தடுமாறிப்போவதுமுண்டு; அது வேண்டா, மற்றொன்று வேண்டும் என்று சொல்லிவிடுவதுமுண்டு; இவ்வாழ்வார் அப்படி நிலை மாறுகிறவரோ என்று பரீக்ஷிப்பதற்காக எம்பெருமான் 'ஆழ்வீர்! இதுவும் இன்ன மெதுவும் வேணும்?' என்றானும்; வேறு எதுவும் வேண்டா; ஈதொன்றே வேணும்—என்றாராயிற்று. "ஈதே கொள்வதெஞ்ஞான்றும்" என்பதே போதுமாயிருக்க, யான் உன்னை என்ற பதங்கள் எதுக்கு என்னில்; என்னுடைய ஸ்வரூபத்திற்கும் உன்னுடைய ஸ்வரூபத்திற்கும் தகுதியாக இதுவே கொள்ளக்கடவதென்கை. ஸ்வாமியான வுன்பக்கல் சேஷபூதனான நான் கொள்ளுமது இதுவே.

நம்முடைய ஸ்வாமித்வமும் உம்முடைய சேஷத்வமும் கிடக்கச் செய்தேயன்றோ நெடுநாள் இழந்துபோந்தது; ஆனபின்பு நமக்கு அதிசங்கையுண்டாகின்றது; எத்தனை நாள்வரையில் நீர் இங்ஙனே [ஈதே யானுன்னைக் கொள்வது என்று] சொல்லுவீர்? என்று எம்பெருமான் கேட்க; எஞ்ஞான்றும் என்கிறார். ஆத்மதத்வமுள்ளவளவிலும் இதுவே எனக்கு வார்த்தை யென்றவாறு. இதிலே நிலைநிற்கும்படி உம்மை சிக்ஷை பண்ணிவைத்தது யார்? என்று கேட்க; தேவரீருடைய வடிவழகே இங்ஙனம் சிக்ஷை பண்ணித்தந்தது என்கிறார் என் மைதோய் சோதிமணிவண்ண வெந்தாய்! என்பதனால்.

உமக்கு நான் செய்யவேண்டுவது எதுவென்ன; எய்தாநின்கழல்யானெய்த ஞானக்கை தா என்கிறார். தம்முயற்சியால் ஒருவர்க்குமணுக வொண்ணாதவுன் திருவடிகளை 'உன்னாலே பேறு' என்றிருக்கிற நான் அணுகும்படி பண்ண வேணும்.

ஞானக்கை தா என்றவிடத்தில் ஈடு—"எம்பார்க்கு ஆண்டானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்று. இதன் விவரணம் வருமாறு:— முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கையில் அவருடைய சிஷ்யரான வொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் ஸந்நிதியிலே கைங்கரியம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது ஒருநாள் சில ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எம்பார் திருவிலச்சினை ஸாதிக்கவிருக்கையில் இந்த ஸ்ரீவைஷ்ணவரும் தமக்கும் ஸாதிக்கும்படி வேண்டினார்; அப்போது எம்பார் 'உமக்கு விசேஷ ஸம்பந்தமுண்டோ?' என்று அவரைக் கேட்க, 'தேவரீருடைய ஸம்பந்தமே ஸம்பந்தம்' என்று அவர் விண்ணப்பஞ்செய்ய அவ்வளவிலே எம்பார் 'இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவர்' என்றறியாதே இவர்க்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக்கொண்டு கைங்கரியங்களுங் கொண்டெழுந்தருளியிராநிற்கையில் ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே யெழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டானைவந்து ஸேவிக்க, ஆண்டானும் முன்புபோலே இவரைக்கொண்டு வேண்டும் கைங்கரியங்களைக்

கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே யெழுந்தருளி 'கனக்க அபசாரப்பட்டேன்' என்றருளிச் செய்ய, இவருடைய திருவுள்ளத்தில் க்லேசத்தை யறிந்து அப்போது ஆண்டானருளிச் செய்தவார்த்தை—'ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே; அப்படியேயாகிறது' என்றும். இங்குக் கைகொடுப்பதாவது ஞானமளிப்பது. இதற்காகவே இந்த ஸம்வாதம் இங்குக் காட்டப்பட்டது. ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்தினவர்களுக்கு இரண்டு ஆசாரியர்களாகவிருந்து ஞானக்கை கொடுப்பது நன்றுதானே என்பது முதலியாண்டானுடைய திருவுள்ளம். .... (உ)

செய்யேல்தீவினையென்று அருள்செய்யும் * என்
கையார்சக்கரக் கண்ணபிரானே *
ஐயார்கண்டமடைக்கிலும் நின்கழல்
எய்யாதேத்த * அருள்செய்யெனக்கே. (ங)

தீ வினை செய்யேல் என்று } 'கெட்ட காரியங்களைச் செய்யாதே' என்று
அருள் செய்யும் } (என்திறத்தில்) கிருபை செய்தருளின
கை ஆர் சக்கரம் } திருக்கையில் பொருந்தின திருவாழியையுடைய
என் கண்ணபிரானே!—
ஐயார் கண்டம் அடைக்கிலும் } கோழைவந்து கழுத்தையடைக்கும்படியான துர்த்தசை நேர்ந்தாலும்
நின் கழல் } தேவரீருடைய திருவடியை
எய்யாது இளைப்பின்றி
ஏத்த துதிக்கும்படியாக
எனக்கு அருள் செய் } என்னளவில் கிருபை பண்ணவேணும்.

* * * உத்க்ரமண தசையான துர்க்கதியிலும் நான் இளையாதே உன் திருவடிகளை ஏத்தும்படி பண்ணியருள வேணுமென்கிறார்.—கையும் திருவாழியுமாயிருக்கிற இருப்பைக்காட்டி என்னை ஈடுபடுத்திக் கொண்ட பெருமானே! நான் உம்மிடத்து துக்க நிவ்ருத்தியை விரும்புகின்றேனல்லேன்; நெஞ்சிலே கோழை கட்டிப்போய்த் தடுமாறும்படியான நிலைமை நேர்ந்தாலும் நேருக; அப்போதும் உன்திருவடிகளில் பத்தி குலையாமே துதிக்கும்படி செய்தருளினாற்போதும் என்றாராயிற்று. இங்கு '[illegible] துர்க்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத:। யதி நாசம் ந விந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா.'' என்ற ஜிதந்தாச்லோகம் அநுஸந்திக்க வுரியது. எம்பெருமானே! எனக்கு எப்படிப்பட்ட துர்க்கதி நேர்ந்தகாலத்தும் சிந்தனைமாத்திரம் உன்னைவிட்டு அகலாதிருக்குமாயின் அவ்வளவே நான் உய்யப் போதுமானது—என்பது மேற்குறித்த ச்லோகத்தின் கருத்து.

ஐயார் = ஐ என்று கோழைக்குப் பெயர்; ஆர்விகுதி இழிவுப்பொருளது; 'கோழைப் பையலார்' என்பது நம்பிள்ளை ஸ்ரீஸூக்தி. ... ... (ங)

எனக்கேயாட்செய் எக்காலத்துமென்று* என்
மனக்கேவந்து இடைவீடின்றிமன்னி*
தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே*
எனக்கேகண்ணனை யான்கொள்சிறப்பே. (சு)

எக்காலத்தும்	'எக்காலத்திலும்
எனக்கே ஆள் செய் என்று	'எனக்கே அடிமை செய்யக் கடவாய்' என்று சொல்லி
என் மனக்கே வந்து	எனது மனத்திலேயே எழுந்தருளி
இடை வீடு இன்றி	இடைவிடாமல்
மன்னி	நிலைபெற்றிருந்து
தனக்கே ஆக	தனக்கே உரியேனும் படி
எனை	என்னை
கொள்ளும் ஈதே	அங்கீகரித்தருளு மிதுவே
எனக்கே	என் ஸ்வரூபத்திற்குத் தகுதியாக
கண்ணனை	எம்பெருமானிடத்து
யான் கொள்	நான் விரும்புகின்ற
சிறப்பு.	சிறந்த பிரயோஜனம்

* * இத்திருவாய் மொழிக்கு உயிரான பாசுரம் இது. எல்லாப்படியாலும் அத்தலைக்கே உரித்தாயிருக்கும்படியான அத்யந்த பாரதந்திரியத்தை ப்ரயோஜனமாக நிஷ்கர்ஷிக்கிறாரிதில். இப்பாசுரத்திற்கு அவதாரிகை அருளிச் செய்யாநின்ற நம்பிள்ளை—"எம்மாவீட்டி லெம்மாவீடாய் வைஷ்ணவ ஸர்வஸ்வமுமாய் உபநிஷத்குஹ்யமுமாய் ஸர்வேச்வரன் பக்கலிலே அபேக்ஷித்துப் பெறுமதாய் இவ்வாத்மாவுக்கு வகுத்ததான பாரதந்த்ரியத்தை அவன் பக்கலிலே அபேக்ஷிக்கிறார்" என்கிறார். இதில் எம்மாவீட்டி லெம்மாவீடு என்றது அற்புதமானவொரு ஸ்ரீஸூக்தியாகும். திருவாய்மொழியாயிரத்திலுள்ளே எம்மாவீடு என்கிற இப் பதிகம் மிகச் சிறந்தது என்று ஆசார்ய கோஷ்டியில் ப்ரஸித்தியாதலால், எம்மா வீடு என்கிற பதத்திற்கு நிரூடலக்ஷணையால் ஸாரம் என்று பொருள் கொண்டு, ஸாரத்திலும் பரமஸாரம் என்கிற விவக்ஷையாலே எம்மாவீட்டி லெம்மாவீடாய் என்றார் என்றுணர்க.

ஆட்செய், எனக்கு ஆட்செய், எனக்கே ஆட்செய், எக்காலத்தும் எனக்கே ஆட்செய்—என்று பிரித்துரைத்துப் பேரின்சுவைப்படுத்துக. என்னை நியமித்துக்கொண்டு என்னெஞ்சினுள்ளேயே வந்து படுகாடு கிடக்கவேணும்; நிலாத்தென்றல் சந்தனம் தண்ணீர் முதலிய பொருள்கள்போலத் தனக்கேயாக என்னைக் கொள்ளவேணும்; இவ்வளவே நான் விரும்பும் புருஷார்த்தம் என்றாராயிற்று.

'மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே யென்று பிரார்த்திப்பானேன்? திருவுள்ளமானபடி செய்கிறான் என்றிருக்கையன்றோ அழகியது' என்று பிள்ளைதிருநறையூரரையர் எம்பாரைக் கேட்க, அதற்கு அவர் அருளிச்செய்த விடை—'நீர் கேட்பது வாஸ்தவமே; ப்ராப்ய

ருசி இங்ஙனே பிரார்த்திக்கப் பண்ணுகிறது' என்று. எம்பெருமானுடைய திருமார்பிலே இடைவிடாது எழுந்தருளியிருக்கின்ற பிராட்டி வாளா இருக்கலாமே; அப்படியிராமே 'அகலகில்லேனிறையும், அகலகில்லேனிறையும்' என்று வாய்க்கொருமுறை சொல்லிக்கொண்டேயிருக்கிறாளே, அது ஏன்?. அது விஷயஸ்வபாவம் படுத்துகிறபாடு என்னில், இது ப்ராப்யருசி படுத்துகிறபாடு என்று கொள்ளீர் என்று மருளிச்செய்தார்.

மனக்கு = அத்துச் சாரியை பெறுமல் வந்தது. "மாடக்குச் சித்திரமும்" என்றதுங்காண்க. "மனக்கின்பம் படமேவும்" என்று ஒன்பதாம் பத்திலுமருளிச் செய்தார்.

சிறப்பு—முக்தி, செல்வம், நன்றி. ... ... (ச)

சிறப்பில்வீடு சுவர்க்கநரகம் *
இறப்பிலெய்துக எய்தற்க * யானும்
பிறப்பில் பல்பிறவிப்பெருமானை *
மறப்பொன்றின்றி என்றும்மகிழ்வேனே. (ரு)

இறப்பில்	மரணமான பிறகு	பல் பிறவி	அநுக்ரஹ மடியாகப் பல பிறவி பிறக்கின்றவனுமான
சிறப்பில் வீடு	சிறப்புடன்கூடிய மோக்ஷத்தையோ	பெருமானை	ஸ்வாமியை
சுவர்க்கம்	ஸ்வர்க்கத்தையோ	மறப்பு ஒன்று இன்றி	சிறிதும் மறவாமல்
நரகம்	நரகத்தையோ	என்றும்	எக்காலத்திலும் (சிந்தித்து)
எய்துக	அடைவேனாக;	யானும் மகிழ்வேன்	(நீசனான) நானும் களிப்புறுவேன்.
எய்தற்க	அடையாதொழிவேனாக;		
பிறப்பு இல்	(நம்மைப்போலே கரும மடியாகப் பிறவா)தவனும்		

* * * தேஹமே ஆத்மாவாக இருக்கட்டும்; அன்றி தேஹத்திற்காட்டில் வேறுபட்டிருப்பானொருவன் ஆத்மாவாக இருக்கட்டும்; ஸ்வர்க்கம் நரகம் முதலானவற்றில் எதுகிடைத்தாலும் கிடைக்கட்டும்; இவற்றிலெல்லாம் எனக்கொரு நிர்ப்பந்தமில்லை; பின்னை எதில் நிர்ப்பந்தமென்னில்; தேவரீர் கருமங்காரணமான பிறப்பு இல்லாதவராயிருந்துவைத்து ஆச்ரித ரக்ஷணார்த்தமாகப் பல பிறவிகளிலும் பிறந்தருள்பவராயிராநின்றீரே; அந்த அவதாரங்களையும் ஸகல திவ்ய சேஷ்டிதங்களையும் ஸகல கல்யாண குணங்களையும் மறவாதே என்றும் அநுபவிக்கப் பெறவேணுமேவேணும்; ஈதொன்றிலேயே எனக்கு நிர்ப்பந்தம் என்கிறார்.

சிறப்பில் வீடு = 'சிறப்பு இல்லாத வீடு' என்று பொருளன்று; "ஆனந்தமாகிற நன்மையிலேயான மோக்ஷம்" என்பது பன்னீராயிரம். எய்தற்க—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

'மகிழ்வேனே' என்றது அநுபவிப்பே னென்றபடி: "மகிழ்ச்சி யென்றும் அநுபவ மென்றும் பர்யாயம்" என்பர் நம்பிள்ளை. ... ... (ரு)

மகிழ்கொள்தெய்வம் உலோகமலோகம் *
மகிழ்கொள்சோதி மலர்ந்தவம்மானே *
மகிழ்கொள்சிந்தை சொல்செய்கைகொண்டு * என்றும்
மகிழ்வுற்று உன்னைவணங்கவாராயே. (௬)

மகிழ் கொள்	மகிழ்ச்சியைக் கொண்ட	அம்மானே	ஸர்வேச்வரனே
தெய்வம்	தேவவர்க்கமும்	மகிழ்கொள் சிந்தை	அன்பு கொண்ட நினைவையும்
உலோகம்	ஞான வொளியை யுடைய மானிடவர்க்கமும்	சொல்	சொல்லையும்
		செய்கை	செயலையும்
அலோகம்	ஞான வொளியில்லாத விலங்கு தாவரம் என்பவையும்	கொண்டு	ஏற்றுக்கொண்டு
		என்றும்	எக்காலத்திலும்
மகிழ் கொள் சோதி	உலகுக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற சோதிப் பொருள்களான சந்திர ஸூரியர்களும்	மகிழ்வுற்று	மகிழ்ச்சியுடன்
		உன்னை வணங்க	உன்னை வணங்கும்படி
மலர்ந்த	(தன்னிடத்திலிருந்தும்) உண்டாகப்பெற்ற	வாராய்	(என்னெதிரே) எழுந்தருளவேணும்.

* * * இப்பாசுரத்திற்கு இரண்டுவகையாக அவதாரிகை கூறுவர்;—தேவர் மனிதர் முதலிய பதார்த்தங்களைப் படைத்ததுபோலே என்னையும் உன்னையநுபவிப்பேனும்படி பண்ணவேணு மென்கிறார்; அன்றியே; தேவாதி பதார்த்தங்களுக்கு ஒவ்வொரு ஸ்வபாவம் நியதமாம்படி பண்ணினாப்போலே எனக்கு உன்னையநுபவிக்குமது நியதஸ்வபாவமாம்படி பண்ணியருள வேணுமென்கிறார். (தாற்பரியமாகத் தேறுவது ஒன்றே.) முன்னிரண்டடிகளிலுள்ள பகவத்ஸம்போதகம் ஸாபிப்ராயம். ஆனந்தமே வடிவான தேவவர்க்கமென்ன, ஞான வொளியோடுகூடிய மநுஷ்யவர்க்கமென்ன, அஃதில்லாத திர்யக் ஸ்தாவர வர்க்க மென்ன, தேஜஸ்விகளான சந்த்ரஸூர்யாதி சுடர்ப்பொருள்களென்ன. ஆகிய இவற்றை யெல்லாம் படைத்தவனே! என்று சொல்லி விளித்ததானது பின்னடிகளிற் சொல்லப்படுகிற பொருளுக்கு உபஷ்டம்பகமாகும்: இப்படியெல்லாம் விசித்ர ஸ்ருஷ்டிகளைப் பண்ணவல்லநீ, என்னுடைய ஹ்ருதயம் உன்னையநுபவித்து மகிழ்ச்சியை யுடையதாம்படி பண்ணவேணும்; என்னுடைய வாக்குவ்யவஹாரமும் அப்படியேயாகப் பண்ணவேணும்; என்னுடைய வியாபாரமும் உகப்போடு செய்யும் கைங்கரியமாக வேணும், என்று இப்படி நானுன்னை யநுபவிக்குமாறு வந்தருளவேணும்—என்றாராயிற்று.

உலோகம் அலோகம் என்கிற பதங்களுக்குப் பொருளுரைப்பதில் அபிப்ராய பேதமுண்டு: (உலோகம் என்றது லோகம் என்றபடி.) லோக மென்றது

வட சொல்; லோக்யதே இதி லோக:—காணப்படுகிற வஸ்து என்றபடி. கண் முதலிய உறுப்புக்களால் காணப்படுவன அசேதனப் பொருள்களாகையால் உலோகமென்று அசித்வஸ்துவாசகம். அலோகம்—நலோக்யத இதி அலோக:. முற்சொன்ன அசித்வஸ்துவை க்ரஹிக்கவல்ல உறுப்புக்களால் க்ரஹிக்கப்படாதே சாஸ்த்ர மொன்றினாலேயே க்ரஹிக்கப்படுமது, ஆத்மவஸ்து என்றபடி இங்ஙனே பொருள் கொள்வர் இருபத்தினாலாயிரத்திலும் முப்பத்தாறாயிரத்திலும். பன்னீராயிரப்படி யுரைகாரர், "உலோகம்—ஜ்ஞாநப்ரகாச யுக்தமான மநுஷ்யவர்க்கம்; அலோகம்—ப்ரகாச ரஹிதமான திர்யக்ஸ்தாவரங்கள். உலோகமலோகமென்று சேதநாசேதநங்களாகவுமாம்." என்றார். ... (௬)

வாராய் உன்திருப்பாதமலர்க்கீழ் *
பேராதேயான்வந்து அடையும்படி
தாராதாய்! * உன்னையென்னுள் வைப்பிலென்றும்
ஆராதாய்! * எனக்கென்றுமெக்காலே. (எ)

உன்	உன்னுடைய	உன்னை என்னுள் என்றும் வைப்பில்	உன்னை என்னுள்ளே எந்நாளும் வைத்து அநுபவித்தாலும்
திரு பாதம் மலர் கீழ்	திருவடித்தாமரைகளின் கீழ்	ஆராதாய்	தெவிட்டாதவனே!
பேராதே	விலகாமல்	எனக்கு	என் நண்ணெதிரே
யான் வந்து அடையும்படி	நான் வந்து சேரும்படியாக	என்றும் எக்கால்	எப்போதும்
தாராதாய்	அருள் புரியாதவனே!	வாராய்	வந்தருள வேணும்.

* * * வாராய் என்றபோதே வரக்காணாமையாலே வருந்தி, பின்னையும் அபிநிவேசத்தின் மிகுதியாலே, நான் சடக்கென வுன்னைக்கிட்டும்படி வாராயென்கிறார் "உன் திருப்பாதமலர்க்கீழ்ப் பேராதே யான்வந்து அடையும்படி தாராதாய்!" என்று எம்பெருமானை விளிக்கிறார்; நாராயணா! மாதவா! என்னுமாபோலே எம்பெருமானுக்கு இங்ஙனே ஒரு திருநாமம்போலும். * அஞ்சிறை மட நாராயில் "அருளாத நீர்" என்றதுபோலே. தேவரீருடைய அளவுகடந்த போக்யதையை யெனக்குக் காட்டிவைத்து தேவரீரை எனக்கு அநுபவிக்கத் தந்தருளாமலிருப்பது தகுதியோ? என்று கேட்பது விளியின் கருத்து. தந்தருளத் திருவுள்ளமில்லையாயின் நெஞ்சிலே பிரகாசித்துக் கொண்டிருக்குமிருப்பையாவது தவிர்த்துக் கொள்ளலாமே; அப்படியில்லாமே அகவாய் பெரியதிருநாளாய்ச் செல்லாநின்றதே யென்கிறார் உன்னை யென்னுள்வைப்பில் என்று மாராதாய்! என்று. ... ... (எ)

எக்காலத்தெந்தையாய் என்னுள்மன்னில் * மற்று
எக்காலத்திலும் யாதொன்றும்வேண்டேன் *
மிக்கார்வேதவிமலர் விழுங்கும் * என்
அக்காரக்கனியே! உன்னையானே. (அ)

மிக்கார்	சிறந்தவர்களான	என் உள்	எனது நெஞ்சிலே
வேதம் விமலர்	வேதம் வல்ல பரமை காந்திகள்	மன்னில்	பொருந்தியெழுந்தருளி யிருக்கப் பெறில்
விழுக்கும்	(அன்பு மிகுதியினால்) விழுங்கும்படியாகவுள்ள	மற்று யாது ஒன்றும்	வேறொரு பிரயோஜனத்தையும்
என் அக்காரக் கனியே	அக்காரக் கனிபோன்ற எம்பெருமானே !	உன்னை	உன்னிடத்தில்
		எக்காலத்திலும்	ஒருகாலும்
எக்காலத்து	எப்போதும்	யான் வேண்டேன்	நான் விரும்பவே மாட்டேன்.
எந்தை ஆய்	எனக்கு ஸ்வாமியாகி		

* * * எம்பெருமானோடு ஒரு க்ஷணகாலமாவது இப்போது சேரப் பெறுவானாயின் அது போதும்; மறுபடியும் சேரவேணுமென்கிற விருப்பங்கூட எனக்கு உண்டாகாது என்கிறார்; இதனால் தம்முடைய அபிநிவேசத்தின் மிகுதிகாட்டியவாறு. இப்பாட்டுக்கு இவ்வகையாகக் கருத்துக்கொள்ளுதல் ஆளவந்தாருடைய நிர்வாஹம். "மற்றெக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்" என்று மூலமுள்ளது. யாதொன்றும் என்பதில் இந்த ஸம்ச்லேஷத்தையும் சேர்த்து, இதையும் மறுபடியொருகாலும் வேண்டேனென்பதாக ஆளவந்தார் நிர்வஹித்தாராம். இதை எம்பெருமானார் கேட்டருளி, பொருள் அழகியதே; ஆனாலும் இவ்வாழ்வாருடைய பிரகிருதிக்குச் சேரப் பொருள்கூறுதல் பாங்காதலால் வேறுவகை கூறலாம்: பெறிலும் பெறுதொழியிலும் சிறுகக் கோலமாட்டார் இவர்; ஆகவே 'எக்காலத்திலும் மற்று யாதொன்றும் வேண்டேன்'—இந்த ஸம்ச்லேஷம் தவிர வேறொன்றையும் நான் வேண்டமாட்டேன்' என்று பொருள் கொள்ளுதல் பாங்கு என்றருளிச் செய்தாராம்.

ஸந்நிபாதஜ்வரத்திலே யிருந்தவர்கள் 'ஒருகால் நாக்கு நனைக்கத் துளி தண்ணீர் கிடைத்தால்போதும்' என்பர்கள்; அதுபோல ஆழ்வார் சொல்லுகிறாராக ஆளவந்தாருடைய நிர்வாஹத்தின் போக்கு.

அக்காரக் கனி = அக்காரமாவது வெல்லக்கட்டி; அதற்கு ஒரு கனியுண்டோவென்னில்; வெல்லக்கட்டியையே உபாதானமாகக் கொண்டு ஒரு வ்ருக்ஷம் முளைத்து அதில் பழம்பழுத்தால் அது எவ்வளவு இனிப்பாயிருக்குமோ அவ்வளவு போக்யதை மிக்கவன் என்றவாறு. அக்காரம் போலவும் கனி போலவும் போக்யபூதனே! என்று உம்மைத் தொகையாக வைத்தும் பொருள் கூறுவர். ... ... (அ)

யானேயென்னை அறியகிலாதே *
யானேயென்தனதே என்றிருந்தேன் *
யானேநீ என்னுடைமையும்நீயே *
வானேயேத்தும் எம்வானவரேறே (கூ)

வானே ஏத்தும்	விண்ணுலகம் முழுவதும் துதிக்குமாறு உள்ள
எம் வானவர் ஏறே	நித்யஸூரிநாதனான எம்பெருமானே!
யானே	நான்தானே
என்னை	என்னை
அறிய கிலாதே	அறியமாட்டாமல்
யானே என் தனதே என்று இருந்தேன்	அஹங்காரமமகாரங்கள் கொண்டிருந்தேன்;

(இப்போது அவைதவிர்ந்து நான் அநுஸந்திக்கும் வகை யாதெனில்;)

யானே நீ	யான் நீயே யென்னலாம்படி வேற்றுமையற்றிருப்பேன்;
என் உடைமையும் நீயே	எனது உடைமைகளும் நீயிட்ட வழக்காயிருக்கும். (என்பதே)

* * * தேவரீருக்கும் எனக்கும் ஸம்பந்தம் அநாதிஸித்தமாகவேயிருந்தும் அந்தோ! நெடுநாளாக அதனை மறந்து அஹங்காரமமகாரங்களால் பாழாய்ப் போனேனே! என்று இழந்தநாளைக்கு அநுதபிக்கிறார். பாசுரம் தொடங்கும் போதே யானே என்கிறார்; என்னாலே நான் கெட்டேன் என்கிறார். எம்பெருமான் என்னை வாரிப்பிடியாகப் பிடித்துக்கொள்ள எதிர் சூழல்புக்குத் திரியாநிற்க, நானே ஸ்வ விநாசத்தைச் சூழ்த்துக்கொண்டேனென்கிறார். [என்னையறிய கிலாதே] ராஜகுமாரன் வேடன் கையிலே அகப்பட்டுத் தன் உண்மைத்தன்மையை மறந்து வேடர் புதல்வனென்றே தன்னை நினைத்திருக்குமாபோலே நானும் ஸம்ஸாரஸாகர மத்யத்திலகப்பட்டு "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" என்கிற நிஜஸ்வரூபத்தை மறந்தேனென்கிறார்.

"நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறை சேர்மின்" என்று இப்போது சிலநாளாக ஸம்ஸாரிகளுக்கு உபதேசமும் செய்வேனும்படி திருந்தியிருக்கின்ற நான் அநாதிகாலம் அஹங்காரமமகாரங்களினால் மாய்ந்து போனேனே யென்கிறார் யானே யென்றனதே யென்றிருந்தேன் என்பதனால்.

'ஒழிந்தகாலம் ஒழியட்டும்; இப்போது எப்படியிருக்கிறீர்? சொல்லும்' என்று எம்பெருமான் கேட்க; யானே நீ யென்னுடைமையும் நீயே யென்கிறார். இதனால் அத்வைதம் சொல்லுகிறதன்று: நான் உனக்கு அடிமைப்பட்டவன்; எனக்கென்று தனியே ஒருபொருள் கிடையாது என்றபடி. .... (க.)

ஏறேலேழும்வென்று ஏர்கொளிலங்கையை *
நீறேசெய்த நெடுஞ்சுடர்ச்சோதி *
தேறேலென்னை உன்பொன்னடிச்சேர்த்தொல்லை *
வேறேபோக எஞ்ஞான்றும்விடலே. (௨0)

ஏறு ஏழும்	ஏழு காளைகளையும்
வென்று	வலி யடக்கினவனும்,
ஏர் கொள் இலங்கையை	அழகு நிரம்பிய லங்கா புரியை
நீறு செய்த	நீறாக்கினவனுமுள்ள
நெடு சுடர் சோதி	மஹா தேஜஸ்வியான பெருமானே !
என்னை தேறேல்	என்னை நம்பவேண்டா ;
உன் பொன் அடி	உன்னுடைய திருவடி களிலே
ஒல்லை	விரைவாக
சேர்த்து	(என்னைச்) சேர்த்துக் கொண்டு
வேறே போக	விஷயாந்தரங்களில் போகும்படி
எஞ்ஞான்றும் விடல்	ஒருநாளும் விடாதே.

* * * கீழ்ப்பாட்டில் ஆழ்வார் தாம் கீழ்நாட்களில் இருந்த இருப்பைக்கூறி இழவுக்கு மிகவும் அநுதபித்து, இப்போது நல்லபடியாக இருக்கிற இருப்பையும் பேசினார்: அது கேட்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! இழந்தனவைக்கு அநுதபிக் கின்ற உமக்குஇனி இழவுநேர ப்ரஸக்தியில்லையே; ஆகவே வாழ்ந்துவிட்டீரன்றோ? இனி நான் செய்யவேண்டுவது ஒன்றுமில்லையே' என்றருளிச்செய்ய, பிரானே! அப்படி ஸாதிக்கலாமோ? என்னை வைத்திருக்குமிடம் எது வென்று ஆராய வேண்டாவோ? இந்நிலத்திலே இருக்கின்ற என்னுடைய சித்தஸ்திதியை நம்ப லாகுமோ? என்னைத் திருவடிவாரத்தில் சேர்த்துக்கொண்டாலொழிய நான் நிர்ப்பரனாயிருக்க முடியாது - என்கிற கருத்தை இப்பாசுரத்தில் வெளியிடுகிறார்.

உன்னோடு அணைய ஆசைப்பட்டவர்களின் பிரதிபந்தகங்களைப் போக்குதல் உனக்கு அருமையன்று என்று காட்டவேண்டி இரண்டு சரிதைகளை யெடுத்துப் பேசுகிறார். ஏழேறு வென்ற வரலாறு: — க்ருஷ்ணாவதாரத்தில் எம்பெருமான் தன்மீது மிக்க காதல் கொண்டிருந்த நப்பின்னை யென்பவளை விவாஹம் செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி, ஒருவர்க்கு மடங் காத அஸுராவேசம் பெற்ற எழெருதுகளையும் எழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவினன் என்பதாம். (எழுதிருவுருக்கொள்ளவில்லை யென்பதும் சில புராணங்களின் கொள்கை.) ஏறு ஏல் ஏழும் என்ற விடத்து ஏல் அசை. ஏறு என்பதற்கு ஏல் என்பதை அடைமொழியாக்கி ஏன்று கொண்ட ஏறு என்றலுமொன்று. இது வாதிகேஸரியின் நிர்வாஹம். ஏன்று கொண்ட என்றது எதிரிட்டுவந்த என்றபடி.

தேறேல் என்னை = இப்போது நான் "யானேநீ யென்னுடைமையும் நீயே" என்றிருப்பதுபோலவே முற்றிலும் இருப்பேனென்று நம்பாதே என்ற குறிப்பு.

தேறேன் என்றும் ஒருபாடமுண்டென்பர்; அப்போது, தெளிவில்லாம லிருக்கின்ற வென்னை என்றும், (உன்னை விட்டுப்பிரிந்து) தரித்திருக்கமாட்டாத வென்னை என்றும் பொருளென்ப.

எஞ்ஞான்றும் வேறே போகவிடல்—உன் திருவடிகளின் ரேகைபோலவும் நிழல்போலவும் ஆக்கிவைக்கவேணுமென்றவாறு. விடல்-எதிர்மறை வினைமுற்று.

22

(௧௦)

விடலில்சக்கரத்து அண்ணலேமேவல் *
விடலில்வண்குருகூர்ச் சடகோபன்சொல் *
கெடலிலாயிரத்துள் இவைபத்தும் *
கெடலில்வீடுசெய்யும் கிளர்வார்க்கே. (௪௧)

விடல் இல்	விடுதலில்லாத	கெடல் இல்	அழிவற்ற [நித்யமான]
சக்கரத்து	திருவாழியையுடைய	ஆயிரத்துள்	ஆயிரம் பாடலுள்ளும்
அண்ணலே	எம்பெருமானே	இவை பத்தும்	இப்பதிகம்
மேவல் விடல் இல்	பொருந்துவது ஒருபோதும் விடாமலிருக்கப் பெற்ற	கிளர்வார்க்கு	தன்னை ஓதுமவர்களுக்கு
வண் குருகூர் சடகோபன்—;		கெடல் இல் வீடு செய்யும்	கெடுதல் ஒன்றுமில்லாத மோக்ஷானந்தத்தைப் பண்ணிக் கொடுக்கும்.
சொல்	அருளிச் செய்த		

* * * இத்திருவாய்மொழியை ஓதவே இதுதானே புருஷார்த்தத்தைப் பெறுவிக்கு மென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். கீழ்ப்பாட்டில் "என்னை என்ஞான்றும் விடல்" என்று வேண்டின ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நாம் விட்டுவிடுவோமோ என்கிற அதிசங்கை உமக்கு ஏன் உண்டாயிற்று? நாம் உம்போல்வாரைக் கைவிடுவதற்கா கையில் சக்கரப்படை தரித்திருப்பது? 'எப்போதும் கைகழலாநேமியான் நம்மேல் வினைகடிவான்' என்று அடியிலே நீர்தாமும் சொல்லியிருக்கிறீரே!' என்று கையில் திருவாழியாழ்வானைக் காட்டினான்; கண்டு "விடலில் சக்கரத்தண்ணலை மேவல்விடலில் வண்குருகூர்ச் சடகோபன்" என்கிறார்.

இவைபத்தும் என்பது எழுவாய். இத்திருவாய்மொழிதானே மோக்ஷமளிக்கும் என்கிறார். இப்பதிகமே மோக்ஷோபாயமென்றால் இது பொருந்துமோ? உபாயத்வமென்பது எம்பெருமானொருவனுக்கே உரியதென்று நாற்கொள்கையல்லவா? என்று சிலர் சங்கிப்பர்கள். இப்பதிகமே மோக்ஷமளிக்குமென்றால் இது ஸாக்ஷாத்தாக உபாயம் என்று சொன்னபடியன்று. இப்பதிகத்தை அநுஸந்திக்கவே எம்பெருமான் திருவுள்ளத்தில் மிக்க உவப்பு உண்டாகி அதனால் அவன் மோக்ஷமளிக்கலாகும் என்று தெரிவித்தபடி. புருஷகாரக்ருத்யம் பண்ணி எம்பெருமானை உகப்பித்து அவன் வழியாகப்பேறுபெறுவிக்கின்ற பிராட்டி விஷயமாக "வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே" என்றருளிச்செய்திருப்பதும் இவ்வழியாலே பொருந்தும். இனி இதன் விரிவை நம்முடைய ஸதாசார்ய ஸூக்திரக்ஷா என்கிற நூலிற் காண்க. (௧௧)

ஒன்பதாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ராமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ.

ஶ்ரத்தேயஸ்வாங்க்ரியோகம் ஶுபமதிகரதம் ஸ்தோத்ரஸாமர்த்யஹேதும்
ஸ்வார்தீகாரோபகாரம் ஸ்ம்ருதிரஸஶமிதாந்யாதரம் ப்ரீதிவஶ்யம் ।
ப்ராப்தௌ காலாக்ஷமத்வப்ரதமம்ருதரஸத்யாநமாத்மார்பணார்ஹம்
[illegible] தவரிவரணம் வகுவாணீம் ஜகாத॥

1. ச்ரத்தேயஸ்வாங்க்ரி யோகம்.— * நின் செம்மாபாதபற்புத் தலைசேர்த்தொல்லை. * தன் திருவடிகளின் சேர்த்தியை ப்ரார்த்திக்கவேண்டியிருப்பவன்.

2. சுபமதிகரதம்.— * ஞானக் கை தா. * தன் திருவடிகளை யடைவதற்கேற்ற ஞானமாகிற கையைக் கொடுக்குமவன்.

3. ஸ்தோத்ர ஸாமர்த்ய ஹேதும்.— * நின்கழல் எய்யாது ஏத்த வருள்செய்யெனக்கே. * தன்னையே எக்காலத்திலும் துதிக்குமாறு ஸாமர்த்தியத்தை யளிப்பவன்.

4. ஸ்வார்த்தீகாரோபகாரம்— * தனக்கேயாக எனைக்கொள்ளு மீதே. * தனக்காக்கிக் கொள்ளுதலாகிற உபகாரத்தைச் செய்தருள்பவன்.

5. ஸ்ம்ருதிரஸசமிதாந்யாதரம்.— * மறப்பொன்றின்றி யென்றும் மகிழ்வேன். * தன் திறத்தில் ஸ்மரணத்தினால் இதர விஷயங்களில் விருப்பத்தைப் போக்கியருள்பவன்.

6. ப்ரீதிவச்யம்.— * என்றும் மகிழ்வுற்று உன்னை வணங்கவாராய். * தன் திறத்தில் அன்புடையார்க்கு வசப்பட்டிருப்பவன்.

7. ப்ராப்தௌ காலாக்ஷமத்வப்ரதம்— * வாராய் உன் திருப்பாதமலர்க்கீழ் பேராதேயான் வந்தடையும்படி * தன்னையடைவதில் விளம்பம் பொறுத்திருக்க வொண்ணாதபடி செய்பவனென்று கருத்து.

8. அம்ருதரஸத்யாநம்.— * வேதவிமலர்விழுங்கும் என்னக்காரக்கனி. * அம்ருதரஸமயமான த்யானத்திற்கு இலக்காகுமவன் என்றவாறு.

9. ஆத்ம அர்ப்பணார்ஹம்— * யானே நீ என்னுடைமையும் நீயே. * ஆத்மாத்மீய பரங்களை ஸமர்ப்பிப்பதற்கு உரியன்.

10. வைமுக்யாத் வாரயந்தம்.— * "என்னையுன் பொன்னடிச் சேர்த்தொல்லே, வேறேபோக எஞ்ஞான்றும் விடலே." ஆச்ரிதர்கள் ஒருகாலும் விமுகராய்ப் போகாதபடி அவர்களை ஆதரிக்குமவன்.

11. சக்ரபாணிம்.— * விடலில் சக்கரத்தண்ணல். * கையுந் திருவாழியுமாக இருக்குமவன். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை ஆழ்வார் ஒன்பதாந் திருவாய்மொழியில் [வ்ருதபரிசரணம் ஜகாத] கைங்கரியத்திற்கு உத்தேச்யனாக அருளிச்செய்தார். ... ... (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

மோக்ஷாத³ரம் ஸமவேக்ஷ்ய முநேர்முகுந்தே
மோக்ஷம் ப்ரதா³துமவஸ்ய க்ஷமயம் ப்ரவ்ருத்தே ।
ஆசஷ்ட ஸ்வ பத³கிங்கரதைகரஸ்யம்
மோக்ஷாஸ்பத³த்வம் நவமே நிரணாயி தேந ॥

(கருத்து) ஆழ்வார்க்கு மோக்ஷத்தில் விருப்பமிருக்கிறபடியைக் கண்டறிந்த எம்பெருமான் இவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவோமென்றெண்ணிப் பரமபுருஷார்த்தமான அந்த மோக்ஷத்தைத் தந்தருள முயன்றிருக்குமளவில், ஆழ்வார் அப்பெருமானது திருவடித்தாமரைகளை விட்டுப் பிரியாதிருப்பதுவே தமக்கு அபிமதமான மோக்ஷமென்பதை ஒன்பதாந் திருவாய்மொழியில் அறுதியிட்டாரென்கிறது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

எம்மாவீடும் வேண்டா என்றனக்குன் தாளிணையே
அம்மா அமையுமென வாய்ந்துரைத்த — நம்முடைய
வாழ்முதலாம் மாறன் மலர்த்தா ளிணைசூடிக்
கீழ்மையற்று நெஞ்சே கிளர்.

அம்மா	'எம்பெருமானே!,	நம்முடைய வாழ்முதல் ஆம்	நம்முடைய வாழ்ச்சிக்குக் காரணபூதருமான ஆழ்வாருடைய
எம் மா வீடும் வேண்டா	எப்படிப்பட்ட சிறந்த மோக்ஷமும் வேண்டா;	மலர் தாள் இணை	உபய பாதாரவிந்தங்களை
என் தனக்கு	அடியேனுக்கு	சூடி	சிரஸா வஹித்து
உன் தாள் இணையே	உன்னுடைய உபய பாதங்களே	கீழ்மை அற்று	அதம புருஷார்த்தங்களில் விருப்பமற்று
அமையும்	போதும்'	நெஞ்சே	மனமே!
என	என்று	கிளர்	மேன்மேலும் மகிழ்வாயாக.
ஆய்ந்து உரைத்த	ஆராய்ந்து அருளிச் செய்தவரும்		

* * * எம்பெருமானே! உன்னுடைய திருவடித் தாமரைகள் எப்போதும் என்னுடைய சென்னியை விட்டுப் போகாதபடி யிருக்கப்பெறுமாகில் அதுவே யெனக்குப் பரம புருஷார்த்தம். வேறு எப்படிப்பட்ட மோக்ஷமும் எனக்கு வேண்டா என்று நிஷ்கர்ஷித்து அருளிச் செய்தவரும், நம்முடைய உஜ்ஜீவனத்திற்காகவே திருவவதரித்தவருமான ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம்; அந்தத் திருவடிகளின்கீழ் நாம் வாழப்பெறுவோமாகில் நமக்கு யாதொரு குறையுமிராது என்றாயிற்று. ... ... (கக)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து — பத்தாந் திருவாய்மொழி

கிளரொளியிளமை.

அவதாரிகை :—கீழ்த்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட பேற்றைப் பெறுதற்குத் திருமாலிருஞ் சோலைமலையை ஆச்ரயிக்கிறார் என்று எம்பெருமானார்க்கு முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும்படி : எம்பெருமானார் அதை இன்னமும் இனிமைப்படுத்தி யருளிச்செய்வர். அதாவது — கீழ்த்திருவாய்மொழியில் ‘ ஒல்லை, ஒல்லை ’ என்றும் ‘ காலக்கழிவு செய்யேல் ’ என்றும் பகவத்கைங்கரியத்திலே தமக்குண்டான பதற்றத்தை ஆழ்வார் வெளியிட, அதுகண்ட எம்பெருமான் ‘ ஆழ்வார் இப்படிப் பதறுவது இந்த சரீரத்தோடேயே கைங்கரியம் செய்யவேணுமென்கிற விருப்பத்தாலேபோலும்' என்றெண்ணி, இவர்க்கு நாம் நினைத்தபடி பரிமாறுகைக்கு ஏகாந்தமான ஸ்தலம் ஏதோவென்று இந்நிலவுலகத்தில் கடாக்ஷித்துவருகையில் * வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலையைக் கண்டு இது சாலவும் பாங்கான இடமாயிராநின்றது என்று திருவுள்ளம் பற்றி அங்கே ஸந்நிதி பண்ணியருளி, ‘ ஆழ்வீர் ! நாம் உமக்கு முகந்தருகைக்காக வந்துநின்றோம் ; நீர் இங்கேவந்து நினைத்தபடியெல்லாம் பரிமாறி யநுபவிக்கலாம் ’ என்று தெற்குத்திருமலையிலே தானிருக்கிறபடியைக் காட்டிக் கொடுக்க, ஆழ்வாரும் அதை அநுஸந்தித்து ‘ எம்பெருமான் நமக்கு உபேயனானால் அவன் எழுந்தருளியிருக்குமிடமும் நமக்கு உபேயந்தானே ; ஆகவே, திருமலையோடு அதனோடு சேர்ந்ததொரு மலையோடு திருப்பதியோடு போம்வழியோடு, போவோமென்கிற அத்யவஸாயத்தோடு வாசிபற எல்லாம் நமக்கு ப்ராப்யமே ’ என்று கொண்டு அநுபவித்து இனியராகிறார்—என்பதாக.

கிளரொளியிளமை கெடுவதன்முன்னம் *
வளரொளிமாயோன் மருவியகோயில் *
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை *
தளர்விலராகிச் சார்வதுசதிரே. (க)

கிளர் ஒளி	மேன்மேலுங் கொழுந்து விட்டுக் கிளர்கின்ற ஞானவொளியையுடைய	கெடுவதன் முன்னம்	அழிவதற்குள்ளே.
இளமை	இளம்பிராயம்	வளர் ஒளி	குன்றாத தேஜஸ்ஸை யுடையனை

மாயோன்	எம்பெருமான்	மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலை மலையை
மருவிய	நித்யஸந்நிதானம் பண்ணியிருக்கிற	தளர்வு இலர் ஆகி	தளர்ச்சி யில்லாதவ ராகி
கோயில்	ஆலயமாய்,	சார்வதே	அடைவதுதான்
வளர் இள பொழில் சூழ்	வளர்கின்ற இளஞ்சோலை களால் சூழப்பட்டதான	சதிர்	ஸ்வரூபாநுரூபம்.

* * * திருமாலிருஞ் சோலைமலையைச் சென்று சேர்வதே இவ்வாத்மாவுக்குப் பரம புருஷார்த்த மென்கிறார். "தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா—தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா." என்று—நன்மைகளைப் பெறுதற்கு இளம் பிராயத்திலேயே முயலவேண்டுமென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகையாலே இளமை கெடுவதற்கு முன்னமே நன்மையை ஸம்பாதித்துக்கொள்ளப் பாருங்களென்கிறார். "வாள்களாகி நாள்கள் செல்ல நோய்மைகுன்றி மூப்பெய்திமாளும் நாள்" என்று திருமழிசைப்பிரான் அருளிச் செய்கிறபடி அந்தகாலம் வந்துவிட்டால் திருமலையை நினைக்கவும் நேராதாதலால், கிளரொளி யிளமை கெடுவதன்முன்னம் திருமாலிருஞ் சோலையைச் சார்வது சதிர் என்கிறார்.

புத்தி கொழுந்துவிட்டுச் செல்லுவது இளம் பிராயத்திலேயாதலால் கிளரொளி யிளமை எனப்பட்டது. விஷயாந்தர ப்ராவண்யம் விளைவதற்கு முன்னே என்றவாறு.

வளரொளி மாயோன் = எம்பெருமானுடைய ஒளி மழுங்குதலும் வளர்தலுமின்றியே எப்போதும் ஒரு படிப்பட்டே யிருக்குமன்றோ ; இங்கு வளரொளி என்றது ஏன் ? வளர்தல் உண்டானால் குறைதலும் ஒரு காலத்தில் உண்டாகித் தீருமே என்று சிலர் சங்கிப்பர். அது வேண்டா ; எம்பெருமான் * ஸதா ஏகரூப ரூபன் என்பதில் தட்டில்லை. அப்படிப்பட்ட எம்பெருமான் திருமலையிலே நித்ய ஸந்நிதி பண்ணியிருக்குமிருப்பிலே அந்த திவ்ய தேசத்தின் வாய்ப்பினால் ஒளி மேன்மேலும் வளரப் பெறுகின்றானென்று சொல்லுகிறவிது திருமலைக்கு அதிசயோக்தி யென்பர்.

வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை யென்பதைக் கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் அப்படியே மொழிபெயர்த்தருளியிருக்கின்றார்—"வர்த்திஷ்ணுபாலத்ருமஷண்டமண்டிதம் வநாசலம்" என்று. திருமாலிருஞ்சோலை—நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பாண்டிநாட்டுத் திருப்பதி பதினெட்டில் ஒன்றும், வநகிரி என்று வட மொழியிற் கூறப்படுவதும், "கோயில் திருமலை பெருமாள் கோயில் அழகர் திருமலை" என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகிற நான்கு திருப்பதிகளுள் ஒன்றும், "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலை யென்னும் பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்" என்றபடி ஆன்றோர் கொண்டாடப் பெற்ற பெருமை யுடை

யதுமானதொரு உ[illegible]தேசம், "ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே" என்றபடி மிகப் பெ[illegible] சோலைகளையுடைய மலையாதலால் 'மாலிருஞ்சோலைமலை' என்று திருநாமமாயிற்று. மால்—பெருமை; இருமை—பெருமை. இவ்விரண்டும் தொடர்ந்து ஒரு பொருட் பன்மொழியாய் நின்றன. மால் என்று உயர்ச்சியாய், இருமை என்று பரப்பைச் சொல்லிற்றாய், உயர்ந்துபரந்த சோலைகளையுடைய மலை யென்றலு முண்டு. ... ... (க)

சதிரிளமடவார் தாழ்ச்சியைமதியாது *
அதிர்குரல்சங்கத்து அழகர்தம்கோயில் *
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை *
பதியதுவேத்தி எழுவதுபயனே. (உ)

சதிர்	அழகு பொருந்திய	அழகர் தம் கோயில்	அழகருடைய ஆலயமாய்,
இள மடவார்	இளம் பருவத்துப் பெண்களிடத்து	மதி தவழ் குடுமி	சந்திரன் உலாவப்பெற்ற சிகரத்தை யுடைத்தான
தாழ்ச்சியை	ஆழங்காற்படுவதை		மாலிருஞ்சோலை;—(என்கிற)
மதியாது	ஒரு பொருளாக நினையாமல்,	பதி அது	அந்தத் திருப்பதியை
அதிர் குரல் சங்கத்து	முழங்குகின்ற ஓசையையுடைய சங்கு ஒலிக்கப்பெற்ற	ஏத்தி	துதித்து
		எழுவதே	உய்வதே
		பயன்	புருஷார்த்தம்.

• • • நமக்கு ப்ராப்யபூதன் எம்பெருமான் எனினும், அவனோடு ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ ஸம்பந்தமுடைய பொருள்களையும் ப்ராப்யங்களாகவே கொள்வதுண்டு. மோக்ஷத்திற்கு எம்பெருமானொருவனே உபாயம் என்று ஸித்தாந்தமாயிருக்கச் செய்தேயும், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆசாரியர்கள் பிராட்டி முதலானாரிடத்திலும், தேசவாஸம் திருநாம ஸங்கீர்த்தநம் முதலான செயல்களிடத்திலும் உபாயத்வ வ்யவஹாரம் பண்ணுகிறப்போலே, திருமலை முதலானவற்றிலும் உபேயத்வ வ்யவஹாரம் பண்ணக் குறையில்லை; ஆதலால் எம்பெருமானைவிட்டு அவனுடைய திருப்பதியாகிய திருமலையே உபேயம் என்று இத்திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச் செய்வது கூடுமென்க.

சதிரிள மடவார் தாழ்ச்சியை என்றதற்கு இருவகையாகப் பொருள். மடவார்கள் உங்களிடத்தில் செய்கிற தாழ்ச்சியை என்றும், மடவார் திறத்தில் நீங்கள் செய்கிற தாழ்ச்சியை என்றும் கொள்க. தாழ்ச்சியாவது தாழ்வான செயல்கள். அதிர்குரல் சங்கத்து என்பது அழகர்க்கு விசேஷணமாகவே ஸகல வியாக்கியானங்களிலுமுள்ளது. ஆனால், ஸுந்தரபாஹுஸ்தவத்தில் ஆழ்வான் "விஷ்ரிதவஸவமொகவஸ்விஹ்ரம்வஹுஸம்வரவம் — வநமரி" என்று அருளிச் செய்திருப்பதை நோக்குங்கால், 'அதிர்குரல் சங்கத்து' என்பது அழகர் கோயிலுக்கு விசேஷணமாகக் கொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது.

சங்கின் ஒலி அதிர்கின்ற திருமலை என்றபடி. மேற்குறித்த ஆழ்வான் ஸ்ரீஸூக்தியை வாகிரிக்கு விசேஷணமாக்காமல் அதற்குப்பிறகு உள்ள ஹரிம் என்பதற்கே விசேஷணமாக்கிவிடலா மென்பாருமுளர்.

மதிதவழ்குடுமி என்றதையும் ஆழ்வான் அந்த ச்லோகத்திலேயே "பபாயுபரிமிம்வெணாஊலுஙிவபு—சசதாரிங்கணுட்யசிகம்" என்று மொழி பெயர்த்திருக்கின்றமை காண்க.

மாலிருஞ் சோலைப்பதி = மாலிருஞ் சோலையாகிற பதி என்றும், மாலிருஞ் சோலையிலுள்ள பகவந்மந்திரம் என்றும் கொள்ளலாம். ... ... (உ)

பயனல்லசெய்து பயனில்லைநெஞ்சே *
புயல்மழைவண்ணர் புரிந்துறைகோயில் *
மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலை *
அயல்மலையடைவது அதுகருமமே. (௩)

நெஞ்சே	மனமே!,	மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையிலுடைய
புயல் மழை வண்ணர்	வர்ஷாகாலத்து மேகம் போன்ற திருநிறத்தையுடைய பெருமான்	அயல்	அருகிலுள்ள
புரிந்து	விரும்பி	மலை	மலையை
உறை	நித்யவாஸம் செய்கிற	அடைவது அது	அடைவதும்
கோயில்	ஸந்நிதியாய்,	கருமமே	உத்தேச்யந்தான்;
மயல் மிகு பொழில் சூழ்	(கண்டவர்களை) மயக்குகிற சக்தியிருந்த சோலைகளால் சூழப்பட்ட	பயன் அல்ல செய்து	நிஷ்பலமான காரியங்களைச் செய்வதனால்
		பயன் இல்லை	லாபமில்லை.

* * * திருமலையைத் தொழவேணுமென்பதுகூட அவசியமன்று; திருமலையோடு ஸம்பந்தமுள்ள [அதன் அருகிலுள்ளதான] ஒரு மலையைத் தொழுதாலும் போதும் என்கிறது இப்பாட்டு.

பரமபதத்திலிருக்கிற இருப்பையும் மற்றுமுள்ள அவதாரங்களையும் இச்சிப்பதனால் பயனொன்று மில்லையென்பது முதலடியின் உட்கருத்து. பயனல்ல என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. நிஷ்ப்பலமானவற்றை என்றபடி. ஸ்வர்க்கம் முதலிய பலன்களை விரும்பி அவற்றிற்கு ஸாதகமாகச் சில யஜ்ஞயாகங்களைச் செய்துகொண்டு போதுபோக்குவது நிஷ்ப்பலமாதலால் அது வேண்டா என்கிறது முதலடியால்-என்னவுமாம்.

புயல்மழைவண்ணர் = கார்காலத்துக் காளமேகம்போலே தன் வடிவழகை ஸர்வஸ்வதானஞ் செய்து கொண்டு எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற ஸந்நிதியையும், அதற்கு ஆச்ரயமாயிருக்கிற திருமலையையும்விட்டு, அம்மலையோடு ஸம்

பந்தத்தையே நிரூபகமாகக் கொண்டிருக்கிற பக்கத்து மலையை அடையப் பெற்றாலும் போதுமே நமக்கு என்றாராயிற்று.

மயல்மிகுபொழில்சூழ் என்றதை ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் “திமிரநிஹ ஶ்ரஹதருஷண்டமயம் ஊடி—திமிரபிப்ரூத தருஷண்டமயம் ப்ரமதம்” என மொழிபெயர்த்தருளினர். ... ... (ரு)

கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே *
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில் *
வருமழைதவழும் மாலிருஞ்சோலை *
திருமலையதுவே அடைவதுதிறமே. (௬)

கருமம்	கருமங்களாகிற	கோயில்	ஸந்நிதியாய்,
வன் பாசம்	வலிய பாசங்களை	வரு மழை தவழும்	மழை பெய்யவருகிற மேகங்கள் தவழ்கின்ற
கழித்து	கழற்றி	மாலிருஞ் சோலை திருமலை அதுவே—;	
உழன்று	அடிமை செய்து திரிந்து	அடைவது	சேர்வது
உய்யவே	உஜ்ஜீவிக்கும்பொருட்டே	திறம்	உசிதம்.
பெரு மலை எடுத்தான் பீடு உறை	கோவர்த்தநோத்தரணம் செய்தருளினவனை எம்பெருமான் தனது பெருமை யெல்லாம் விளங்க நித்யவாஸம் பண்ணுமிடமான		

* * * ஒருவர்க்கும் எளிதில் கழித்துக்கொள்ள முடியாத கரும பந்தங்களைக் கழிப்பதற்கும், அவை கழிந்து அடிமை செய்து வாழுகைக்குமாகவே எம்பெருமான் ஸந்நிதி பண்ணியிருக்கிற திருமலையை யடைவதே தகுதியென்கிறார். முதலடியில் உய்ய என்கிற வினையெச்சம் (இரண்டாமடியில்) உறை என்ற வினையைக் கொண்டு முடியும்.

பெருமலை யெடுத்த வரலாறு :—திருவாய்ப்பாடியில் ஆயர்கள் வழக்கப்படி இந்திர பூஜைக்கென்று சமைத்த சோறு முதலியவற்றை யடங்கலும் கண்ணபிரான் அவ்விந்திரனுக்கு இடவொட்டாமல் கோவர்த்தனமலைக்கு இடுவித்துப் பின்பு தானே ஒரு தேவதாரூபங் கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்துவிட, பிறகு இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவி ஏழுநாள் விடாமழை பெய்விக்க, கண்ணபிரான் அக் கோவர்த்தன கிரியைக் குடையாகத் தூக்கிக் கோக்களையும் கோவலரையும் காத்தருளினனென்பதாம்.

பீடுறை — பீடு தோற்ற உறையுமிடம்; பீடுடனே உறையுமிடம் என விரிக்க : பீடு—பெருமேன்மை.

வருமழைதவழும் = இங்கு 'மழைதவழும்' என்பதே போதுமாயிருக்க, வரு என்று அடைமொழி கொடுத்த ஸ்வாரஸ்யத்தை நம்பிள்ளை காட்டியருளுகிறார் காண்மின்—"ஊருக்கு இரண்டாயிற்று மழை; நின்றவிடத்திலே நின்று வர்ஷிப்பதொரு மேகமும், போவது வருவதாயிருப்பதொரு மேகமும்" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. ... ... (௫)

திறமுடைவலத்தால் தீவினைபெருக்காது *
அறமுயலாழிப் படையவன்கோயில் *
மறுவில்வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை *
புறமலைசாரப் போவதுகிறியே (௬)

திறம் உடை	பலவகைப்பட்ட	வண் சுனை சூழ்	வளமான சுனைகளால் சூழப்பட்ட
வலத்தால்	வலிமையைக் கொண்டு	மாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையினுடைய
தீ வினை	பாவங்களை	புறம் மலை	பக்கத்திலுள்ளதொரு மலையை
பெருக்காது	மிகையாகச் செய்யாமல்,	சார	கிட்டுமாறு
அறம் முயல் ஆழி படைய வன் கோயில்	ஆச்ரித ரக்ஷண தருமத்திலே முயல்கின்ற திருவாழியை ஆயுதமாகவுடைய பெருமானது கோயிலாய்,	போவது	போவதானது
மறு இல்	அழுக்கற்ற	கிறி	நல்ல உபாயம்.

* * * கீழ் மூன்றாம் பாட்டில் "மாலிருஞ்சோலை யயன்மலை யடைவது அது கருமமே" என்று திருமலையோடு ஸம்பந்தமுடைய பிறிதொரு மலையை யடைந்தாலும் போதுமென்றார்; அடைய வேணுமென்கிற அவ்வளவும் வேண்டா; அந்தப் புறமலைதன்னை யடைய வேணுமென்று எண்ணங்கொண்டு யாத்திரை புறப்படுவதுதானே போது மென்கிறாரிதில்.—நமக்குள்ள தேஹ பலத்தைக் கொண்டு மேன்மேலும் பாவங்களைக் கூடுபூரித்துக்கொள்வது தகுதியன்று; திருமலை யாத்திரையிலே அந்த தேஹபலத்தை உபயோகப்படுத்துவது நன்று என்பது இப்பாட்டின் முழுநோக்கு.

அறமுயலாழிப்படையவன் = அறம் முயல் என்றும், அற முயல் என்றும் பிரிக்கலாம். அறமாவது தருமம். எம்பெருமானுடைய தருமமாவது சரணாகத ரக்ஷணமே யென்பது ஸ்ரீராமாயணாதிகளில் ப்ரஸித்தம்: "விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:" இத்யாதிகள் காண்க. "பாது ப்ரணத ரக்ஷாயாம் விலம்ப மஸஹந்நிவ-ஸதா பஞ்சாயுதீம் பிப்ரத் ஸ ந: ஸ்ரீரங்கநாயக:" என்ற பட்டர் ஸ்ரீஸூக்தி இங்கு அநுஸந்திக்க வுரியது. அற என்று பிரிக்கும்போது மிகவும் என்றபடி. ஆச்ரித ரக்ஷணத்தில் என்பது இப்போது அர்த்தாத் ஸித்தமாகவேணும்.

மறுவில்வண்சுனைசூழ் = பாசி சேறு முதலிய களங்கமில்லாத சுனைகள் என்றபடி. கிறி—சிறந்த வுபாயம். .... (௬)

சிறியெனநினைமின் கீழ்மைசெய்யாதே *
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில் *
மறியொடுபிணைசேர் மாலிருஞ்சோலை *
நெறிபடவதுவே நினைவதுநலமே.

(௬)

கீழ்மை செய்யாதே	இழிவான செயல்களைச் செய்யாமல்
சிறி என	(இப்போது நான் சொல்லுகிறதை) நல்ல வுபாய மென்று
நினைமின்	நினையுங்கோள் :
	(அது யாதெனில்)
உறி அமர்	உறிகளிலே அமைத்து வைத்த
வெண்ணெய்	வெண்ணெயை
உண்டவன்	அமுது செய்த கண்ண பிரானுடைய
கோயில்	ஆலயமாய்
மறியொடு பிணை சேர்	தம் குட்டிகளோடுகூட மான் பேடைகள் சேர்ந்து வாழப்பெற்ற
மாலிருஞ் சோலை	திருமலையினுடைய
நெறி	வழியிலே
பட	செல்லவேணுமென்கிற
அதுவே	அந்த நினைவு ஒன்றையே
நினைவது	நினைப்பது
நலம்	நல்லது.

* * * திருமலைக்குப் போகிற மார்க்கமுண்டே, அதனைச் சிந்திப்பது தானும் போதுமென்கிறார். ஸ்ரீக்ருஷ்ணனாகத் திருவவதரித்துத் தன்னுடைய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணாதிசயங்களைக் காட்டியருளின பெருமான்தானே பிற்பட்டவர்களும் இழவாமைக்காக இப்போது திருமலையில் நித்யஸந்நிதி பண்ணியிராநின்றானென்பது இரண்டாமடியின் கருத்து.

விஷயாந்தர ப்ராவண்யத்திலே நெஞ்சைச் செலுத்தாமல் திருமாலிருஞ்சோலை யாத்திரை வழியிலே நெஞ்சைச் செலுத்துங்கோள் என்றாராயிற்று.

திருமலைக்கு மறியோடு பிணைசேர் என்ற அடைமொழி கொடுத்தது ஸாபிப்ராயம்; அங்குக் குட்டியுந் தாயும் பிரியாதிருத்தல்போல, நாமும் * தாயுந் தந்தையுமாயிவ்வுலகினில் வாயுமீசனைப் பிரியாதிருத்தல் நன்று என்று காட்டியவாறு.

ஈற்றடியில் நெறிபட என்பதை ஒரு முழுச் சொல்லாகக் கொண்டு ‘ நன்ருக ’ என்றும் கொள்வர் : திருமாலிருஞ் சோலையை நன்ருகச் சிந்திப்பது நலம் என்றவாறு. ... ... (௬)

நலமெனநினைமின் நரகழுந்தாதே *
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில் *
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை *
வலமுறையெய்தி மருவுதல்வலமே.

(௭)

நரகு அழுந்தாதே	நரகத்தில் அழுந்த நினையாமல்	நீடு உறை கோயில்	நித்யவாஸம் பண்ணுகிற ஸந்நிதியாய்,
நலம் என நினைமின்	(இவ்வுபதேசத்தை) நன்மை யென்று நெஞ்சிற் கொள்ளுங்கள்; (அதாவது)	மலம் அறு மதி சேர்	களங்கமற்ற சந்திரன் சேருமிடமான
முனம்	முற்காலத்தில்	மாலிருஞ் சோலை	திருமலையை
நிலம்	பூமியை	வலம் முறை எய்தி	அநுகூலமான முறையிலே கிட்டி
இடந்தான்	வராஹ ரூபியாகி இடந்தெடுத்துவந்த பெருமான்	மருவுதலே	பொருந்துவதே
		வலம்	உறுதியானது.

* * * இதில் "நரகழுந்தாதே" என்றது திருமாலிருஞ் சோலையை ஸேவிக்காவிடில் நரகலோகம் வந்துவிடும் எனப் பொருள்படுவதன்று. இராமபிரான் காட்டுக்குப் புறப்படும்போது தன்னையும் உடனழைத்துச் செல்லவேணுமென்று பிரார்த்திக்கின்ற இளைய பெருமாள் "[illegible] — யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நிரயோ யஸ் த்வயா விநா" என்றார். எம்பெருமானோடு கூடியிருப்பது சுவர்க்கம்; அவனைப் பிரிந்திருப்பது நரகம் என்பது பக்தர்களின் ஸித்தாந்தமாதலால் இங்கு நரகழுந்தாதே யென்றது எம்பெருமானைப் பிரிந்திருக்கையன்றிக்கே என்றபடி.

நிலமிடந்த வரலாறு :—ஹிரண்யகசிபுவின் உடன்பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னும் கொடிய அஸுரராஜன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹா வராஹரூபமாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக்கண்டு பொருது கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினுற்குத்தி அங்குநின்று எடுத்துக் கொண்டுவந்து பழையபடி விரித்தருளினனென்பதாம்.

மலமறுமதிசேர் என்றதற்கு இரண்டு வகையான நிர்வாஹமுண்டு: * மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை யாகையாலே திருமலை சந்திரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கையாலே சந்திரன் போகும்போது சிகரங்களிலே தேய்ப்புண்டு சாணையிலிட்டாற்போலே களங்கமற்றிருக்கும்படியைச் சொல்லுகிறதென்று ஒரு நிர்வாஹம். (மதி—சந்திரன்.) இனி, வடமொழியாகக் கொண்டால் மதியென்று புத்திக்குப் பெயர்; நிர்மலமான புத்தியை (பக்தர்கட்கு)ச் சேர்விக்கின்ற திருமலை என்பது பிள்ளானுடைய நிர்வாஹம். புத்திக்கு மலமாவது— ஸந்தேஹம், ப்ரமம், மறப்பு முதலியனவாம். திருமலையைத் தொழுவார்க்கு மயர்வற்ற மதியுண்டாகு மென்றபடி.

மலமறுமதிசேர் என்பதற்கு மற்றொரு வகையாகவும் பொருள் கூறலாம்: ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில்—"[illegible]

ஶாகாம்ருகா நிரீக்ஷ்ய ஹரஶேகரீபவந்தம் ஆம்ருஶந்தஸ்ததஸ் ஸ்ப்ருஶந்தி ந ஹி தேவதாந்தரஸமாச்ரிதேதி ஸ்புடம்—யதீயசிகராகதாம் சசிகலாம் து சாகாம்ருகா: நிரீக்ஷ்ய ஹரசேகரீபவநம் ஆம்ருசந்தஸ் தத:, ஸ்ப்ருசந்தி ந ஹி தேவதாந்தரஸமாச்ரிதேதி ஸ்புடம்" என்கிறார். திருமலையினுச்சியில் உள்ள குரங்குகள் அங்கே சந்திரன் கையால் எட்டிப்பிடிக்கக் கூடியவனாக இருந்தும் அவன் ருத்ரசிரஸ் ஸம்பந்தமாகிற தோஷம் படைத்தவனென்பது பற்றி அவனைத் தொடுவது மில்லையென்று ஒரு அதிசயோக்தி கூறினாராகிறார். அப்படிப்பட்ட தோஷத்தைச் சந்திரன் போக்கிக் கொள்வதற்காக வந்து சேருமிடமான திருமலை—என்னலாம்.

வலமுறையெய்தி—" அநுகூலமான முறையிலே கிட்டி" என்பது ஈடு. முறை வலம் எய்தி' என மாற்றி, "சேஷசேஷிபாவமாகிற முறைப்பாடுள்ள ஆநுகூல்யத்தைப் பெற்று" என்றுரைத்தார் வாதிகேஸரி.

வலம்—பலம் என்ற வடசொல் திரிபு; வாமம் என்ற வடசொல் திரிபு என்னவுமாம். ... ... (எ)

வலஞ்செய்துவைகல் வலங்கழியாதே *
வலஞ்செய்யும் ஆயமாயவன்கோயில் *
வலஞ்செய்யும்வானோர் மாலிருஞ்சோலை *
வலஞ்செய்துநாளும் மருவுதல் வழக்கே. (அ)

வலம் செய்து	(கரணங்களுக்கு)வலிமை யுண்டாக்கிக் கொண்டு	வானோர் வலம் செய்யும்	நித்யஸூரிகளும் வந்து பிரதக்ஷிணம் செய்யுமிடமான
வைகல்	எப்போதும்	மாலிருஞ்சோலை	திருமலை விஷயத்தில்
வலம் கழியாதே	அந்த வலிமையை வீணாகப் பாழ்படுத்தாமல்,—	வலம் செய்து	பிரதக்ஷிணம் முதலிய அநுகூல வ்ருத்திகளைச் செய்து
வலம் செய்யும்	(நமக்கு) நன்மையையே செய்தருளாநின்ற	நாளும்	நாடோறும்
ஆயன்	கோபாலகிருஷ்ணனான	மருவுதல்	பொருந்தியிருப்பது
மாயவன்	மாயவனுடைய	வழக்கு	யுக்தம்.
கோயில்	கோயிலாகிய		

* * * திருமலையை நித்யம் பிரதக்ஷிணஞ் செய்வது தகுதி யென்கிறார். கண்டவற்றையும் தின்று தேஹத்திற்கு வலிமையை ஸம்பாதித்துக் கொண்டிருக்கிற ஜனங்களே! அந்த வலிமையை ஸ்வரூபத்திற்குத் தகாத விஷயங்களிலே செலுத்திப் பாழ்படுத்தாமல் திருமலையைப் பிரதக்ஷிணஞ் செய்வதாகிற நற்செயலிலே உபயோகித்து வாழுங்கோளென்கிறார்.

ஆயன் + மாயவன், ஆயமாயவன். "சில விகாரமாமுயர் திணை" என்பதனால், எம்பெருமானுக்கு வலஞ்செய்யும் என்று அடைமொழி கொடுத்தது

"ய ஆத்மதா பலதா" என்கிற சுருதியை அடியொற்றியதாகும். தன்னையுங் கொடுத்துத் தன்னை யநுபவிக்கைக் கீடான வலிமையையுங் கொடுப்பவன் எம்பெருமான் என்றுணர்க. இதற்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர்;— "திருச்சித்ரகூட பரிஸரத்திலே பிராட்டியையுங்கூடக் கையைப் பிடித்துக் கொண்டு உலாவினாப்போலே, பிராட்டி கையைப் பிடித்துக்கொண்டு அழகர் ஆதரத்தோடே ஸஞ்சரிக்கிற தேசம்" என்பது நம்பிள்ளை யீடு. "அழகர் பிராட்டிமாரோடேகூட வலஞ்செய்கிற" என்றார் பெரியவாச்சான்பிள்ளையும். இப்பொருளில், ஆயமாயவன் வலஞ் செய்யுங் கோயில் என்று அந்வயிப்பது.

வலஞ்செய்யும் வானோர்=பெருமாள் காட்டுக் கெழுந்தருளுகிற போது திருவயோத்தியி லுள்ளாரடங்கலும் பின் தொடர்ந்தாப்போலே பராத்பரன் இங்கே யெழுந்தருள, நித்ய முக்தர்களுங் கூடவந்து வலஞ் செய்வர்களாயிற்று.

சிற்றடியில் ஒரு ஐதிஹ்ய மருளிச் செய்வர்; "பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணுகிற்கப் பின்னே ஸேவித்துக் கொண்டு போனேன்; அல்லாதார் கடுங்குதிரைபோலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக் கொண்டு வந்தார்களென்று நஞ்சீயரருளிச் செய்வர்." என்று.—"விஷ்ணோராயதநம் நித்யம் ஸாயம் ப்ராதர் தினே தினே। ப்ரதக்ஷிணத்வயம் குர்யாத் அச்வமேதபலம் லபேத்=விஷ்ணோராயதநம் நித்யம் ஸாயம்ப்ராதர் தினே தினே— ப்ரதக்ஷிணத்வயம் குர்யாத் அச்வமேதபலம் லபேத்." என்று சாஸ்த்ரங்களிற் சொல்லியுள்ளது. எம்பெருமான் ஸந்நிதியை நாடோறும் காலைமாலை வலஞ் செய்தால் அபரிமிதமான பலன் கிடைக்குமென்று, வலஞ் செய்வதானது உபாய கோடியில் பேசப்பட்டிருக்கிறது. உபாயாந்தரங்களில் அந்வயம் பொருத ப்ரபந்நர்கள் ப்ரதக்ஷிணஞ் செய்யலாகுமோ? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக இந்த ஐதிஹ்ய முள்ளது. உபாஸகர்கட்கு உபாயமானவிதுவே விலக்ஷணர்களுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமா யிருக்குமென்று காட்டியவாறு. வழக்கு—நியாயம். (அ)

வழக்கெனநினைமின் வல்வினைமூழ்காது *
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில் *
மழக்களிற்றினம்சேர் மாலிருஞ்சோலை *
தொழக்கருதுவதே துணிவதுசூதே. (கூ)

வல் வினை	கொடிய பாவங்களிலே	அட்டான்	முடித்தருளின பெருமான்
மூழ்காது	அழுந்தாமல்	அமர்	எழுந்தருளியிருக்கிற
வழக்கு என நினைமின்	(இவ்வுபதேசத்தை) நியாயமென்று கொள்ளுங்கள்;	பெரு கோயில்	பெரிய ஸந்நிதியாய்,
அழம் கொடி	பேய்ச்சியாகிற பெண்ணை [பூதனையை]	மழ களிறு இனம் சேர்	இளமைதங்கிய யானைக் கூட்டங்கள் சேருகிற

மாலிருஞ்சோலை	திருமலையை	துணிவதே	திடமான அத்யவஸாயங் கொள்வதே
தொழ கருதுவது	வணங்கவேணுமென்று எண்ணுவதில்	சூது	சிறந்த வுபாயம்.

* * * திருமலையைத் தொழவேணுமென்கிற திண்ணிய அத்யவஸாயங் கொள்ளுமத்தனையே போதுமென்கிறார். அழக் கொடியட்டான் = அழுமென்று பேய்க்குப் பெயர். கொடி யென்பது மாதர்க்கு உவமையாகு பெயர். பெண்ணுருவங் கொண்டுவந்த பேய் என்றபடி. திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் ஒளித்து வளர்கின்ற கண்ணபிரானைக் கொல்லும் பொருட்டுக் கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஒருத்தியான பூதனை யென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவில் திருவாய்ப்பாடிக்குவந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த ஸ்ரீக்ருஷ்ண சிசுவை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானான குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவள் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தனன் என்ற பூதநாஸம்ஹார வரலாறு இங்கு உணரத்தக்கது. (அழம் என்று பிணமாய், அத்தாலே பேய் என்றபடி என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தியும் காண்க.)

மழக்களிற்றினஞ்சேர் என்றவிடத்தில் ஒரு ரஸோக்தி அருளிச் செய்வர் நம்பிள்ளை ;— "லக்ஷணோபேதமாயிருப்பதொரு யானை நின்றவிடத்தே ஆயிரமானைகள் வந்து சேராநிற்கும். அங்கு நிற்கிறதோ சோலைமழகளிறு." என்று. திருமங்கையாழ்வார் அழகரை "சோலைமழகளிறே !" என விளித்தார். தென்னனாய்! என்று தெற்குத் திருமலையில் நிற்கிற யானையே! என்றும் விளித்தார் ; அப்படிப்பட்ட யானையினருகே மழக்களிற்றினம் சேர்வது வியப்பன்று என்று காட்டியவாறு. ... ... (௯)

சூதென்றுகளவும் சூதும்செய்யாதே *
வேதமுன்விரித்தான் விரும்பியகோயில் *
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை *
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (௰)

சூது என்று	உபாயமென்றெண்ணி	விரித்தான்	(கீதை முதலியவற்றால்) விவரித்தருளின பெருமான்
களவும்	களவையும்		
சூதும்	சூதையும்	விரும்பிய	விரும்பி யெழுந்தருளியிருக்குமிடமான
செய்யாதே	செய்ய நினைக்காமல்,—	கோயில்	கோயிலாய்
முன்	முற்காலத்தில்	மாது உறு மயில் சேர்	பேடையோடு கூடின ஆண் மயில்கள் சேர்ந்து வாழப்பெற்ற
வேதம்	வேதங்களை		

மாலிருஞ் சோலை } மாலிருஞ்சோலை யென்கிற
போது அவிழ் மலை } புஷ்பங்கள் விகஸிக்கிற திருமலையில்
புகுவதே சென்று சேர்வதே
பொருள் புருஷார்த்தம்.

* * * முதலடிக்கு இரண்டுவகையான அர்த்த நிர்வாஹமுண்டு;—அறநூற்களில் சூதும் களவும் கூடாதென்று நிஷேதித்திருக்கையாலே அதனையடியொற்றி ஆழ்வாரும் அருளிச் செய்கிறார்; சூது களவு முதலிய தீய செயல்களாலே வீண்போது போக்காமல் திருமலையிலே சென்று புகுங்கோள்—என்பதாக ஒரு நிர்வாஹம்.

இனி, களவாவது—"கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா—கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றும் "'பண்டேயுன் தொண்டாம் பழவுயிரை யென்னதென்று கொண்டேனைக் கள்வனென்று கூறாதே" என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானுக்கு சேஷப்பட்டதான ஆத்ம வஸ்துவைத் தன்னதென்றிருக்கை. அதாவது—விவேகியாயிருப்பானொருவன் 'ஈச்வர சேஷமான ஆத்மாவுண்டு, ஸர்வ சேஷியான ஈச்வரனுண்டு, புண்யபாப வகுப்பு உண்டு, பரலோகமுண்டு' என்றிப்படி நூற் பொருள்களையெடுத்துரைத்தால மாயச் சொற்களாலே 'இவை யொன்று மில்லை' என்று அவன்தானே கையெழுத்திடும்படி அவனை மயக்கி மிக்க நாஸ்திகனாக்கித் தன் வகுப்பில் இணக்கிக் கொள்ளுகை. ஆகிய இவ்விரண்டையும் செய்து கெட்டுப் போகாமல்.........என்பது மற்றொரு நிர்வாஹம். இதை நிர்வாஹ பேதமாகக் கொள்ளாமல் ஸ்வாபதேசப் பொருளாகவுங் கொள்ளலாம்

வேதம் முன் விரித்தான்=வேதம் உரைத்தவனும் தானே, வேதம் விரித்தவனும் தானே. கண்ணுக்குத் தோற்றுதபடி நின்று வேதங்களையுரைத்தான்; தேர்த்தட்டிலே அழகிய திருக்கோலத்தோடிருந்து கீதோபநிஷன்முகத்தாலே வேதங்களை விரித்தானென்க. கீதை யென்பது வேதங்களுக்கு வியாக்கியானம் போன்றது என்றவாறு.

விரும்பிய கோயில் = உபதேசத்தால் திருந்ாதவர்களை வடிவழகைக் காட்டி ஆட்படுத்திக் கொள்ளுதற்கு எழுந்தருளி யிருக்குமிடமென்க.

மாதுறுமயில் = மாது என்பது 'மாதர்' என்பதன் சிதைவாய், பேடையைச் சொல்லும். மாது என்று ஸௌகுமாரத் தன்மைக்கும் பெயர். அழகிய மயில்கள் என்றுமாம். ... ... (கo)

பொருளென்றிவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல் *
மருளில்வண்குருகூர் வண்சடகோபன் *
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்து *
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே. (கக)

பொருள் என்று	(ஒருநாளாகிலும்) பிரயோஜனப்படுமென்று கருதி
இ உலகம்	இவ்வுலகங்களை
படைத்தவன்	ஸ்ருஷ்டித்த பெருமானுடைய
புகழ் மேல்	திருக்கல்யாண குணங்களில்
மருள் இல்	அஜ்ஞான மில்லாத
வண் குருகூர் வண் சடகோபன்—;	

தெருள் கொள்ள	(சேதநர்க்குத்) தெளிந்த ஞானமுண்டாகுமாறு
சொன்ன	அருளிச் செய்த
ஓர் ஆயிரத்துள்	ஆயிரம் பாசுரங்களுள்
இ பத்து	இப்பதிகம்
முடித்து	ஸம்ஸார பந்தத்தைப் போக்கி
அருள் உடையவன் தாள்	பரமதயாளுவான எம்பெருமானது திருவடிகளில்
அணைவிக்கும்	சேர்விக்கும்.

* * * இத்திருவாய்மொழி கற்பார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. இப்பதிகந்தானே ஸம்ஸார பந்தத்தை யறுத்துப் பரமகாருணிகனான எம்பெருமானது திருவடிகளிலே கொண்டு சேர்க்குமென்று பயனுரைத்தவாறு. இப்பதிகத்தை அநுஸந்திப்பவர்களை எம்பெருமான் திருவுள்ளமுவந்து கைக்கொள்வன் என்பது தேர்ந்த கருத்து. இஃதறியாமல் சிலர் இந்த அசேதநமான பத்துப் பாசுரம் எங்ஙனே மோக்ஷோபாயமாகும்? என்று ஆக்ஷேபிப்பார்கள், இது உபசார வழக்கு என்றுணர்க.

பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் = எம்பெருமான் ஜகத் ஸ்ருஷ்டி பண்ணுவதாவது இறகொடிந்த பறவைபோலே கரணகளேபரங்களை இழந்திருந்த ஆன்மாக்களுக்கு அவற்றைக் கொடுக்கை. அப்படி எத்தனை தடவை ஸ்ருஷ்டித்தாலும் பயன்படா தொழிந்தாலும், என்றேனு மொருநாள் பயன்படுமென்று கருதி மேன்மேலும் ஸ்ருஷ்டிகளைச் செய்து போருவன் என்கிறது. "சோம்பாது இப்பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா!" என்றார் பெரிய திருவந்தாதியிலும்.

புகழ்மேல் மருள்இல் = எம்பெருமானது திருக்கல்யாண குணங்களில் ஸந்தேஹம், விபர்யயம், மறப்பு முதலானவை யில்லாதவர் என்றபடி. * மயர்வற மதிநல மருளப் பெற்றவராதலால் இங்ஙனஞ் சொல்லத்தகு மென்க. ... (கக)

பத்தாந் திருவாய்மொழி உரை முற்றுப் பெற்றது.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளீ.

𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌮𑍁𑌖𑌰𑌿𑌤𑌜𑌲𑌜𑌂 𑌵𑌰𑍍𑌷𑍁𑌕𑌾𑌮𑍍𑌭𑍋𑌦𑌵𑌰𑍍𑌣𑌂
𑌶𑍈𑌲𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑌾𑌭𑌿𑌗𑍁𑌪𑍍𑌤𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑌤𑌿𑌵𑌿𑌲𑌸𑌦𑍍𑌧𑍇𑌤𑌿𑌮𑌾𑌪𑍀𑌤𑌗𑌵𑍍𑌯𑌮𑍍 ।
𑌸𑌂𑌰𑌮𑍍𑌭𑍋𑌤𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌭𑍂𑌮𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌦𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍂𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍁𑌭𑌸𑌵𑌿𑌧𑌗𑌿𑌰𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌤𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑍍 ॥

1. தீப்த ஆச்சர்யஸ்வபாவம். * வளரொளி மாயோன். * தீப்தனும் ஆச்சர்யஸ்வபாவனுமி ருப்பவன் என்றபடி. (விசேஷணோபயபத கர்மதாரய ஸமாஸம்.)

2. முகரித ஜலஜம். * அதிர்குரல சங்கத்தழகர். * ஜலஜமென்று சங்குக்குப் பெயர்; முகரித—முழங்காநிற்கிற, ஜலஜம்—சங்கையுடையவன்.

3. வர்ஷுக அம்போத வர்ணம். * புயல்மழைவண்ணர். * கார்காலத்துக் காளமேக நிறத்தன்.

4. சைலச்சத்ர அபிகுப்த ஆச்ரிதம். * பெருமலையெடுத்தான்.* கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துநின்று அடியார்களைக் காத்தருளினவன்.

5. அதிவிலஸத் ஹேதிம். * அறமுயலாழிப்படையவன்.* மிகவும் விளங்காநின்ற (திருவாழியாழ்வானுகிற) திவ்யாயுதத்தையுடையவன்.

6. ஆபீத கவ்யம் * உறியமர் வெண்ணெயுண்டவன். * திருவாய்ப்பாடியில் வெண்ணெய் முதலானவற்றை அமுது செய்தவன்.

7. ஸம்ரம்ப உத்க்ஷிப்த பூமிம். * நிலமுனமிடந்தான். * வராஹரூபியாய்ப் பூமியை இடந்தெடுத்தவன். (ஸம்ரம்பமாவது—பரபரப்பு.)

8. ப்ரணமத் அநுகுணம். * வலஞ்செய்யுமாயன் மாயவன். * ஆச்ரிதர்களுக்கு வேண்டிய ஆநுகூல்யங்களை விளைவிப்பவன்.

9. பூதநா சேதநாந்தம். * அழக்கொடியட்டான். * பூதனையினுயிரை முடித்தவன்.

10. பூர்வாசார்யம் ச்ருதீநாம். * வேதமுன்விரித்தான். * வேதங்களுக்கெல்லாம் முதன்மையான ப்ரவர்த்தகன். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை [சுபஸவிதகிரிஸ்தாந:] அழகியதாயும் ஸமீபஸ்தமாயுமிருக்கிற திருமாலிருஞ்சோலைமலையில் எழுந்தருளியிருப்பினால் [நிர்விசேஷ] ஆழ்வார் அநுபவித்து ஆனந்தித்தாரென்றபடி.

ஊத்ருஷ்யோதாத்ருஸஹ்யக்ஷணவிரஹதயா ஸாநுஷங்காவதாராத்
ஸர்வாஹ்லாதகஸ்வாது ஸ்வஸங்கத்தயா ஸ்லாக்யஸம்ஸ்ருதித்வாத் ।
வைசித்ர்யாஸஸயோகாத் நிஜஸுஹ்ருதவநாத் ஸக்திஸாரஸ்யதாநாத்
கைங்கர்யேசௌசப்யஸாலாதுர்ஹநியததயா வாதிஹோச்யம் த்விதீயே ॥

இரண்டாம்பத்தில் பத்துத் திருவாய்மொழிகளினுடையவும் ப்ரமேயங்களை ஸங்க்ரஹித்தருளிச் செய்வது இந்த ச்லோகம். க்ஷணகால விச்லேஷமும் பொறுக்க முடியாதவன் என்பதைக் காட்டுவது வாயுந்திரையுகள். மநுஷ்ய ஸஜாதீயனும் அவதரித்திருக்கச் செய்தே பரத்வமும் பொலிய நிற்பவனென்றது திண்ணன் வீடு. மதுர பதார்த்தங்களெல்லா மொன்று சேர்ந்தாற்போன்ற இனிமையையுடையவ னென்றது ஊனில்வாழுயிர். ஆச்ரிதர்களின் துயர் தீர்க்குந் தன்மையை விளக்கியது ஆடியாடி. ஆச்ரிதரோடே ஸம்ச்லேஷித்து அத்தாலே மிகவும் ப்ரீதனானமை காட்டினது அந்தாமத்தன்பு. 'ஆச்ரிதர்கள் நம்மைவிட்டு விட்டால் என் செய்வது' என்று எம்பெருமானுக்கும் ஒரு அதிசங்கை யுண்டானமையைத் தெரிவித்தது வைகுந்தாமணிவண்ணன். ஆச்ரிதருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளையும் ரக்ஷிக்குமவனென்றது கேசவன்தமர். மோக்ஷமளிப்பவனென்றது அணைவதரவணை. கைங்கர்ய ப்ராப்தி ஸம்பந்தியென்றது எம்மாவீடு. அழகிய திருப்பதியையுடையனென்றது கிளரொளி. ஆக இத்திருவாய்மொழிகள் பத்தினும் தெரிவிக்கப்பட்ட பத்துத் திருக்குணங்களினும் எம்பெருமானுடைய பரமபோக்யதை சொல்லிற்று. இது இரண்டாம்பத்தின் திரண்ட பொருள் என்றாயிற்று. ... ... (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸாரம்.

த்விதீயே திவ்யசக்ஷணவிரஹஸஹத்வம் மதுர்வேதம்
விஷ்ணுவர்ஹ்லாதம் ஸ்வாஸநஸாரகம் ஸ்லாக்யஸம்ஹிதம் ।
ஸ்ரீவைசித்ர்யம் ஸுஜநஸாஹ்ருதம் ஸாக்ஷிகஸாதம்
ஸ்வகைங்கர்யேசௌசப்யம் ஸஹமஸவியஸ்யம் நிரவிசத் ॥

கீழே "ஊத்ருஷ்யோத—இத்யப்ருத" என்கிற த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளீ ச்லோகத்தில், இரண்டாம்பத்தின் ஒவ்வொரு திருவாய்மொழிக்கும் ப்ரமேயமாக அருளிச் செய்யப்பட்ட திருக்குணமே இந்த ச்லோகத்திலும் சப்த பேதத்தாலும் வ்ருத்த பேதத்தாலும் விபக்தி பேதத்தாலும் அருளிச் செய்யப்பட்டது. ஆதலால் இதற்குத் தனியே உரையிட வேண்டாவென்கிறோம்.

𑌉𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑍈𑌕𑌾𑌕𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌶𑌤𑌕𑌯𑍁𑌗𑍍𑌮𑍇𑌨𑍋𑌦𑌿𑌤𑌂
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍍𑌵𑍈𑌕𑌾𑌵𑌧𑌿𑌕𑌶𑌤𑌿𑌹𑍃𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌵𑌚𑌸𑌃 ।
𑌅𑌯𑌂 𑌤𑌦𑍍𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌤𑌨𑍁𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌗𑌮𑌯𑌨𑍍
𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌾𑌹𑍍𑌵𑌮𑍇𑌵𑌂 𑌕𑌥𑌯𑌤𑌿 ॥

மேல் மூன்றும் பத்துக்கும் கீழிரண்டு பத்துக்களுக்கும் ஸங்கதி யருளிச் செய்வது இந்த ச்லோகம். எம்பெருமானே உபாய பூதன் என்று நிலைநாட்டுதற் குறுப்பான ஸேவ்யத்வம் முதற்பத்தில் அருளிச் செய்யப்பட்டது. அவனே உபேயன் என்று நிலைநாட்டுதற் குறுப்பான போக்யத்வம் இரண்டாம்பத்தில் அருளிச் செய்யப்பட்டது. ஆக இந்த உபாயத்வ உபேயத்வங்களிரண்டும் அஸாதாரண திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனுக்கே கூடுமென்று கொண்டு அந்த எம்பெருமான் சுபாச்ரய திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனென்பதை மேல் மூன்றும் பத்தினால் ஆழ்வார் அருளிச் செய்யப்புகுகிறார் என்றதாயிற்று.

𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌃, 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑍇𑌯𑌃, என்பது முதலிரண்டு பத்துக்களின் தாத்பரியம் என்றதாகக் கொள்க. ... ... (*)

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌂 𑌤𑌦𑍍𑌦𑍇𑌹𑍇 𑌹𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑍁𑌂
𑌆𑌸𑍇𑌦𑍁𑌷𑌿𑌵𑌾𑌨𑍍 𑌵𑌨𑌗𑌿𑌰𑍀𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌤𑌦𑍍𑌨𑌯𑌿𑌨𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌂
𑌪𑍍𑌰𑌾𑌵𑍀𑌕𑌶𑌤𑍍 𑌦𑌶𑌮𑍇 𑌦𑌶𑌕𑍇 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥

(கருத்து.) கீழ்த் திருவாய்மொழியில் தாம் விரும்பின புருஷார்த்தத்தை எம்பெருமான் இவ்விபூதியிலேயே தமக்குக் கொடுத்தருளத் திருவுள்ளம் பற்றித் திருமாலிருஞ் சோலையில் ஸந்நிதி பண்ணியிருப்பதாகக் கண்டு அந்த எம்பெருமானையும் அவனோடு ஸம்பந்தமுள்ள ஸகலத்தையும் ப்ராப்யமாகப் பத்தாவது திருவாய்மொழியில் ஆழ்வார் வெளியிட்டருளினரென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க
வளரொளிமால் சோலை மலைக்கே — தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ் மாறன்தாள்
முன் செலுத்துவோமெம் முடி.

கிளர் ஒளி சேர்	அதிசயமான மேன்மை பொருந்தியதும்	தளர்வு அறவே	தளர்ச்சியில்லாமல் [திடமாக]
கீழ் உரைத்த	கீழ்த்திருவாய்மொழியில் சொல்லப்பட்டதுமான	நெஞ்சை வைத்து	மநஸ்ஸை வைத்து
பேறு	புருஷார்த்தம்	சேரும் எனும்	போய்ச் சேருங்கள் என்று உபதேசித்த
கிடைக்க	கிடைப்பதற்காக,	நீடு புகழ் மாறன்	மஹா யசஸ்வியான ஆழ்வாருடைய
வளர் ஒளி	மேன்மேலும் வளர்ந்து வருகின்ற ஒளியையுடையதான	தாள் முன்	திருவடிகளின் முன்பே
		எம் முடி	எமது தலையை
மால் சோலை மலைக்கே	திருமாலிருஞ் சோலை மலைக்கே	செலுத்துவோம்	ஸமர்ப்பிப்போமாக.

• • • எம்மாவீடென்கிற கீழ்த்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட கைங்கரியமாகிற பரம புருஷார்த்தம் கிடைக்கவேணுமென்கிற நசையுடையீர்! அதற்காக வேறொரு தேச விசேஷம் தேடிப்போகவேண்டா; இந்நிலத்திலேயே பரம விலக்ஷணமான திருமாலிருஞ் சோலைமலையிலே எல்லா அடிமைகளுங் கொள்வானாக அப் பெருமானெழுந்தருளி நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறானாகையாலே அத்திருமலையில்தானே சென்று சேர்ந்து அநுபவிக்கப் பாருங்கோள் — என்று உபதேசித்தருளின ஆழ்வாருடைய திருவடிகளுக்கே நமது தலையை அந்த வுபதேசத்திற்குக் கைம்மாறாக அர்ப்பணம் செய்வோமென்றாயிற்று. ... (௨௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்ஸ்வாமி அருளிச்செய்த
திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில்
இரண்டாம்பத்து முற்றிற்று.